# இஸ்லாம்

## ஆன்மீக மார்க்கமா, அறிவியல் மார்க்கமா?

மணவை முஸ்தபா

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

12

# இஸ்லாம் ஆன்மீக மார்க்கமா அறிவியல் மார்க்கமா?

ஆசிரியர்

வளர்தமிழ்ச் செல்வர்

**மணவை முஸ்தபா**

விலை ரூ. 80/-

**சௌதா பப்ளிகேஷன்**

**AE-103, அண்ணாநகர்,**

**சென்னை - 600 040.**

# Islam
# Aanmiga Markkama Arivial Markkama?

*Author :*

VALAR TAMIL SELVAR

**Manavai Mustafa**

**Price Rs. 80/-**

**Soudhaa Publication**

AE-103, Annanagar

Chennai - 600 040.

# பொருளடக்கம்


1. முன்னுரை 5

2. இஸ்லாம் – ஆன்மீக மார்க்கமா, அறிவியல் மார்க்கமா? 9

3. இஸ்லாம் அன்றும் – இன்றும் 75

4. மனித நேயப் பண்பு வளர்த்த மாநபி 151

5. எங்கே போகிறோம்? 187

6. வேற்றுமையில் ஒற்றுமை 224

7. இஸ்லாம் தரும் ஆக்கச் சிந்தனை 266

8. இஸ்லாமும் பிற சமயங்களும் 290

9. இஸ்லாமும் தாய்மொழியும் 307

10. புதிய சித்தாந்தக் குழப்பம் 318

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Islam - Aanmiga Markkama Arivial Markkama? |
| Author | : | **MANAVAI MUSTAFA** |
| Copyright | : | Author |
| First edition | : | June 2000 |
| Paper used | : | White Cream Wove |
| Printing points used | : | 10 points |
| Size of the book | : | Crown Octovo |
| No. of pages | : | 324 |
| Price | : | Rs. 80/- |
| No. of copies printed | : | 1000 |
| Typesetting | : | Shri Surakshaa Computers<br>D-129, First Main Road<br>Annanagar East, Chennai - 102 |
| Printer | : | Creative Offset<br>57, Kumarappa Street<br>Nungambakkam, Chennai - 34 |
| Binding | : | Paper Back |
| Publishing place | : | Soudhaa Publication<br>AE - 103, Annanagar<br>Chennai - 600 040. |

# முன்னுரை

உங்கள் கரங்களில் தவழும் இந்நூல் 1998ஆம் ஆண்டு துபாய் உட்பட வளைகுடா நாடுகளில் நடைபெற்ற மீலாது விழாக்களில் நான் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்க மாகும். இந்த அரிய வாய்ப்பை நான் பெறக் காரணமா யமைந்தவர் சமுதாயச் சேவைச் செம்மல் தாலூத் பாட்சா அவர்களும் ஈமான் பேரவையின் செயலாளராக அரும்பணி யாற்றிவரும் அருமை நண்பர். அல்ஹாஜ் எம். அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களும் மற்றும் ஈமான் அமைப்பினரும் ஆவர்.

வளைகுடா மீலாது கூட்டங்கள் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. விழாக்களில் கலந்து கொண்டவர் களும் பேரார்வமிக்கவர்களாக இருந்ததால் அவர்களோடு சேர்ந்து நாயகத் திருமேனியின் வாழ்வையும் வாக்கையும் அடியொற்றி, திருமறை ஒளியில் இஸ்லாத்தைப் பற்றி சற்று உரக்க சிந்திக்க முடிந்தது. இச்சிந்தனைகள் காற்றோடு போய்விடாமல் எழுத்து வடிவில் தமிழ்கூறு நல்லுல கெங்கும் செல்ல வேண்டுமென நண்பர்கள் கருத்து வெளி யிட அதற்கு ஈமான் அமைப்பின் ஆற்றல்மிகு செயலாளர் அல்ஹாஜ் எம். அப்துர் ரஹ்மான் அவர்கள் உருக்கொடுக்க ஈமான் பேரமைப்பின் ஆதரவோடு இன்று நூல் வடிவில் என் பொழிவுகளின் சுருக்கம் உங்கள் பார்வையில்.

பெருமானாரின் பெரு வாழ்வும் அவர் உலகுக்குரைத்துச் சென்ற வாக்கும் திருமறையின் அதியற்புதச் செய்திகளும் இன்றைய அறிவுலகை முனைப்புடன் சிந்திக்கச் செய் துள்ளன. இஸ்லாத்தை வழக்கமான ஆன்மீகக் கண்ணோட் டத்தோடு மட்டுமல்லாது, இன்றைய வாழ்வின் இன்றி யமையா பேரங்கமாக உருவெடுத்துள்ள அறிவியல்

கண்ணோட்டத்தோடும் காண அறிவுலகு முனைந்துள்ளது. இவ்விருகண்ணோட்டங்களும் இஸ்லாத்தை முழுமை யாகப் புரிந்து கொள்ள பேருதவியாக அமைந்துள்ளதெனில் அஃது மிகையன்று. அத்தகைய சிந்தனைக் கோணங்களைச் சுட்டிக் காட்டுவதுதான் இவ்வுரைச் சுருக்க நூலின் தலையாய நோக்கம். அது ஓரளவு நிறைவேறியிருப்பதாக எண்ணி மனநிறைவடைகிறேன்.

நான் துபாயில் தங்கியிருந்த இருபது நாட்களும் எனக்குத் தோன்றாத் துணையாக இருந்த ஈமான் அமைப்பின் துணைச் செயலாளர் ஜனாப் லியாகத் அலி அவர்களையும் என்னை நிழல்போல் தொடர்ந்து என் தேவைகளைக் கவனித்துக் கொண்ட எழுச்சி மிகு இளைஞர்கள் ஜனாப் முஹம்மது நியாஸ், சாதிக், இசைக் கவிஞர் அஷ்ரஃப் அலி ஆகியோரை யும் என் மீது அன்பு பொழிந்த சமுதாயப் பெருந்தகை அல் ஹாஜ் பி. எஸ்.ஏ. ரஹ்மான் சாஹிப் அவர்கள், ஈமான் பேர மைப்பின் தலைவர் அல்ஹாஜ் செய்யத் எம்.ஸலாஹுத்தீன் சாஹிப் அவர்கள், ஈமான் பேரமைப்பின் பேரங்கமாகத் திகழும் அல்ஹாஜ் ஹபீபுல்லா சாஹிப் அவர்கள் மற்றும் அல்ஹாஜ் அப்துல் கதீம் சாஹிப், கவிஞர் அப்துல் சம்ஸ்தீன் சாஹிப் சடைன் அமானுல்லா மற்றும் தாஹா போன்ற வர்கள் காட்டிய அன்பும் அரவணைப்பும் என்னால் என்றும் மறக்க முடியாதவை.

இந் நூல் வெளிவர ஆதரவுக் கரம் நீட்டிய ஈமான் அமைப்புக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். ஈமான் அமைப்பு தோன்றிய காலம் முதலே அதனோடு எனக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பு இருந்தே வருகிறது. சமுதாய எழுச்சிக்கு, குறிப்பாக, இளை ஞர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கமான முறையில் அருந் தொண்டாற்றி வெள்ளி விழாக் கொண்டாடி மகிழும் நேரத் தில் இந் நூல் வெளி வருவது பெரு மகிழ்வளிக்கிறது.

*சென்ற ஆண்டே இந் நூல் வெளிவந்திருக்க வேண்டும். ஆனால், எனது ஐரோப்பிய பயணமும், அமெரிக்கா, கனடா பயணங்களும் அதற்கு இடம் தரவில்லை. அந் நூல் ஈமான் அமைப்பின் பெருமைமிகு வெள்ளி விழாவில் வெளிவர வேண்டும் என்பது வல்ல அல்லாஹ்வின் நாட்டம் போலும். அனைத்து புகழும் வல்லோனுக்கே.*

*வளைகுடாவில் என் சொற்பொழிவுகள் சிறப்பாக நடை பெறவும், நூலுருவாக்கம் பெறவும் துணை நின்ற அத்தனை நல்லுள்ளங்களுக்கும் என் நன்றியைப் புலப்படுத்திக் கொள் வதில் பெருமையும் பேருவகையும் அடைகிறேன்.*

*சென்னை - 40* — *அன்பன்*

*5.6.2000* — மணவை முஸ்தபா

இந்தியத் திருநாட்டிற்கு, குறிப்பாக இஸ்லாமிய சமுதாய மேம்பாட்டிற்கு இடையறாது உழைத்து மறைந்த சிராஜுல் மில்லத் அல்ஹாஜ் A.K.A. அப்துல் சமத் சாஹிப் அவர்களின் இனிய நினைவுக்கு இந் நூல் காணிக்கையாகிறது.

நூலாசிரியன்

# இஸ்லாம்
# ஆன்மீக மார்க்கமா, அறிவியல் மார்க்கமா?

ஈமான் அமைப்பின் சார்பில் துபாய் பெரிய பள்ளியில் நடைபெறும் இம் மீலாது விழாவில் நான் பெருமகிழ்வோடு கலந்து கொள்ள இரு பெரும் காரணங்கள் உண்டு. முதற் காரணம் துபாய் நாட்டைப் பற்றி எனக்கு எப்போதும் ஒரு மரியாதை கலந்த மதிப்பு உண்டு. நான் துபாய் நாட்டிற்குப் புதியவன் அல்ல; ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லுகின்ற போதும், ஐரோப்பிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புகின்ற போதும், சிலபோது 'உம்ரா' செய்து திரும்புகிறபோதும் இந்தத் துபாய் மண்ணிலே இரண்டொரு நாட்கள் தங்கி, நண்பர்களையெல்லாம் சந்தித்து, அளவளாவி மகிழ்ந்து செல்வது வழக்கம். ஆனால் இது போன்ற பெருங் கூட்டங்களிலே உரையாற்றுகின்ற வாய்ப்பை இதுவரைப் பெற்றேனில்லை.

**சமய, சமூக நல்லிணக்கத்துக்கோர் சவால்!**

அமீரகத் துபாயைப் பற்றி மிக உயர்வான எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. இது ஒரு இஸ்லாமிய நாடாக

இருந்த போதிலும் சமய, சமூக நல்லிணக்கத்துக்கு மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமீரகத் துபாய் நெடுங் காலமாக விளங்கி வருகிறது. இங்கே வாழுகின்ற, தொழில் செய்கின்ற மக்களில் பெரும் தொகையினர் பல்வேறு நாடுகளைச் சார்ந்தவர்கள்; பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள்; பல்வேறு சமயச் சார்புள்ளவர்கள்; பல்வேறு மொழிகளைப் பேசுபவர்கள்; பல்வேறு பண்பாடுகளை, நடையுடை பாவனைகளைப் பேணி நடப்பவர்கள். இவர் களெல்லாம் ஒருங்கிணைந்து வாழக் கூடிய இனியதோர் சூழ்நிலையைத் துபாய் நாடு ஏற்படுத்திக் கொடுத்திருப்பது, இஸ்லாத்தினுடைய சமய, சமூக நல்லிணக்கக் கொள்கை களின், மனித நேய நல்லிணக்கக் கோட்பாடுகளின் அடையாளச் சின்னமாகவே இந் நாட்டைக் காண்கின்றேன். ஈமான் அமைப்பின் இணையிலாப் பணி இரண்டாவது காரணம். இந்த விழாவை இனிது நடத்திக் கொண்டிருக்கும் ஈமான் அமைப்போடு நான் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்காவிட்டாலும், இவ்வமைப்பு நீண்ட காலமாக ஆற்றிவரும் அரும்பணிகளைப்பற்றி நான் நன்கறிவேன். 1978இல் நான் முதன் முறையாக இத் துபாய் மண்ணில் கால் வைத்த போதிருந்தே இந்த அமைப்பைப் பற்றி, அது ஆற்றி வருகின்ற இஸ்லாமியப் பணிகளைப்பற்றி நான் மிகத் தெளிவாகவே அறிவேன்.

இஸ்லாமிய மார்க்கத்துக்கு மட்டுமல்ல; இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்களின் நலத்துக்காகவும் இந்த அமைப்பு அரும்பாடுபட்டு வருவதை நான் நன்கறிவேன். இஸ்லாமிய அறிஞர்களின், அவர்தம் திரண்ட சக்திகளை யெல்லாம் ஒன்றாகத் திரட்டி, அவற்றை ஒருமுகப்படுத்து வதில் தனி வரலாறு படைத்து வருகிறது. சமுதாயத்தில் எழுச்சியோடு வாழத் துடிக்கின்ற, கல்வி கற்க வாய்ப் பில்லாமல் துவண்டு கிடக்கின்ற இளைஞர்களையெல்லாம் உசுப்பி, அவர்கட்கு உதவி செய்கின்ற முறையில் பல வழிகளில் பல பயனுள்ள திட்டங்களைத் திறம்பட நிறை

வேற்றி வருகிறார்கள். அவைகளைப் பத்திரிகைகளிலே ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் அவர்கள் அறிமுகப்படுத்து கின்றபொழுது, அதைக் கண்டு உண்மையிலேயே நான் மகிழ்ந்து போவேன். ஏனென்றால், நம்மில் பல பேருக்குச் சம்பாதிக்கத் தெரியும். ஆனால், உரிய முறையில் சம்பாதித்த பணத்தை எப்படிச் செலவு செய்வது என்பது தெரியாது. அந்த சூட்சமத்தை நன்கு தெரிந்து கொண்டிருக்கும் நல்ல இதயங்கள் இந்த நகரத்தில் குறிப்பாக, இந்த அமைப்பிலே இருப்பதை எண்ணி நான் பெரு மகிழ்வடைகிறேன்.

'மீலாது விழா' ஏன்?

அது மட்டுமல்ல, துபாயில் இருக்கக்கூடிய சமய நல்லிணக்க உணர்வு படைத்த இந்த மக்கள் உரத்த சிந்தனையாளர்கள் என்பதும் தெரியும். நீங்களெல்லாம் ஏதோ விஷயம் தெரியாமல் இங்கு வந்து குழுமியிருப்பது போலவும், நான் ஏதோ விஷயங்களையெல்லாம் தெரிந்து உங்களுக்குச் சொல்ல வந்திருப்பது போலவுமான ஒருவித மனப்பிரமை இருக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் எல்லா வகையிலும் உரக்கச் சிந்திக்கத் தெரிந்தவர்கள்; காலத்தினுடைய போக்குக்கும் தேவைக்குமேற்ப, எந்த முறையில் இஸ்லாமியச் சிந்தனைகளைச் செழுமைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதிலே உங்களுக்கு எப்போதும் ஒரு துடிப்பு உண்டு என்பதை நான் நன்கறி வேன். அப்படிப்பட்ட நல்ல இதயங்களோடு ஒரு சில மணித் துளிகள் உறவாடி மகிழ்வதை நான் பெருமை யாகவும், பெரும் பயன் எனக்குத் தருவதாகவும் கருதி நான் இங்கே வந்து நிற்கிறேன்.

எனக்கு முன்னால் இங்கே பேசிய மார்க்க அறிஞர்கள் 'மீலாது விழா' கொண்டாட வேண்டிய அவசியத்தைப் பற்றி மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். 'மீலாது விழா' என்பது சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவில் தொடங்கப்பட்ட விழா. விடுதலைப் போராட்ட காலத்தில்

தொடங்கப்பட்ட இவ்விழாவின் முக்கியத்துவம் காலப் போக்கில் இப்போது வெகுவாக உணரப்பட்டு வருகிறது. அதன் இன்றியமையாத தேவை நாளுக்கு நாள் வலுவாக அறியப்பட்டு வருகிறது.

நம்மைப் பொறுத்தவரை ஆண்டு முழுமையும் அண்ணலாரின் வாழ்வும் வாக்கும் நினைவுகூரப்படு வதோடு, அதனை முழுமையாக வாழ்வில் கடைப்பிடிக்கப் படவும் வேண்டும். இம்மாதிரி விழாக்களின்போது, அதை ஆண்டுக்கொரு முறை கணக்கெடுத்து லாப, நட்டமறியும் காலமாகக் கருத வேண்டும். சென்ற மீலாதிலிருந்து, இந்த மீலாதுவரை பெருமானார் (சல்) அவர்களின் வாழ்வையும் வாக்கையும் எந்த அளவுக்குப் பின்பற்றியொழுகி வாழ்ந் திருக்கிறோம் ; எங்கெங்கே சறுக்கியிருக்கிறோம்; வழுக்கி யிருக்கிறோம், அதற்கு உள்ள காரணம், அக்காரணங்களை அடித்தளமாகக கொண்டு, இவ்வாண்டில் நேரிய முறையில் பெருமானாரின் பெரு வாழ்வு ஒளியில் வாழ்ந்து வளம் பெறுவது எப்படி என்ற சிந்தனையின் அடிப்படையில் செயல்படுவது பற்றி ஆயும் நாளாக - உறுதி எடுத்துக் கொள்ளும் நாளாக இந்நாளைக் கருதுதல் வேண்டும்.

## மீலாது விழா காலக் கட்டாயம்

சவூதி அரேபியாவிலும், பிற இஸ்லாமிய நாடுகளிலும் பெருமானார் (சல்) அவர்களின் பிறந்த நாள் விழா 'மீலாது பெருவிழா'வாகக் கொண்டாடப்படுவது இல்லைதான். ஆனால், இந்தியா போன்ற நாடுகளில் சிறுபான்மைச் சமுதாயத்தினராக முஸ்லிம்கள் பெரும்பான்மை ஹிந்து சமயத்தவரிடையே வாழுகின்ற நிலையில் தங்கள் மார்க்கத்தின் கொள்கை, கோட்பாடுகளை பிற சமய மக்களும் அறிந்து கொள்ள, உணர்ந்து தெளிய வாய்ப்பேற் படுத்தும் வகையில் இம்மாதிரி 'மீலாது விழா'க்களைக் கொண்டாடுவது அவசியமாகவும் ஒரு வகையில் காலக் கட்டாயமாகவும் அமைந்துள்ளதெனலாம்.

## அனைவர்க்கும் பொது விழா

தமிழகத்தைப் பொருத்தவரை மீலாது விழா பெரு நகரங்கள் முதல் சாதாரணச் சிற்றூர்வரை சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டு வருவதும் அவ்விழாக்களிலே பேசு பவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் பிற சமயங் களைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் எண்ணத்தக்கதாகும். இத்தகைய விழாக்களில் முஸ்லிம்களோடு முஸ்லிமல் லாதவர்களும் கணிசமான எண்ணிக்கையில் பங்கு பெறுவது, பெருமானர் (சல்) அவர்களின் வாழ்வையும் வாக்கையும் பற்றி பிற சமய மக்களிடையே கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளக் கிடைக்கும் அரிய வாய்ப்பாக அமைகிறது என்பதில் ஐயமில்லை.

நபிகள் நாயகம் (சல்) அவர்கள் முஸ்லிம்களுக்காக மட்டும் இறைவனால் அனுப்பப்பட்ட இறைதூதர் அல்லர்; அவர் மனித குலம் முழுமைக்கும் இறைநெறி புகட்ட வந்த இறை தூதர் ஆவார். எனவே, அவர் பிறந்த நாளைக் கொண்டாட முஸ்லிம்களுக்கு எவ்வளவு உரிமை உண்டோ அதே அளவுக்கு உரிமை பிற சமய மக்களுக்கும் உண்டு.

இஸ்லாமியக் கொள்கை, கோட்பாடுகளை அண்ணலார் வாழ்க்கை வழியே பிற சமயத்தவர் மத்தியில் எடுத்துச் சொல்லும் மிகச் சிறந்த வாய்ப்பை இத்தகைய மீலாது விழாக் கூட்டங்கள் எளிதாக நமக்கு ஏற்படுத்தித் தருகின்றன என்பதிலும் ஐயமில்லை.

தமிழ்நாட்டில் எங்கேனும் மீலாது விழாக்களில் பங்கேற்க யாரேனும் அழைத்தால், அவர்களுக்கு நான் விடுக்கும் ஒரே வேண்டுகோள், நடத்துகின்ற மீலாது கூட்டத்தை பிற சமயத்தவர்களும் செவி மடுக்கும் வகையில் முச்சந்திகளில் நடத்துங்கள். நான் தாராளமாக வந்து கலந்து கொள்கிறேன். பள்ளிவாசல் வளாகங்களில் முஸ்லிம்கள் மட்டுமே கலந்து கொள்ளும் வகையில் மீலாது விழா நடத்துவதாக இருந்தால் மௌலவிகளை அழையுங்கள்

என்று கூறி விடுவேன். ஏனெனில், முஸ்லிமல்லாதவர் களிடையே இஸ்லாத்தை எடுத்துச் சொல்ல வேண்டிய காலக் கட்டாயம் நமக்குள்ளது.

இன்னும் சொல்லப் போனால், என்னைப் பொருத்த வரையில் 'மீலாது விழா' சமயத்தில், 'தினமணி' போன்ற வெகுஜன பத்திரிகைகளிலே 'ஓம் சக்தி' போன்ற பிற சமய இதழ்களிலே, இஸ்லாத்தைப் பற்றியும் பெருமானார் (சல்) அவர்களின் வாழ்வையும் வாக்கையும் பல்வேறு கோணங் களில் கட்டுரை எழுதி விளக்கிச் சொல்ல முடிகிறது. சகோதர சமயத்தவர்கள் இஸ்லாத்தைச் சரியான முறையில் புரிந்து கொள்வதற்கு, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மனித குலத்துக்கு வகுத்தளித்த வாழ்வியல் நெறிமுறைகளை, அதற்கு மூலமாகவுள்ள திருமறையாகிய திருக்குர்ஆனின் இறை வசனங்களை நாம் மக்களிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும் அரிய வாய்ப்பை நமக்கு நல்கிறது. இஸ்லாத்தை அறிந்த முஸ்லிம் பெருமக்களுக்கு நினைவூட்டுகிறோம். இஸ்லாத்தைப் பற்றிச் சரிவரத் தெரியாதவர்களுக்கு புதிய செய்தியாக நாம் சொல்ல முயற்சி செய்கின்றோம்.

இஸ்லாமியப் பெருமக்களிடையே நான் மனம் திறந்து பேச விழைகிறேன். நான் கடந்த பல ஆண்டுகளாக உலக நாடுகள் பலவற்றிலும் சுற்றுப் பயணம் செய்துள்ளேன். முடிந்தவரை மக்களின் நாடி, நரம்புகளையெல்லாம் தொட்டுப் பார்க்கக்கூடிய பத்திரிகைத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக.

**இயலாமைக்குக் காரணம்தேடும் இஸ்லாமியர்கள் !**

இஸ்லாத்தை முழுமையாக, சரியான கோணத்திலே புரிந்து கொண்டவர்கள் இன்று எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மையினராகத்தான் இருக்கிறார்கள். புரிந்து கொண்டுவிட்டதாக மனப்பிரமை கொண்டிருக்கக்

கூடியவர்கள் தான் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். தங்களுடைய விருப்பு வெறுப்புகளை, எண்ணங்களை, சிந்தனைகளை, தங்களால் செயல்படுத்த இயலாதவை களை தவிர்ப்பதற்கு காரண காரியங்களைத் தேடிக் கொண்டிருப்பவர்கள்தான் 'முஸ்லிம்கள்' என்ற பெயரில் மிக அதிகமாக இருந்து கொண்டு, தாங்கள் சொல்வதுதான் இஸ்லாம் என்ற முறையிலே எழுதி, பேசி வருகிறார்கள். ஒருவகையில் இவர்கள் இஸ்லாத்தைவிட்டு விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒருவித வண்ணக் கண்ணாடி போட்டுக் கொண்டு, அதன் வழி பார்த்து, அப்படி பார்த்த மாத்திரத்திலே வண்ணக் கண்ணாடி வழியே தங்களுக்குத் தெரிகின்ற தோற்றத்தை மற்றவர்களுக்குச் சொல்வதிலே கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே, வண்ணப் பூச்சற்ற உண்மையான இஸ்லாத்தை - இறை நெறியை மக்களிடத்திலே கொண்டு செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை - தேவை நமக்கு மட்டுமல்ல, மேனாட் டினருக்கும் இஸ்லாத்தைப் பற்றிய சரியான தகவல்கள், சரியான கோணத்தில், சரியான விளக்கமுறைகளில் இன்றைக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை என்பது மறுக்க முடியாத ஒரு கசப்பான உண்மையாகும்.

**கேட்பவர் உண்டு ; கொடுப்பவர் இல்லை !**

அப்படி சரியான தகவல்களை சரியான முறையில் கூறினால் அதனை ஏற்றுப் போற்ற சகோதர சமயத்தவர்கள் தயங்குவதே இல்லை. இதனை நான் எத்தனையோ சம்பவங்கள் மூலம் உணர்ந்துள்ளேன். நான் ஒரு சிறு சம்பவத்தின் மூலம் இதனை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மீலாது விழாவையொட்டி, 'தினமணி' தலையங்கப் பகுதியில் வெளியிடுவதற்கென 'பெருமானா ரின் பிற சமயக் கண்ணோட்டம்' என்ற பெயரில் கட்டுரை யொன்றை எழுதியனுப்பியிருந்தேன். அதன் ஆசிரியர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் அக்கட்டுரையைப்

படித்திருக்கிறார். நான் கட்டுரையை மாலை ஐந்து மணிக்கு அனுப்பினேன். அதைப் படித்த அவர் இரவு ஒன்பது மணிக்கு என்னைத் தொலைபேசியில் அழைத்தார். அவர் முன்பு மத்திய அரசில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தவர். நன்கு படித்த மேதை. ஒன்பது மணிக்குத் தொலைபேசியில் பேசும்போது என்னிடத்தில் சொன்னார். "உங்கள் கட்டுரையை இப்போதுதான் படித்து முடித்தேன். நீங்கள் வெறும் கட்டுரை எழுதவில்லை. என் மனதிலே இருந்த தூசிகளைத் துடைத்து எறிந்திருக்கிறீர்கள். பெருமானார் பிற சமயங்களைப் பற்றிக் கொண்டிருந்த கண்ணோட்டத்தை, அவர்கள் பிற சமயங்கள் மீது காட்டிய சமய நல்லிணக்கத் தகவல்களை சரியான முறையில் முன்பே மக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தால், 'பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்' என்ற கட்டுரையிலே நீங்கள் ஆதாரபூர்வ மாகக் கொடுத்திருக்கக்கூடிய செய்திகள் உரிய முறையிலே மக்களிடத்திலே கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டிருந்தால், இஸ்லாமியர்களைப் பற்றி ஹிந்துக்களும் மற்றவர்களும் கொண்டிருக்கும் மாசு படிந்த எண்ணங்கள், தவறான கருத்துகள், உணர்வுகள் எப்பொழுதோ துடைக்கப் பட்டிருக்கும். இந்தக் கட்டுரையை நாளைக்கே வெளியிட விரும்புகிறேன். நீங்கள் வெறும் கட்டுரை எழுதியதாகக் கருதவில்லை. இன்றைய நிலையில் எது மக்களுக்கு இன்றியமையாத் தேவையோ அந்த சமூகப் பணியை ஆற்றியிருப்பதாகவே கருதுகிறேன். உங்கள் நல்ல முயற்சிக்கு என்னுடைய வாழ்த்துக்கள்" என மூச்சு விடாமல் பேசி முடித்தார். என் கட்டுரை பற்றி அவர் கருத்துக் கூறிய பாங்கு எனக்குப் பெரு மகிழ்வளித்தது.

மறுநாளே கட்டுரை வெளி வந்தது. அதன் பிறகு அது தொடர்பான இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது.

கட்டுரை வெளியான சில நாட்களில் கட்டுரை பற்றி அபிப்பிராயம் கூறும் வாசகர்கள் கடிதங்கள் பல வெளி

வந்திருந்தன. அவற்றில் ஒன்று பெருமாள் தேவர் எனும் வாசகரால் எழுதப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் அந்த வாசகர் தன் மன உணர்வுகளைத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

"பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம் எனும் கட்டுரையைப் படிப்பதற்கு முன்பு இஸ்லாத்தைப் பற்றியும் நபிகள் நாயகத்தைப் பற்றியும் மிகத் தவறாகக் கருதிக் கொண்டிருந்தேன். இந்த நாட்டிலே இருக்கக் கூடிய சமயங்களையெல்லாம் - மதங்களையெல்லாம் அழிக்க வந்த மார்க்கம் இஸ்லாம் என்று கருதிக் கொண்டிருந்தேன். அதனால் இஸ்லாத்தை எதிர்ப்பதையே குறிக்கோளாகவும் கொண்டிருந்தேன். இதற்காக ஆர்.எஸ். எஸ். இயக்கத்திலே என்னை இணைத்துக் கொண்டேன். ஏனென்றால், இஸ்லாமிய சமயத்தைப் பற்றி எனக்கு அப்படிப்பட்ட கருத்துகள்தான் ஊட்டப்பட்டிருந்தன. 'பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்' என்ற இந்தக் கட்டுரையைப் படித்த பின்னர்தான், எல்லா சமய அடிப்படைகளும் ஒன்றே என்பதும் அவை இறைவனால் இறை தூதர்களுக்கு அருளப் பட்டவை என்பதும், எல்லா மதங்களும் ஒருங்கிணைந்து வாழக்கூடிய சரியான ராஜபாட்டையைக் காட்டிக் கொண்டிருப்பது இஸ்லாமிய நெறி மட்டுமே என்பதையும் நான் உணர்ந்து தெளிந்தேன். ஆகவே, இஸ்லாத்தின் மீது எனக்கு இருந்த வெறுப்பு என்னைவிட்டு அகன்றது மட்டுமல்ல; அதன்மீது எனக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டு விட்டது. நான் இஸ்லாத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறேன். இப்படிப் பட்ட பயனுள்ள கட்டுரையை வெளியிட்ட உங்களைப் பாராட்டுகிறேன்" என்று எழுதியிருந்தார். அந்தக் கடிதச் சாரத்தை அவர் தினமணி வாசகர் பகுதியில் வெளியிட்டார்.

இதையெல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால், சரியான தகவல்களை சரியான முறையிலே, சரியான

இடத்திலே நாம் கொண்டு போய்ச் சேர்ந்தோமேயானால் அதனை ஏற்றுக் கொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் பல சகோதர சமய உள்ளங்கள் காத்திருக்கின்றன. ஆனால், அந்தக் காரியத்தை நாம் செய்யவில்லை. நமக்கு நாமே சொல்லிக் கொண்டிருக்கிறோம். மற்றவர்களிடத்திலே இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் சொல்வதில்லை.

**மீலாது விழாவின் அடிப்படை நோக்கம்**

'மீலாது விழாக்களின் அடிப்படை நோக்கம் எதுவாக இருக்க வேண்டும்? பொருமானாரின் பெருவாழ்வு ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் நாயகத் திருமேனி (சல்) அவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமே இஸ்லாத்தைச் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. முஸ்லிம் அல்லாத வர்களை நாடிச் சென்றார்கள். அங்கே அவர்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானார்கள். ஆனாலும், இறைநெறியாகிய இஸ்லாமியக் கருத்துகளை எடுத்துரைக்க வேண்டிய முறையிலே எடுத்துரைத்து, அவர்களையெல்லாம் மனந் திருந்தியவர்களாக இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வந்தார் கள். அதன் விளைவாகத்தான் முஸ்லிம்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தார்கள். அண்ணலார் வழிவந்த, அவருடைய உம்மத்துக்களாகிய நாம் அந்தக் காரியத்தை முனைப்போடு இப்போது செய்வதில்லை. முஸ்லிம்கள் மத்தியிலே மட்டும் இஸ்லாத்தை எடுத்துச் சொல் லிக்கொண்டுள்ளோம். சொல்ல வேண்டியதுதான். அவர் களுடைய உணர்வைப் புதுப்பிப்பதற்கும் புதுக் கருத்து களை, தகவல்ககளை அவர்களுடைய நெஞ்சத்திலே ஏற்றி வைப்பதற்கும் இப்படிப்பட்ட சொற்பொழிவுகள் தேவைதான். ஆனால், நம்முடை நோக்கம் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இந்த இறைச் செய்தியை-இஸ்லாமிய நெறியை - நபிகள் நாயகம் (சல்) அவர்களுடைய வாழ்வை யும் வாக்கையும் உரிய முறையில் மற்றவர்களைச் சென் றடைவதற்கான வழிமுறைகளைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

அண்மையிலே 'இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்' என்று ஒரு புத்தகம் எழுதியிருந்தேன். அந்நூலின் அச்சுப் படியை முன்னாள் மத்திய அமைச்சரும் மகாராஷ்டிர ஆளுநருமாக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்களிடத்திலே கொடுத்து அதற்கு முன்னுரை எழுதித் தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் இந்நூலை மகிழ்வோடு வாங்கிக்கொண்டார்.

திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் என்மீது மிகுந்த அன்பும் பாசமும் கொண்டவர். அந்நூலை அவர் பத்து நாட்களில் படித்துவிட்டு, தொலைபேசியில் என்னை அழைத்தார். அப்போது அவர், "நூலின் முன்னுரையை எழுதிவிட்டேன். இப்படிப்பட்ட ஒரு நூலை சில ஆண்டுகட்கு முன்னதாக நீங்கள் எழுதியிருந்தால் எவ்வளவோ தீமையான காரியங்கள் நடைபெறாமல் தடுத்து இருக்க முடியும். எவ்வளவோ உணர்வுகள் தவறான பாதையில் செல்லாமல் தடுத்திருக்க முடியும். உங்கள் நூல் அப்படிப்பட்ட செய்திகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. நீங்கள் வந்து உங்கள் நூலுக்கான முன்னுரையை பெற்றுச் செல்லுங்கள்" என்று பணித்தார். இஸ்லாம் பிற சமயங்களுக்கு மதிப்பளிப்பதையும் அனைத்து விவகாரங்களுக்கும் அப்பால் மனித நேயம் மாண்புற இஸ்லாம் வகுத்தளித்த நெறிமுறைகளையும் வெகுவாகப் பாராட்டி முன்னுரை எழுதியிருந்தார்.

### தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்கம்

இஸ்லாத்தை உரிய முறையில் மற்ற சமயத்தவர்களிடையே எடுத்து வைக்காததினால் நம்மைப் பற்றித் தவறான உணர்வுகள், கருத்துகள் எங்கும் பரப்பப் பட்டுள்ளதை நாம் உணர்ந்துசெயல்பட வேண்டும். இந்நிலை இங்கு மட்டுமில்லை, மேனாடுகளில், சிலுவைப் போருக்குப்பின், மிகத்தவறான பிரச்சாரம், அரசுகளின் ஆதரவோடு பரப்பப்பட்டது. மக்களின் மனதிலே இத்

தவறான எண்ணங்கள் அழுத்தம் பெறச் செய்யப்பட்டது. இன்றும் தொய்வில்லாமல் அக்காரியம் நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது.

எனினும், இன்றைய விஞ்ஞான யுகத்தில், அறிவுலகம் விழித்துக் கொண்ட நிலையில், பழைய போக்குகள் கதிரவனைக் கண்ட பனிபோல் மறைந்து வருகின்றன. அதனை விரைவுப்படுத்தும் வகையில் அறிவுலகம் தன் செயல்பாடுகளை உருவாக்கிக்கொண்டு வருவது நமக்கெல் லாம் மகிழ்வூட்டும் செய்தியாக உள்ளது.

இவ்வாறு அறிவுலகில் ஏற்பட்டுள்ள இஸ்லாமிய எழுச்சியின் காரணமாக இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மைச் சிந்தனைகள், கருத்துகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமான ஆய்வுகள் உலகெங்கும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அப்படிப்பட்ட முயற்சியில் அண்மையில் பி.பி.சி. தொலைக்காட்சி ஈடுபட்டது. 'Islam Faith and Power' எனும் பெயரில் ரோஜர் ஹார்டி என்பவரைக் கொண்டு ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. இந்நிகழச்சிக்காக ரோஜர் ஹார்டி உலகம் முழுவதும் பயணம் செய்தார். இஸ்லாமிய அறிஞர்கள் பலரையும் சந்தித்து உரையாடினார். இஸ்லாமிய எதிர்ப்புணர்வு கொண்டவர்களையும் கண்டு பேசினார். முஸ்லிம், முஸ்லிமல்லாத பொதுமக்களையும் பேட்டி கண்டார். தான் சந்தித்து உரையாடிய பலதரப்பட்ட மக்களின் நாடி, நரம்புகளையெல்லாம் தொட்டுப் பார்த்தார். நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்தது. நிகழ்ச்சியின் இறுதியிலே அவருள் ஒரு உணர்வு அழுத்தமாகப் பதிந்தது. அதுதான் 'உலகிலேயே மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம்' என்ற உணர்வு. இதை வெளிப்படையாக நிகழ்ச்சியின் இறுதியில் வெளிப் படுத்தவும் செய்தார்.

இவ்வாறு இஸ்லாத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளத் தக்க வகையில், தவறான கருத்துகள் பலவற்றை இஸ்லாத்தின் பெயரால் பரப்பப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. இவைகளை விவரம் புரியாத நம்மவர்களும், இஸ்லாமிய அறிவுக்குறைவால் மறுதளிக்கத் தவறியதன் காரணமாக, அத்தவறுகள் உண்மை எனும் போர்வையில் மக்களிடையே நிலைபெறுவது தவிர்க்கமுடியாததாகியது. இத்தகு போக்குகளை மாற்றவும் உண்மைக் கருத்துகளும் இஸ்லாமியச் சிந்தனைகளும் மக்களிடையே நிலை பெறவும் இத்தகைய மீலாது விழாக்கள் கட்டாயத் தேவையாக அமைந்து வருகின்றன. பெருமானார் (சல்) அவர்களின் வாழ்க்கை வழி-அவர் வகுத்தளித்து முறைப்படுத்திய இறைநெறிகளை உரிய முறையில் இனங்கண்டு தெளிவு பெற இத்தகைய விழாக்கள் இன்றியமையாத் தேவை என்பதைக் கூற வேண்டியதில்லை.

### அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு

நீங்கள் இன்னொன்றையும் பார்க்கவேண்டும். நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இறைவனால் உலக மக்களுக்கு நேர்வழிகாட்ட அனுப்பப்பட்ட இறுதித் தூதர். அவர் மூலம் மனித குலத்துக்கு இறை நெறி புகட்டும் இறுதி வேதம் திருமறையாகிய திருக்குர்ஆன். இதன் மூலம் இனி, இறைத்தூதரோ இறைவேதமோ உலக மக்களுக்கு வரப்போவதில்லை. இறுதித்தூதர், இறுதி வேதம் என்றால் எக்காலத்திலும் ஏற்படும் பிரச்சினைகள் அனைத்துக்கும் தக்க தீர்வு வழங்க வேண்டும். இதன் நேற்று - இன்று - நாளை என முக்காலத்துப் பிரச்சினைகளுக்கும் முழுமையான தீர்வை பெருமானாரின் வாழ்விலும் திருமறையிலும் தேடிப் பெற வேண்டிய கட்டாய நிலை.

### தனி மனிதனும் சமுதாய மனிதனும்

இந்த உலகிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் இரு பெரும் பிரிவுகளாகத்தான் பிரிக்க முடியும். ஒன்று

அகவாழ்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள். மற்றொன்று புற வாழ்வுத் தொடர்பான பிரச்சினைகள்.

அகவாழ்வுப் பிரச்சினை என்பது ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட வாழ்வின் - குடும்பம் தொடர்பான பிரச்சினைகள். புறவாழ்வுப் பிரச்சினை என்பது ஒருவனது புறவாழ்வின் - குடும்ப வாழ்வுச் சூழலுக்கு அப்பாற்பட்ட பிரச்சினைகளைக் குறிப்பதாகும்.

இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் ஒருவன் தன் வீட்டிலிருக்கும்வரை தனி மனிதர். அவர் வாசற்படியைவிட்டு இறங்கி சாலையில் கால் வைத்தவுடன் அவர் சமுதாய மனிதராகி விடுகிறார். இவ்வாறு ஒரே சமயத்தில் ஒவ்வொருவரும் தனி மனிதராகவும் சமுதாய மனிதராவும் இரு நிலைகளில் வாழ வேண்டிய கட்டாயச் சூழ்நிலை.

**அக - புறப் பிரச்சினை தீர, ஆன்மீக - அறிவியல் வழிகள்**

இத்தகு பிரச்சினைகள் இரண்டும் சேர்ந்ததுதான் ஒட்டுமொத்தமான உலகப் பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி?

இதற்கு இஸ்லாம் மிக அற்புதமாக வழி வகுத்துத் தந்துள்ளது. அக, புற வகைப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இருவகைத் தீர்வு முறைகளை இஸ்லாம் வகுத்தளித் துள்ளது.

அகவாழ்க்கையினுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றால், அக வாழ்க்கை செழுமையாக அமைய வேண்டுமென்றால், அகவாழ்க்கையிலே இன்பம் பூத்துக் குலுங்க வேண்டுமென்றால் அதற்கு ஆன்மீக அடிப்படை யில் தீர்வு காண முயல வேண்டும். அதற்கான தீர்வினைக் கண்டு விட்டால் நம் வாழ்க்கை மகிழ்ச்சி பொங்கும் இன்பச் சோலையாக மாறிவிடும்.

அதே போன்று புற வாழ்க்கையிலே ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அறிவியல் அடிப்படையில் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலம் புறவாழ்க்கைப் பிரச்சினைகள் எளிதாகத் தீர்க்கப்பட்டு விடும். இதுதான் இஸ்லாம் நமக்குக் கற்றுத் தந்திருக்கும் பிரச்சினை தீர்வு முறை.

### ஆன்மீகமும் அறிவியலும் வெவ்வேறல்ல

ஆன்மீகமும் அறிவியலும் நேர்மாறானவை என பலரும் நினைக்கிறார்கள். ஆன்மீக அடிப்படையிலான மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் நேர்மாறானவை, எதிரி எனக் கருதுவோரும் உண்டு. சுருங்கச் சொன்னால் விஞ்ஞானம் வேறு; மெய்ஞ்ஞானம் வேறு என்பதில்லை. இரண்டும் இரு கண்களைப் போன்றது. இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கொண்டிருப்பது.

வீட்டிலிருக்கும் வரை நான் தனி மனிதன். ரோட்டில் கால் வைத்துவிட்டால் நான் சமுதாய மனிதன். இருவகை களும் எப்படி ஒன்றுக்கொன்று எதிரானதாய் இருக்க முடியும். ஒரே மனிதன் இரண்டு விதங்களிலே - இரண்டு முறைகளிலே - பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்ற ஒரு சூழலைத்தான் இஸ்லாம் மிக அழகாக வகுத்தளித்துள்ளது. அகவாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆன்மீக-மெய்ஞ்ஞான முறையை எடுத்துக்கொள். புறவாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க அறிவியலை - 'விஞ்ஞான முறையை எடுத்துக்கொள் என்று அழகுபடக் கூறுகிறது.

### மனிதனை ஆய்வது மெய்ஞ்ஞானம்<br>உலகை ஆய்வது விஞ்ஞானம்

மெய்ஞ்ஞானம் என்பது தத்துவார்த்தமானது. 'தத்துவம்' என்றாலே சிலருக்கு மலைப்பு. ஒருவன் தத்துவம் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் கூறும் முறையில் 'இருட்டறையில் இல்லாத கறுப்புப் பூனையைக்

கண்ணை மூடிக் கொண்டு தேடுவதற்குப் பெயர்தான் தத்துவம்' என வேடிக்கையாகப் பொருள் விளக்கம் கூறினான். அதே போன்று மெய்ஞ்ஞானம் என்றால் ஏதோ ஒன்று என்று கருத வேண்டியதில்லை. மெய்ஞ்ஞானம் என்பது மனிதனை ஆய்வது, விஞ்ஞானம் என்பது உலகைப் பற்றி ஆய்வது என்று மிகச் சுருக்கமாகச் சொல்லலாம். இதைப்பற்றி பெருமானார் (சல்) அவர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும், 'உலகத்தைப் பற்றிய அறிவு மரணத்தோடு உங்களை விட்டுப் பிரிந்துவிடும். உங்களைப் பற்றிய அறிவோ மரணத்திற்குப் பின்னரும் உங்களுக்குத் துணை யாக வரும்' என அழகாகவும் தெளிவாகவும் கூறியுள் ளார்கள்.

## இறப்புக்குப் பின்னும் தொடரும் மெய்ஞ்ஞானம்

என்னதான் அணு ஆராய்ச்சி செய்திருந்தாலும் என்னதான் செய்தித் தொடர்புத் துறையில் புரட்சி செய்திருந்தாலும், வியக்கத்தக்க வகையில் புதிய புதிய மருந்துகளைக் கண்டுபிடித்திருந்தாலும், புதிய புதிய எந்திர நுட்பங்களைக் கண்டுபிடித்து போக்குவரத்துத் துறையில் மாபெரும் மாற்றமேற்படுத்துவதன் மூலம் உலகத்தையே ஒரு கிராமம் போல் சுருங்கிய வடிவிலாக்கிய போதிலும், அவையெல்லாம் நம் இறப்புக்குப் பின் நம்மைத் தொடர்வதில்லை. அவையெல்லாம் மரணத்திற்குப் பின் இவ்வுலக அளவில் நின்று விடுகின்றன. விஞ்ஞான ஆராய்ச் சியால் விளைந்த பயன், விஞ்ஞான முன்னேற்றத்தால் பெற்ற பயன், அதனால் நாம் பெற்ற ஆராய்ச்சியின் அரும் பெரும் பயன்கள், அறிவுப் பெருக்கம் அனைத்துமே இவ் வுலகோடு சரி. ஆனால், உங்களைப் பற்றிய அறிவானது, உங்கள் மரணத்திற்குப் பின்னரும் உங்களைத் தொடர்ந்து உங்களுக்குத் துணையாக வரும். இந்த உலகத்தில் வாழும்போது உங்களைப்பற்றிய ஆராய்ச்சி, ஆன்மீக அடிப்படையில் நீங்கள் பெறுகின்ற மெய்ஞ்ஞானப் பயன், உங்கள் மரணத்திற்குப் பின்னும் உங்களைத்

தொடர்வதோடு, கியாமத்து நாள்வரை உங்களைத் தொடர்ந்து வரும். நாளை மஹ்ஷர் மைதானத்தில், இறைவன் முன்னிலையில், உங்கள் நன்மை தீமைகள் தராசுத் தட்டில் வைத்து கணக்கு வழக்குப் பார்த்து நீதி வழங்கும்போது, நீங்கள் வாழும்போது, உங்களைப் பற்றி ஆய்வு செய்து பெற்ற மெய்ஞ்ஞானப் பயன்கள் உங்களுக்குப் பெருந்துணையாயமைந்து இறையருளைப் பெற்றுத் தரும் சாதனமாக அமைகிறது எனலாம்.

பல்வேறு சமயங்கள் சுட்டிக்காட்டுவது போல் மனிதன் என்பவன் ஏதோ ஒரு உயிரினம் மட்டுமில்லை. சில சமயங்கள் சொல்வதுபோல் பாவப் பிண்டமும் அல்ல; இன்னும் ஒரு சில சமயங்கள் கூறுவதுபோல் 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' எனப் பண்டாரப் பாட்டுத் தத்துவப் பொருட்கள் அல்ல; இஸ்லாம் கூறும் மனிதக் கணிப்பு மிக அற்புதமானது.

இறை ஆத்மா பெற்றவன் மனிதன்!

இஸ்லாமிய மார்க்கம் மனிதனைப் பொருத்தவரை மிகப் புனிதமானவனாகக் கருதுகிறது. இன்னும் சொல்லப் போனால் இறையம்சம் பொருந்தியவனாகக் கருதப்படு கிறான். இறையம்சமாகவே உருவாக்கப் பட்டவன். ஆம்! மனிதன் என்பவன் இறைவனின் பிரதிநிதி என்பதுதான் இஸ்லாமியக் கொள்கை.

மனிதனை உருவாக்க விழைந்த இறைவன் ஐம்பூதச் சேர்க்கையோடு கூடிய மண்ணால் உருவைச் சமைத்து அதனுள், தன் ஆத்மாவிலிருந்து ரூஹை ஊதி, மனித உருவுக்கு உயிர் கொடுத்தான். இறை ஆத்மாவின் ஒரு பகுதி மண்ணாலான மனித உடலுக்குள் புகுத்தியதனால் இறைவனுடைய அம்சத்தைப் பெறுவது தவிர்க்க முடியாததாகியது.

ஆனால், மனித உடலுள் இறைவனால் புகுத்தப்பட்ட

ஆத்மா சிப்பிக்குள் போடப்பட்ட முத்து போல் இருக்கிறது. பளிச்சென்று இது வெளிப்படுவதுமில்லை; தெளிவாக, வெளிப்படையாகத் தெரிவதுமில்லை. அதனால் இறைவன் அளித்த ஆத்மாவின் தன்மைகளை நம்முடைய அறிவால் உய்த்துணர்ந்து, தெளிந்து இறைவனளித்த ஆத்மாவின் ஆற்றல் எந்த அளவுக்கு நம்மிடம் பொதிந்துள்ளது என்பதை ஆய்ந்து தெளிய வேண்டும். மனித ஆத்மாவின் வீரியத்தை வெளியே கொண்டு வருவதற்காக நாம் செய்யும் முயற்சி வினையே மெய்ஞ்ஞானம். அதுவே மெய்யான ஞானம். அதுவே ஆன்மீக உணர்வின் முழுமையான வெளிப்பாடு.

## ஆத்மாவின் வீரியத்தை அறிதலே மெய்ஞ்ஞானம்

இறைவனின் பிரதிநிதியான மனிதன் தன்னுள் இறைவனால் பொதியப்பட்ட ஆத்மாவைப் பற்றிய ஆய்வின் மூலம் - பயிற்சி வாயிலாக ஆன்ம ஆற்றலை முழு வீச்சில் வெளிப்படுத்தும் ஆத்ம சோதனை முயற்சியில் ஈடுபட்டவர்கள்தான் சூஃபிமார்கள். இந்த ஆத்ம சோதனை முயற்சிக்கே தங்கள் முழுவாழ்வை ஒப்படைத்து, இறை யுணர்வு வளத்தால் இறை நெருக்கம் பெற்றவர்கள் இம் மெய்ஞ்ஞான மேதைகள்.

உள்ளத்துள் பொதிந்துள்ள ஆத்ம ஆற்றலைப் புரிந்து கொண்டால் இறைவனையே எளிதாக அறிந்து கொள்ள லாம். எனவேதான் நாயகத் திருமேனி (சல்) அவர்கள் 'தன்னை உணர்ந்தவனே தலைவனை உணர்வான்' எனத் தெளிவாகக் கூறினார்கள். இதனை பெருமானார் (சல்) அவர் கள் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சிறு சம்பவத்தின் மூலம் தெளிவாக உணர்ந்தறியலாம்.

நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த காலத்தில், தான் பெற்ற இறைச் செய்தியின் அடிப்படை யில் 'இறைவன் ஒருவனே; உருவமற்றவன்; ஆணும் இல்லை; பெண்ணும் இல்லை; அலியுமில்லை. அவன் யாராலும் பெறப்படவுமில்லை; அவன் யாரையும்

பெற்றெடுக்கவும் இல்லை. அவனுக்கு இணையுமில்லை; துணையுமில்லை. அவனே அல்லாஹ். அவனைத் தவிர வணங்குதற்குரியவன் வேறு யாருமில்லை; என்று மக்களிடம் உபதேசித்து வந்தார்கள். விக்கிரக ஆராதனை செய்யும் குறைஷிகள் இப்பிரச்சாரத்தை அறவே விரும்ப வில்லை. ஆனால், அண்ணலார் தன் ஓரிறைப் பிரச்சாரத்தை நிறுத்தவே இல்லை.

குறைஷிகளில் சிலர் இப்பிரச்சினையை வேறு விதமாக அணுகத் தொடங்கினார்கள். அக்காலத்தில் அவர் களிடையே பெரும் மேதையாகத் திகழ்ந்தவர் அபுல் ஹிகம் என்பவராவார். அபுல் ஹிகம் என்றால் 'அறிவின் தந்தை' என்பது பொருள். அவர் வாதத் திறமை மிக்கவர். அவரை அண்ணலாரிடம் அனுப்பி ஓரிறைப் பிரச்சாரத்தை நிறுத்த வும் விக்கிரக ஆராதனையைப் பெருமானாரை ஏற்குமாறு செய்யவும் முயற்சி மேற்கொண்டனர். குறைஷிகளின் விருப்பத்திற்கிணங்க இது தொடர்பாக அபுல் ஹிகம் பெரு மானாரை அணுகி விவாதிக்கலானார்.

பெருமானார் (சல்) அவர்களின் மனதை மாற்றும் வகை யில் தன் விவாதத்தைத் தொடங்கினார் அபுல் ஹிகம்,

"ஒரே இறைவன் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அவ் விறைவன் எங்கும் உள்ளான் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள் கிறீர்களா?" என்று பெருமானாரை நோக்கி வினாத் தொடுத்தார்.

"ஆம், இறைவன் எங்கும் நிறைந்துள்ளான்" என்றார். அண்ணலார் அவர்கள்,

"அவ்வாறாயின் எங்குமுள்ள இறைவன் இக்கற்சிலைக் குள்ளும் இருக்கலாமல்லவா?" என்று எதிர்வினாத் தொடுத் தார் அபுல் ஹிகம்.

புன்முறுவல் பூத்தபடி பெருமானார் "கல்லுக்குள் இருப்பதாக நீங்கள் நம்பும் இறைவன், அவன் படைப்பான

உங்களுக்குள்ளும் இருக்கலாமல்லவா?" என அண்ணலாரும் எதிர் வினாத் தொடுத்தார். "நிச்சயமாக என்னுள்ளும் இறைவன் இருக்கிறான்" எனப் பதிலளித்தார் அபுல் ஹிகம்.

"அப்படியானால் உங்களுக்குள் இருக்கும் இறைவனைத் தேடாமல் எங்கோ இருக்கும் கல்லுக்குள் ஏன் இறைவனைத் தேடி அலைகிறீர்கள். உங்களுக்குள் இருக்கக் கூடிய இறைவனது தன்மையை - இறைவனது சக்தியை, இறைவன் உங்களுக்களித்த ஆத்மாவின் ஆற்றலை, உய்த்துணர்ந்து, அதனை முழுமையாக வெளிக் கொணர்ந்து, அதனை வாழ்க்கையில் பயன்படுத்தி, இறையுணர்வோடு ஒன்றி, இறை நெருக்கம் பெறும் ஆற்றலைப் பெற்று, இறையருளைப் பூரணமாகப் பெற்றுய்யலாமே" என்று பெருமானார் (சல்) அவர்கள் விளக்கிக் கூறியதைக் கேட்ட, 'அறிவின் தந்தை'யாகப் போற்றப்பட்ட அபுல் ஹிகம் "இதுதான் சத்தியவாதம் - உண்மை" என உணர்ந்து இறுதித் தூதரையும் அவர் மூலம் வெளிப்பட்ட இறைச் செய்தியையும் போற்றிச் சென்றார் என்பது வரலாறு.

**உள்ளத்துள் பொதிந்துள்ள ஆத்மாவின் ஆற்றலை அறிந்துணர்வது எப்படி?**

ஒரு இருட்டறையில் ஒரு பொருள் உள்ளது. இருளடர்ந்த அவ்வறையில் உள்ள பொருளைத் தெளிவாகக் கண்டறிய வேண்டுமானால், அவ்வறையினுள் வெளிச்சத்தைப் பாய்ச்ச வேண்டும். அறையினுள் வெளிச்சம் செல்லச் செல்ல இருள் அகலும், உள்ளிருக்கும் பொருள் தெளிவாகத் தெரியும். இத்தகு ஒளியையே 'உள்ளொளி' என்று கூறுவர். ஆத்மாவினுடைய அந்தரங்கமான இவ்வாற்றலை அறிந்துணர வழிகாட்டும் உள்ளொளியைக் கொண்டு, கன்மம், மாயை என்று சமஸ்கிருதத்திலும் தமிழில் கூறப்படும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் போன்ற அறியாமைக் குணங்களை, அறிவு என்னும் உள்ளொளி கொண்டு போக்க வேண்டும். அப்போது நம்

உள்ளம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவுபெறும். அங்கே ஆன்ம வெளிச்சம் வெளிப்பட இறையுணர்வு பொங்கிப் பொழியும். இதுவே இறை நெருக்கம் பெற நமக்கு வாய்க்கும் ராஜபாட்டை.

இவ்வாறு மாசு மறுவற்றதாக உள்ளத்தை செம்மையாக வைத்து, உள்ளொளி பெருக்கி இறை நெருக்கம் பெறுதலே ஆன்மீக நோக்கம் என்பர் மெய்ஞ்ஞானியர்.

எனவே, மனதில் எழக்கூடிய தீய உணர்வுகள், தீய எண்ணங்கள், தீய சிந்தனைகள் அத்தனையையும் மனத்திலிருந்து துடைத்தெறிந்துவிட்டு, உள்ளத்தைத் தெள்ளத் தெளிவான பளிங்குபோல் ஆக்கிக் கொள்வதற்கான முயற்சியிலே ஈடுபட்டால், இறையருள் பொங்கும் இடமாக உள்ளம் மாறினால் இறை நெருக்கம் பெறுதல் மிக எளிதாகும்.

இதே கருத்தை இன்னும் தெளிவாகப் புரிந்துணரும் வகையில் மெய்ஞ்ஞான மேதை குணங்குடி மஸ்தான் ஒரு பொருள் பொதிந்த காட்சியை நம்முன் படம் பிடித்துக் காட்டி தெளிவுபடுத்துகிறார்.

### வேட்டை நாயா, வெறி நாயா?

காட்டுக்கு வேட்டையாடச் செல்கிறவர் தனக்குத் துணையாக ஒரு வேட்டை நாயையும் கைக்கொண்டு செல்வார். வேட்டையின்போது ஏதாவது முயல் கைக்குக் கிடைக்காமல் ஓடும்போது, முயல் பிடிக்க ஓடும் வேட்டைக்காரனுக்கு முன்னால் அவனைவிட வேகமாகப் பாய்ந்து சென்று வேட்டைப் பொருளான முயலைக் கவ்வி பிடித்துவந்து வேட்டைக்காரனிடம் சேர்ப்பிக்கும். இது வேட்டை நாய்க்குண்டான குணம். அதே சமயம் வேட்டைக்குச் செல்கின்றவர் வேட்டை நாயைக் கொண்டு செல்லாது, வேட்டை நாய் என்கிற பெயரில் வெறி நாயைக் கைக் கொண்டு சென்றால், அது வேட்டைப் பொருளை தேடிச்

செல்வதற்குமாறாக, வேட்டைக்கு ஏவிய வேட்டைக் காரனையே முதலில் கடித்துக் குதறிவிடும். இதையே அழகிய உவமான, உவமேயத்தோடு பொருள் பொதிந்த கவிதை வரிகளாக,

"வேட்டை பெரிதென்றே வெறிநாயைக் கைக்கொண்டு
காட்டிற் புகலாமோ கண்மணியே ரகுமானே."

எனக் குணங்குடி மஸ்தான் கூறித் தெளிவுபடுத்துகிறார்.

இறைவனுடைய அருளைப் பெற வேண்டும்; அதற் காக இறை நெருக்கம் அடைய வேண்டும்; அப்போது இறைவன் தரும் வெகுமதிகளை நாம் பெற வேண்டும் என் பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக் கூடிய வர் தன் உள்ளத்தை வேட்டை நாயாக வைத்துக்கொள்ள வேண்டும். அந்த உள்ளத்தில் எந்த விதமான தவறான உணர்வு, தவறான சிந்தனை, எண்ணங்களுக்கு, செயல் களுக்கு இடமே இருத்தல் கூடாது. இதயம் மாசு மறு வற்ற பளிங்குபோல் இருக்க வேண்டும். அப்போது, அந்த இதயமே வேட்டை நாயாக அமைந்து இறையருளைப் பெற்றுக் கொண்டு வந்து தரும். மாறாக உள்ளத்தில் காம, குரோத உணர்வுகளை வளர்த்துக் கொண்டு, அழுக்காறு, அவா, வெகுளி போன்ற உணர்வுகளை நிறைத்துக் கொண்டு, 'நான் இறையருளைப் பெறுவதற்கு முயற்சி செய் கிறேன்' என்றால், அவனை அவனது தீய உணர்வுகளும் சிந்தனைகளுமே பலி கொண்டு விடும். இத்தகையவர்கள் இறையருளை அறவே பெற முடியாது என்பதைத்தான் குணங்குடியார் தெளிவாக்குகிறார். ஆன்மீக உணர்வு பொங்க வாழ்வதே இறையருள் பெறும் பெரு வழி.

**ஆன்மீகம் பற்றி அனைத்து நபிமார்களும்**

இந்த ஆன்மீக உணர்வு பொங்க வாழும் வாழ்க்கை முறையைத்தான் நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு முன்ன தாக வந்த நபிமார்கள் உலகுக்கு உணர்த்திச் சென்றார்கள்.

முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதம் (அலை) முதல் ஈசா (அலை)வரை உலக மக்களுக்கு இறைநெறி புகட்ட வந்த நபிமார்கள் அனைவருமே ஆன்மீக வாழ்வு பற்றி மட்டுமே பேசியிருக்கிறார்கள்.

## ஆன்மீகத்தோடு அறிவியல் பேசியவர் அண்ணலார்

ஆனால், இறுதி இறைத் தூதரான நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மட்டுமே ஆன்மீகத்தையும் பேசினார்; அறிவியலைப் பற்றியும் பேசினார் என்ற பேருண்மையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆன்மீகமும் அறிவியல் தொடர்புடையதேயாகும் என்பதை இன்றைய நவீன விஞ்ஞான ஆய்வு புலப்படுத்தி வருகிறது. ஆன்மீக உணர்வைப் பெருக்கும் வழியாகத் 'திக்ர்' செய்கின்றோம். அப்போது, இறையுணர்வூட்டும் வாசகங்களையும் சொற்களையும் உள்ளும் புறமுமாக தொடர் ஒலி எழுப்பி உணர்வோட்டம் பெறுகிறோம். அப்போது இறையின்ப உணர்வு நெஞ்சமெல்லாம் நிறைகிறது.

இதைப்பற்றி அறிவியல்பூர்வமாக ஆய்ந்த ஜப்பானிய விஞ்ஞானிகள் புதிய கண்டுபிடிப்பு உண்மைகளைக் கண்டறிந்து கூறியுள்ளார்கள். 'திக்ர்'- செய்யும்போது உச்சரிக்கப்படும் ஒலிகள் தொடர்ந்து மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தாக்கி அதிர்வுண்டாக்குகிறது. அந்தப்பகுதியில் ஏற்பட்ட அதிர்வின் விளைவாக ஒருவித ஆன்மா உணர்வு எதிர் லய உணர்வாக அவனுள் எழுந்து, அவனை ஆழ்மன உணர்வாளியாக ஆக்குகிறது என்பது அவர்தம் கண்டுபிடிப்பாகும்.

இனி, இந்த உலகுக்கு இறைத் தூதர் எவரும் வரப் போவதில்லை. இனி எந்த வேதமும் இறைவனிடமிருந்து வெளிப்படப் போவதில்லை. இறுதி நபியாக அண்ணலாரும் இறுதி வேதமாக புர்கானும் மனித குலத்துக்கு வல்ல அல்லாஹ்வால் வழங்கப்பட்டு விட்டது.

எல்லா நாடுகளிலும் எல்லா இனங்களிலும் எல்லா மொழிகளிலும் தோன்றிய இறைத் தூதர்கள் அனைவரும் ஆன்மீகம் பற்றி மட்டு பேசியிருக்க, இறுதித் தூதராக அமைந்த நபிகள் நாயகம் (சல்) அவர்களும் இறுதி வேதமான திருக்குர்ஆன் திருமறையும் அறிவியலைப் பற்றி மிக அதிகமாக பேசுவதை நம்மால் நன்கு உணர முடிகிறது.

### அறிவியல் பெட்டகம் அல்-குர்ஆன்

அண்ணலாரின் வாழ்வும் வாக்கும் அறிவியல் பூர்வமானவை. திருமறையாகிய திருக்குர்ஆன் அறிவியல் துறையின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கி, அறிவியல் ஆய்வுப் பெட்டகமாகவே விளங்கி வருவதாக இன்றைய விஞ்ஞான உலகம் வியப்போடு கண்டு வருகிறது.

மற்ற நபிமார்களெல்லாம் அகவாழ்வின் செழுமைக்கு ஆதாரமான ஆன்மீகம் பற்றியே பேசியிருந்த போதிலும் இறுதி இறைத்தூதரான நபிகள் நாயகம் (சல்) அவர்கள் அகவாழ்வுக்கு ஆதாரமான ஆன்மீகத்தைப் பற்றி பேசியதோடு புறவாழ்வில் வளமான வளர்ச்சிக்கு ஆதார சுருதியாக அமைந்துள்ள அறிவியல்பற்றிப் பேசி மனித வாழ்வை நிறைவு செய்துள்ளார்.

இன்றைக்கு விஞ்ஞானம் வானளாவ வளர்ச்சி பெற்றுள்ளது. இன்றைக்குச் செய்தித் தொடர்பில் ஏற்பட்டுள்ள மாபெரும் வளர்ச்சி உலகத்தை மிகக் குறுகிய வட்டத்திற்குள் கொண்டுவந்து விட்டது. பரந்து கிடக்கும் உலகம் மிகச் சிறு கிராமம்போல் இன்று காட்சியளிக்கிறது. வளர்ந்து வரும் கணினித்துறை உலகை உள்ளங்கையில் சுழலச் செய்கிறது. அந்த அளவுக்கு அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சி உலகிலுள்ள பல பெரும் மதங்களை ஆட்டங்காண வைத்துள்ளது. சில சமயங்களுடைய

அடிப்படைக் கருத்துகளை கேள்விக்குறியாக்கியுள்ளது. சுருங்கக் கூறினால், மதங்களுக்கும் அறிவியலுக்கு மிடையே நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஒரு மாபெரும் போராட்டமே இன்று நடந்துகொண்டுள்ளது.

## நீக்கமற நிறைந்துள்ள அறிவியல் தாக்கம்

அறிவியல் அனைத்து மட்டங்களிலும் தன் செல்வாக்கை, ஆதிக்கத்தை அழுந்தப் பதித்துக் கொண் டுள்ளது. அறிவியலின் துணையின்றி அரையங்குல வாழ்வைக்கூட நகர்த்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சோதனை முறையாக காலையில் எழுந்ததிலிருந்து ஒரு மணி நேரம் அறிவியலின் துணையின்றி என் வாழ்க்கையை நடத்திக் கொள்வேன் என உறுதியெடுத்துக்கொண்டு செயல்பட்டுப் பாருங்கள். பல் துவக்க பிரஷை எடுக்காமல், பேஸ்டைத் தொடாமல், ஹீட்டரைப் போடாமல், கேஸைப் பற்றவைக்காமல், குக்கரை கேஸ் அடுப்பில் ஏற்றாமல் இப்படியே அறிவியலால் விளைந்த சாதனங்கள் எதையும் பயன்படுத்தாமல் நம் அன்றாட வேலைகளை அரையங் குலம்கூட நகர்த்த முடியாமல், உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந்தபடியே இருக்க முடியுமே தவிர வேறு எதுவுமே செய்ய இயலாது. அந்த அளவுக்கு அறிவியலினுடைய தாக்கம் இன்றைக்கு நம் வாழ்வில் நீக்கமற நிறைந்து விட்டது.

## இணைய முடியா இணைகோடுகளா?

அறிவியலின் வளர்ச்சி கண்டு பிற மதங்களெல்லாம் மிரண்டு கொண்டிருக்கின்றன. ஏனெனில், மதங்களுக்கும் அறிவியல் வளர்ச்சிக்குமிடையே ஒரு மாபெரும் இடை வெளி ஏற்பட்டிருப்பதோடு, மேலும் அந்த இடைவெளி அதிகரித்துக் கொண்டே போவது தவிர்க்க முடியாததாகவும் அமைந்து வருகிறது. மதங்கள் விவரிக்கும் தத்துவங்கள் ஒரு புறம், அறிவியல் வளர்ச்சியால் உருவாகி வரும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் ஒருபுறம். இரண்டும் இணைய

முடியாத இணைகோடுகளாகவே இருந்து வருகின்றன. இரண்டும் ஒத்திணங்கிச் செல்ல இயலா நிலை.

இந்து மதத் தத்துவங்கள் சிறந்தவைதான். அதில் இருக்கிற அடிப்படைத் தத்துவங்கள் தவிர, மற்றவை யெல்லாம் அவ்வப்போது அவரவர் விருப்பத்திற்கேற்ப கொண்டு வந்து சேர்க்கப்பட்டவைகளாகும். இந்து சமயத் தத்துவ விளக்கமாகப் புராணங்கள், இதிகாசங்கள், அவற்றின் கதைகள், கதை மாந்தரின் செயல்கள் அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்து சமய இளைஞர் ஒருவர் - அறிவியலை ஆழக் கற்றறிந்த ஒருவர் - தான் சார்ந்த இந்து சமயத் தத்துவங்களை விளக்கும் புராணக் கதைகளைப் படிக்கும்போது, பிரத்தியட்ச உண்மைகளுக்கும் புராணச் சம்பவங்களுக்கு மிடையே எந்தவிதத் தொடர்பும் இல்லாததைக் கண்டு மலைப்பும் திகைப்பும் அடைகிறார். உண்மைக்கு முற்றிலும் புறம்பாக அமைந்திருப்பதைக் கண்டு மிரண்டு போய் விழிக்கிறார். சான்றாக, 'அசுரன் உலகைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலுக்குள் சென்று ஒளிந்து கொண்டான்' என்று புராணக் கதை கேட்கும்போது 'கடலே உலகத்தில்தானே இருக்கிறது. பின் உலகைப் பாயாகச் சுருட்டும்போது, சுருட்டிய பாய்க்குள்தானே கடலும் இருக்க முடியும். பின், எந்தக் கடலுக்குள் சென்று ஒளிய முடியும்?' என்று வினாத் தொடுத்தபடி ஏதும் புரியா நிலையில் திணறுகிறார்; திகைக்கிறார். ஒன்றோடொன்று ஒட்டி வரவில்லையே என்று விழிக்கிறார். இங்கு மட்டுமில்லை, ஐரோப்பிய நாடுகளிலும் இந்நிலைதான் நிலவியிருந்தது. அறிவியலுக்கும் கிருஸ்தவ சமயத்துக்கும் ஏற்பட்ட மோதல்கள் கொஞ்ச நஞ்சமல்ல என்பதை வரலாறு இன்றும் விவரித்துக் கொண்டுதான் இருக்கிறது.

சான்றாக, கோப்பர்நிக்கஸ் எனும் வானவியல் விஞ்ஞானி தொலைநோக்கியாகிய 'டெலஸ்கோப்'பைக்

கண்டுபிடித்திருந்தார். அதனைக் கொண்டு ஆய்வு செய்து, கிருஸ்தவ சமயம் கூறுவதுபோல் உலகம் தட்டையானது அல்ல, அது உருண்டையானது. ஆப்பிள் வடிவில் அமைந் துள்ளது என்பதை கண்டுபிடித்திருந்த போதிலும், கிருஸ்த வத்துக்கு நேர் எதிரான இந்தக் கண்டுபிடிப்பை - உண்மையைக் கூற தைரியமில்லாமல், அந்தப் புதிய கண்டுபிடிப்பை - கருத்தை - விஞ்ஞானிகள் மத்தியிலே மட்டும் பரவ விட்டிருந்தார்.

அவருக்குப் பின் கலீலியோ என்னும் இத்தாலிய வானவியல் விஞ்ஞானியும் ஆற்றல்மிக்க தொலை நோக்கியைக் கண்டுபிடித்து ஆய்வில் ஈடுபட்டார். ஆய்வின் முடிவில் உலகம் உருண்டை எனும் உண்மையைக் கண்டுபிடித்ததோடு கோப்பர்நிக்கஸ் கண்டறிந்து கூறிய 'உலகம் உருண்டையானது' என்ற கண்டுபிடிப்பு நூற்றுக்கு நூறு உண்மையானது என்பதை உலகுக்குப் பறைசாற்றினார். நான் கண்டுபிடித்ததும் கோப்பர்நிக்கஸ் கண்டுபிடித்ததும் ஒன்றே யாகும். உலகம் உருண்டையானதுதான் என்பதை கலீலியோ கூறினதைக் கேட்டதும் கிருஸ்தவ உலகம் மருண்டது. விவிலியத்துக்கு எதிராகக் கூறுவதா? உலகம் தட்டையானது என்றல்லவா விவிலியம் கூறுகிறது. அதற்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் உலகம் உருண்டை எனக் கூறுவதா என வெகுண்டெழுந்து, கலீலியோவை சிறையில் அடைத்தது. விவிலியத்திற்கு நேர்மாறான இந்தக் கருத்தைக் 'கண்டுபிடிப்பு' என்ற பெயரில் கூறியதற்காக உன்னைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றெல்லாம் அவரை மிரட்டியதோடு நீண்ட காலம் அவருக்குச் சிறைவாசம் தந்து வருத்தினார்கள். மூப்பின் எல்லைக் கோட்டில் நின்றிருந்த கலீலியோ தன் இறுதி நாட்களை ஓரளவு நிம்மதியோடு கழிக்க விரும்பினார். தான் கண்டறிந்த 'உலகம் உருண்டை' என்ற உண்மையை - தன் மனசாட்சிக்கு விரோதமாக - உண்மைக்குப் புறம்பாக அவரே மறுத்துக் கூற வேண்டிய கட்டாயச் சூழ்நிலை. வழக்கு மன்றத்தில் "உலகம்

தட்டைதான்" என்று கூறிய கையோடு, இந்தப் பொய்யைச் சொல்வதற்காக இந்தக் கோர்ட்டுக்கு நான் வந்திருக்கிறேன். இப்பவும் சொல்கிறேன், 'உலகம் உருண்டைதான்' என்று முணுமுணுத்துக் கொண்டே கீழே இறங்கினார்.

ஏனென்றால் பெரியவர்களால், அறிவாளிகளால், உண்மையைக் கண்டறியும் விஞ்ஞானிகளால் தாங்கள் கடும் ஆராய்ச்சி செய்து கண்டறியும் உண்மைக் கண்டுபிடிப்பு களை மறைத்துப் பேசவே முடியாது. ஏன்? அந்த அரிய உண்மையைக் கண்டறிவதற்காக அவர் எவ்வளவு காலத்தை - சக்தியை - பொருளை, செலவு செய்திருப்பார். இத்தனைக்கும் பிறகு இந்த உண்மையைக் கண்டறிந்த பிறகு எவரோ ஒருவர் சமயக் கருத்தைக் காரணம் காட்டி, 'மதக் கட்டுப்பாட்டுக்காகக் கண்டறிந்த உண்மையை வெளிப் படுத்தாதே' என எவ்வளவுதான் வற்புறுத்தியபோதிலும் ஏதோ ஒப்புக்காக மாற்றம் சொல்ல உதட்டளவில் முயல்வாரே தவிர உள்ளத்தளவில் அவர் மறுத்துரைக்க மாட்டார். அப்படித்தான் முதிய வயது விஞ்ஞானி கலீலியோ கோர்ட்டில் உண்மைக்குப் புறம்பாகக் கூறியதை யும் உண்மையை சற்று உரக்கவே முணுமுணுத்துக் கூறியதையும் அக்கால வழக்கப்படி ரோமர்கள் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் மதத்தின் பெயரால் விஞ்ஞானிகளைக் கொடுமைப்படுத்தினார்கள். இதனால் அந்த மதத்திற்கும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு உண்மைகளுக்கும் இடையே ஏற்பட்டு வந்த இடைவெளி இட்டு நிரப்பப்படாமலே, நிரப்புவதற்கான வழியே இல்லாமல் போய்விட்டது.

### அறிவியல் வளர வழிகாட்டும் அல்குர்ஆன்

அதே சமயத்தில் இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். திருக்குர்ஆனுக்கும் அறிவியலுக்குமிடையே மிகப் பெரும் நெருக்கம் உள்ளது. அது மட்டுமல்ல திருமறை அறிவியலை

ஆதரிப்பதோடு வலுவாக வளர்ப்பதற்கான வழிவகை களையும் கூறி வழிகாட்டுகிறது.

ஒரு வகையில் பார்த்தால் திருக்குர்ஆன் திருமறை முழுவதும் அறிவியல் அடிப்படையிலேயே பேசுகிறது எனக் கூறலாம். இதை நான் ஏதோ இஸ்லாத்தை, இறைமறையை, பெருமானாரைப் பெருமைப்படுத்த வேண்டும் என்பதற்காகக் கூறவில்லை.

திருக்குர்ஆனில் எந்த ஆயத்தை எடுத்துக் கொண் டாலும் அது 'சைன்டிஃபிக் அப்ரோச்' எனப்படும் அறிவியல் கண்ணோட்டத்தோடு, அறிவியல் அணுகு முறையோடு அமைந்திருப்பதைத் தெளிவாகக் காணலாம். ஆனால், அந்தக் கண்ணோட்டத்தோடு நாம் திருமறை வசனங்களை அணுகுவதே இல்லை.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இருக்கிற அத்தனை அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இஸ்லாமியத் திருமறை யான திருக்குர்ஆன் இறை வசனத் தொகுப்பு முழுமையாக ஆதரிக்கிறது. ஆதரிப்பது மட்டுமல்ல, ஏற்பட்டுள்ள விஞ்ஞான வளர்ச்சி போதாது; இன்னும் மேற்கொண்டு வெகுதூரம் போக வேண்டும். மிகு வளர்ச்சி காண வேண்டும் என்றெல்லாம் வற்புறுத்துவதோடு, விரைந்து விஞ்ஞான ஆய்வில் ஈடுபட கட்டளையிடுகிறது.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி திருக்குர்ஆனிலே சொல்லப்பட்டிருப்பதிலே பத்து சதவீதம் கூட உலகினரால் கண்டுபிடிக்கப்படவில்லையென்றால் இறுதி வேதமாகிய திருக்குர்ஆன் எப்படிப்பட்ட இஸ்லாமிய அறிவியல் நுட்பங்களையெல்லாம் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

### வளர்ந்து வரும் அறிவியல் போக்கு

இன்று உலகெங்கும் ஒரு புதிய போக்கு உருவாகி உரம் பெற்று வருகிறது. அதுதான் எந்தவொரு சிறு விஷய

மானாலும் பிரச்சினையானாலும் அதனை சைன்டிஃபிக் அப்ரோச் (Scientific Approach) கொடுத்து ஆயும் மனப்போக்கு. அறிவியல் அணுகு முறையும் அறிவியல் கண்ணோட்டமும் இன்றைய மேலோட்ட வாழ்வில் நீக்கமற நிறைந்துள்ள பெரும் பண்பாகும். பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளிடமும் இதே மனப் போக்குத்தான் இன்று வளர்ந்து வளம்பெற்று வருகிறது. அறிவியல் கோணத்திலிருந்து பார்த்தால்தான் எதுவுமே புரிகிற - நம்புகிற மனநிலை.

ஆனால், அத்தகைய அறிவியல் கண்ணோட்ட உணர்வு நம்மிடத்திலே இருக்கிறதா என்றால் 'இல்லை' என்றே கூற வேண்டிய நிலை. இன்னும் சொல்லப்போனால் நாம் இன்னும் அந்த உணர்வுக்கே ஆட்படவில்லை என்றுதான் வேதனையோடு குறிப்பிட வேண்டியுள்ளது.

இந்தச் சமயத்தில் நான் ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டுவது பொறுத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

அண்மையில் என் நண்பர் மைக்கேல் ஹெச். ஹார்ட் அவர்களை அமெரிக்காவில் வாஷிங்டன் நகருக்கு அருகில் உள்ள பால்டிமோரில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அவரைப் பற்றி உங்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆதாம் (அலை) தொடங்கி 1975 வரை உலகத்தில் பிறந்த மாமனிதர் களில் தங்களின் தனித்த செல்வாக்கினால் உலகத்தின் வரலாறையே ஒட்டுமொத்தமாக மாற்றியமைத்தவர்களில் நூறு பேரை தேர்ந்தெடுத்து, அவர்களுக்குள்ளும் முதலாமவர் யார், இரண்டாமவர் யார் என அவர்களை வரிசைப்படுத்தி, Ranking of the most influential persons in the History "The 100"என்ற தலைப்பில் நூல் எழுதிய உலகப் புகழ்பெற்ற ஆங்கில நூலாசிரியர். அந்த நூலில் நூறு உலக மாமேதைகளில் அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு முதலிடம் தந்த பேராய்வாளர். அவரை - அவரது

பெயரைக் கொண்டு - அவரையொரு கிருஸ்தவராகவே கருதுகின்றார்கள். நான் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவன். பலரும் நினைப்பதுபோல் அவர் கிருஸ்தவரல்ல. யூதர் - இருப்பினும் மோசஸ் என்றழைக்கப்படும் மூஸா (அலை) அவர்கட்கு முன்னதான முதல் இடத்தைப் பெருமானார் (சல்) அவர்கட்கு வழங்கியதற்கு அவர் கூறும் காரணங்கள் உலகத்தவரின் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. அதாவது ஆய்வு முடிவு அறிவுலகத்தை வியப்பிலாழ்த்தியது. பெருமானாரின் வாழ்வையும் வாக்கையும் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து, இறுதி முடிவாக, பெருமானாரால் நேற்றைய உலக வரலாறு மாறியது, இன்றும் மாறிக் கொண்டுள்ளது; நாளைய உலக வரலாறும் அவரது செல்வாக்கால் மாறும். இவ்வாறு நேற்றை, இன்றைய, நாளைய உலக வரலாற்றின் மாற்றத்துக்கு அச்சாணியாக விளங்கவல்லவர் நபிகள் நாயகம் (சல்) அவர்களே என்பதை காரண, காரியங்களோடு உலகுக்கு உணர்த்தியவர்; மெய்ப்பித்துக் காட்டி, தன் வாதத்தை நிலை நிறுத்தியவர்.

அவரோடு அண்மையில் பால்டிமோரில் பேசிக் கொண்டிருக்கும்போது, ஒரு செய்தியைச் சொன்னார்: "நான் சமீபத்தில் கெய்ரோவில் நடைபெற்ற ஒரு இஸ்லாமிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அக்கூட்டத்தில் பேசிய இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் பலரும் இஸ்லாத்தை ஒரு ஆன்மீக மார்க்கம் என்ற அடிப்படையில் - உணர்வில் பேசினார்களே தவிர, அறிவியல் போக்கில் யாருமே பேசாதது எனக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. இஸ்லாத்தில் ஆன்மீகம் ஒரு பகுதி மட்டுமே. மற்றபடி அறிவியல் போக்கிலான மார்க்கமே இஸ்லாம் என்பது எனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கை மட்டுமல்ல; உண்மையும் கூட. ஏனோ, இஸ்லாமிய அறிஞர்கள் அறிவியல் பக்கமே போக மாட்டேன் என்கிறார்கள். அறிவியல் அடிப்படையில் இஸ்லாத்தை விளக்கினால்

அல்லவா இஸ்லாத்தினுடைய சிறப்பு மட்டுமல்ல, பெருமானாரின் வாழ்வும் வாக்கும் எந்த அளவுக்கு உலகுக்கு வழிகாட்டும் தன்மையுடையதாக விளங்குகிறது என்பது புலப்படும். நீங்களாவது அந்தக் காரியத்தை முனைப்போடு செய்ய முன்வாருங்கள்" என்று கூறி எனக்கு, என் முயற்சிகளுக்கு அழைப்பு விடுத்தார். மைக்கேல் ஹெச்-ஹார்ட் பேசும்போது உச்சரித்த "Islam is a scientific way of life"என்ற வாசகம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. ஒரு யூதராக இருந்தும் இஸ்லாத்தின்மீது இந்த அளவுக்கு மதிப்பும் மரியாதையும் உடையவராக இருப்பதோடு, தன் உள்ளத்து உணர்வுகளைப் பிசிறில்லாமல் பதிவு செய்ய முற்படும் அவரது நடுவு நிலைப் போக்கு, அவரின் மீது எனக்கு மிகுந்த மதிப்பையும் மரியாதையும் ஏற்படுத்தியது.

மைக்கேல் ஹெச்-ஹார்ட்டின் வேண்டுகோளை ஏற்கும் முறையில் நான் "அண்ணலாரும் அறிவியலும்" என்ற தலைப்பில் நூல் எழுதியிருப்பதை விவரித்தபோது, மகிழ்ச்சி பொங்க நம் இருவரின் சிந்தனையும் ஒரே நேர்கோட்டில் இருப்பதாகக் கூறிச் சிரித்தார்.

முழுமையாக அறிய முக்கோண வழிகள்

இஸ்லாத்தைச் சரியான கோணத்தில் தெளிவாக அறிய வேண்டுமானால் அதனை மூன்று கோணங்களிலிருந்து அணுக வேண்டும். அப்போதுதான் இறைநெறியாகிய இஸ்லாத்தை முழுமையாக அறிந்துணர முடியும். முதலாவது உளவியல், இரண்டாவது ஆன்மீகம், மூன்றாவது அறிவியல். இம் முக்கோண அணுகுமுறை மூலமே இஸ்லாத்தை முழுமையாக அறிய முடியும் என்பது என் திடமான நம்பிக்கை. அம்முறையிலேயே நான் இஸ்லாத்தை அணுகி அறிந்து கொள்ள முயன்று வருகிறேன்.

அவ்வாறு அறிய முற்படாவிட்டால் "தோள் கண்டார் தோளே கண்டார்; தாள் கண்டார் தாளே கண்டார்; தடக்கை

கண்டாரும் அஃதே" என்று கம்பர் கூறியபடி ஒரு பகுதி மட்டுமே அறிந்தவர்களாவர் என்பது திண்ணம்.

இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ள சில நிகழ்ச்சிகளைச் சான்றுகளாகக் காட்ட விரும்புகிறேன்.

பாரிஸ் மாநகரில் அமைந்துள்ள யுனெஸ்கோ தலைமை யகத்தில் நடைபெற்ற கூரியர் சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்தேன். அது பன்னாட்டளவில் ஒருவார காலம் நடைபெறும் மாநாடு. வெள்ளக்கிழமை யன்று முஸ்லிம் பிரதிநிதிகள் ஜும்மா தொழுகை தொழச் செல்ல வசதியாக காலையில் ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக மாநாட்டை முடித்து மாலையில் ஒரு மணிநேரம் தாமதமாக மாநாட்டைத் தொடருவோம். அப்படி ஒரு வெள்ளிக் கிழமை ஜும்மா தொழுகைக்கு பாரிஸ் மாநகரின் மத்தியில் அமைந்துள்ள மசூதிக்குச் சென்றுவிட்டு, மாநாட்டுக் கூடத்தில் அமர்ந்திருந்தபோது, எனக்கும் முன்னதாக வந்து அங்கே அமர்ந்திருந்த பிரேசில் நாட்டுப் பிரதிநிதி பெனடிக்டோ சில்வா என்பவர் என்னை நோக்கி, "நாங்க ளெல்லாம் வாரத்துக்கு ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை சர்ச்சுக்குச் செல்கின்றோம். ஆனால், நீங்கள் ஒவ்வொரு நாளும் ஐந்து முறை தொழுது இறைவணக்கம் புரிகிறீர்களே, இதனால் நேரம், சக்தி விரையமாகிறதே. குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு நேரம் தொழுகை செய்தால் போதாதோ" எனப் பாமரத்தனமாகக் கேட்டு என்னையே பார்த்தார்.

அவர் இப்படி ஒரு கேள்வி கேட்டது எனக்கு ஒரு பெரிய விஷயமாகப் படவில்லை. ஏனென்றால் இன்று நம் இஸ்லாமியச் சமுதாய இளைஞர்களில் சிலர் இப்படிக் கேள்விகளைக் கேட்கும் மனநிலைக்கு ஆளாகி வருகிறார் கள். தராவீஹ் தொழுகையில் ஏன் இருபது ரகாஅத்துகள் தொழ வேண்டும். எட்டு ரகாஅத்துகள் போதாதோ என்கின்றனர். பர்ளுத் தொழுகைக்கு மேல் சுன்னத்து,

நஃபில் தொழுகையெல்லாம் ஏன் தொழ வேண்டும்? என்று கேள்விக் கணைகளைத் தொடுக்கத் தயங்குவதில்லை. இன்னும் ஒரு சிலர் ஒரு முஸ்லிமுக்கு மகனாகப் பிறந்த ஒரே காரணத்துக்காக முஸ்லிம் என்ற பெயரை மட்டும் தாங்கிக் கொண்டு, இஸ்லாத்தைப் பற்றி எதுவுமே தெரியாதவர்களாக உலாவும் பெயர் தாங்கி முஸ்லிம் இளைஞர்களில் சிலர் ஏன் ஐவேளைத் தொழுகை? வெள்ளிக் கிழமைத் தொழுகை மட்டும் போதாதோ? என்றெல்லாம் எண்ணத்தான் செய்கின்றார்கள். இது அவர்கள் தவறல்ல; இளமை முதலே முறைப்படி இஸ்லாத்தைக் கற்பிக்கத் தவறிய நம் குறைதான் இதற்குக் காரணம். நாம் தான் குற்றவாளி

இறையச்ச உணர்வூட்டும் ஐவேளைத் தொழுகை

வினா தொடுத்த டிசில்வாவை நோக்கி நான் விளக்கமளிக்க முயன்றேன். "நீங்கள் எண்ணுவது போல் இறைவணக்கத் தொழுகை என்பது ஏதோ போகிற போக்கில் செய்துவிட்டுப் போகிற ஒரு சமயச் சடங்கு அல்ல. தொழுகையின் அடிப்படைத் தத்துவமே உளவியல் அடிப்படையில் அமைந்துள்ளது. வைகறையில் கண்விழித்தெழும் ஒரு முஸ்லிம் தொழுகையாளி உடல் சுத்தம், உள்ளச் சுத்தம் என்ற முறையில் ஒலுச் செய்து கொண்டு, தூய்மையான முசல்லா விரிப்பின் மீது மக்காவிலுள்ள காபாவை முன்னோக்கி அமர்கிறார். இப்போது அவர் அனைத்துச் சிந்தனையும் உணர்வும் இறையில்லத் திசையின்பால் திருப்பப்படுகிறது. காபா இறையில்லமே தவிற இறைவனல்ல என்பதை உணர்ந்தே அதை நோக்கி அமர்கிறார். அவருள் அழுத்தமாக எழும் மற்றொரு உணர்வு இறைவன் தம்முன் இருப்பது போலவும் அவன் முன்பாக மண்டியிட்டுத் தொழுது, அவனது பேரருளை வேண்டித் தொழுவது போன்ற மன உணர்வை அழுத்தமாக உருவாக்கிக் கொண்டு தொழத் தொடங்குகிறார். அப்போது தொழுகைப் பாடத்துக்கும் அப்பால் அவர் மனவுணர்வு

முழுமையும் இறை அச்சத்துக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. இறை நெறி பேணி நடந்தால் இறையுவப்பும் இறையருளும் கிட்டும், இல்லையெனில் இறைவனின் தண்டனையிலிருந்து தான் தப்பவே முடியாது என்ற அச்ச உணர்வே அவர் நெஞ்மெல்லாம் நிறைந்திருக்கிறது. இந்த இறையச்ச உணர்வு பொங்கிப் பொழியும் நிலையில் அவர் தன் வைகறைத் தொழுகையை நிறைவேற்றுகிறார். பிறகு உணவு உட்கொண்டு, தன் அன்றாடக் கடமைகளில் முழு வீச்சுடன் ஈடுபடுகின்றார். இப்போது அவருள் பரவி யிருந்த இறையச்ச உணர்வு கொஞ்சங்கொஞ்சமாகக் குறையத் தொடங்குகிறது. முழுதும் குறைவதற்கு முன்ன தாகத் தன் நண்பகல் தொழுகையை நிறை வேற்றுகிறார். மீண்டும் நெஞ்சமெல்லாம் இறையச்ச உணர்வு நிறைய, இறை நெறி பேணி நடக்க முனைகிறார். பின் நண்பகல் உணவுக்குப் பின் பணி முனைப்பில் அவர் உள்ளத்து இறையச்ச உணர்வு குறையத் தொடங்குகிறது. முழுமையும் குறையுமுன் அவர் பிற்பகல் தொழுகையைத் தொடங்கி நிறைவேற்றுகிறார். பின் மீண்டும் பணி, இறையச்சக் குறைவு. மீண்டும் இறையச்சத்தைப் புதுப்பிக்க அந்தி நேர மக்ரிஃப் தொழுகை. பின், இறுதியாக இரவுப் படுக்கைக் குச் செல்லுமுன் இஷாஅத் தொழுகை. இவ்வாறு வைகறை யில் கண் விழித்தது முதல் இரவு கண் மூடி உறங்கச் செல்லும்வரை இடையறாது இறையச்ச உணர்வோடு வாழ ஐவேளைத் தொழுகைகளே ஆதார சுருதியாக அமை கின்றன.

ஒரு மனிதன் தவறான வழியில் சென்றால் இறைவனின் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது என்ற இறையச்ச உணர்வோடு நேரான வழியில் முறையான வாழ்க்கை வாழ, உளவியல் அடிப்படையில் நமக்கு நாமே கடிவாளமிட்டுக் கொண்டு, நேர் வழியில் நடக்க உறுதுணையாயமைந்துள்ள செயல்பாடுகளே ஐவேளைத் தொழுகைகளே தவிர, அவை வெறும் சடங்கு

சம்பிரதாயங்கள் அல்ல" என விளக்கிக் கூறியதைக் கேட்ட நண்பர் டிசில்வா விரைந்து எழுந்து வந்து, இரு கைகளைப் பற்றி குலுக்கியவராக, ஒரு மனிதன் தனக்குத்தானே அச்சவுணர்வோடு, செம்மையாக, வாழ்க்கைச் செயல்பாடு களை அமைத்துக் கொள்ள இதைவிடச் சிறந்த வழி வேறு எதுவுமே இருக்க முடியாது. உங்கள் ஐவேளைத் தொழுகை முறைக்கு இப்படியொரு உட்பொருள் உளவியல் அடிப்படையில் உட்பொதிந்திருப்பதை அறிந்து பெரிதும் மகிழ்கிறேன் எனக் கூறி, கைகுலுக்கிப் பாராட்டி மகிழ்ந்தார்.

ஒவ்வொரு முஸ்லிமும் இறையச்சத்தோடு வாழ வேண்டும் என்பதுதான் இறை நியதி. இறையச்ச உணர்வு நெஞ்சம் நிறைந்திருக்கும்வரை ஒரு முஸ்லிம் இறை நெறி பிசகி வாழ இயலாது.

இவ்வாறு இருபத்திநான்கு மணி நேரமும் இரவு பகல் இடையறாது இறையச்சத்துடன் வாழவே ஐவேளைத் தொழுகையுடன் நள்ளிரவுத் தொழுகையான 'தஹஜ்ஜத்' தொழுகையையும் பேணி நாம் தொழுது வருகின்றோம்.

ஒரு மனிதனுடைய உள்ளத்தில் இறையச்ச உணர்வு இருக்கும்வரை அவன் மனம் தவறான எண்ணங்களுக்கு அறவே இடம் தராது. இந்த அச்ச உணர்வே அவனைத் தடுத்து நிறுத்தி நல்ல எண்ணங்களிலும் நற்செயல்களிலும் நம்மைக் கொண்டு செல்லும். 'இது தப்பான காரியம், இதைச் செய்தால் இறைவன்கிட்ட மாட்டிக் கொள்ளும் படியாகிவிடும். இறைவனுடைய கோபம் பொல்லாதது. கடுமையான தண்டனைக்கு நம்மை ஆளாக்கி விடும், என்றெல்லாம் அவன் மனதிலுள்ள இறையச்ச உணர்வு மனச்சாட்சி வடிவில் அவனை மிரட்டிக் கொண்டிருப்பத னால் அவன் எந்தத் தீங்கும் செய்யாதவனாக - எவ்விதத் தீய உணர்வுக்கும் இடம் தராதவனாக வாழ வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால்

தொழுகையாளி எந்தத் தவறுதலுக்கும் இடம் தராத வனாகத் தன் வாழ்க்கைத் தேரை நகர்த்த வேண்டியதா கிறது என மேலும் நான் விவரித்த என் விளக்கத்தைப் பொறுமையாகச் செவி மடுத்த டிசில்வா அகமகிழ்ந்த வராக, "அறியாத்தனமாக அப்படியொரு கேள்வியைக் கேட்டு விட்டேன். ஒரு மனிதன் தனக்குத் தானே கட்டுப் பாடுகளையும், தனக்குத்தானே கடுமையான விதிமுறை களையும், தனக்குத் தானே கடிவாளமாக போட்டுக் கொண்டு, நெறி பிறழா வாழ்வு வாழ இத்தொழுகை முறை யைத் தவிர வேறு எந்த முறையும் இருப்பதாகத் தெரிய வில்லை. உன்னதமான கொள்கையும் உன்னதமான தத்துவமும் உன்னதமான முறைகளும் உங்கள் தொழுகை முறையில் அமைந்திருப்பதை மிகவும் உணர்கிறேன்" எனக் கூறித் தன் மகிழ்வைப் புலப்படுத்தினார்.

இதை வேறு ஒரு முறையில் உணர்ந்து தெளியும் வாய்ப்பு எனக்கு ஒரு முறை சென்னையில் வாய்த்தது.

ஒரு நாள் மாலை தலைமைச் செயலகம் சென்றிருந்த நான், அங்கிருந்த திரு ராமகிருஷ்ணன் எனும் அரசு அதிகாரியை சந்திக்கச் சென்றிருந்தேன். பிராமண குலத் தைச் சார்ந்த அவர் என் மீது அன்புமிக்கவர். நான் சென்ற நேரம் அவர் வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந் தார். அவருடன் அவர் துணைவியாரும் இருந்தார். என்னையும் தன்னோடு வீட்டிற்கு வரும்படி அழைத்தார். நானும், அவர்களுடன் சென்றேன். நாங்கள் சென்ற கார் வழியில் ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோர் கடைமுன் நின்றது. 'ஹாதி ஸ்டோர்' என்ற அந்தக் கடை ஒரு முஸ்லிமுக்குச் சொந்தமானது. இவர் காரைக் கண்ட வுடன் கடைப் பையன் ஒரு பெரிய மளிகைச் சாமான்கள் அடங்கிய பெட்டியைத் தூக்கி வந்து கார் டிக்கியில் வைத் தான். பின் கடைக்காரப் பையன் தந்த பில்லுக்குண்டான பணத்தை எடுத்துக் கொடுத்தார். அவன் பணத்தைப்

பெற்றுச் சென்றான். அவர் காரைக் கிளப்பினார். கடைப் பையன் சாமானைக் கொண்டு வந்ததிலிருந்து அவன் பணத் தைப் பெற்றுச் செல்லும்வரை அவர் அருகில் உட்கார்ந்தி ருந்த அவர் மனைவி அவரிடம் எதையோ சொல்வதற்குப் பலமுறை முயன்றார். அவர் அதைக் கவனிக்கவில்லை. பின் அப்பெண்மணி வாய்திறந்து கேட்டே விட்டார். "ஏங்க! சாமானும் பில்லும் சரியா இருக்கான்னு பார்க்க வேண்டாமோ?" வினாத் தொடுத்த மனைவியை வெறித் துப் பார்த்தார். "சாயபு கடையிலே சாமான் வாங்கினா சந்தேகப்படக் கூடாது. அவங்க ஆண்டவனுக்கு ரொம்பப் பயந்தவங்க. அஞ்சு நேரம் நமாஸ் பண்றவங்க. வியா பாரத்திலே மோசம் செய்தா நேரா நரகம்தான்'னு நம்புற வங்க" என்று அவர் கூறியபோது எனக்குப் புல்லரித்து விட்டது. தொழுகை மூலம் ஒரு முஸ்லிம் பெறுகின்ற இறையச்ச உணர்வு அவனை எவ்வளவு தூயவனாக, நேர்மையாளனாக உலக மக்களுக்கு இனங்காட்டிக் கொண் டிருக்கிறது. தொழுகையாளி தவறு செய்ய மாட்டான் என்ற எண்ணத்தை உள்வியல் ரீதியாக மற்றவர்கள் மத்தியில் எவ்வளவு அழுத்தமான நம்பிக்கையைத் தோற்று வித்திருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

இவ்வாறு நாம் மேற்கொள்ளும் மார்க்கக் கடமைகள் ஒவ்வொன்றுமே இறையச்ச உணர்வூட்டும் செயல்பாடு களாகவே அமைந்திருப்பதைக் காணலாம். அதுமட்டு மல்ல, அவை ஆன்மீக உணர்வோட்டத்தையும் அறிவியல் அடிப்படையையும் கொண்டுள்ளன என்பதுதான் உண்மை. பெருமானார் (சல்) அவர்களின் வாழ்வும் வாக்குமே இதை உணர்த்துவதாக உள்ளதை நம்மால் அறிந்தின்புற முடிகிறது. இந்தச் சமயத்தில் அண்ணலார் வாழ்வில், அவர் கூறிய ஒரு வாக்கில் எவ்வளவு அரிய, பெரிய விஞ்ஞான உண்மை பொதிந்துள்ளது என்பதை எண்ணும்தோறும் மயிர்க்கூச்செரிகிறது.

அண்ணலார் வாக்கில் காணும் அறிவியல் அடிப்படை

"நாற்பது நாட்கள் வெறுங்காலுடன் செருப்பணியாமல் பொதுச் சாலைகளில் ஒருவர் நடந்திருந்தால் அவரது சாட்சியத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டாம்", என்று பெருமானார் (சல்) அவர்கள் கூறியதாக அல் ஹதீஸில் ஒரு குறிப்பு வருகிறது.

சாதாரண நிலையில் இவ்வாறு கூறியிருக்கும் கருத்தை எண்ணிப் பார்த்தால் செருப்பணிந்து வெளியில் செல்ல வேண்டும் என்ற பொறுப்புணர்வும் சுத்தம் சுகாதாரத்தைப் பேண வேண்டும் என்ற எண்ணமும் இல்லாதவன் கூறும் சாட்சியமும் பொறுப்புணர்வு மிக்கதாக இருக்க இயலாது; ஆகவேதான் இவ்வாறு அண்ணலார் கூறியுள்ளார் என்றே எண்ணத்தோன்றும். ஆனால் அவ்வாறு கூறியதற்கு இது வல்ல காரணம்.

நாம் ஏன் காலில் செருப்பு மாட்டிக் கொண்டு வெளி யில் நடக்கிறோம். வீட்டிலும்கூட மல ஜலம் கழிக்கும் கக்கூஸ் போன்ற இடங்களுக்குச் செருப்பு இல்லாமல் நாம் செல்லுவதே இல்லை. காரணம், அங்கேயெல்லாம் கண்ணுக்குத் தெரியாத நச்சுக்கிருமிகள் படிந்திருக்கும். அவற்றின்மீது கால் பதித்தால் அவை நம் கால்வழி உடலுக் குள் ஊடுருவிச் சென்றுவிடும்; அவை உடலுள் பல நோய் களைத் தோற்றுவித்து விடும் என்பதனாலேயே செருப் பணிந்து நடமாடுகிறோம்.

பலரும் நடமாடும் பொதுவிடங்களிலும் பொதுச் சாலையிலும் எத்தனையோ பேர் காரி உமிழ்ந்திருக்கலாம். இவ்வாறு காரி உமிழ்ந்தவர்களில் பலவிதமான கொடிய நோயுள்ளவர்களும் இருக்கலாம். சிலர் மலமோ சிறுநீரோ கூட கழித்திருக்கலாம். அவை காய்ந்து போயிருப்பினும் கூட, அவற்றிலுள்ள நுண்கிருமிகள் உயிரோடு மண்ணோடு கலந்திருக்கலாம். அவை செருப்பணியாமல் ஒருவர் வெறுங்காலுடன் நாற்பது நாட்கள் நடந்திருந்தால் நிச்சயம்

அந்நுண்கிருமிகள் கால் வழி உடலுள் புகுந்து, அவனறியா மல் பல நோய்களை உருவாக்கியிருக்கலாம். அதனால் அவர் மனநிலை பாதிப்புக்குள்ளாகியிருக்கக் கூடும்.

சாதாரணமாகக் காற்றின் மூலம் சளிக்கிருமிகள் பரவு கின்றன. அதனால் தும்மல் வரும்போது சிறு துண்டை அல்லது 'கைக்குட்டையால் அல்லது குறைந்த பட்சம் கையால் வாயைப்பொத்தி, அக்கிருமிகள் தும்மல் மூலம் வெளியேறி மற்றவர்களைப் பீடிக்காமல் தடுக்க முயல் கிறோம். அதையும் மீறி சளிக் கிருமிகள் நம்மைத் தாக்கி, சளியுண்டாக்கும்போது மிகவும் சங்கடப்படுகிறோம். அப்போது பேச நேரிட்டால் எரிஞ்சு விழுகிறோம். அந்த அளவுக்கு சளிக் கிருமிகளால் ஏற்பட்ட உபாதை நம் மன நிலையையே பாதித்து விடுகிறது.

ஆனால்; நாற்பது நாட்கள் நச்சுக் கிருமிகளுக்கிடையே நடமாடியவனின் உடலுள் புகுந்த நச்சுக் கிருமிகள் எத்தனையோ உபாதைகளை அவன் உடலுள் உருவாக்கி மன நிலையைப் பாதித்திருக்கலாம். அதுவும் அவனறி யாமலே ஏற்பட்டிருக்கலாம். இந் நிலையில் ஒருவன் சாட்சி சொல்ல முயன்றால் பாதிப்புக்குள்ளான மன நிலை, அவன்அளிக்கும் சாட்சியத்தையும் பாதிக்காமல் இருக் காது. அச் சாட்சியம் நேர்மையாகவும் நீதியாகவும் இருக் காது. அதனாலேயே அத்தகைய சாட்சியத்துக்கு முக்கியத் துவம் தரவேண்டாம் என நபிகள் நாயகம் (சல்) கூறினார் கள். இவ்வாறு வள்ளல் நபி பெருமானார் கூறிய கருத்துக் கள் ஒவ்வொன்றின் மீதும் அறிவியல் வெளிச்சத்தைப் பாய்ச்சி ஆராய்ந்து பார்ப்போமேயானால் அவை யனைத்துமே அறிவியல் அடிப்படையில் அமைந்திருப் பதை உணர்ந்து தெளியலாம்.

**அறிவியலுக்கு விளக்கம் தரும் அல்-குர்ஆன்**

இன்னும் சொல்லப்போனால், விஞ்ஞான உலகோடு கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக நெருக்கம் கொண்

டிருப்பவன் என்ற அடிப்படையில் ஒரு கருத்தை மிக உரமாக உங்களிடம் சொல்ல முடியும். அதுதான் திருமறை யான திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள பல செய்தி களுக்கு விளக்கம் தரும் முறையிலேயே இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன என்ற கருத்தே அது.

திருமறை ஆயத்துகள் ஒவ்வொன்றுமே நம்மை அறிவியல் உணர்வும் சிந்தனையும் கொண்டிருக்கப் பணிக் கின்றன. இதைத் திருமறையிலுள்ள இறை வசனங்கள் முழுமையும் காண முடிகிறது.

## மனிதத் தேவையும் பிற உயிர்த் தேவையும்

சாதாரணமாக ஒரு கணம் எண்ணிப் பாருங்கள், மனிதத் தேவைக்கும் பிற உயிர்களின் தேவைக்குமுள்ள வேறுபாட்டை ஆராய்ந்து பார்த்தாலே, இறைவன் அறிவியல் ஆராய்ச்சியில் முனைப்புடன் ஈடுபட, பயன் களை அனுபவிக்கப் பணித்திருப்பதை ஒருவாறு உணர்ந்து தெளிய முடியும்.

மனிதனைத் தவிர்த்துள்ள பிற உயிரினங்களின் தேவை கள், குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டவை. மிக மிகக் குறைந்த அளவுடன் அமைந்திருப்பவை. ஒரு மாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். அதுக்கு வேண்டிய தேவை மிகச் சில. அத்தேவைகளும் அதன் கண்ணுக்கு முன்னாலேயே காணும் வகையில் அமைந்துள்ளன. தன் கண் முன்னே காணும் புல்லை மேய்கிறது. அருகில் இருக்கும் குட்டை யில் நீர் குடிக்கிறது. தாகம் தீர்ந்தவுடன் அருகில் உள்ள மர நிழலில் படுத்து ஓய்வெடுக்கின்றது. அசைபோட்டு உண்டதை ஜீரணிக்கிறது. தன் இணையைக் காணும் போது உடலுறவுக் கொண்டு தன் இனவிருத்திக் கடமையை நிறைவேற்றிக் கொள்கிறது. இதற்கு மேல் அதற்கு எந்தத் தேவையும் இருப்பதாகத் தெரியவில்லை. இதே போலத்தான் பறவை இனங்கள், வீட்டு விலங்குகளி

லிருந்து காட்டு விலங்கு வரை அனைத்து ஜீவராசிகளின் வாழ்க்கைத் தேவைகளும் அவற்றைப் பெறும் வகைகளும் அமைந்துள்ளன.

ஆனால், மனித வாழ்க்கை அவ்வாறு அமைந்துள்ளதா என்றால் இல்லை என்றே கூற வேண்டியுள்ளது. காரணம், மனிதனைத் தவிர்த்து பிற உயிரினங்களின் தேவை மிக மிகக் குறைவு. ஆனால், மனிதனின் தேவை மிகமிக அதிகம். மனிதத் தேவைக்கும் - தேவையை விரும்பும் மன நிலைக் கும் அளவே இல்லை. எவ்வளவு தேவைகள் நிறைவு செய் யப்பட்டாலும் மனித மனம் நிறைவடைவதே இல்லை. மேலும் மேலும் தேவைகளை உருவாக்கிக் கொள்ளவும். அவைகளைப் பெறுவதற்கான வழிகளைக் காணவும் அவா விய வண்ணமே இருப்பது மனித இனத்தின் இயல்பாகும். ஐந்து கார் வைத்திருந்தால்கூட, அமெரிக்காவில் ஒரு புது வகைக் காரை உருவாக்கி வெளியாக்கியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால், வசதியுள்ள பணக்காரன் அந்தக் காரை வாங்கிப் போர்ட்டிகோவில் நிறுத்திய பிறகே நிம்மதியடைகிறான். ஏனென்றால் இவனுடைய ஆசைக்கு அளவேயில்லை. ஆசைக்கேற்ப தேவையை வளர்த்துக் கொண்டே செல்வது மனித இயல்பு.

### மனிதத் தேவை மண்ணிலும் விண்ணிலும்

எல்லா உயிரினங்களுக்கும் தேவையானவற்றைக் கண்ணுக்கு முன்னால் காட்டிய இறைவன் மனிதனுக்குத் தேவையான பலவற்றை கண்ணுக்கு நேராகக் காட்டாமல் அவற்றை மறைபொருளாக மண்ணுக்குள்ளும் கடலினடி யிலும் விண்ணிலுமாக வைத்திருப்பதன் உட்பொருள் என்ன?

மற்ற உயிரினங்கள் அதிகபட்சமாக ஐந்தறிவைப் பெற் றுள்ளன. ஆனால், மனிதனுக்கு மட்டுமே ஆறாவது அறி வாகிய பகுத்தறிவை - சிந்திக்கும் திறனை - ஆற்றலை வேண்டிய அளவுக்குக் கொடுத்துள்ளான். இவ்வாறு

இறைவன் தந்தருளிய பகுத்தறிவைப் பயன்படுத்தி, ஆராய்ச்சி செய்து, இறைவன் மறை பொருளாக விண்ணி லும் மண்ணிலும் பொதிந்து வைத்துள்ள அனைத்தையும் கண்டறிந்து, அவற்றையெல்லாம் அனுபவித்து மகிழ வேண்டும் என்பது இறைக் கட்டளையாகும்.

*"வானங்களிலும் பூமியிலுமுள்ள அனைத்தையும் (உங் கள் நன்மைக்காக) தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கிறான். சிந்தித்து ஆராயும் மக்களுக்கு இதில் நிச் சயமாகப் பல படிப்பினைகள் இருக்கின்றன." (45:12:13)*

தரைக்கு மேல் உள்ள அனைத்தையும் அனுபவித்த மனிதன் மண்ணைத் தோண்டி உள்ளே இருக்கும் தங்கம் முதலாக நிலக்கரி ஈராக அனைத்தையும் தோண்டியெடுத்து அனுபவிக்கத் தவறவில்லை. மண்ணுக்கடியில் தேங்கி நிற்கும் நீரை மட்டுமா வெளிக் கொணர்ந்தான். பல்லா யிரம் ஆண்டுகட்கு முன்பாக மண்ணுள் புதையுண்டு போய் மனித, விலங்கு, தாவர உயிரினங்களின் சாராக உருமாறி யுள்ள பெட்ரோலையுமல்லவா வெளிக்கொண்டு வந்து, பல் வேறு பொருள்களாக உருமாற்றிப் பயன்படுத்தி வருகிறான். இவைகளை மண்ணுக்குள்ளிலிருந்து மட்டுமா பெறுகிறான். ஆழ்கடலின்னுள்ளிருந்தும் பெட்ரோலையும் பிற உலோகங் களையும் மீன் போன்ற உயிரினங்களையும் வேண்டிய மட் டும் கண்டறிந்து, சேகரித்து, பயன்படுத்தி மகிழ்கிறான். இதற்கெல்லாம் ஆதாரமாக - அடிப்படையாக அமைந் திருப்பது அவனது பகுத்தறிவுச் சிந்தனையே யாகும்.

மண்ணினுள், கடலுள் மட்டும் ஆராய்ச்சி செய்வ தோடமையாது விண்ணிலும் தம் ஆய்வைத் தொடங்கி, இன்றுவரை தொடர்ந்து கொண்டுள்ளான். நிலவில் தன் கால் தடம் பதித்த ஆய்வாளன் இன்று சுக்கிரன். சனிக் கோள், வியாழன் கோள் என்று தன் ஆய்வுக் களங்களை விரிவுபடுத்திக் கொண்டே போகிறான். சூரிய மண்டலம் முழுவதிலும் தன் ஆய்வுத் தடங்களைப் பதித்த மனிதன்

இன்று சூரிய மண்டலத்திற்கு அப்பாலும் தன் ஆய்வுப் பார்வையைச் செலுத்த முனைந்து விட்டான்.

## ஏழு வானமும் பயோனீர் ஆய்வும்

பல ஆண்டுகளுக்கு முன்னர் சூரிய மண்டலத்தை ஆய்வதற்காக அமெரிக்காவிலிருந்து ஏவப்பட்ட 'பயோனீர்' ஆய்வு விண்கலம் இன்று சூரிய மண்டலத்திற்கு அப்பால் சென்று தன் ஆய்வைத் தொடர்ந்து கொண்டுள்ளது. சூரிய மண்டலத்தைப் போல் பல வான மண்டலங்கள் இருப்பதாகக் கருதும் விஞ்ஞானிகளின் அனுமான அறிவு இன்று பயானீர் விண்கல ஆய்வு மூலம் உண்மையாகி வருகிறது. 'ஏழு வான மண்டலங்கள்' உண்டு என்று கூறும் குர்ஆனிய கருத்து, வான மண்டல ஆய்வே கால்கோள் செய்யப் படாத காலத்தில், திருமறை மூலம் இறைவனால் உணர்த்தப்பட்டிருப்பதை விஞ்ஞான உலகம் கண்டு வியந்து போய் நிற்கிறது.

இதற்கெல்லாம் அடிப்படையாய் அமைந்திருப்பது எது?

இறைவனின் படைப்பு ரகசியங்களை, இறைவனின் கட்டளைப்படி, மனிதன் அறிந்து கொள்ள முற்பட்டதன் விளைவுதான், இத்தகைய ஆய்வு வேட்கையும், புதிய புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு வரும் இடையறா முயற்சிகளும் ஆகும்.

## ஆராயத் தூண்டும் அரும் மறை

திருமறை முழுவதும் மனிதனைச் சிந்திக்கத் தூண்டும் இறை வசனங்களால் நிறைந்துள்ளது. சில ஆயத்துகளின் இறுதி வாசகத்தின் பொருள் நுட்பம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சில வசனங்களின் இறுதியில் "இவ்வாசகத்தின் உட்பொருளை அறிய முற்படுவோர்க்குப் பல உண்மைகள் புலப்படும்" என்றும் இன்னும் பல வசனங்களின் இறுதிப் பகுதியில் "இவ்வசனங்களை உய்த்

துணர்ந்து ஆய்வோர்க்குப் பல அரிய செய்திகள் தெரிய வரும்" என்றும் இன்னும் சில வசனங்களின் இறுதியில் "இதை ஆராய்ந்து பார்ப்போர்க்கு பல அற்புத புதியன கண்டறியும் பொருள்நுட்பம் புலப்படும்" என்றெல்லாம் கூறியிருப்பதைக் காணலாம். இறை வசனங்களின் அடிப் படையில் மனிதன் சிந்திக்கவும், சிந்தித்தவைகளின் அடிப் படையில் புதிய புதிய ஆய்வுகளை மேற்கொண்டு புதியன புனையும் புதுப்புது ஆய்வுகளையும் கண்டுபிடிப்புகளைக் கண்டறியவும் தூண்டுவதாயுள்ளன.

இதையே பெருமானார் (சல்) அவர்கள் இறைவன் மனிதனுக்காக மண்ணிலும் விண்ணிலும் கடலடியிலும் பொதிந்து வைத்திருக்கும் இரகசியங்களைத் தன் ஆய்வறி வால் ஆராய்ந்து பெற "இறைவன் மனிதனுக்களித்த மறை பொருள் ரகசியத்தை அறிய ஒரு விநாடி சிந்திப்பது 70 ஆண்டுத் தொழுகைக்குச் சமம்" என நபிகள் நாயகம் (சல்) அவர்கள் கூறி, சிந்திப்பதன் சிறப்பை - ஆராய்ச்சியின் அவசியத்தை அவனிக்கு உணர்த்தினார். அண்ணலெம் பெருமானார் (சல்) அவர்கள் இறைவன் மனிதனுக்காகத் தந்தவற்றையெல்லாம் ஆராய்ந்து கண்டறிய வேண்டும். தன் ஆராய்ச்சி மூலம் அவற்றையெல்லாம் அனுபவித்து மகிழ வேண்டும் என்பது இறைக் கட்டளையாகும்.

### அறிவியல் என்றால் என்ன?

"மனிதன் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள சுற்றுப் புறத்தையும், தான் காணும் இயற்கைச் சூழலையும் அவற் றில் மறைபொருளாய் அமைந்துள்ள ரகசியங்களையும் தன் சொந்த முயற்சியால், அறிவின் துணைகொண்டு சோதனை களின் உதவியோடு தெளிவாய்ப் புரிந்து கொள்ளும் முயற் சியே அறிவியலாகும்".

### ஆய்வே அறிவியலுக்கு அடிப்படை

இம் முறையில் மனிதன் மேற்கொண்ட ஆராய்ச்சி

முயற்சிகள் தான் இன்று அறிவியல் ஆய்வுகளாக - விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளாக வளர்ந்து வளம் பெற்று வருகின்றன. இவ் வகையில் அமையும் அறிவியல் ஆய்வுக்கு முடிவே இல்லை. 'கியாமத்து நாள்' என்று கூறப்படும் உலக இறுதி நாள்வரை நீளுகின்ற ஒரு முயற்சி. மனிதன் இறை ரகசியங்களை அறிய எவ்வளவுக்கவ்வளவு முயல்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் பயன்களைப் பெற்று அனுபவித்து மகிழலாம். இம் முயற்சியில் முஸ்லிம்கள் தொய்வின்றித் தொடர்ந்து முயன்று கொண்டே இருக்க வேண்டும் என்பது திருமறை தரும் அறிவுரையாகும். இதுவே பெருமானார் பெரிதும் வற்புறுத்தி வந்த வாக்கமுதுமாகும்.

**சீனாவுக்குச் செல்லப் பணித்தது ஏன்?**

நான் நினைத்துப் பார்க்கிறேன். இஸ்லாமியக் கூட்டங்களில் பேசும் பலரும் பெருமானார் கூறிய புகழ் பெற்ற ஒரு வாசகத்தைக் கூறுவார்கள். அது தான் 'சீனாவுக்குச் சென்றேனும் சீர் கல்வி பெறுக' என்ற வாசகம். கல்வியின் முக்கியத்துவத்தை மட்டும் எடுத்துக்கூறும் வாசகமாக பலரும் கருதும் வகையில் நான் இவ்வாசகத்தைக் கருதவில்லை. நான் எப்போதுமே நாயகத் திருமேனி கூறிய வாக்குகளை அப்படியே பார்ப்பதில்லை. ஏன் இப்படிக் கூறியுள்ளார்? இதற்கு வேறு ஏதேனும் பொருள் இருக்க முடியுமா? எனப் பல கேள்விக் கணைகளை எழுப்பி, அவற்றிற்கு விடை காணும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபடுவேன். அப்போதுதான் அவர் கூறிய வார்த்தைகளின் பொருள் நுட்பம் திட்டமாக நமக்குப் புலனாகும். பெருமானார் (சல்) அவர்களின் சொல்லமுதுகளையும் நாம் முழுமையாகப் புரிந்தின்புற முடியும். ஏனெனில் பெருமானார் வாழ்வும் வாக்கும் ஆய்வுக்குரிய திறந்த புத்தகமாகும்.

இந்தக் கோணத்தில் "சீனாவுக்குச் சென்றேனும் சீர் கல்வி பெறுக" என்ற வாசகத்தை எடுத்துக் கொண்டு ஏன்?

எப்படி? எதற்காக? கூறியுள்ளார் என்று பல கேள்விக் குறிகளோடு ஆராய்கிறபோதுதான் பெருமானார் கூறியதன் பொருள் நுட்பம் நமக்குத் தெளிவாய் புலப்பட முடியும்.

கல்வியறிவு பெற சீனாவுக்கு ஏன் செல்லப் பணிக்கிறார். கல்வி எங்கிருந்தாலும் அதைப் பெற எவ்வளவு கஷ்டம் ஏற்பட்டாலும், துன்பம் தொடர்ந்தாலும் கல்வியைத் தொடர்ந்து பெற முயல வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக இவ்வாறு கூறியிருப்பாரா? அல்லது நீண்ட நெடுந்தொலைவுக்கப்பால் உள்ள சீனாவுக்கு பல மலைகளை, பாலைவனங்களை, காடு வனாந்தரங்களை, ஆறுகளை, கடல்களையெல்லாம் கடந்து சென்றாவது கல்வியைப் பெற முயல வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இவ்வாறு கூறியிருப்பாரா?

நல்ல கல்வி என்றால் அதைப் பெற உலகின் நாகரிகத் தொட்டிலாக அன்று புகழ்பெற்று விளங்கிய எகிப்து நாட்டுக்குச் செல்லப் பணித்திருக்கலாமே? தத்துவச் சுரங்கமாக விளங்கிய கிரேக்க நாட்டிற்குப் போகச் சொல்லியிருக்கலாமே? தவ்ஹீதின் பிறப்பிடமாக, ஏகத்துவத்தின் தாயகமாக பெருமானாரால் போற்றிப் புகழப்பட்ட இந்தியாவிற்குச் சென்று கல்வி கற்க அறிவுறுத்தியிருக்கலாமே? இங்கேயெல்லாம் இல்லாத அப்படி என்ன சிறப்புக் கல்வி சீனாவில் இருந்தது?

இந்தக் கண்ணோட்டத்துடன் சீனாவின் அன்றைய நிலையை வரலாற்றுப் பூர்வமாக ஆராய்கிறபோதுதான் பெருமானார் (சல்) அவர்கள் சீனா செல்ல வற்புறுத்திக் கூறியதன் பொருள் நுட்பம் நமக்குத் தெளிவாகப் புரியத் தொடங்குகிறது.

### ஆய்வுத் தொட்டிலாய் மலர்ந்த அன்றைய சீனா

பெருமானார் (சல்) அவர்கள் இக்கருத்தைக் கூறிய அதே காலகட்டத்தில் சீனாவின் நிலை, குறிப்பாக அங்கு

அறிவு வளர்ச்சி - ஆராய்ச்சி நிலை எவ்வாறு இருந்தது என்பதை வரலாற்று அடிப்படையில் - அறிவியல் ஆய்வு வளர்ச்சியின் அடிப்படையில் பார்க்கின்றபோது அன்று அங்கிருந்த நிலை கண்டு நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

'சீர் கல்வி' பெற ஏன் சீனாவைத் தேர்ந்தெடுத்தார்? என்பதும் தெளிவாகிறது. அண்ணலார் கூறிய அன்றைய கால கட்டத்தில் எத்தனை விதமான விஞ்ஞான ஆராய்ச்சி கள் உண்டோ அவ்வளவு ஆராய்ச்சிகளும் மும்முரமாக சீன நாட்டிலே நடந்து கொண்டிருந்த நேரம். அச்சுப் பாள முறை அப்போதுதான் அங்கே கண்டறியப்பட்டிருந்தது. எழுது கிற தாள் அப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அச் சடிப்புக்குப் பயன்படுகிற மையையும் தாளில் எழுதுவதற் கான மையையும் மசி கொண்டு எழுதும் எழுதுகோலையும் கண்டறிந்திருந்தார்கள். அறியப்பட்டிருந்த அத்தனை நோய் களுக்கும் நிவாரணமளிக்கக்கூடிய மூலிகைகளும் அவற் றால் பலவிதமான மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டிருந்த கால கட்டம். உடம்பில் ஓடும் நாடி நரம்புகளில் எந்த இடத் தில் ஊசி குத்தினால் எந்த நோயைக் குணப்படுத்த முடியும் என்பதையெல்லாம் உள்ளடக்கிய 'ஊசி குத்து' மருத்துவ முறையான 'அக்குப்பஞ்ச்சர்' முறை அறியப்பட்டிருந்த கால கட்டம். பட்டுப் பூச்சியின் உடலிலிருந்து கசிந்து வெளிவரும் ஒருவகை திரவத்திலிருந்து உருவாகும் பட்டு நூலைக் கொண்டு அழகான ஆடை நெய்யும் முறை செய லாக்கப்பட்டிருந்த கால கட்டம் அது. சுருங்கச் சொல்வ தென்றால் அறிவு வளர்ச்சி - ஆராய்ச்சி முயற்சி - அவற்றின் அடிப்படையிலான அறிவியல் கல்வி வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது அன்றைய சீனத்தில். இத்தகைய அறிவியல் ஆராய்ச்சிக் கல்வியை - விஞ்ஞானக் கண்டு பிடிப்பு முயற்சிகளை அறிந்து கொள்ள வேண்டும் என்ற வேட்கையை ஊட்டுகின்ற முறையிலேயே சீனாவுக்குச்

சென்று சீர்கல்வி பெறத் தூண்டினார் பெருமானார் (சல்) அவர்கள்.

### ஆய்வு வேட்கை கொண்ட அரேபியர்

அண்ணலார் அறிவுறுத்தியதன் உள் கருத்தை - நோக்கத்தை உய்த்துணர்ந்த அரபிகளில் சிலர் சீன நாடு சென்றனர். அங்குக் கண்டுபிடிக்கப்பட்டவைகளையும், கண்டு பிடிப்பு முயற்சிகளையும் நேரில் கண்டு வியப்படைந்தனர். அவைகளைத் தாங்களும் கற்க முயன்றனர். ஆனால், அந்த விஞ்ஞான உண்மைகளை வெளிப்படுத்தவோ அவற்றின் ஆய்வு முறைகளைக் கற்பிக்கவோ சீனர் மறுத்து விட்டனர். இதனால் சினமுற்ற அரபிகள் தாள் செய்யும் வித்தை தெரிந்த சில சீனர்களைக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டு, அரபகம் திரும்பினர். தாள் செய்யும் கலையைக் கற்றுக் கொடுத்தால் விடுதலை வழங்குவதாக வாக்களித்தனர். இதை ஏற்ற சீனர்கள் அரபுகளுக்கு தாள் செய்யும் கலையைக் கற்றுக் கொடுக்க முன்வந்தனர்.

ஆனால், தாள் செய்வதற்குத் தேவையான மரக் கூழ்களை உருவாக்குவதற்கான மூங்கில்களோ பிற மரங்களோ அரேபிய பாலைவனத்தில் இருக்கவில்லை. பேரீச்ச மரங்களும் காய்கறிச் செடிகளும் ஒருவகை முட் செடிகளும் மட்டுமே அங்குக் கிடைத்தன.

சீனர்களுடன் அரபிகளும் மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். பல்வேறு ஆய்வு முயற்சிகளுக்குப் பின்னர், கிடைத்த மூலப் பொருள்களைக் கொண்டே மிகச் சிறந்த தாளை - அன்று சீனத்தில் உருவாக்கப்பட்டதை விட பல மடங்கு உயர்ந்த தாளை - பேப்பரை - அரபிகளால் உருவாக்க முடிந்தது. அன்றைய கால கட்டத்தில் மிக உயர்ந்த தாளைச் செய்யும் முறையைக் கண்டுபிடித்த பெருமை அரபிகளைச் சென்றடைந்தது. தொடர் முயற்சிகள் ஆங்காங்கே முளைவிட்டு வளமாக வளரத் தொடங்கின என்பது வரலாறு.

## மலைப்பூட்டும் ஆய்வுப் பெருக்கை மூடிமறைத்த சிலுவைப் போர்

இப்படி அன்றைய அரேபிய ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட விஞ்ஞான ஆய்வு முயற்சிகளும் அதன் விளைவாகக் கண்டறியப்பட்ட கண்டுபிடிப்புகளும் ஒன்றிரண்டல்ல. அண்ணலார் காலந்தொட்டு அக்கண்டுபிடிப்புகளின் - அவை சார்ந்த துறைகளின் எண்ணிக்கையைப் பட்டியலிட்டபோது மலைத்தேன் என்று கூறுவதைவிட திகைத்து, வியப்பில் மூழ்கினேன் என்றுதான் கூற வேண்டும். சிலுவைப் போரின் விளைவாக இவ்விஞ்ஞான கண்டுபிடிப்புகளின் விபரங்கள் உலகுக்குத் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டுவிட்டன. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மட்டுமே உலகுமுன் பறைசாற்றப்பட்டன. அந்தத் தொழிற்புரட்சிக்கு ஆதாரமான அடிப்படைக் கண்டுபிடிப்புகள் அனைத்தும் அரபு விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டவை என்ற உண்மைகள் நீண்ட நெடுங்காலமாக மறைக்கப்பட்டு வருவதை இன்றைய அறிவுலகம் - ஆராய்ச்சியுலகம் கடுமையாகக் கண்டிக்கத் தொடங்கியுள்ளன. அண்மை நிகழ்வுகள் பல இதை வெளிப்படுத்தி வருவதைக் காண முடிகிறது.

## 'உண்மை நெடுங்காலம் உறங்க முடியாது'

அண்மையில் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் புருணைச் சுல்தானின் பெரும் நிதியுதவியைக் கொண்டு தொடங்கப்பட்ட "இஸ்லாமிய ஆய்வு அறக் கட்டளை"யைத் தொடங்கி வைத்த இங்கிலாந்து நாட்டு இளவரசர் சார்லஸ் பேசும்போது, "இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்துத் தந்தவர்கள் முஸ்லிம்களே என்ற அடிப்படை உண்மையை இனியும் ஐரோப்பியர் மூடி மறைக்க முடியாது. நேர்மையுள்ளம் படைத்த ஆராய்ச்சியாளர்களும், அறிவியல் வரலாற்று ஆசிரியர்களும்

மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிப்படுத்த முனைந்து விட்டனர். உண்மைகள் நெடுங்காலம் உறங்க முடியாது" என உலகை எச்சரிக்கும் முறையில் பேசியிருப்பது பல தகவல்களை - உண்மைகளைப் புரிந்து கொள்ள வழி வகுக்கிறது.

## 56 அறிவியல் பிரிவுகளை வளர்த்த 500 அரபி விஞ்ஞானிகள்

இவ்வாறு பெருமானார் (சல்) காலந்தொட்டு வளர்ந்த - வளர்க்கப்பட்ட அறிவியல் பிரிவுகள் 56-க்கு மேலாகும். இவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட விஞ்ஞானிகள் ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள்.

பத்தாண்டுகட்கு முன்பு தமிழ் உட்பட உலகின் 30 மொழிகளில் வெளிவரும் சர்வதேசத் திங்களிதழான "யுனெஸ்கோ கூரியர்" சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டோம். மருத்துவ உலகின் தந்தையாகப் போற்றப்படும் அவிசென்னா என்றழைக்கப்படும் இப்னு-சினாவின் ஆயிரமாவது ஆண்டுச் சிறப்பிதழாகும் அது. அந்த இதழில் உச்சகட்டச் செய்தியாக இடம் பெற்றிருந்தது ஆயிரம் ஆண்டுகட்கு முன்னதாக உலகத்தின் மிகச் சிறந்த அறிஞர் களாக - மேதைகளாக - அறிவியல் ஆய்வறிஞர்களாக இருவர் மட்டுமே உலகில் சிறந்து விளங்கினர். அவர்கள் இருவரும் முஸ்லிம்கள். ஒருவர் இப்னு - சினா. மற்றொருவர் அல்-புரூனி. அவ்விதழில் இடம்பெற்ற அனைத்து அறிவியல் செய்திகளிலும் நீக்கமற நிறைந்திருந்தவை இஸ்லாமிய அறிவியல் அறிஞர்களைப் பற்றியும் அவர்களின் ஆராய்ச்சிகளைப் பற்றிய தகவல்களே யாகும்.

## அறிவியல் சொற்களாக மலர்ந்த அரபுப் பெயர்கள்

அறிவியல் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்திருப்பது கணிதமாகும். கணித கலைச் சொற்களில் சைஃபர், ஸீரோ (0) போன்ற பல கலைச் சொற்கள் அரபிச் சொற்களாகவே

அமைந்துள்ளன. அல்கோரிதம் என்ற கணிதவியல் 'அல்-குவாரிஸ்மி' எனும் கணித மேதையின் பெயர் அடிப் படையில் அமைந்ததாகும். 'அல்ஜீப்ரா' எனும் கணித வியல் 'அல்-ஜாபர்' என்ற அறிஞரின் பெயர் திரிபாகும். அதே போன்று திரிகோணமிதி என்ற கணிதவியல் பிரிவையும் 'ஜாமெட்ரி' எனும் கணிதவியல் பிரிவையும் உருவாக்கி வளர்த்து வளப்படுத்தியவர் நஸ்ருத்தீன் எனும் கணிதவியல் வல்லுநராவார். யூக்ளிடின் கணிதவியல் அடிப்படைக் கோட்பாடுகளை அடியொற்றி, 'வடிவ கணித'க் கோட்பாடுகளை உருவாக்கியவர் உமர்கையாம் எனும் சூஃபிக் கவிஞர் என்பது நாமெல்லாம் அறிந்த ஒன்றே.

### இன்றைய வளர்ச்சிக்கு அன்றே அடிப்படை

கணிதவியல் வளர்ச்சி, எந்திரவியல் வளர்ச்சிக்கு ஆதார சுருதியாக அமைந்தது. இயக்கம், ஈர்ப்பாற்றல், சக்தி, ஒளி, வெற்றிடம், ஒளியின் வேகம் முதலான அனைத்து அறிவியல் நுட்பங்களை விஞ்ஞான பூர்வமாகக் கண்டறிந்து உலகுக்குணர்த்தியவர்கள் இஸ்லாமிய விஞ்ஞானிகளே யாவர் என்பதை அறிவியல் வரலாறு என்ற நூலில் சார்ட்டன் என்பவர் தெளிவாக விளக்கியுள்ளார். நீர்ச் சுழல் எந்திரக் கருவி, காற்று எந்திரக் கருவி, இருசு, நெம்புகோல், கப்பித்தான், ஊசலாடும் பெண்டுலம், நீர்க்கடிகாரம் போன்ற எந்திரவியல் நுட்பங்களையெல்லாம் கண்டறிந்த வர்கள் முஸ்லிம்களே.

உலகம் உருண்டை என்பதை கோப்பர்நிக்கசுக்கும் கலீலியோவுக்கும் முன்னதாகக் கண்டறிந்து கூறியவர் அல்-பிரூனியே ஆவார். சந்திரனின் இயக்கத்தைக் கண்டறிந்து கூறியவர் அலி இப்னு அமாஜுர் என்பவரும் அபுல் ஹஸன் என்பவருமே ஆவர். முதன் முதல் வானவியல் ஆராய்ச்சிக் கூடத்தை கி.பி. 772-ல் நிறுவிய பெருமை இப்ராஹீம் அல்-பஸாரியையே சாரும். அதே

போன்று மருத்துவத் துறையின் அனைத்து ஆய்வுகளையும் தொடங்கி வைத்தவர்கள் இப்னு சினா, அல்புரூனி, இப்னு அல்ஹைறத்தாம் போன்ற மருத்துவ இயல் அறிஞர்கள் ஆவர். அறிவியல் வளர்ச்சிக்கு உயிரோட்டமாக பெருமானார் வாழ்வும் வாக்கும் திருமறையின் தூண்டுதலும் அறிவியல் அடிப்படையிலான இறை வசனங்களும் இவற்றின் அடித்தளத்தில் உருவாக்கப்பட்ட இஸ்லாமியக் கல்வி முறையும் அமைந்திருந்தன.

பள்ளி வாசல் தோறும் ஆய்வரங்கு!

1984ஆம் ஆண்டு நான் எகிப்து நாட்டுக்குச் சென்றிருந்த போது இஸ்லாமியப் பண்பாட்டை விளக்கும் ஒரு அருங்காட்சியகத்துக்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு பகுதியில் பள்ளிவாசல் வடிவில் ஒரு அரங்கு இருந்தது. அதனுள் சென்றபோது, தொழுகை இல்லாத நேரங்களில் அம்மசூதி மதரஸாவாகப் பயன்படுத்தும் முறையில் அமைந்திருந்தது. உஸ்தாது முன்னால் அமர்ந்திருக்க முக்கால் வட்ட வடிவில் மாணவர்கள் அமர்ந்து பாடங்கேட்கின்றனர். அதற்கு அப்பால் ஒரு பெரிய நூலகம், அதனோடு இணைந்த நிலையில் அமைந்துள்ளது. அதற்கு அடுத்ததாக ஒரு ஆய்வுக்கூடம் இருந்தது. இவ்வாறு இறை வணக்கத் தொழுகைத் தலம், நூலறிவு புகட்டும் நூல் நிலையம், ஆய்வறிவு தரும் ஆய்வுக் கூடம் அனைத்தும் அமைந்த ஒரு பெரும் வளாகமாக அமைந்திருந்தன அன்றைய பள்ளி வாசல்கள். நாயகத் திருமேனியின் காலத்திற்குப் பின்னர் அமைந்த பள்ளிவாசல்களின் நிலையை அந்த அருங்காட்சியகம் மட்டுமல்ல; அருகில் அமைந்திருந்த அல்-அஸ்கர் பல்கலைக் கழகமும் இன்றும் வாழும் சான்றாக அமைந்துள்ளது. ஆயிரம் ஆண்டுகட்கு முன்னதாக உருவாக்கப்பட்ட உலகின் முதல் பல்கலைக் கழகம் என்ற பெருமையை இன்றும் தக்க வைத்துக் கொண்டுள்ள இப்பல்கலைக் கழகம், தொழுகைக்கான பகுதி, மாபெரும் நூலகம், அனைத்து அறிவியல் பிரிவுகளுக்கான ஆய்வுக் கூடங்கள்

அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற மாபெரும் வளாகமாக - பல்கலைக் கழகமாக இன்றும் புகழுடன் விளங்குகிறது.

இப்படியே அறிவியல் வளர்ச்சிக்கு ஆதாரமான இஸ்லாமியத் தகவல்களையும் முஸ்லிம்களின் பங்களிப்பையும் விளக்கிக் கொண்டே செல்ல முடியும். என்றாலும் நேரத்தின் அருமை கருதி, அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாக்கையும் திருமறையாம் திருக்குர்ஆனில் பொதிந்துள்ள அறிவியல் செய்திகளின் சிறப்பையும் ஓரளவு கோடிட்டுக் காட்டினால் போதும் எனக் கருதுகிறேன்.

**விண்ணாய்வுக்கு 'விதி' கண்டவர்**

இன்றைக்கு விண்ணிலே எண்ணற்ற விந்தைகள் நிகழ்ந்து கொண்டுள்ளன. நிலவிலே மனிதன் இறங்கி தன் காலடித் தடத்தை அழுத்தமாகப் பதித்து விட்டான். செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று நாட்களின் பெயர்களிட்ட கிரகங்களுக்கெல்லாம் செயற்கைக் கோள்களை அனுப்பி இடையறாது ஆராய்ந்து கொண்டுள்ளான். சிலவற்றில் ஆய்வுக் கலங்களை இறக்கி, அதிலுள்ள கருவிகளை இயங்கச் செய்து எத்தனை யெத்தனையோ ஆய்வுகளைச் செய்து, செய்தியைச் சேகரித்துக் கொண்டு வருகிறான். இத்தனை விண்வெளி ஆய்வுச் செயல்களுக்கும் வழிவகை செய்தது எது? இவ் வாராய்ச்சி முயற்சிகளுக்கு ஆதார சுருதியாக அமைந்தது எது? 'ஈர்ப்பு விசை' (Power of Gravity) என்ற ஆராய்ச்சி உண்மைதான் விண்ணியல் ஆய்வுக்கே மாபெரும் உந்து சக்தியாக அமைந்தது.

இதற்கும் அடிப்படையாயமைந்தது 'இயக்கவியல்' குறித்த ஆராய்ச்சிகளாகும். இத்துறையில் அடித்தளம் அமைத்த பெருமை முஸ்லிம் விஞ்ஞானிகளையே சாரும். இன்றைய வானவியல் ஆய்வின் முத்தாய்ப்பாக அமைந் துள்ள இயங்கு விசைக் கோட்பாட்டை வகுத்த பெருமை

இப்னு அல்-ஹைத்தாம் அவர்களையே சாரும். ஈர்ப்பு விசை பற்றிய இவரது கோட்பாட்டை அடியொற்றி உருவானதே நியூட்டனின் புவியீர்ப்புக் கோட்பாடு.

'மரத்திலிருந்து ஆப்பிள் பழம் ஏன் கீழே விழ வேண்டும்?' என்ற கேள்வி எழுப்பி, பூமியின் ஈர்ப்பு விசையினால்தான் இது ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து கூறியவர் நியூட்டன். அவரது ஆராய்ச்சியை அடியொற்றி விண்ணிலுள்ள கிரகங்களுக்கிடையிலான இழுப்பு விசையின் அளவுகளை ஆராய்ந்து, கண்டறிந்து கணித்தவர் ஐன்ஸ்டீன் எனும் இயற்பியல் விஞ்ஞானி.

அன்றே குர்ஆனில் 'சார்புக் கொள்கை'

ஐன்ஸ்டீன் கண்டறிந்த இழுப்பு விசையை அதாவது 'Theory of Relativity' அதாவது 'சார்புக் கொள்கை' எனக் கூறினார். இதன் அடிப்படையிலேயே இன்று செயற்கை கோள்கள் பலவற்றை விண்ணுக்கனுப்பி, விண்கோளாய்வுகள் அதிக அளவில் நடைபெறுகின்றன. "அரபு நாட்டு வானவியல் அறிஞர்களின் தோள்களில் நின்றுதான் என்னால் வானத்தையே ஆய முடிகிறது" என்று நியூட்டன் கூறியது போலவே, ஐன்ஸ்டீனும் நியூட்டனின் தோள்களில் நின்றுதான் என்னால் வானத்தை - கோள்களிடையிலான ஈர்ப்பு விசையை - அவை ஒன்றோடொன்று சார்ந்துள்ள இழுப்பு விசையை கண்டறியவும் கணிக்கவும் முடிந்தது என்று கூறியுள்ளது நினைக்கத் தக்கதாகும்.

வானவியலின் உயிர் நாடியான ஈர்ப்பு விசை - சார்புக் கொள்கையையே திருமறையாம் திருக்குர்ஆன் மிகத் தெளிவாகக் கூறி விளக்குகிறது.

"சூரியன் சந்திரனை அணுக முடியாது. இரவு பகலை முந்த முடியாது (இவ்வாறே கிரகங்களும் நட்சத்திரங்களும்) ஒவ்வொன்றும் (தன்னுடைய) வட்ட வரைக்குள் நீந்திச் செல்கின்றன." *(36:40)*

எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

சூரியனை மையமாகக் கொண்ட சூரிய மண்டலக் கோள்கள் அனைத்தும் தங்களுக்கிடையேயும் தங்களுக்கும் சூரியனுக்கிடையேயும் உள்ள ஈர்ப்பாற்றல் விசையின் காரணமாக ஒன்றையொன்று நெருங்கவோ அல்லது ஒன்றை விட்டு ஒன்று தூரமாக விலகிச் செல்லவோ இய லாமல் ஒன்றையொன்று ஈர்த்தபடி, அவை தத்தமக்குரிய, வரையறுக்கப்பட்ட வட்ட வரைக்குள் நீந்திச் சுற்றிச் சுழன்று கொண்டுள்ளன. இதனால், சூரியன் சந்திரனை அணுக முடியாது. பூமி சூரியனையோ அல்லது சந்திரனையோ அல்லது வேறு கிரகங்கள் எதனையுமோ நெருங்கவோ அல்லது விலகிச் செல்லவோ இயலாது எனத் திருமறை தெளிவாகக் கூறி அறிவுறுத்துகிறது.

இவ்வாறு சூரியனும் மற்ற கோள்களும் ஒன்றை யொன்று சார்ந்திருக்கக்கூடிய ஈர்ப்பு விசையாகிய இழுப் பாற்றலையே - அது தொடர்பான கொள்கையையே 'சார்புக் கொள்கை' (Theory of Relativity) எனக் கூறினார் வானி யல் விஞ்ஞானி ஐன்ஸ்டீன். இவர் இன்று கூறிய - கண்ட றிந்து விளக்கிய சார்புக் கொள்கை இறை வாக்காகப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னதாகவே திருமறையில் இடம் பெற்றுள்ளது என்ற செய்தி இன்றைய விஞ்ஞான உலகை வியப்பிலாழ்த்துவதாக உள்ளது.

இவ்வாறு சூரிய மண்டலக் கோள்கள் பூமி உட்பட அனைத்துக் கிரகங்களின் ஈர்ப்பாற்றலைத் துல்லியமாகக் கணக்கிட்டு 'சார்புக் கொள்கை' (Theory of Relativity) யை அடிப்படையாகக் கொண்டே இன்று செயற்கைக் கோள் கள் யாவும் விண்ணிலே வலம் வந்து, இன்று தங்களின் பன்முக ஆராய்ச்சியைத் திறம்படச் செய்து வருகின்றன.

### சூரிய மண்டலத்திற்கு அப்பாலும்

அது மட்டுமா? நாம் இதுவரை அறிந்ததெல்லாம் சூரிய மண்டலம் ஒன்றைப் பற்றி மட்டுமே. சூரிய மண்ட லத்தைத் தவிர்த்து வேறு எந்த மண்டலம் பற்றியும் மனித

குலத்துக்கு அறவே தெரியாது. ஆனால், சில ஆண்டு களுக்கு முன்னால், வான ஆராய்ச்சிக்காக அமெரிக்கா பயோனீர் என்ற விண்கோளை அனுப்பியது. அது அற்புதமான முறையில் சூரிய மண்டலத்திலுள்ள பல்வேறு கோள்களையும் அவற்றின் தன்மைகளையும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக விரிவாக ஆராய்ந்து பல அரிய தகவல்களைத் தந்துதவியுள்ளது. இறுதியாக அது சூரிய மண்டலத்தைக் கடந்து, அதற்கு அப்பாலும் தன் ஆய்வுப் பயணத்தைத் தொடர்ந்தது. சூரிய மண்டலத்துக்கு அப்பால் அது கண்டறிந்த தகவல்களை பூமிக்கு அனுப் பியது. அத் தகவல்களை அமெரிக்காவிலுள்ள வானவியல் விஞ்ஞானிகள் கண்டு வாயடைத்துப் போனார்கள். காரணம், வானத்திலுள்ள சூரிய மண்டலம் போலவே, சூரிய மண்டலத்துக்கு அப்பாலும் அதே போன்று பல மண்டலங்கள் இருப்பதாகத் தகவல் அனுப்பியதுதான்.

இதைக் கண்டு அமெரிக்க வானவியல் ஆராய்ச்சி யாளர்களான விஞ்ஞானிகள் வேண்டுமானால் வியந்து போய், ஆச்சரியத்தால் வாயடைத்துப் போயிருக்கலாம். ஆனால், திருக்குர்ஆனைப் படித்தறிந்த ஒரு முஸ்லிம் வியப் படையவே மாட்டான். காரணம், சூரிய மண்டலத்தைப் போல் பல மண்டலங்கள், எண்ணிக்கை அளவில் ஏழு வானங்கள் இருப்பதாகத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது தான்.

"அவன்தான் (பூமியையும்) பூமியிலுள்ள யாவற்றை யும் உங்களுக்காகப் படைத்தான். மேலும், அவன் வானத் தைப் படைக்கக் கருதி (யபோது) அவைகளை ஏழு வானங்களாகவும் அமைத்தான். அன்றி (அவற்றிலுள்ள) யாவற்றையும் அவன் நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்." (2:29) என்றும்,

"(மனிதர்களே! இவ்வாறு நாம் உங்களை மட்டுமா படைத்திருக்கிறோம்) நிச்சயமாக உங்களுக்கு மேலுள்ள

ஏழு வானங்களையும் நாமே படைத்திருக்கிறோம். (அவை ஒவ்வொன்றிலும் உங்களைப் போன்ற எத்தனையோ படைப்புகள் இருக்கின்றன;" (23:17)

"ஏழு வானங்களையும் அடுக்கடுக்காக எவ்வாறு அல்லாஹ் படைத்திருக்கிறான் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? அவனே அவைகளில் சந்திரனை (பிரதிபலிக்கும்) வெளிச்சமாகவும் சூரியனை ஒரு (சுய வெளிச்சமுண்டாக்கிக் கொள்ளும்) மணியாகவும் (சிராஜ்) அமைத்தான்" (71:19,16).

"உங்களுக்கு மேலிருக்கும் பலமான ஏழு வானங்களையும் நாமே அமைத்தோம்." (78:12) என்றெல்லாம் 24 இடங்களில் ஏழு வானம் பற்றி திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. இதிலும்கூட 'ஏழு' என்பது 'பல' என்ற பொருளிலேயே அமைந்துள்ளதாக மார்க்க அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு, திருக்குர்ஆனில் கூறப்படும் செய்திகள், அறிவியல் தகவல்களையே இன்னும் ஆய்வுலகால் முழுமையாக ஆராய்ந்தறியப்படவில்லை, அதற்கான காலக் கனிவோ ஆராய்ச்சி முதிர்வோ இன்னும் ஏற்படவில்லை என்பது எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

### உலகம் பிறந்தது எப்படி?

இன்னும் ஒரு விந்தைமிருந்த விஞ்ஞான உண்மையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த வான மண்டலத்தில் சூரியன், சந்திரன், பூமி முதலாகப் பல்வேறு நட்சத்திரங்களும் கிரகங்கள் என்றழைக்கப்படும் கோள்களுமாக நிரம்பியுள்ளன. சூரியன் முதலாகவுள்ள நட்சத்திரக் கூட்டங்கள் சுய ஒளி கொண்டவை; பூமி, சந்திரன் முதலான கோள்கள் சூரியனின் ஒளியைப் பெற்று பிரதிபலிப்பவைகளாகும்.

ஆனால், இவ் வான மண்டல நட்சத்திரங்களும் கோள் களும் எவ்வாறு உருவாயின என்பதை விஞ்ஞானிகள் பன்னெடுங்காலமாக ஆய்வு செய்து, அதற்கான மூல காரணங்களைத் தெள்ளத் தெளிவாகக் கண்டறிந்து உலகுக்குப் புலப்படுத்தியிருக்கிறார்கள்.

வானம் முழுவதிலும் ஹைட்ரஜன் (Hydrogen) எனும் வாயுவும், ஹீலியம் (Helium) எனும் வாயும் கலந்து பரவியிருந்தன. இவ்வாறு பன்னெடுங்காலமாக புகை மண்டலமாகப் பரவியிருந்த இவ்விரு வாயுக்களும் இணைந்து இறுக்கமடைந்து வந்தன. இறுக்கம் அடைய அடைய அவற்றின் அடர்த்தி அதிகரித்துக் கொண்டே சென்றது. இதற்கு மேல் இறுக்கமடைய இயலாது என்ற நிலை ஏற்பட்டபோது, அப்புகை மண்டலம் வெடித்துச் சிதறியது. இதையே பெரும் வெடிப்பு (Big Bang) என்றழைக்கப்படுகிறது. எப்போது வானத்தில் புகை மண்டலம் உருவாகியது என்பதை துல்லியமாகக் கணித்துக்கூற விஞ்ஞானிகளால் இயலாவிட்டாலும் 'பெரு வெடிப்பு' நிகழ்ந்த காலத்தை ஓரளவு அனுமானித்து, நட்சத்திர மண்டலம் உருவானது ஆயிரம் கோடி ஆண்டுகட்கு முன்பு இருக்கலாம் என்று அனுமானித்திருக்கிறார்கள்.

நட்சத்திரங்களைப் போன்ற ஒரு நட்சத்திரமே சூரியன். ஒரு கட்டத்தில் சூரிய நட்சத்திரம் வெடித்துச் சிதறியது. அச் சூரியனிலிருந்து தெறித்து விழுந்த அனற்பிழம்பே பூமி. பின், பூமியிலிருந்து பிரிந்து சென்றதே சந்திரன். மற்ற கிரகங்கள் எனப்படும் கோள்கள் அனைத்தும் சூரிய தெறிப்பின் விளைவாக உருவானவைகளேயாகும். இவ்வாறு சூரிய வெடிப்பு நிகழ்ந்து 450 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள்.

சூரியனிலிருந்து பூமி தெறித்து விழுந்ததனாலேயே இன்னும் பூமிக்குள் வெப்பம் கனன்று கொண்டேயிருக்கிறது. அவ்வப்போது எரிமலைகளும், நில நடுக்கங்களும்,

நில அதிர்வுகளும் ஏற்படுகின்றன. அவ்வாறு ஏற்படுவது தவிர்க்க இயலாததாகவும் இருக்கின்றது.

இத்தகைய பெரு வெடிப்புக் கொள்கையை விவரிக்கும் வகையில் திருமறையில்,

"ஆரம்பத்தில் எல்லாமே ஒரே புகை மண்டலமாக இருந்து, அதிலிருந்துதான் பல பாகங்களாக பல கால கட்டங்களில் பிரிந்து சென்றிருக்கின்றன" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதானது, இன்றைய விஞ்ஞானிகளை மேலும் திகைப்புக்குள்ளாக்கியுள்ளது.

குர்ஆனில் கருத்தரிப்பு

இவையெல்லாவற்றையும்விட மிக அற்புதமான அறிவியல் செய்தியொன்று திருக்குர்ஆன் திருமறையில் காணக் கிடைக்கிறது. இச்செய்தி, மருத்துவ உலகையே மலைக்கச்செய்துள்ளது. இச் செய்தி டாக்டர் மாரிஸ் புகைல் போன்ற மருத்துவத் துறை பேரறிவாளர்களை - விஞ்ஞானிகளை இஸ்லாத்தின்பால் இணையச் செய்துள்ளது. அதுதான் கருத்தரிப்பு எப்படி நடைபெறுகிறது என்ற நுட்பமான செய்தி. திருமறையில்,

"அவனே, ஒரு துளி இந்திரியத்தைக் கொண்டு மனிதனைப் படைத்தான்." *(16:4)*

"அவன் (கர்ப்பத்தில்) செலுத்தப்பட்ட ஓர் இந்திரியத் துளியாக இருக்கவில்லையா?" *(75:37)*

"(பின்னர் ஆண்பெண்) கலந்த ஓர் இந்திரியத் துளியைக் கொண்டு, நிச்சயமாக நாம்தான் மனிதனைச் படைத்தோம்." *(76:2)*

என்ற இறை வசனங்கள் ஒரு துளி இந்திரியத் துளியைக் கொண்டு கருவறையில் அழகிய திருவுருவாக மனிதக் கரு உருவாகியதை அழகாகவும் தெளிவாகவும் விளக்குகிறது.

பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை மனிதக் கரு எப்படி உருவாகிறது என்பது தெளிவாகத் தெரியா மலேயே இருந்தது. அதுவரை பெண் வயிற்றில் இயல் பாக உருவாகியிருக்கும் கரு வளர்ந்து குழந்தையாகப் பிறக்கிறது என்றே உலகம் கருதி வந்தது.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேதான் வில்லியம் ஹார்வி எனும் உயிரியல் விஞ்ஞானி தன் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின் ஆணின் இந்திரியத் துளியிலுள்ள ஒரு உயிரணு பெண்ணின் யோனிக் குழாயிலுள்ள உயிரணு முட்டையோடு இணைந்து அவளது கருவறைக்குள் சென்று, பத்து மாதங்கள் படிப்படியாக வளர்ந்து, பத்தாவது மாதம் குழந்தையாகப் பிறக்கிறது என்பதைக் கண்டறிந்து கூறினார்.

ஆனால், எந்தப் புதிய ஆராய்ச்சி முடிவைக் கண்டறிந்து, பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வில்லியம் ஹார்வி கூறினாரோ, அதே தகவல் தெளி வாகவும் திட்பமாகவும் திருக்குர்ஆனில் விவரிக்கப் பட்டுள்ளதெனில் இஸ்லாம் எவ்வளவு உயர்ந்த - சிறந்த அறிவியல் மார்க்கம் என்பதை நாம் உய்த்துணரலாம்.

அதிலும், இக் கரு வளர்ச்சியைப் பற்றிய செய்தி களெல்லாம் 'சதைக் கட்டி' (அலக்) என்ற தலைப்பிலான இறை வசனப் பகுதியிலேயே விவரிக்கப்படுகிறது. இச் சதைக் கட்டியைப் பற்றிய தெளிவை மேலும் அறியும் பொருட்டு டாக்டராக இருக்கும் என் மகனிடத்திலே விவரம் கேட்டபோது,

"கருவறையைச் சென்றடையும் கருவணுவோடுகூடிய முட்டை கருப்பைச் சுவற்றிலே நன்கு ஒட்டிக் கொள்ளும். அப்பசை அவ்வளவு வலுவானது. நாற்பது நாட்களில் கருப்பையில் வளரும் முட்டையின் வடிவமானது சிறிதளவு தசையை வாயில் போட்டு நன்கு மென்று துப்பினால்

எப்படி இருக்குமோ அது போலவே இருக்கும். அப்போது அது ஒரு சதைக் கட்டி போன்றே தோற்றமளிக்கும். இவ்வுருவைப் பெற்ற பிறகே, அதிலிருந்து நரம்புகளும் எலும்புகளும் உருவாக முடியும்" என்று கூறியபோது, சதைக் கட்டி என்ற தலைப்பிலேயே இதை திருமறை விவரிப்பது எவ்வளவு பொருத்தமானது என்பதை நாம் உய்த்துணர லாம்.

இப்படிப்பட்ட செய்திகளையெல்லாம் அறிந்து விஞ்ஞான உலகம் வியந்து கொண்டிருக்கிறது. ஏதேச்சை யாக கருவளர் செயற்பாடுகளைத் திருக்குர்ஆன் விவரிக்கும் பாங்கை அறிய நேர்ந்த மருத்துவத் துறை வல்லுநரும் ஆய்வாளருமான டாக்டர் மாரிஸ் புகைல் அரபி மொழி கற்று, திருமறையை மூல வடிவில் படித்தபோது, இச் செய்திகளின் நுட்பங்கள் அவரை பெரும் ஆச்சரியத்தில் மூழ்கடிக்கவே செய்தன. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விஞ்ஞான உலகம் கண்டறிந்த விஞ்ஞான உண்மை ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னதாக திருமறையில் இடம் பெற்றிருக்கிறதென்றால், நிச்சயமாக இஃது மனித னால் அனுமானிக்கப்பட்டு சொல்லப்பட்ட செய்தியாக இருக்கவே இயலாது. இறைவனால்தான் சொல்லப் பட்டிருக்க வேண்டும்; சொல்லியிருக்க முடியும். ஆகவே, இது இறைவேதம் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை எனக் கருதி, இஸ்லாத்தின்மீது மிகுந்த நம்பிக்கை கொண்ட ஈமான்தாரியாக - முஸ்லிமாக ஆகி, இஸ்லாமிய அழைப்புப் பணிக்குத் தன்னை முழுமையாக உட்படுத்திக் கொண்டதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

### திருமறை தரும் பிற உயிரினத் தோற்ற வரலாறு

மனிதப் பிறப்பின் ரகசியம் மட்டுமா? மனிதனைத் தவிர்த்துள்ள அனைத்து உயிர் வர்க்கங்களின் தோற்றம் பற்றிய அறிவியல் உண்மைகளையும் திருக்குர்ஆன் தெளிவாக்கத் தவறவில்லை.

இன்று உயிர் வர்க்க தோற்ற வரலாற்றை ஆராய முற்படுவோர் டார்வின் தியரியை - டார்வினின் கொள்கை களை துணைக்கக்கழைக்கத் தவறுவதே இல்லை.

டார்வினின் உயிரினத் தோற்ற வரலாறு பற்றிய கொள்கைகள் மிகச் சிறந்த கொள்கைகள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், அக்கொள்கைகளைப் புரிந்து கொண்டவர்கள், சரியாகப் புரிந்து கொண்டார்களா என்பது தான் ஐயப்பாட்டிற்குரியது.

உயிரினத் தோற்ற வரலாற்றை ஆராய்ந்த டார்வின் 'மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன்' எனப் பலரும் கூறுவதுண்டு. இஃது முற்றிலும் தவறானது மட்டுமல்ல, சார்லஸ் டார்வினைச் சரியாக அறியாதவர்களால் கூறப்படும் கூற்றுமாகும். குரங்கிலிருந்து மனிதன் தோற்றம் பெற்றான் என்று ஒரு இடத்தில்கூட டார்வின் சொல்லிய தாகத் தெரியவில்லை. அவர் கூறியதெல்லாம் மனிதனுக் கும் குரங்கிற்கும் நெருங்கிய அம்சம் உண்டு என்பதுதான். மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவனாக இருந்தால், உருமாறியவனாக இருந்திருந்தால் அந்த மூல வடிவிலான உயிர் - குரங்கு இந்நேரம் அழிந்திருக்க வேண்டும். ஒன்றி லிருந்து மற்றொன்று உருமாறியிருந்தால் முன்னது அழிவதன் மூலமே பின்னது நிலைபெற இயலும். இது இயற்கையின் நியதி. ஆனால், மனிதனும் முழு உருவில் தெளிவாக இருக்கிறான். குரங்கும் முழு வடிவில் திரிந்து கொண்டுள்ளது. எப்படி ஒன்றிலிருந்து மற்றொன்று பிறந் திருக்க முடியும். இதிலிருந்தே இக் கொள்கை தவறாகப் பரப்பப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகவில்லையா?

## நீரிலிருந்தே உயிர் வர்க்கங்கள்

மனிதனைத் தவிர, மற்ற உயிர் வர்க்கங்கள் அனைத் தும் நீரிலிருந்து தோன்றி வளர்ந்தன என்பதுதான் சார்லஸ் டார்வின் கண்டறிந்து கூறிய உயிரினத் தோற்ற வரலாறு.

தண்ணீரில் 'அமீபா' எனும் ஓரணு உயிரணுவிலிருந்தே எல்லா விதமான உயிரினங்களும் தோற்றம் பெற்றன. டார்வின் கண்டறிந்து கூறிய இதே உண்மையைத் தான் இறைவேதமாகிய திருக்குர்ஆனும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

"உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்து படைத்தோம்." *(21:30)*

"உயிர்ப் பிராணிகள் ஒவ்வொன்றையும் அல்லாஹ் நீரைக் கொண்டே படைத்திருக்கிறான்." *(24:45)*

எனவே, நாம் பெருமானாருடைய வாழ்வையும் வாக்கையும் அவற்றின் அடிப்படையில் இறை நெறியாகிய இஸ்லாத்தையும் திறம்பட அறிந்து உணர்ந்து தெளிய வேண்டும் என்றால் உளவியலின் துணை கொண்டு ஆன்மீக, அறிவியல் ஒளிகளைப் பாய்ச்சி ஆராய வேண்டும். அப்போதுதான் இறைவாக்கின் உட்கருத்துகள் தெளிவாகும். அப்போதுதான் எல்லா உண்மைகளும் வெளிச்சமாகும்.

'அக வாழ்வைப் பொறுத்தவரை ஆன்மீகத்தைப் பின்பற்றி உன் வாழ்வை வளமாக்கிக் கொள். புற வாழ்வைப் பொறுத்தவரை அறிவியலைப் பயன்படுத்தி, அறிவியல் மூலமாக உன் புற வாழ்வைச் செழிமைப்படுத்திக் கொள்' என்பது பெருமானாரின் பெருவாழ்வும் திருமறையாம் திருக்குர்ஆனும் நமக்குப் புகட்டுகின்ற வாழ்வியல் உண்மைகள்

### இரு கண்களாக ஆன்மீகமும் அறிவியலும்

இந்த வகையில் ஆன்மீகமும் அறிவியலும் வேறுபட்டவைகளோ ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளோ அல்ல. இரண்டும் இரு கண்களைப் போன்றவை. ஆன்மீகம் ஒரு கண்; அறிவியல் இன்னொரு கண். இந்த இரண்டு கண்களும் இணைந்து பார்க்கும்போதுதான், நம்

பார்வை நேராக ஒரு பொருளில் போய் நிற்கும். அப் பொருளின் முழுமையான, தெளிவான தோற்றம் நம் கண் களுக்கு தெளிவாகத் தெரியும். ஆகவே, இஸ்லாத்தை சரி யான கோணத்தில் புரிந்து கொள்வதற்கு ஆன்மீகமும் அறிவியலும் மிக அடிப்படையாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இஸ்லாமிய நெறி என்பது ஆன்மீக அடிப்படையில் உருவாக்கப்பட்ட, அறிவியல் போக்கி லான ஒரு வாழ்க்கை முறை என்பதை உலகம் இன்றைக்குத் தெளிவாகப் புரிந்து கொண்டு வருகிறது.

இதையே வேறு வகையில் கூறுவதென்றால் 'அறிவியல் இல்லாத ஆன்மீகம் குருடானது. ஆன்மீகம் இல்லாத அறிவியல் முடமானது' என்று கூறலாம்.

**ஆலிம்களும் அறிவியலாளர்களும் ஒன்றிணைய**

இத்தகைய தெளிவை உருவாக்க இஸ்லாமிய மார்க்க அறிஞர்களான உலமா பெருமக்களும் அறிவியல் உணர்வும் அறிவும் நிரம்பப் பெற்ற அறிவியல் ஆய்வறிஞர்களும் இணைந்து பணியாற்றும் இனிய சூழலை உருவாக்க முன் வர வேண்டும்.

அப்போதுதான் இஸ்லாமிய நெறியின்பால் தங்கள் பார்வையைச் செலுத்த முனையும் பிற சகோதர சமயங் களைச் சார்ந்தவர்கள் இஸ்லாத்தின் அதி உன்னதக் கருத்து களை அறிந்துணர்ந்து தெளிய இயலும். இவ் வகையில் பெருமானாரின் பெரு வாழ்வையும் இறைமறையின் அருங் கருத்துகளையும் அறிய நேரும்போது 'இருபதாம் நூற்றாண் டின் இறுதியில் சொல்லப்படும் அறிவியல் செய்திகள், கண்டுபிடிப்புகள் 1400 ஆண்டுகட்கு முன்பே இஸ்லாமியத் திருமறையாம் திருக்குர்ஆனில் ஆதார பூர்வமாகச் சொல் லப்பட்டுள்ளதே என்று வியப்படைவதோடு அவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத் துடிப்பும் மற்ற வர்கட்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். அந்த

உந்துதலை ஏற்படுத்துவதற்கு இம்மாதிரி மீலாது விழாக்கள் பெரும் வாய்ப்பாயமைகின்றன. நாமும் நம் இஸ்லாமிய அறிவைப் புதுப்பித்துக் கொள்வதோடு பிறரும் சரியான கோணத்தில் இஸ்லாத்தை அறிய அரியதோர் வாய்ப்பை ஏற்படுத்துகிறோம் என்ற மனநிறைவும் நமக்கு ஏற்படவே செய்யும்.

*(5.7.'98 அன்று துபாய் ஈமான் சங்கச் சார்பில் துபாய் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற மீலாது விழா சொற்பொழிவுச் சுருக்கம்.)*

# இஸ்லாம்
# அன்றும் - இன்றும்

அபுதாபி ஐமான் சங்கம் சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கும் பெருமானார் பிறந்த நாள் விழாவிலே பங்குபெறும் இனிய வாய்ப்பை நல்கிய எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கும் ஐமான் அமைப்பாளர்கட்கும் ஈமான் அமைப்பினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

உள நெருக்கம் பெற கருத்துப் பரிமாற்றம்

இங்கே உங்கள் முன் உரையாற்றத் தொடங்குமுன் ஒரு எண்ணத்தை அழுத்தமாக நெஞ்சத்தில் பதியவைத்துக் கொண்டுதான் பேசுகிறேன். நான் பேசப் போகும் செய்தி கள் எதுவும் உங்களுக்குத் தெரியாததல்ல. ஆயினும், அவற்றை உங்களோடு உரசிப் பார்க்கும் வகையிலும் ஒப் பிட்டறியும் முறையிலும் ஒரு சில கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள விழைகிறேன். இன்னும் சொல்லப் போனால் உங்களோடு சேர்ந்து சில விஷயங்களை சிந்திக்க இவ் வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

இங்கே வரவேற்புரையாற்றிய தலைவர் என்னைப் பலவாறு பாராட்டிப் பேசினார். எல்லாப் புகழும் வல்ல

அல்லாஹ்வுக்கே உரித்தாகும். இப்பாராட்டுக்களுக்கெல் லாம் நான் தகுதியுள்ளவன்தானா என்பதில் எனக்கு ஐயமுண்டு. மேலும், இவர்கள் எந்தச் செயல்களை - பணிகளை ஆற்றியதற்காக என்னைப் பாராட்டினார்களோ அந்தச் செயல்களை, பணிகளை ஆற்றத் தொடங்கியபோது, அதற்காக இப்படியெல்லாம் பாராட்டுவார்கள் என்று நான் எதிர்பார்த்துச் செய்யவில்லை. ஒரு முஸ்லிம் தான் பிறந்த மண்ணுக்கு, மண் சார்ந்த மக்களுக்கு, இனத்துக்கு, மொழிக்கும் தான் பின்பற்றும் மார்க்கத்திற்கும் மார்க்கம் சார்ந்த மக்களுக்கும் என்ன செய்ய வேண்டுமோ அதை முறையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் என் பணிகள் அமைந்துள்ளன.

**மண்ணின் வேரும் வேரடித் தூருமாக**

இங்கே பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன் னார்கள். 'தமிழைப் பற்றி இவ்வளவு பேச வேண்டுமா?' என்ற ஐயப்பாடுகூட சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம். தமிழை நம்மிடமிருந்து எப்படிப் பிரிக்க முடியும்? "இஸ்லாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்பதுதான் ஒவ்வொரு தமிழ் முஸ்லிமின் இதயநாதம்; இன்பக் கீதம். இந்த உணர்வின் அடித்தளத்தில் வந்தவர்கள் நாம். ஏதோ நாம் இந்த அரபக மண்ணிலே பிறந்து தமிழக மண்ணிலே வாழ்ந்து வருபவர்கள் அல்ல. தமிழ் மண்ணின் வேரும் வேரடித் தூருமாக இருப்பவர்கள். எனவேதான் தமிழுக்கும் தமிழ் இன மக்களுக்கும் இஸ்லாமிய மார்க்கத்திற்கும் மார்க்கம் சார்ந்த மக்களுக்கும் எல்லா வகையிலும் தொண்டு செய்வது இன்றியமையாக் கடமையாகக் கருதி அப் பணியைச் செவ்வனே செய்து வருகிறோம்.

**இஸ்லாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி**

எனது தொண்டை இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு ஆற்றி வருகின்றேன். ஒன்று, நத்தைக்கு கூடு

எவ்வளவு முக்கியமோ அதுபோல் எனக்கு என் சமுதாயம் முக்கியம். அந்தச் சமுதாயம் விழிப்புடன் இருப்பதற்கான உணர்வுகளையும் சிந்தனைகளையும் அவர்களிடத்தில் உருவாக்கி வளர்க்க வேண்டுமே என்ற எண்ணத்தில் இஸ்லாமியப் பணிகளை, இஸ்லாமிய இலக்கியப் பணிகளை ஆற்றி வருகிறேன். மற்றொன்று, தாய்மொழி யான தமிழுக்கு, தமிழ் இலக்கியத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை, கடமைகளை முனைப்புடன் ஆற்றி வருகிறேன். நான் இதுவரை எழுதியுள்ள நூல்களை ஆற்றிவரும் பணிகளை, இந்த இரண்டு பிரிவுகளுக்குள் மட்டுமே அடக்க முடியும்.

ஆன்மீகமும் அறிவியலும் இரு கண்கள்

சிலர் என்னிடத்தில் அவ்வப்போது ஒரு கேள்வியை எழுப்புவதுண்டு. "நீங்கள் உங்கள் மார்க்க நூல்களில், இஸ்லாமிய இலக்கியங்களில் மிகுந்த கவனம் செலுத்தும் அதே சமயம் அறிவியல் தமிழ் வளர்ச்சியிலும் அதி தீவிர கவனம் செலுத்துகிறீர்களே?" என்பதுதான் அவர்கள் வியந்து கேட்கும் கேள்வி. அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாத்தைப் பொறுத்தவரை இஸ்லாம் என்பதுவும் அறிவியல் என்பதுவும் ஒன்றுதான். ஒரு மனிதனுக்கு இரண்டு கண்கள் இருப்பதைப் போல இஸ்லாத்தில் ஆன்மீகமும் அறிவியலும் அமைந்துள்ளன. இரண்டும் வெவ்வேறானவைகளோ. அல்லது ஒன்றுக் கொன்று முரண்பட்டவைகளோ அல்ல. இரண்டுமே இறை நோக்கத்தை இனிது நிறைவேற்ற ஒருங்கமைந்தவை களாகும். இரண்டு கண்களும் ஒரே சமயத்தில் சரியான கோணத்தில் பார்த்தால்தான் எதையும் தெளிவாகப் பார்க்கவும் பார்த்ததை தெளிவாக அறியவும் இயலும். அந்த முறையிலேயே நான் ஆன்மீகம், அறிவியல் ஆகிய இவ்விரண்டு பணிகளையும் ஒருசேர ஆற்றி வருகின்றேன்.

‘யார்?’ என்பதல்ல, ‘என்ன?’ என்பதே முக்கியம்

இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் ஒரு கருத்தைக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை. மணவை யாரின் சமுதாயப் பணிகளை முஸ்லிம்கள் சரியான முறையில் அறிந்து, உணர்ந்து கௌரவிக்கவில்லை என்பதே அது. எங்கோ இருக்கின்ற ஆழ்வார்கள் ஆய்வு மையம் இவரது பணிகளைப் பாராட்டி தங்கத் தாமரையும் ஆயிரக்கணக்கில் பணமும் பரிசாகத் தந்து பாராட்டுகிறார்கள். தமிழ் நாட்டின் நோபல் பரிசு என்று அழைக்கப்படும் முத்தையச் செட்டியார் நினைவுப் பரிசை அண்ணாமலைச் செட்டியார் அறக் கட்டளையும் காஞ்சி காமகோடி பீடம், சங்கராச்சாரியார் நினைவுப் பரிசான ‘சேவா ரத்னா’ விருதையும் வழங்கிக் கௌரவிக்கிறது. ஆனால், நம் இஸ்லாமிய சமுதாயம் எந்த பரிசும் பாராட்டும் கௌரவமும் தந்து சிறப்பிக்கவில்லையே என்றெல்லாம் தங்கள் ஏக்கத்தை ஆதங்கமாக வெளிப் படுத்தத் தவறவில்லை. இஸ்லாமிய சமுதாயம் என்னை உரிய முறையில் மற்றவர்களைப் போன்று கௌரவிக்க வில்லை என்பதை நான் பெரும் குறையாகக் கருதவில்லை. என்னைவிட அறிவாற்றலும் செயல்திறனுமிக்கவர்கள் நம் சமுதாயத்தில் எத்தனையோ பேர் இருக்கவே செய்கிறார் கள். அத்தகையவர்களில் தக்கவர்களை, தகுதி மிக்கவர் களை இனங்கண்டு போற்ற இயலாத வகையில் இந்த இஸ்லாமியத் தமிழ்ச் சமுதாயம் தடுமாறிக் கொண்டுள்ளதே என்பதுதான் என் ஆதங்கம். மற்ற சமயத்தவர்கள் எப்போதுமே ‘யார்?’ என்பதைவிட ‘என்ன?’ என்பதி லேயே கருத்தூன்றிக் கவனிக்கிறார்கள். இன்றைக்கு அண்ணா மலைச் செட்டியார் அறக்கட்டளையின் முத்தைய நினைவுப் பரிசாக ரூபாய் ஐம்பதினாயிரமும் ஒரு கிலோ எடையுள்ள வெள்ளித் தட்டில் பாராட்டையும் பொறித்து பொன்னாடை போர்த்தி பரிசு வழங்கும்போது மணவை முஸ்தபா யார்? எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்று பார்ப்ப தில்லை. மணவை முஸ்தபா என்ன செய்திருக்கிறான்

என்பதை மட்டுமே கவனிக்கிறார்கள். ஆகவே, இஸ்லாமியத் தமிழ்ச் சமுதாயம் சரியான கோணத்தில், காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப யாரெல்லாம் பாடுபடுகிறார்களோ அவர்களை உரிய முறையில் இனங்கண்டு, அவர்கள் ஆற்றும் பணியைப் பாராட்டித் தட்டிக் கொடுக்கும் மன நிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தட்டிக் கொடுப்பதன் மூலம் மேன்மேலும் தூண்டி ஊக்குவிக்க வேண்டும். மாட்டைத் தட்டிக் கொடுத்தால் ஓடுகிறது. மனிதனைத் தட்டிக் கொடுத்தால் ஓட மாட்டானா? தட்டிக் கொடுக்கும் மனப்பான்மைக்குத்தான் கடுமையான பஞ்சம் நிலவுகிறது.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

ஒரு முஸ்லிம் என்ற முறையில் ஆக்கப்பணி எதுவாயினும் அதைத் திறம்படச் செய்ய வேண்டும். ஏனென்றால், ஒரு இஸ்லாமியாரின் அடிப்படைப் பண்பு பணி செய்து கொண்டிருப்பதுதான். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பது பொருள் பொதிந்த மொழியாகும். சிறந்த தொண்டு எதுவாயினும் அது இறைத் தொண்டாக மாறி விடுகின்றது. நான் செய்பவை பல பேருக்குப் பயன்படுகிறது. பல பேருக்குப் பயனுள்ளவனாக வாழ வேண்டும் என்பதுதான் நம் வாழ்க்கையின் நோக்கமாக இருக்க வேண்டும். அதுவே வல்ல அல்லாஹ் நமக்கு விதித்துள்ள விதியாகக் கருதுகிறேன்.

பிறர் நலம் பேணும் பேருள்ளம்

ஒரு முறை பெருமானார் (சல்) அவர்களை தோழர் ஒருவர் அணுகி 'மனிதர்களில் சிறந்தவர் யார்?' எனக் கேள்வி கேட்டார். உடனே அண்ணலார் அவர்கள் 'யாரொருவர் மற்றவர்கட்குப் பயனுள்ள முறையில் வாழ்கின்றாரோ அவர்தான் மனிதர்களில் சிறந்தவர்' எனப் பதிலளித்தார்.

இப் பதிலைக் கேட்டவர் மனநிறைவடையாமல் மேலும் தொடர்ந்து 'மனிதர்களில் மிகச் சிறந்த மனிதர் யார்?' என மீண்டும் வினாத் தொடுத்தார். பெருமானார் (சல்) அவர்கள் உடனடியாக 'யாரொருவர் மற்றவர்கட்கு மிகவும் பயனுள்ள முறையில் வாழ்கின்றாரோ அவர்தான் மனிதர்களில் மிகச் சிறந்த மனிதர்' எனப் பதில் கூறினார்கள். இதிலிருந்து பிறர் நலன் நாடும் பேருள்ளம் கொண்டவர்கள் பேராண்மை மிக்கவர்களாக, இறையுவப்புக்கு உரியவர் களாக வாழ முடியும் என்பதை வள்ளல் நபி (சல்) அவர் களின் வாக்கமுது மூலம் நாம் அறிந்து மகிழ்கிறோம்.

பிறர் நலன் நாடும் நம் பணி எத்தகையதாக அமைய வேண்டும் என்பது முக்கியத்துவமுடைய ஒன்றாகும்.

இஸ்லாத்தைப் பற்றிய அறிவையும் உணர்வையும் புதுப்பிக்கும் வகையில் மீண்டும் மீண்டும் முஸ்லிம்களிடம் எடுத்துக் கூறுதல் அவசியம் என்றாலும், இஸ்லாம் என்றால் என்னவென்றே தெரியாத சகோதர சமயத்தவர்கள் மத்தியிலேதான் பெருமானாரைப் பற்றி எடுத்து விளக்கிச் சொல்லப்பட வேண்டும். மனித குலத்துக்கு வழிகாட்டி யாக வந்த, அழகிய முன் மாதிரியாக இறைவனால் அனுப்பப்பட்ட நாயகத் திருமேனியின் வாழ்வும் வாக்கும், அதற்கு மூலாதாரமாயமைந்துள்ள திருமறையின் கொள்கை களையும் கோட்பாடுகளையும் முஸ்லிமல்லாதவர்களின் மத்தியில் முனைப்பாகக் கொண்டு செல்ல வேண்டும்.

### அறியாமையே அடிப்படை

இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான பல காரியங்கள் நடைபெறுகின்றன. தவறான போக்குகள் நிலவுகின்றன. ஒவ்வாத செயல்கள் பல நடைபெறுகின்றன, இதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது இஸ்லாத்தைப்பற்றியும் அம்மார்க்கத்தைப் பின்பற்றும் முஸ்லிம்களைப்பற்றியும் ஏற்பட்டுள்ள தவறான புரிந்துணர்வும் அறியாமையுமே யாகும். சாதாரண

மக்களிடையே மட்டுமல்ல, படித்த மேல்மட்ட மக்களிடையேயும் இதே நிலை நிலவுவதுதான் பரிதாபம். ஷாபானு வழக்கிலே தீர்ப்புச்சொன்ன நீதிபதி, தீர்ப்புச் சொன்ன பின்னால் இஸ்லாத்தைப் பற்றிச் சரிவர தெரிந்து கொள்ளாமல் முல்லாவின் முஹமடன் லாவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தீர்ப்புச் சொல்ல முன் வந்தது ஒரு தவறாகக்கூட இருக்கலாமோ என்ற ஒரு எண்ணம் என்னை உறுத்திக் கொண்டுள்ளது என்று கூறி வருந்திய தாகக் கூறுவார்கள். இந்த அளவுக்கு மேல் மட்டத்தில் இருப்பவர்களும் கீழ் மட்டத்தில் இருப்பவர்களும் சரியாக இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளாத நிலையே இன்றும் நீடித்துக் கொண்டுள்ளது. இந்நிலைமையைப் போக்க வேண்டிய இன்றியமையாக் கடப்பாடு இன்றைய முஸ்லிம் களுக்கு உண்டு. இக்கொள்கையைப் பொருத்தவரை இளமை முதலே நான் உறுதியோடிருக்கிறேன். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அக்கோணத்தை நோக்கி என் செயல்பாடுகள் அமையாமல் இருப்பதில்லை.

### அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணலார் விழா

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்தபோது பல்கலைக் கழக மாணவர் பேரவையின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அந்த ஆண்டில் மாணவர் பேரவையின் சார்பில் 'மீலாது விழா' கொண்டாட முடிவு செய்தேன். இதனை பேரவையுள் அடங்கியிருந்த 36 மாணவர் அமைப்புகளின் செயலாளர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதற்காக கோகலே ஹாலில் நடத்திக் கொள்வதற்கான அனுமதி பெற விரும்பி பதிவாளரைத் தொடர்பு கொண்டேன். சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவரான அவர், பல்கலைக் கழகச் சார்பில் 'மீலாது விழா' என்ற பெயரில் இஸ்லாமிய விழா நடைபெறுவதை விரும்பாத அவர் அனுமதி தரத் தயங்கினார். துணை வேந்தரிடம் அனுமதி பெறுமாறு கூறிவிட்டார்.

துணைவேந்தரிடம் 'மீலாது விழா' பற்றிக் கூறிய வுடனேயே பல்கலைக் கழகத்தின் சார்பில் ஒரு சமய விழாவை எப்படிக் கொண்டாடுவாய் என்று கூறினார். இப்படி ஒரு கேள்விக்காகத்தான் நான் காத்திருந்தேன். நபிகள் நாயகம் அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்திற்காக மட்டும் வந்தவரில்லை. இறுதி இறைத் தூதராக உலகத் திற்கே வழிகாட்ட இறைவனால் அனுப்பப்பட்டவர். அவரும் வானுலகிலிருந்து இறக்கப்பட்டவரில்லை. மக்களிலிருந்தே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர் உலக மக்களுக்காக வந்தவரேயல்லாது இஸ்லாமிய மக்களுக்காக மட்டுமே வந்தவர் இல்லை. ஆகவே, இங்கே இருப்பவர்களுக்கும் சேர்த்துத்தான் அவர் வந்தார். ஆகவே, இந்த விழாவை நடத்த எல்லோருக்கும் உரிமை உண்டு என்று விளக்கிக் கூறியதைக் கேட்ட துணைவேந்தர் என் கோரிக்கையை ஏற்று 'மீலாது விழா' நடத்திக் கொள்ள அனுமதியளித்தார். அனைத்து மதத்தினரும் பெருமளவில் பங்கேற்குமாறு பெரும் திருவிழாவாக அதை நடத்த முற்பட்டேன்.

விழாவில் பேசிய நான்கு பேச்சாளர்களில் ஒருவர் மட்டுமே முஸ்லிம். மற்றவர்களெல்லாம் இந்து சமயம் முதலான பிற சமயங்களைச் சார்ந்தவர்கள். எதற்காக இங்கு இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இம்மாதிரி விழாக்களில் அதிக அளவில் பிற சமயத்தைச் சார்ந்த பேச்சாளர்களை ஏற்பாடு செய்ய வேண்டும். கேட்பதற்கும் பிற சமய மக்கள் பெருமளவில் கூடும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அன்றைய விழாவில் பேசிய தத்துவத்துறைப் பேராசிரியர் கனகசபாபதி அவர்கள் பெருமானாரைப் பற்றியும் அவரது போதனைகளைப் பற்றியும் இஸ்லாமிய நெறியைப் பற்றியும் திறம்படப் பேச வேண்டுமே என்பதற் காக பதினைந்து நாட்கள் எவ்வளவு நூல்கள் கிடைக்குமோ அவ்வளவு நூல்களையும் படித்து குறிப்புகளைச் சேகரித்து,

மேடையில் அதியற்புதமாகப் பேசினார். பெருமானார் (சல்) அவர்களின் வாழ்வியல் தத்துவங்கள் மனிதகுல முன்னேற்றத்துக்கு எவ்வாறெல்லாம் அற்புத வழிகாட்டி யாய் அமைந்துள்ளன என்பதையெல்லாம் சிறப்பாக விளக்கினார். மற்றவர்களும் அவ்வாறே பேசினர்.

**இலக்கியத்தின் மூலம் பிரச்சாரம்**

நாம் அண்ணலார் பற்றியும் இஸ்லாமிய நெறியைப் பற்றியும் சகோதர சமயத்தவர்களிடம் எதையெல்லாம் பரப்ப விழைகிறோமோ அவற்றையெல்லாம் அப் பேச்சாளர்கள் பிற சமயத்தவர் மத்தியில் மிக அருமையாக எடுத்து விளக்குகிற வாய்ப்பு உருவாகிறது. இவ்வாறு நாம் சொல்லக்கூடிய செய்திகள் அவர்கள் மூலமாக சொல்லவைத்தால் அது போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு வேகமாகவும் ஆழமாகவும் அழுத்தமாகவும் போய் சேரும். அந்த நுட்பத்தை நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1959ஆம் ஆண்டே அறிய நேர்ந்த காரணத்தினால் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறி பணியிலமர்ந்த பின்னர், இஸ்லாமியப் பிரச்சாரத்தை இலக்கியம் மூலம் முஸ்லிமல்லாதவர்கள் மத்தியில் முஸ்லிமல்லாதவர் களைக் கொண்டே நிகழ்த்துவதை ஒரு இயக்கமாக நடத்த முற்பட்டேன்.

இப் பணிக்கென்றே 'மீரா ஃபௌண்டேஷன்' எனும் அமைப்பை உருவாக்கினேன். 'மீரா' என்பது ஹிந்துக் களுக்கும் இஸ்லாமியத்திற்கும் பொதுவான பெயராகும். மேலும் 'M' - Modernity, 'E' - Enlightenment, 'E' - Equlity, 'R' - Reformation, 'A' - Ameliaration ஆகும். இவற்றின் தலைப் பெழுத்துக்களெல்லாம் ஒன்றிணைந்ததே 'MEERA' என்பது. UNESCO என்பதைப் போல் அமைந்துள்ள பெயராகும். இந்த ஐந்து ஆங்கில எழுத்துக்களினடிப்படையிலான சொற்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டதாகும்.

இம் மீரா ஃபௌண்டேஷன் மூலம் எட்டு இஸ்லாமிய இலக்கியக் கருத்தரங்குகளை நடத்தினேன். குட்டி மாநாடுகள் போல் நடைபெற்ற இக்கருத்தரங்குகளில் பங்குபெற்ற ஆய்வாளர்களாகட்டும் பார்வையாளர்களா கட்டும் முஸ்லிம்களைவிட முஸ்லிம்மல்லாதவர்களே அதிகம் இடம் பெற்றனர். சீறாச் செல்வர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களைக் கொண்டு உமறுப்புலவரின் 'சீறாப்புராணம்' காப்பியத்தை தொடர்ச் சொற்பொழிவாக 27 கூட்டங்களிலும் வண்ணக்களஞ்சியப் புலவரின் 'ராஜ நாயகம்' காப்பியத்தை தொடர்ச் சொற்பொழிவாக 27 கூட்டங்களிலும் சொற்பொழிவுவாற்றச் செய்தேன். கருத்தரங்கு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தொடர்ச் சொற்பொழிவுகளையும் நூலுருவாக்கி வெளியிட நான் தவறவில்லை.

இவற்றில் பங்கேற்றுப் பேசியவர்கள் எல்லா சமயங்களையும் சார்ந்தவர்களாவர். இவர்கள் இஸ்லாம் தொடர்பான நூல்களையெல்லாம் வாங்கிப் படித்து, அதில் ஏற்படும் சந்தேகங்களையெல்லாம் தக்கவர்களிடம் கேட்டு, தெளிவடைந்து பின் பேசுவார்கள். ஏனெனில், தாங்கள் ஏதாவது பேசிவிட்டால் முஸ்லிம்களும் மற்றவர்களும் தங்களைத் தவறாகக் கருதக்கூடுமே என்ற அச்சத்தில் ஆதாரபூர்வமான செய்திகளை, கருத்துகளையெல்லாம் சேகரித்து, முறையாகப் பேசுவதில் முனைப்புக் காட்டி னார்கள். இதனால் அவர்களின் இஸ்லாம் தொடர்பான பேச்சுகள் சிறப்பாகவே அமைந்தன - அமைகின்றன.

### தொட்டவர்கள் சித்தர்கள், முடித்தவர்கள் சூஃபிகள்

இஸ்லாமிய இலக்கியங்களை உமறுவின் சீறாப் புராணத்தையும் வண்ணக்களஞ்சியப் புலவரின் ராஜ நாயகம் எனும் சுலைமான் நபி வரலாற்றை விரித்துரைக்கும் இலக்கியத்தையும் 50-க்கும் மேற்பட்ட கூட்டங்களில் தொடர்ச் சொற்பொழிவாற்றிய சீறாச் செல்வர் சிலம்பொலி

சு. செல்லப்பனார் அவர்கள் ஆதாரப்பூர்வமான தகவல் களினடிப்படையில் பேசி வியக்க வைத்தார்கள். ஒரு சிறு குறையைக்கூட முஸ்லிம்களால் சுட்டிக்காட்ட முடியாத அளவுக்கு திருமறையின் துணையோடு அண்ணலாரின் வாழ்வையும் வாக்கையும் சுலைமான் நபி போன்ற பிற நபிமார்களின் வாழ்வையும் வாக்கையும் அதியற்புதமாகச் சித்தரித்துப் பேசினார்கள். அதே போன்று 'சூஃபி' கருத்தரங்கில் ஆய்வு நிகழ்த்திய பேராசிரியர் இரா. மாணிக்கவாசகம், இஸ்லாமிய சூஃபிமார்களாகிய பீர் முஹம்மது அப்பா, குணங்குடி மஸ்தான் போன்றவர்களின் இஸ்லாமிய மெய்ஞ்ஞானத் தமிழ்ப் பாடல்களை சித்தர் களின் பாடல்களோடு ஒப்பீட்டாய்வு செய்து பேசும்போது, ஞான இலக்கியத்தைத் தொட்டவர்கள் சித்தர்கள், திறம்பட முழுமையடையச் செய்தவர்கள் தமிழ் சூஃபிமார்கள் என் பதைத் திறம்பட ஆய்வு செய்து பேசினர். முஸ்லிம்கள் மட்டுமல்லாது பிற சமய மக்களும் வியந்து போற்றினார் கள். அதே செய்தியை நான் கூறியிருந்தால் மணவை முஸ்தபா ஒரு முஸ்லிம். அவர்கள் மார்க்கப் பெருமையை அவர்கள் உயர்த்திப் பேசுவது இயல்புதானே எனக் கருதி அதற்கொரு முக்கியத்துவம் கொடுக்காமலே போயிருப்பார் கள். ஆனால், அதே விஷயத்தைப் பேராசிரியர் மாணிக்க வாசகம் பேசினால், அவர் மற்றச் சமயத்தைச் சார்ந்தவர்; சித்தர்களைப் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்ற வர். விஷயம் அறிந்தவர். அவரே இப்படிக் கூறுகிறார் என் றால் நிச்சயம் அது உண்மையின்பாற்பட்டதாகத்தான் இருக்க முடியும் என்ற எண்ணத்தில் அதை ஏற்றிப் போற்றவே செய்வார்கள்.

எனவே, பிற சமயத்தவர் மத்தியில் நாம் பேச நினைப் பதை, மற்ற சகோதர சமயத்தவர்களைக் கொண்டே சொல்லச் செய்தால், பிறர் நம்மைப் பற்றிக் கொண்டுள்ள தவறான கண்ணோட்டம் மறையவும் சரியான தகவல்கள் சரியான கோணத்தில் சரியான இடத்தை அடையவும் வாய்ப் பேற்பட முடியும்.

**நம்மைப்பற்றி நமக்கே தெரியா நிலை**

ஆனால், நாம் எத்தனை பெருமைக்குரியவர்கள் என்பது நமக்கே தெரியாத ஒன்று. தமிழகத்தைப் பொருத்தவரை, தமிழைப் பொருத்தவரை நாம் வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்கள். வரலாறு படைத்தவர்கள். ஆனால், நாம் யார்? எத்தகையவர்கள்? என்பது நமக்கே மறந்து போய்விட்டது. நாம் யாரென்று நமக்கே தெரிய வில்லை. ஆனால், அதுதான் உண்மை.

**தமிழைக் காத்தவர்கள் தமிழ் முஸ்லிம்கள்**

தமிழ் இலக்கியத்தைப் பொருத்தவரை ஒரு கால கட்டத்தில் அழிவை நோக்கிச் சென்ற தமிழ், இறப்பின் விளிம்புக்கே சென்று விட்டது. அன்றைய தமிழகத்தின் அரசியல் நிலை என்ன? தமிழகம் முழுமையும் விஜய நகர் சாம்ராஜ்ய ஆட்சியின் கீழ் வந்துவிட்டது. தமிழ் நாட்டின் பெரும்பகுதி நாயக்கர்களின் - பாளையக்காரர்களின் ஆட்சியின் கீழ் அல்லல்பட்டது. அரசு மொழி தெலுங்கு. தமிழகத்தின் மற்றொரு பகுதி நவாபுகளின் ஆட்சி யின்கீழ் இருந்த பகுதிகளில் உருதுமொழி செல்வாக்குப் பெற்றிருந்தது. தஞ்சைவரை ஆண்ட மகாராஷ்டிரர்கள் ஆட்சியில் மராட்டி மொழி. அதையடுத்து ஆங்கிலேயர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள், ஸ்பானியர்கள், டேனிஸ்காரர்கள், போர்ச்சுக்கீசியர்கள் இன்னும் எவனுக்கெல்லாம் கப்பல் கிடைத்ததோ அவனெல்லாம் தமிழ் நாட்டை அபகரித்து ஆளத் தொடங்கிய கால கட்டம். அவர்களின் ஆட்சிக்குட்பட்ட ஐரோப்பிய மொழிகளின் செல்வாக்கு வேறு. எங்கும் பரவியிருந்த ஹிந்து சமயப் போர்வையில் சமஸ்கிருதத்தின் ஆதிக்கம். தமிழுக்கோ எங்குமே இடமில்லை என்ற துயர நிலை. தமிழ் மொழியை ஆதரிக்க எந்த மட்டத்திலும் ஆளே இல்லாத நிலை. இந்த நிலையில் தமிழ் புலவருலகம் அறவே ஆதரிப்பாரற்று தேய்பிறையாக உருமாறியிருந்தது. "ஏ, மன்னா! இதைப் பாடியிருக்கிறேன்

பரிசு கொடு" என்று மிடுக்கோடு கேட்ட புலவருலகம், யாரிடம் சென்று எதைப் பாடினால் பரிசு கிடைக்குமோ அதைப் பாடி வந்த இழிவான கால கட்டம். தனவந்தர் களின் வீட்டு வாசலில் பிச்சை பெற தமிழ்ப் புலவருலகம் தவம் கிடந்த கால கட்டம். பாலுணர்வைப் பச்சையாக விளக்கும் 'கூளப்ப நாயக்கன் காதல்' போன்ற காமச்சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய நான்காம் தர இலக்கியங்கள் போற்றி வளர்க்கப்பட்ட காலச் சூழல்.

இந்த காலகட்டத்தில்தான் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் எழுத்தாணியைக் கையிலெடுத்து இலக்கியம் படைத்தார்கள். ஒழுக்க இலக்கியம் ஏதாவது தமிழில் உரு வாகாதா என்று நல்லுள்ளங்கள் ஏங்கித் தவித்தன. சமயப் போர்வையில் தல புராணங்கள் என்ற பெயரில் அதீதக் கற்பனையோடு ஒழுக்கத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாத சிற்றின்ப இலக்கியங்கள் புற்றீசல்போல் புறப்பட்ட காலத்தில், ஒழுக்கவியல் அடிப்படையில் அற்புதமான படைப்புகள் இஸ்லாமியத் தமிழ் புலவர்களால் இயற்றப் பட்டன. ஏனெனில், பாலுணர்வைப் பற்றிப் பாட இஸ் லாத்தில் அனுமதி இல்லை. மற்ற சமய தல புராணங்கள் போன்று இஷ்டத்துக்கு கற்பனை வளத்தோடு கதை விட இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

இஸ்லாமிய இலக்கியத்தின் கருப்பொருளாக பெரு மானாரின் பெருவாழ்வோ பிற நபிமார்களின் வாழ்க்கைச் செய்திகளோ, நபித் தோழர்களின் செயற்பாடுகள், வலிமார் களின் வாழ்க்கைச் சூழல்கள், இஸ்லாமியப் பெண்களின் பெருமை பாராட்டும் செய்திகளே கருப் பொருளாக அமைய முடியும். இவர்களைப் பற்றி விவரிக்கும் இலக் கியங்களில் ஒழுக்க நெறிகளை, மார்க்க ஞானங்களை, இறைவன் திருமறை மூலம் விதித்த வாழ்வியல் நெறி முறைகளையே அடியொற்றி எழுத முடியும். இவ்வாறு, கருப் பொருட்களைத் தேர்வு செய்து, ஒழுக்கவியல் அடிப்

படையில் நூற்றுக்கணக்கான இலக்கியங்களை உருவாக்கினார்கள் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்.

### புதுப்புது இலக்கிய வடிவங்கள்

இதில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் வழிவழியாகத் தமிழில் என்னென்ன இலக்கிய வடிவங்கள் உண்டோ அத்தனை வடிவங்களிலும் காப்பியம் தொடங்கி பள்ளு இலக்கியம்வரை இலக்கிய வகைகளை உருவாக்கினார்கள். அதோடு நிற்காது பாரசீக, அரேபிய நாடுகளில் புகழ் பெற்றுத் திகழ்ந்த இலக்கிய வடிவங்கள் பலவற்றைத் தமிழ் இலக்கண, இலக்கியத் தன்மைகளுக்கேற்ப மாற்றம் செய்து, தமிழ் இலக்கிய வடிவங்களாக அறிமுகப்படுத்திய பெருமை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களையே சாரும். அவ்வாறு கொண்டு வந்து சேர்க்கப்பட்ட இலக்கிய வடிவங்களே கிஸ்ஸா, மஸ்அலா, முனாஜாத்து ஆகிய அரபி மொழி வடிவங்களும், 'நாமா' எனும் பர்சிய மொழி வடிவமுமாகும். அதோடு, தமிழுக்கென்றே சில இலக்கிய வடிவங்களை உருவாக்கினார்கள். சமுதாயத் தவறுகளைச் சுட்டிக்காட்டும் 'நொண்டி நாடகம்', படையையும் போரையும் விவரிக்கும் படைப்போர் இலக்கியங்களையும், 'திருமண வாழ்த்து' என்ற புதுவகை மங்கல வாழ்த்துக் கதை இலக்கியத்தையும் படைத்தளித்தார்கள். தமிழையே அரபி வரி வடிவில் எழுதும் 'அரபுத் தமிழ்' எனும் புது வகை மொழியமைப்பையும் உருவாக்கி வளர்த்த பெருமை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கட்குண்டு. தமிழில் சங்க காலந்தொட்டு ஐம்பெரும் காப்பியங்களே உண்டு. ஆனால், இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இருபத்தியெட்டு காப்பியங்களை இருநூறு ஆண்டுகளில் படைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஒரு புலவன் ஒரு காப்பியம் என்ற அளவில் பாடியிருக்க; 'புலவர் நாயகம்' என்றழைக்கப்பட்ட சேகனாப் புலவர் நான்கு காப்பியங்களை உருவாக்கிப் புது வரலாறு படைத்துள்ளார்.

## முஸ்லிமல்லாதாருக்குக் கதவு திறந்த இஸ்லாமிய இலக்கியப் படைப்புகள்

இந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தமிழ் முஸ்லிம்களுக்குப் பயன்பட்டதைவிட தமிழறிவுமிக்க தமிழ்ச் சகோதர, சமயத்தவர்கள் இஸ்லாத்தை உரிய முறையில் அறிந்து தெளியவும் இஸ்லாத்தோடு தங்களை இணைத்து 'இஸ்லாமானவர்'களாக ஆகவும் வழியேற்பட்டது என்பது கசப்பான வரலாற்று உண்மையாகும். இஸ்லாம் இப்படித்தான் தமிழ் மண்ணில் பரப்பப்பட்டதே தவிர வாள் கொண்டு யாரும் இஸ்லாத்தைப் பரப்பவில்லை என்பது வரலாறு தரும் உண்மையாகும்.

இவ்வாறு தமிழ் பிறந்த தமிழகத்தில் ஆட்சியிலோ ஆலயங்களிலோ, ஆதரிப்பதற்கு ஆட்களே இல்லாத இருளடைந்த ஒரு கால கட்டத்தை இலக்கிய ஒளி மிகுந்த காலமாக மாற்றியமைத்து, வளமான வளர்ச்சிக்கு வழி கண்ட பெருமை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கட்கு உண்டு. அதே சூழல் இன்றும் தமிழுக்கு ஏற்பட்டுள்ளது என்பது நினைத்து மகிழ வேண்டிய நிதர்சன உண்மையாகும்.

## இருள் படரும் இன்றைய நிலை

தமிழைப் பொருத்தவரை இன்றையத் தமிழகத்தின் நிலை என்ன? எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் கூசுகிறது. தமிழைப் போற்ற, வணங்கக் கற்றுக் கொண்ட தமிழன், அம் மொழியை ஆங்கிலத்தைப் போல், ரஷ்ய மொழியைப் போல், சீன, ஜப்பானிய மொழிகளைப் போல் காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப, ஆற்றலுள்ள அறிவியல் மொழியாக அரசு, சமுதாய அமைப்புகளின் மொழியாக ஆக்க, ஆக்கப்பூர்வமாக வளர்க்கத் தவறி விட்டான். தமிழ் நாட்டைப் பொருத்தவரை தமிழ் ஆட்சி மொழியாக 1956முதல் சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் ஆட்சி மொழியாக அனைத்து மட்டங்களிலும் தமிழ் ஆட்சி செலுத்தவில்லை. மழலையர் பள்ளி முதல்

பல்கலைக் கழக முதுகலைப் பட்டம் வரை அனைத்து மட்டங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பது ஆங்கிலம் மட்டுமே. தமிழ் நாட்டுக் கல்விக் கூடங்களில் தமிழ் ஓரெழுத்தும் கற்காமல் ஆராய்ச்சிக்கான டாக்டர் பட்டம் வரை பெறும் அரிய வாய்ப்பு இத் தமிழகத்தைத் தவிர்த்து வேறு எங்குமே காண முடியாது. தமிழ் பயிற்சி மொழி என்பது கானல் நீராகவே உள்ளது. காரணம், யாரோ ஓரிரு விழுக்காட்டினர் ஆங்கிலம் படித்து பிற மாநிலங் களிலும் பிற நாடுகளிலும் வேலை வாய்ப்புப் பெற நேர்வ தால் ஆங்கிலம் மட்டுமே கற்றால் போதும் என்ற ஒரு வித மாயை தமிழகத்தில் இன்று அழுத்தமாகப் பதியச் செய்யப் பட்டுள்ளது.

அதே சமயத்தில் மின்னல் வேகத்தில் ஏற்பட்டு வரும் விஞ்ஞான வளர்ச்சியை விவரிக்கும் மொழிகளாக தங்கள் மொழிகளை உருமாற்றி பல நாடுகள் வளர்த்து, வளப் படுத்தி வருகின்றன. நம் தமிழகத்தில் அறிவியலுக்கும் தமிழுக்கும் அவ்வளவு அதிகத் தொடர்பில்லை என்ற உணர் வில் தமிழைப் பேணி வருகிறோம். அறிவியலைச் சொல்லுவதற்கேற்ற மொழியாக ஒரு மொழி அமைய வில்லை என்றால் அம்மொழி மறைந்தொழியும் என்ற உண்மையைக்கூட நம்மவர்கள் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

**உயிரை விடத் தயார், உழைக்கத் தயாரில்லை**

இதையே இன்றையப் போக்கு உணர்த்துகிறது. அறிவியலை சொல்லுவதற்கேற்ற மொழியாகத் தமிழை உருமாற்றும் செயலை எந்தப் பல்கலைக் கழகமும் செய் வதாகத் தெரியவில்லை. அரசும் அந்த முயற்சியில் முனைப்புடன் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. எழுத் தாளர்களும் மற்றைய ஆசிரியர்களும்கூட இதில் முழுக் கவனம் செலுத்தி வருவதாகக் கூற முடியவில்லை. ஆனால், தமிழை வெறுமனே புகழ்வதிலும் 'தமிழ் வாழ்க'

என முழங்குவதிலும் எவரும் சளைப்பதுமில்லை; தவறு வதுமில்லை. தமிழுக்காக உயிரையும் கொடுப்பேன் என முழங்குவதற்கும் தவறுவதில்லை. தமிழைக் காக்க, வளர்க்க, வளப்படுத்த உயிரைக் கொடுக்க வேண்டாம், கொஞ்சம் உழைப்பைக் கொடுங்கள் என்று கூறினால், அதைக் கொடுக்க யாரும் தயாரில்லை.

இதையெல்லாம் நினைத்து நினைத்து, வெந்து போனவன் நான். 1956இல் அன்றைய கல்வியமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் ஆட்சி மொழிச் சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றியபின், இனி, மற்றவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு வழிவகை சொல்வார்கள் என்று எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தேன். ஏதும் நடக்கவில்லை. இப்படி வெறுமனே காத்துக்கிடப்பதைவிட நம்மால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வோம் என்ற முறையில் சிந்தித்துச் செயல்படத் தொடங்கினேன்.

## அறிவியல் அடிப்படையே வளர்ச்சிக்கு வழி

அறிவியலோடு ஒரு மொழி இணைந்து வளரவில்லை என்றால் அம் மொழிக்கு எதிர்காலமே இல்லை என்ற உணர்வு இதயத்தில் அழுத்தம் பெற்றிருந்ததால், அறிவியல் அடிப்படையில் தமிழ் வளர்ச்சி பெறுவதற்கான வழி முறைகளைப் பற்றித் தீர்க்கமாகச் சிந்தித்துச் செயல் படலானேன். அம் முயற்சி அறிவியல் தமிழ் வளர்ச்சியாக முகிழ்த்து, மலர்ந்து மணம் வீசத் தொடங்கியது. இதில் கடந்த நாற்பதாண்டு காலமாகத் தொடர் முயற்சி மேற் கொண்டு வருகிறேன். இதற்காக நாளொன்றுக்கு பதினாறு மணி நேரம் செலவிட்டு வருகிறேன். என் முயற்சியை வளமான அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கான அடிப்படைப் பணியாக - முன்னோடி முயற்சியாகக் கருதி, தமிழுலகம் பரிசுகளையும் பாராட்டுகளையும் விருதுகளையும் வழங்கி ஊக்குவித்து வருகிறது.

### அன்றைய வளர்ச்சியின் இன்றைய பரிமாணம்

அன்று அழிவிலிருந்து தமிழைக் காத்து, தரமான இலக்கியப் படைப்புகளினால் உரமூட்டிய இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களின் தொண்டின் தொடர்ச்சியாகத்தான் புதுக் கவிதை வளர்ச்சிக்கு வழிகாட்டிகளான கவிக்கோ அப்துல் ரகுமான், மு. முஹம்மது மேத்தா போன்றவர்களின் பணியும் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு முனைப்புப் பணியாற்றி வரும் என் பணியும். என் உழைப்பிற்கு - முயற்சிகளுக்கு - உறுதுணையாயிருக்க பலரும் முன் வருகிறார்கள். காஞ்சி காமகோடி பீடம், முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு சங்கர் தயாள் சர்மா அவர்களைக் கொண்டு 'சேவாரத்னா' விருதும் பரிசும் பாராட்டும் வழங்கி மகிழ்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், தமிழை அறிவியல் மொழியாக இருபத்தொராம் நூற்றாண்டுக்குரிய மொழியாக தமிழை வளர்த்தெடுக்கும் என் முயற்சிக்குக் கிடைக்கும் மதிப்பும் மரியாதையும்தான்.

### பெரும்பான்மையினரை விஞ்சும் சிறுபான்மையர் பணி

இதிலிருந்து நாம் ஒரு உண்மையை உணர்ந்து தெளிய வேண்டும். பெரும்பான்மை சமயத்தவர் மத்தியில் சிறுபான்மையினராக வாழ நேர்ந்துள்ள நாம் ஆற்றும் அரும்பணிகள் பெரும்பான்மையினரின் பணியையும் விஞ்சும் அளவில் அமைவது அவசியம். இச்செயற்பாடு கள் - அரும்பணிகள் மூலம் பெரும்பான்மையினருக்கு இணையாக மட்டுமல்ல மேலான நிலையிலும் சிறுபான்மையினர் திகழ முடியும்.

இன்று இந்தியாவில் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த விண்ணியல் வல்லுநர் விஞ்ஞானி அப்துல் கலாம் இந்திய ஏவுகணையியல் துறையின் பிதாமகராகத் திகழ் கிறார். 'பாரத ரத்னா' அப்துல் கலாமின் சாதனைப் பணி இஸ்லாமியச் சமுதாயத்தின் சாதனையாகவே

போற்றப்படுவதுதான் சிறப்பு. அந்நிலையைப் பெற நாமும் நல் முயற்சிகளில் முனைப்போடு ஈடுபட வேண்டும்.

ஆனாலும், இஸ்லாமிய சமுதாயம் ஒரு இடர்ப் பாடான கால கட்டத்தை இந்தியாவில் கடந்து கொண்டிருக் கிறது என்பது ஒரு நிதர்சனமான உண்மை.

**அன்றைய சிலுவைப் போர் இன்னும் சாகவில்லை!**

இஸ்லாத்தைப் பற்றியும் முஸ்லிம்களைப் பற்றியும் தவறான கருத்துகளும் உணர்வுகளும் வலுவாகப் பரப்பப்பட்டு வருகின்றன. ஒரு கால கட்டத்தில் மேலை நாட்டில் சில சமயத் தலைவர்களால் வெறித்தனமாக உருவாக்கப்பட்ட இஸ்லாமிய எதிர்ப்புணர்வு சிலுவைப் போராக உருமாற்றப்பட்டது. இதன் செயல்பாடுகளும் விளைவுகளும் கரைபடிந்த வரலாற்று ஏடுகளாகும். நீண்ட காலமாக நீறு பூத்த நெருப்பாக இருந்த சிலுவைப் போர் இன்று வெவ்வேறு பெயர்களில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே வாழும் முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அதன் சாயலில் இஸ்லாமிய நாடு களிலும்கூட வெவ்வேறு வகையான சண்டை சச்சரவுகள் உருவாக்கப்பட்டு நடந்து வருகின்றன.

அதன் விளைவுகள் இந்தியா போன்ற கீழை நாடுகளில் பிரதிபலிக்கவே செய்கிறது. இஸ்லாத்தைப் பற்றி அறவே தெரியாதவர்கள் மத்தியில், இஸ்லாமியர்களின் பெயரிலே, வேண்டுமென்றே தவறான பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வருவது கண்கூடு. முஸ்லிம் மக்களிடையேகூட இஸ்லாத் தைத் தெரிந்தவர்கள் பல பேர் இருக்கலாம். ஆனால், உணர்ந்து தெளிந்தவர்கள் ஒரு சிலர் தேறுவதேகூட கடினமாக உள்ளது.

**இஸ்லாத்தை அறிந்தவர் அநேகர்; தெளிந்தவர் சிலர்**

எதையும் தெரிவது வேறு; உணர்வது வேறு. சான்றாக, ஒருவன் ஒரு கட்டிடத்தைப் பார்த்த மாத்திரத்தில்

கட்டிடம் எனக்குத் தெரியுமே என்று கூறிவிட முடியும். ஆனால் அக்கட்டிடத்தின் அகல, நீள, உயரம் எவ்வளவு; எத்தனை அறைகள் உள்ளன. அவை எவ்வகையின; என்னென்ன வசதிகள் இருக்கின்றன. இக்கட்டிடம் எந்த முறையில் கட்டப்பட்டிருக்கிறது. இதன் உறுதிப்பாடு என்ன? அதன் வலிவு எத்தகையது? காற்றோட்ட வசதிகள் என்ன? இதெல்லாம் தெரியாது. இவற்றையெல்லாம் நாம் அறியவோ அதிலுள்ளவைகளை அறிந்து, உணர்ந்து தெளியவோ இல்லை. தெரிந்ததெல்லாம் ஒரு கட்டிடம் என்பது மட்டுமே. அதனுள்ளே என்ன இருக்கிறது என்பது எதுவுமே தெரியாது. இதே நிலையில் பல முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால் ஒரு முஸ்லிமுக்கு மகனாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக முஸ்லிமாக இருப்பவர்களே அதிகம்.

## முஸ்லிமாகப் பிறந்தும் இஸ்லாமியனாக இல்லை

இன்று காலை ஒரு சம்பவம் நடந்தது. நேற்று துபை மீலாது விழாவில் பேசும்போது தொழுகையின் முக்கியத் துவத்தைப் பற்றி அதன் ஆன்மீக, உளவியல் மற்றும் அறிவியல் அடிப்படையிலான பயன்களைப் பற்றி பேசினேன். அதைக் கேட்ட நண்பர் ஒருவர் இன்று காலை என்னை வந்து பார்த்தார். தான் ஒரு முஸ்லிமாக இருந்தும் தன் தந்தையோ தாயோ, தனக்கு இஸ்லாத்தைப் பற்றி எதையுமே கற்பிக்கவில்லை. தான் மதரஸா பக்கமும் சென்றதில்லை. பள்ளிவாசல் பக்கமும் போனதில்லை. இதற்குக் குடும்பச் சூழலும் ஒரு முக்கிய காரணம். துபைக்கு வந்த பிறகுதான் வெள்ளிக்கிழமை தொழுகைக் காக பள்ளி வாசலுக்குள் நுழைந்தேன். இப்போதும் எனக்குத் தனியே தொழத் தெரியாது. பக்கத்திலிருப் பவரைப் பார்த்து, அவர் செய்வதுபோல் செய்து தொழுது வருகிறேன். உங்கள் பேச்சை நேற்று கேட்டதிலிருந்து வெள்ளிக் கிழமை தொழுகை மட்டுமல்லாது ஐவேளைத் தொழுகையையும் தொழ விரும்புகிறேன். அதற்கான

புத்தகம் ஏதாவது இருந்தால் தாருங்கள். அல்லது நான் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு வழிகாட்டுங்கள் என்று உருக்கமாக அவர் வேண்டிநின்ற போது, அவர் கண்களில் நீர் கோர்த்து நின்றன. பல பேருடைய நிலைமை இதுதான். இதை வெளிப்படையாகச் சொல்லவோ உதவி கேட்கவோ வெட்கப்பட்டு வாளா விருந்து வருகிறார்கள்.

உதவி கேட்ட அந்தப் பெயர் தாங்கி முஸ்லிம் நண்பர்க்கு இதற்கென தமிழிலேயே நிறைய புத்தகங்கள் இருப்பதாகவும் கூறியதோடு பள்ளிவாசல் பேஷ் இமாம் தமிழ் முஸ்லிமாக இருப்பதால் அவரிடமே உதவி கேட்டு, முறையாகத் தொழுகைப் பயிற்சி பெறுங்கள் என்று கூறி ஊக்கமூட்டி அனுப்பினேன்.

### எங்கும் சமயப் பெயர் தாங்கிகளே அதிகம்

இஸ்லாத்தில் மட்டும் இத்தகையவர்கள் இருப்பதாகக் கருத வேண்டாம். நாட்டிலுள்ள எல்லா மதங்களிலும் இத்தகையவர்களே அதிகம். மதங்களைச் சார்ந்த பெற்றோர்க்குப் பிள்ளைகளாகப் பிறந்த ஒரே காரணத்திற்காக அந்தந்த மதச் சார்பான பெயர்களைத் தாங்கியவர்களாக உலவுகிறார்களேயன்றி, மதத் தத்துவங்களையோ சமயக் கருத்துகளையோ எதையுமே அறிந்தவர்கள் இல்லை. எனவே, முஸ்லிம் பெயர் தாங்கிகளாக உலவுகின்றவர்களுக்கும் இஸ்லாமிய அடிப்படைக் கருத்துகளை பெருமானார் வாழ்வு மற்றும் வாக்குகளின் அடிப்படையில், திருமறை வழியே எடுத்துக்கூறி தெளிவுறுத்த வேண்டும். அதே சமயத்தில் இஸ்லாம் பற்றி, எதுவும் தெரியாததோடு தப்பும் தவறுமாக இஸ்லாத்தைப் பற்றி எண்ணிக் கொண்டு, அதே கண்ணோட்டத்தில் நம்மைப் பார்க்கும் நம் சகோதர சமய நண்பர்களுக்கும் மார்க்கம் பற்றிய உண்மைக் கருத்துகளை - தத்துவ உண்மைகளை எடுத்துக்கூறித் தெளிவுபடுத்தும் கட்டாயக் கடமையாளர்களாகவும் நாம்

இன்று இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவேதான் என் இஸ்லாமியப் பிரச்சாரத்தை இஸ்லாமிய இலக்கியங்கள் மூலமும் "தினமணி" போன்ற இதழ்கள் வாயிலாகவும் சொல்லி வருகிறேன். இன்னும் நான் சொல்ல விழைவதை சிலம்பொலி செல்லப்பனார் போன்றவர்கள் மூலமும், கருத்தரங்குகள் என்ற பெயரில் பிற சமயப் பேராசிரியர்களைக் கொண்டும் திறம்படச் சொல்லச் செய்கிறேன். மீலாது விழாக்களில் பிற சமயப் பெரியோர்களைக் கொண்டு பேசச் செய்ய வற்புறுத்தி வருகிறேன். இதனால் ஏற்படுகின்ற பயன் மிக அதிகம் என்பதை மறந்து விட வேண்டாம்.

'எம்' பெருமானார் இல்லை; 'நம்' பெருமானார்

சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னை சௌகார் பேட்டையில் மீலாது விழா நடைபெற்றது. முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் பெருமளவில் கலந்து கொண்ட பெருவிழா. அதில் நானும் சிலம்பொலி செல்லப்பனாரும் கலந்து கொண்டோம். சிறப்பு விருந்தினராகவும் சிறப்புப் பேச்சாளராகவும் ஜஸ்டிஸ் எஸ். மோகன் அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர் சுப்ரீம் கோர்ட் நீதிபதியும்கூட. அதில் பேசிய மௌலவி ஒருவர், மூச்சுக்கொருமுறை 'எம் பெரு மானார்', 'எம் பெருமானார்' என்று கூறிக் கொண்டிருந்தார். இதைக் கேட்ட ஜஸ்டிஸ் எஸ். மோகன் அவர்கட்கு கோபம் வந்துவிட்டது. அவர் உரையாற்றும் போது சற்று கோபம் கலந்த கண்டிப்பான தொனியில் "இங்கே ஒரு முஸ்லிம் பெரியார் பேசும்போது 'எம் பெருமானார்', 'எம் பெருமானார்' என்றே கூறிக் கொண்டிருந்தார். பெருமானார் முஸ்லிம்களாகிய உங்களுக்கு மட்டுமே வந்த இறைதூதர் இல்லை. எங்களுக் கும் அவர் பெருமானார்தான். ஏன், உலக மக்கள் அனைவருக்குமே அவர் பெருமானார் ஆவார். நபிகள் நாயகத்தின் நெறிமுறைகளை ஏற்றுப் பின்பற்றுபவர்கள் என்பதால், அவரை முழுமையான இறைதூதராக -

வழிகாட்டியாக ஏற்றதால் நீங்கள் முஸ்லிம்களாக இருக்கிறீர்கள். நாங்கள் அண்ணலாரின் நெறிமுறைகள் தெரியாததால், நீங்கள் முறையாக அவற்றை எங்களுக்குத் தெரியப்படுத்தாத காரணத்தால் நாங்கள் முஸ்லிம்கள் ஆகாமல் இருக்கிறோம். இது போன்ற கூட்டங்கள் இஸ்லாத்தையும் பெருமானாரையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை எங்களுக்கு அளிக்கின்றன. எனவே, எங்களுக்கும் சேர்த்து இறைத் தூதராக வந்த பெருமானாரை எந்த முஸ்லிமும் 'எம் பெருமானார்' என்று கூறாமல் 'நம் பெருமானார்' என்றே பேச வேண்டும், எழுத வேண்டும் எனக் கேட்டும் கொள்கிறேன்" என்று பேசினார். அவர் பேசிய வாசகம் ஒவ்வொன்றும் பொருள் பொதிந்தது; உண்மையின்பாற்பட்டது; இன்னும் சொல்லப் போனால் சத்திய வார்த்தைகளாகும்.

### மாற்றுச் சமயங்கள் அல்ல, சகோதரச் சமயங்கள்

வேறொரு உண்மையையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் கவனித்திருக்கலாம். நான் பிற சமயங்களைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் 'மாற்றுச் சமயம்' எனக் குறிப்பிடாமல் சகோதர சமயம் என்றே குறிப்பிடுகிறேன். பிற சமயங்களெல்லாம் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு, செயல்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட போக்கைக் கொண்டிருந்தாலும் நான் அவற்றை இஸ்லாத்துக்கு மாறுபட்ட மதங்களாக, மாற்றமான கொள்கைக் கோட்பாடுகளைக் கொண்ட சமயங்களாகக் கருதி, அவற்றின் மீது வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் முறையில் 'மாற்றுச் சமயங்கள்' எனக் குறிப்பிடாமல் 'சகோதர சமயங்கள்' என்றே குறிப்பிடுகிறேன். இதுதான் இஸ்லாம் உணர்த்தும் சமயக் கொள்கை; பெருமானார் காட்டியே பெருவழி.

இன்று உலகில் இருந்து வரும் பெரும் மதங்களும், மறைந்து போய்விட்ட பெரும் மதங்களும்கூட நம் சகோதர

சமயங்கள் தாம் என்ற கசப்பான உண்மையை உணர்ந்து தெளிய வேண்டும். இந்த உணர்வையே இறுதி இறை வேதமான திருமறையாம் திருக்குர்ஆனும் மிகத் தெளிவாக உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது என்பதை நீங்களும் அறிவீர்கள். நாமெல்லாம் அறிந்துணர்வதோடு உலகத்துக் கும் அழுத்தமாக உணர்த்த வேண்டிய அடிப்படையான ஒரு தத்துவமும்கூட.

## அனைத்துச் சமயங்களையும் ஒப்புக் கொள்பவனே முழுமையான முஸ்லிம்

புத்தரை மட்டும் ஏற்றுக் கொண்டால் அவன் பௌத்தனாக இருக்கலாம். இயேசுவை மட்டும் ஏற்பவன் கிருஸ்தவனாக இருக்கலாம். மகாவீரரை மட்டும் ஏற்றுக் கொண்டால் அவன் சமணனாக, ஜைனனாக இருக்கலாம். அதே போன்று நபிகள் நாயகம் (சல்) அவர்களை மட்டும் இறை தூதராக ஏற்றுக் கொண்டேன் என்றால் நான் முழுமையான முஸ்லிம் ஆகிவிட முடியுமா? என்றால் முஸ்லிமாக இருக்கலாமே தவிர முழுமையான முஸ்லிமாக இருக்க முடியாது என்பதுதான் இஸ்லாமியக் கொள்கை. அவன் முழுமையான முஸ்லிம் ஆக வேண்டுமென்றால் 'இறைவனின் இறுதித் தூதராக நபிகள் நாயகம் (சல்) அவர்களை ஏற்றுக் கொள்வதோடு, முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதாம் (அலை) தொடங்கி மண்ணுலக மக்களுக்கு இறைநெறி புகட்ட, வல்ல அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு இலட்சத்து இருபத்திநான்காயிரம் நபிமார்களையும் அவர்கட்கு வழங்கப்பட்ட இறை வேதங்களையும் ஒப்புக் கொள்வதோடு, நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இறைவனின் இறுதித் தூதர் என்பதையும் அவருக்கு இறைவனால் வழங்கப்பட்ட இறுதி வேதமாக திருக்குர்ஆன் திருமறையையும் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்' என்று உறுதி கொண்டால் மட்டுமே அவன் முழுமையான முஸ்லிமாக ஆக முடியும்.

திருமறையாம் திருக்குர்ஆன் பல்வேறு சமயங்கள் பற்றி, அவற்றைத் தோற்றுவித்த இறை தீர்க்கதரிசிகளைப் பற்றி, இறை வாக்காகக் கூறும் இறைவசனங்கள் அடிப் படையில் தரப்படும் தகவல்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

**இந்திய சமயாச்சாரியர்கள் இந்தியாவில் மட்டும்**
**இஸ்லாமிய தீர்க்கதரிசிகள் உலகெங்கும்**

பழம்பெரும் சமயங்களான, ஹிந்து சமயம், சமண சமயம், புத்த சமயம் ஆகியவற்றைத் தோற்றுவித்த தீர்க்க தரிசிகள் அனைவரும் இந்தியாவில் மட்டுமே தோன்றி யிருக்கிறார்கள். இம்மதாச்சாரியர்கள் யாரும் இந்தியாவுக்கு வெளியே தோற்றம் பெற்றதாக வரலாறே இல்லை.

அதே போன்று, யூத, கிருஸ்த தீர்க்கதரிசிகள் அனைவருமே பாலஸ்தீனத்தில் மட்டுமே தோன்றி வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள்.

ஆனால், இஸ்லாமிய தீர்க்கதரிசிகள் - இறை தூதர் களாகிய நபிமார்கள் உலகெங்கும் தோற்றம் பெற்றிருக் கிறார்கள். இஸ்லாமிய இறை தூதர்களாகிய நபிமார்கள் பிறக்காத நாடில்லை; இனமில்லை; மொழியில்லை. எல்லா நாட்டிலும் எல்லா இனத்திலும் எல்லா மொழியிலும் தோன்றியிருக்கிறார்கள். வேறு சில நபிமார் கள் ஒரு இனமக்களை வழிநடத்தியிருக்கிறார்கள். மற்றும் சில நபிமார்கள் ஒரு மொழி பேசிய மக்களை வழிநடத்தி யிருக்கிறார்கள். ஆனால், இறைவனின் இறுதித் தூதரான நபிகள் நாயகம் (சல்) அவர்கள் ஒட்டுமொத்த உலக மக்களை வழி நடத்த வந்துதித்த வள்ளல் நபியாவார்.

உலகெங்கும் நபிமார்கள் தோன்றியிருக்கிறார்கள் என்பதை மெய்ப்பிக்கும் சம்பவமொன்று அண்மையில் நடைபெற்றது.

**ஏதென்சில் சாக்ரட்டீஸ் தர்கா**

சமீபத்தில் கிரேக்க நாட்டின் தலைநகரான ஏதென்ஸ் நகருக்குச் சென்றிருந்தேன். ஒரு காலத்தில் உலகின் தத்துவக் களஞ்சியமாக - அறிவுச் சுரங்கமாகத் திகழ்ந்த பகுதி அது. அங்கே புகழ் பெற்ற அக்ரோபொலிஸ் என்ற பழங்காலச் சின்னங்கள் நிறைந்த பகுதியைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தேன். அப்போது ஏனோ அந்நாட்டின் மாபெரும் சாக்ரட்டீசின் நினைவு வந்தது. சாக்ரட்டீசுக்கு விஷம் கொடுத்துக் கொன்றபோது அடைக்கப்பட்டிருந்த சிறைச் சாலையை பார்க்க இயலுமா என, என்னை அழைத்துச் சென்ற நண்பரைக் கேட்டேன். அவர் ஒரு கிருஸ்தவர்; யுனெஸ்கோ கூரியர் கிரேக்க மொழிப் பதிப்பில் பணியாற்றி வருபவர். அவர் சிரித்தபடி "சாக்ரட்டீஸ் அடைபட்டிருந்த சிறைப் பகுதிக்கு மட்டுமல்ல, அவர் அடக்கமாகியுள்ள தர்காவுக்கும் சென்று உங்கள் இஸ்லாமிய மரபு முறைப்படி 'ஜியாரத்'தும் செய்து வரலாம்" எனக் கூறிச் சிரித்தார். சாக்ரட்டீசுக்கு தர்காவா? அதுவும் இஸ்லாமிய முறைப்படி 'ஜியாரத்தா?' நான் ஏதும் அறியாத நிலையில் பேந்தப் பேந்த விழித்தேன். என் ஐயப்பாடு எதுவாக இருக்க முடியும் என்பதை ஓரளவு ஊகித்துக் கொண்ட நண்பர்,

"ஆட்டோமன் ஆட்சிக்குக் கிரீக் அடிமைப்பட்டிருந்த காலத்தில், இஸ்லாமிய அணுகுமுறையோடு ஆட்டோமன் ஆட்சியாளர்கள் கிரேக்கை ஆண்டு வந்தனர். இஸ்லாமிய மரபுப்படி கிரேக்க மக்களை வழி நடத்த வந்த நபியே சாக்ரட்டீஸ் எனக் கருதி, அவர் புதைக்கப்பட்டிருந்த புதை குழியைச் சுற்றி நாற் சதுர கட்டிடமொன்றை எழுப்பி அதை தர்கா ஆக்கியதோடு, இஸ்லாமிய முறைப்படி, விரும்புவோர் அங்கு சென்று ஜியாரத் செய்யவும் ஏற்பாடு செய்தனர். அன்று முக்கியத்துவமுடையதாக விளங்கிய அத் தர்கா இன்று முக்கியத்துவம் இழந்திருப்பினும் தர்கா

வடிவிலேயே இன்றும் அமைந்துள்ளது" எனக் கூறி விளக்கி, அங்கு அழைத்துச் சென்றார். நானும் சென்று பார்த்து 'ஜியாரத்' செய்து வந்தேன்.

இவ்வாறு உலகெங்கும் தோன்றி இறை நெறி புகட்டிச் சென்ற சிறிய, பெரிய நபிமார்கள் அனைவரையும் அவர்கட்கு இறைவன் வழங்கிய வேதங்களையும் ஒவ்வொரு முஸ்லிமும் ஒப்புக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறார். அதே சமயம் இறுதி இறைத் தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்களையும் அவர்கட்கு வழங்கப்பட்ட இறுதி வேதமாகிய திருக்குர்ஆன் திருமறையையும் முழுமையாக ஏற்றுப் பின்பற்றக் கூடியவர்களாக இருக்கிறோம்.

இங்கு 'ஒப்புக் கொள்கிறோம்' என்ற சொல்லுக்கும் 'ஏற்றுக் கொள்கிறோம்' என்ற சொல்லுக்குமுள்ள வேறுபாட்டை நன்கு உணர வேண்டும். 'ஒப்புக் கொள்வது' என்பது வேறு, 'ஏற்றுக் கொள்வது' என்பது வேறு. ஒப்புக் கொள்வதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அவசியமோ கட்டாயமோ இல்லை. ஆனால், ஒன்றை முழு மனதோடு ஏற்றுக் கொண்டு விட்டோம் என்றால், அதை முழுமையாகக் கடைப்பிடித்தொழுக வேண்டுமென்ற கட்டாயம் தானாகவே உருவாகி விடுகிறது. இப்படி உள்ளூர் நபி முதல் உலகளாவிய இறுதி நபிவரை ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் இறைவனால் உலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பது இஸ்லாமிய மரபு வழிச் செய்தியாகும். இவர்களில் இருபத்தைந்து நபிமார்களைப் பற்றிய செய்திகளை மட்டுமே இறை மறையாகிய திருக்குர்ஆன் தருகிறது.

இந்தக் கருத்துக்கு உரம் சேர்க்கும் வகையில் இறை தூதர்களில் 3 பேர் இந்தியாவில் தோன்றியிருக்கிறார்கள். அவர்கட்கு ஆறு வேதங்கள் இறைவனால் வழங்கப் பட்டுள்ளன என முன்னாள் குடியரசுத் தலைவர் பாபு

ராஜேந்திரப் பிரசாத் அவர்களால் 'இந்தியா பிரிக்கப் பட்டால்' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது இங்குக் கவனிக்கத்தக்க செய்தியாகும்.

**ஏன் இத்தனை நபிமார்கள்? இத்தனை வேதங்கள்?**

இறைவன், முதல் மனிதர் ஆதாம் (அலை) அவர் களையே முதல் நபியாக நியமித்து அவர் வழி வரும் சந்ததி களுக்கு இறை நெறி புகட்ட இறைவன் பணித்திருந்தான். அவரும் அவ்வாறே செய்தார். காலப் போக்கில் அவர் போதித்த இறை நெறியை பின்வந்த சந்ததிகளில் சிலர் தங்கள் விருப்பு - வெறுப்புகளுக்கேற்ப மாற்ற திருத்தங் களைச் செய்து இறைநெறிப் போக்கைத் தடம் புரளச் செய்தனர். ஆதாம் (அலை) அவர்கட்கு தந்த இறைநெறி நாளடைவில் மாசுபட, அவர் சந்ததியிலே மீண்டும் ஒருவர் நபியாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூலவடிவில் இறைச் செய்தி இறைவனால் வழங்கப்படுவதாயிற்று. காலப் போக்கில் மீண்டும் இறைநெறியில் மனிதத் தலை யீட்டால் மாற்ற திருத்தங்கள். மீண்டும் நபி, இறை நெறி பெறுதல் தொடர்வதாயிற்று. சில பெரிய நபிமார்கள் ஒரே இறைவன், அவனே வணங்குதற்குரியவன் என வலுவாகப் போதிப்பர். காலப்போக்கில் இந் நபிமார்கள் மீது கொண்ட மதிப்பு, மரியாதையின் விளைவாக இந் நபிமார்களை அவர்கள் வாழ்ந்த போதே அவர் மீது கொண்ட அளப்பரிய அன்பின் காரணமாகவும் மதிப்பு, மரியாதையினாலும் அவர்களையே இறைவனாகக் கண்டு மகிழத் தொடங்கினர். அவ்வாறே அழைக்கவும் செய்தனர். அதை அறவே விரும்பாத நபிமார் அவர்களை கடிந்து கொண்டனர். இருப்பினும், அந்நபியின் மறைவுக்குப் பின்னர் அவர்களை இறைவனாகக் கண்டு வணங்கி மகிழ்வதிலே பேரானந்தம் கண்டனர். சான்றாக, ஈசா (அலை) அவர்கள் எல்லாம் வல்ல ஒரே இறைவனாகிய கர்த்தரை வணங்குங்கள் என்று உபதேசித்தார். ஆனால், அவர் மீது அளவிலா அன்பு

கொண்ட அவரது அடியார்கள் ஏசுவையே கர்த்தராகக் கொண்டு ஆராதிக்க முற்பட்டனர். இதைக் கண்டு வெகுண்ட ஏசுவாகிய ஈசா (அலை) 'என்னை வணங்கா தீர்கள். வணங்குதற்குரிய இறைவனாகிய கர்த்தரையே வணங்குங்கள்' என்று பணித்ததாக இறைவேதமாகிய 'இன்ஜீல்' எனும் பைபிள் கூறுகிறது.

"பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செயல்படுகிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப் பவனேயல்லாமல், என்னை (இயேசுவை) நோக்கி "கர்த்தரே! கர்த்தரே!" என்று சொல்கிறவன் அதில் பிரவே சிப்பதில்லை."

(மத்தேயு 7: 21)

இதினின்று ஏசு இறைவனாகிய கர்த்தரைத் தவிர்த்து வேறு யாரையும் இறைவன் எனக் குறிப்பிடுவதை ஈசா (அலை) அறவே விரும்பவில்லை எனத் தெளிவாகிறது. எனினும், கிருஸ்தவ மக்கள் இயேசுவாகிய ஈசா (அலை) அவர்களை இறைவனாக வணங்கி மகிழ்வதை எங்கும் காண்கிறோம்.

இவ்வாறு ஒரே இறைவனை வணங்கப் பணித்த வர்களே இறைவனாக்கப்பட்டார்கள். அதற்கேற்ப இறை வேதங்களிலும் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப மாற்ற திருத்தங்களை உருவாக்கி மூல வேதத்தைத் தடம் புரளச் செய்து மாசு படுத்தினார்கள். எனவே, மூல வடிவிலேயே மீண்டும் இறை வேதமும் அதனை உள்ளது உள்ளவாறே விளக்கிச் சொல்ல நபியும் இறைவனால் அனுப்பப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அன்புப் பெருக்கால் நபிமார்களின் கொள்கைகள் எவ்வாறு அவர்களைப் பின்பற்றுபவர்களின் மதிப்பு மரியாதையினால் மூலக் கொள்கைகள் முடமாக்கப்பட்டன என்பதை ஒரு சிறுகதை மூலம் விளக்கினால் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும் எனக் கருதுகிறேன்.

ஒரு ஊர் வளமான பகுதியாக இருந்தும் அவ்வூரில் வறுமை கோலோச்சிக் கொண்டிருந்தது. காரணம், நேரத்தைக் கணித்தறிய எந்தக் கருவியும் அப்போது கண்டு பிடிக்கப்படாததால், நேரத்தை பிரித்து, ஒழுங்காகத் தங்கள் வேலைகளைச் செய்து முடிக்க இயலாதவர்களாக இருந்தார்கள். இதனால் எங்கும் குழப்பம்; எதிலும் தாமதம்.

இந்தச் சமயத்தில் அவ்வூரைச் சார்ந்த பெரியவர் ஒருவர் நீண்ட தூரத்துக்கு அப்பால் இருந்த ஒரு ஊருக்குச் சென் றிருந்தார். அங்கே எல்லாக் காரியங்களும் முறையாகவும் நேரப்படியும் செய்யப்பட்டன. எதிலும் குழப்பமில்லை. எல்லாமே சிறப்பாக நடைபெற்று வந்ததால் அங்குள்ளவர் களின் சக்தியோ நேரமோ கொஞ்சமும் வீணாகாமல் பயனடைந்து வந்தன. இதனால் மகிழ்ச்சியும் செழிப்பும் மக்கள் வாழ்வில் மேலோங்கி நின்றன.

இதற்கெல்லாம் என்ன காரணம் என ஆர்வத்தோடு வந்தவர் ஆராயலானார். அப்போதுதான் அந்த இரகசியம் அவருக்குத் தெரிய வந்தது.

அவர்கள் நேரத்தைப் பகுத்துக் காட்டும் ('சூரியக் கடிகை') 'சன் டயல்' எனும் நேரங்காட்டும் கருவியைக் கண்டுபிடித்திருந்தார்கள். சூரியோதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரை, சூரிய ஒளிபடும் முறையில் நீளமான அந்தக் கருவியை வைத்து விட்டால், அக் கருவிக்கு அருகில் விழும் நிழலின் நீளத்தைக் கொண்டு நேரத்தை அனுமானிக்க முடியும். இதனால் அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலையை முடிக்க முடிந்தது.

இதைக் கண்டு வியந்த வெளியூர்க்காரர் இதே போன்ற கருவியை தன் ஊருக்கும் வாங்கிச் சென்றால் அங்குள்ளவர் கள் நேரமறிந்து வேலை செய்ய முடியுமே. இதனால் வீணான குழப்பங்கள் நீங்க ஊர் மக்கள் வாழ்வில் ஒழுங்கும் மகிழ்ச்சியும் உருவாகுமே என்ற எண்ணத்தில் அப்படிப்

பட்ட சூரியக் கடிகாரம் ஒன்றை வாங்கிக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தார்.

ஊர் நடுவில் நன்கு சூரிய ஒளி படக் கூடிய மைதானத்தில் சூரியக் கடிகாரத்தை வைத்தார். அவ்வூர் மக்கள் அதன் அடியில் விழும் நிழலின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டு நேரத்தைக் கணித்தறிந்து, அதற்கேற்ப தங்கள் வேலைகளைத் திட்டமிட்டுச் செம்மையாகச் செய்து முடித்தனர். இதனால் நேரக் குழப்பம் நீங்கியது. எங்கும் சீரொழுங்கோடு அதிகப் பணிகள் நடைபெற்றன. இதனால் வளமும் மகிழ்ச்சியும் பெருகியது. தங்கள் வாழ்வில் நேர ஒழுங்கையும் செழிப்பையும் மகிழ்வையும் கொண்டு வந்த சூரியக் கடிகாரத்தை நன்றியோடு நோக்கினர். அதைக் கொண்டு வந்து நிறுவியவரைப் போற்றிப் புகழ்ந்தனர். தங்களின் வழிகாட்டியாகக் கருதி அவரை வாழ்த்தினர்.

ஒருநாள் சூரியக் கடிகாரத்தைக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தியவர் இறந்து விட்டார். தங்கள் ஊருக்குச் சூரியக் கடிகாரத்தைக் கொண்டு வந்து மக்கள் வாழ்வில் நேர ஒழுங்கும் ஊர்ச் செழுமையும் உருவாகக் காரணமாக இருந்த அந்த நல்லவரின் நினைவை என்றென்றும் போற்றும் முறையில் ஒரு பெரும் நினைவாலயத்தை எழுப்பினர். அந் நினைவாலயத்தின் உள் மைய மண்டபப் பகுதியில் அவரின் நினைவாக - தங்களுக்கு நேர ஒழுங்கையும் வளத்தையும் தரக் காணரமாக இருந்த சூரியக் கடிகாரத்தைக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தனர். சூரியக் கடிகாரம் நினைவாலயம் சென்றுவிட்டதால், மைதானத்தில் நிழலைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் நேரத்தை பகுத்து, நேரப்படி பணியாற்ற வழியில்லாமல் போய்விட்டது. மீண்டும் குழப்பம், வேலை மந்தம், வளர்ச்சிக் குறைவு. மக்கள் வாழ்க்கையில் மீண்டும் தேக்க நிலை.

**இறையை உணர்த்தியவரே இறைவனாக்கப்பட்டார்**

இதே போலத்தான், எந்த நபி உருவிலா ஓரிறையை

வணங்கப் பணித்தாரோ, அந்த நபியின் மீது கொண்ட அளவிலா மதிப்பினாலும் மரியாதையினாலும் அந்த நபியையே இறைத் தூதராக வணங்கத் தலைப்படுவர். நபி மூலம் வந்த இறை வேதத்திலும் தங்கள் விருப்பு, வெறுப்புகளை ஏற்றி அதன் மூலக் கொள்கையை மாசுபடுத்தி விடுவர்.

எனவே, மீண்டும் ஓரிறைக் கொள்கையை நிலைநாட்ட ஒரு புது நபியை இறை தூதராகவும் அவர் மூலம் மீண்டும் மூல வடிவில் வேதமும் இறைவனால் அருளப்பட்டன. இவ்வாறு உலகெங்கும் ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார்களும் முப்பத்தியாறு முறை இறை வேதங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன. அவர்களுள் இறைத் தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இறுதி இறைத் தூதராகவும் திருக்குர்ஆனை இறுதி வேதமாகவும் இறைவன் அருளினான்.

## இறுதி வேதக் காப்பு இறைவனுடையது

நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு முன்னர் அருளப் பட்ட வேதங்களைக் காக்கும் பொறுப்பை இறைவன் மனிதர்களுக்கு வழங்கினான். ஆனால், இறுதி வேதத்தைக் காக்கும் முழுப் பொறுப்பை இறைவனே ஏற்றுக் கொண்டு விட்டதால் மனிதர்களால் இறை வேதத்தில் ஒரு புள்ளியை யும் மாற்ற இயலாமற் போய்விட்டது. ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் திருத்தமேதும் இல்லா (நீக்கமோ சேர்க்கையோ இல்லாது உள்ளது உள்ளபடி) திருமறையாகவே, மூல வடிவிலேயே விளங்கி மக்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக விளங்கி வருகிறது.

பெருமானார் (சல்) அவர்கட்கு வழங்கப்பட்ட இறைச் செய்தி முன்னர் வந்த நபிமார்கட்கு வழங்கப்பட்ட செய்திகளின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது என்பதை,

"(நபியே!) உமக்கு முன்வந்த இறை தூதர்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையே யன்றி வேறொன்றும் உமக்குக் கூறப்படவில்லை."

(திருக்குர்ஆன் 41:43)

என்ற இறைவசனம் இன்றும் இயம்பிக் கொண்டுள்ளது.

அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு முன்னதாக வந்த இறைத் தூதர்களாகிய நபிமார்கள் எல்லோருமே ஆன்மீகம் பற்றித்தான் போதித்தார்கள். அகவாழ்வின் பல்வேறு கூறுகளின் வளர்ச்சிக்கான வழிவகைகளைப் பற்றித் தெளிவாகவும் திட்பமாகவும் கூறிப் போதித்தார்கள். ஏனெனில், அவர்கள் ஆன்மீகப் போதகர்களாகவே அனுப்பப்பட்டவர்கள். எனவே, அவர்களின் நோக்கும் போக்கும் ஆன்மீகத்தைப் போதிப்பதோடு அமைவதாயிற்று. ஆனால், நபிகள் நாயகம் (சல்) அவர்களின் பணி ஆன்மீகப் போதனையோடு அறிவியலையும் போதிப்பதாக அமைந்தது. தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் ஆன்மீக வாழ்வாகிய அக வாழ்க்கையையும் அறிவியல் சார்ந்த வாழ்வாகிய புற வாழ்க்கையையும் ஒரு சேர உணர்த்தியவர் பெருமானார் (சல்) அவர்களாவர். அதுவும் உளவியல் அடிப்படையில்.

**அண்ணல் நபி ஓர் அழகிய முன் மாதிரி**

மற்ற நபிமார்களெல்லாம் வெறும் போதகர்களாக விளங்கி, போதிப்பதையே தங்களின் தலையாய பணியாகக் கருதி செயலாற்றி மறைந்தார்கள்.

ஆனால், அண்ணலார் அவர்கள் போதிப்பதோடு, போதனைக்கேற்ப வாழ்ந்து காட்ட வேண்டிய கடப்பாடுடையவராகவும் இறைவனால் அனுப்பப்பட்டிருந்தார்கள். இதை,

"உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரில் அழகான முன்மாதிரி அமைந்திருக்கிறது."

(திருக்குர்ஆன் 33:21)

என இறைவன் நபிகள் நாதரை நோக்கிக் கூறுவதாயமைந் துள்ள திருமறை வசனம் தெளிவுபடுத்துகிறது.

அண்ணலாருக்கு முன்னதாக வந்த அனைத்து நபிமார்களும் ஆன்மீகம் தொடர்பான - அகவாழ்வு சம்பந்தப்பட்ட வாழ்வியல் நெறிகளைப் போதித்தார்களே யன்றி வாழ்வின் அனைத்து அம்சங்களைப் பற்றியும் போதித்தவர்களில்லை. ஏனெனில், அவர்களெல்லாம் வாழ்வின் அனைத்துப் படித்தரங்களிலும் வாழ்ந்து காட்டும் வாய்ப்பைப் பெற்றவர்களில்லை.

**வாழ்வின் அனைத்துப் படித்தரங்களிலும் வாழ்ந்து காட்டிய வழிகாட்டி**

நபிமார்களின் குறிப்பிடத்தக்க பெரும் நபியாக விளங் கும் ஆபிரஹாம் எனும் இபுறாஹீம் (அலை) ஒரு படைத் தளபதியாகவோ மக்களை ஆட்சி செய்யும் ஆட்சித் தலைவராகவோ விளங்கியவரில்லை. அதே போன்று ஜீசஸ் என அழைக்கப்படும் ஈசா (அலை) அவர்கள் ஒரு குடும்பத் தலைவராகவோ ஒரு தந்தையாகவோ படைத் தளபதியாகவோ, ஆட்சித் தலைவராகவோ வாழ்ந்து காட்டியவர் இல்லை. தனியராக ஆன்மீக வாழ்வு பற்றி போதித்தவர். அகவாழ்வின் மேன்மை பற்றி அதிகமதிகம் பேசியவரேயன்றி மனித வாழ்வின் அகம் - புறம் எனும் இரு கூறுகளையும் பற்றிப் போதித்தவர் இல்லை.

ஆனால், அதே சமயம் நபிகள் நாயகம் (சல்) வாழ்க்கையில் எத்தனை படித்தரங்கள் - வாழ்க்கை வகை கள் உண்டோ அத்தனையிலும் வாழ்ந்து காட்டும் வாய்ப்பைப் பெற்றவர். ஒரு நல்ல கணவராக, தந்தையாக, வணிகராக, படை வீரராக, படைத் தளபதியாக, படைத் தலைவராக, ஆட்சித் தலைவராக, வாழ்வின் அகம் - புறம் போதித்த ஆசானாக, விஞ்ஞானம் பேசிய மெய்ஞ்ஞானிய ராக வாழ்வின் அனைத்து மட்டங்களிலும் வாழ்ந்து காட்டும் வாய்ப்பை இறைவன் ஏந்தல் நபிக்கு மட்டுமே வழங்கியது

வல்ல அல்லாஹ்வின் அருட்கொடையாகும். அதிலும், வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் அழகிய முன் மாதிரியாக வாழ்ந்து காட்டிய பெருமையும் பெருமா னார்க்கே உண்டு.

பெருமானாரின் பெரு வாழ்வும் அதற்கு அச்சாணி யாயமைந்த இஸ்லாமியத் திருமறையாம் திருக்குர்ஆனும் உணர்த்துவது இறை நம்பிக்கையும் இறை வணக்கமுமே யாகும். இறை நம்பிக்கையும் அதனைச் செயல் வடிவில் நிறைவேற்றும் வணக்கமும் தனி மனித உயர்வுக்கு எல்லா வகையிலும் வலிவும் வனப்பும் ஊட்டுவதாகவே அமைந் துள்ளது.

ஐம்பெரும் கடமைகளும் வணக்கமுறைகளேயாகும்

இஸ்லாம் ஒவ்வொரு முஸ்லிமும் ஐம்பெரும் கடமைகளைப் பேணி நடக்கப் பணிக்கிறது. கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளாக ஈமான் எனும் இறை நம்பிக்கை, தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் எனும் புனிதப் பயணம் ஆகிய ஐம்பெரும் கடமைகளை நிறைவேற்றக் கட்டளையிடுகிறது. இந்த ஐம்பெரும் கடமைகளும் ஒருவகையில் இறை வணக்க முறைகளாகவே அமைந்துள்ளன. ஈமான் எனும் இறை நம்பிக்கை உணர்வால் நிகழ்த்தப்பெறும் இறை வணக்கமாகும். தொழுகை என்பது உடலாலும் உணர்வாலும் நிறைவேற்றப் படும் இறை வணக்கமாகும். ‘நோன்பு’க் கடமை உடலால் நிகழ்த்தப் பெறும் இறை வணக்கமுறையாகும். ஜகாத் எனும் வறியோர் பங்களிப்புக் கடமை பொருளால் நிகழ்த்தப் பெறும் இறைவணக்கமாகும். ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையாகிய ‘ஹஜ்’ கடமை உடலாலும் பொருளாலும் நிறைவேற்றப்படும் இறை வணக்க முறையாகும். இவ்வாறு இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளும் இறைவணக்க முறைகளாகவே அமைந் துள்ளன.

## இறைவணக்க உயிரோட்டம் தியாகமே

இஸ்லாமிய இறைவணக்க முறைகளின் உயிரோட்டமாக அமைந்திருப்பது தியாக உணர்வாகும். ஆழ்ந்து பார்த்தால் இஸ்லாமியக் கடமைகள் அனைத்துமே தியாகத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன என்பது தெள்ளத் தெளிவாகும். சான்றாக 'ஈமான்' -ஐ எடுத்துக்கொள்வோம். மனம் ஒரு குரங்கு என்பார்கள். நல்லதோ கெட்டதோ தனக்கு இதமாக இருக்கும் எதையும், மகிழ்வூட்டக்கூடிய எந்தவொரு விஷயத்தையும் பற்றி பூரிப்படைவது மனதிற்குகந்த ஒன்று. ஆனால், அசையோட்டமிக்க மனதை ஒரு நிலைப்படுத்தி, அதிலே இறையுணர்வைப் பொங்கச் செய்து, இறைவன் ஒருவனே; அவன் ஆணுமில்லை; பெண்ணுமில்லை; அலியுமில்லை. அவன் யாரையும் பெறவுமில்லை; யாராலும் பெறப்படவுமில்லை என்பதில் முழுமையாக நம்பிக்கை கொண்டு, இவ்விறை உணர்வால் மனதை நிரப்பிக் கொள்ளும்போது, இஷ்டப்படியெல்லாம் எண்ணி மகிழும் மனதைக் கட்டுப்படுத்தும் தியாகத்தை செய்தவர்களாகிறோம்.

அடுத்து, 'தொழுகை' வைகறை நேரம். விடிந்தும் விடியாத நிலையில் இழுத்துப் போர்த்திக் கொண்டு சுகமாகத் தூங்கும் நேரத்தில் துள்ளியெழுந்து, உள்ளச் சுத்தம், உடல் சுத்தம் என்ற நிலையில் ஒளுச் செய்து வைகறைத் தொழுகையான 'பஜ்ர்' தொழுகையில் தொழுகையாளி ஈடுபடுகிறார். இதேபோல் மற்ற தொழுகை நேரங்களில் தன் அலுவலகப் பணிகளை, வணிகப் பணிகளை ஒதுக்கி வைத்து தொழுகைகளில் ஈடுபடுகிறார். இதன் மூலம் தனக்கு வருமானம் போன்ற பெரும் பயன் அளிக்கவல்ல நேரங்களைத் தொழுகையாளி தியாகம் செய்கிறார்.

நோன்புக் கடமையை நிறைவேற்ற முனையும் நோன்பாளி, நோன்பின்போது, தான் விரும்பிப் பருகி

மகிழும் பானங்களையும் அடிக்கொரு முறை புகைத்து மகிழும் நோன்பாளிப் புகைப்புப் பழக்கத்தையும் பகல் நேரத்தில் விரும்பி உண்ணும் சுவைமிகு உணவையும் அடியோடு துறந்து, ஒரு சொட்டு நீரும் பருகாமல் அனைத்து உணவு வகைகளையும் தியாகம் செய்தவராகிறார்.

'ஜகாத்' எனும் ஏழையின் பங்களிப்பை வழங்குகின்ற முஸ்லிம் தான் பாடுபட்டுத் தேடிய பொருளைத் தன் கைப்படவே இரண்டரை சதவிகிதத்தைக் கணக்கிட்டு, அத் தொகையைப் பெறுவதற்கென விதிக்கப்பட்ட நபர்களைத் தேடிச் சென்று, இடது கை தருவது வலது கைக்குத் தெரியாதவாறு வழங்கி மகிழ்கின்றார். இவ்வாறு 'ஜகாத்' கடமையை நிறைவேற்றுவதன் மூலம் தான் பாடுபட்டுத் தேடிய திரவியத்தின் ஒரு பகுதியைத் தியாகம் செய்கின்றார்.

அதேபோன்று 'ஹஜ்' கடமையை நிறைவேற்ற முனையும் ஹாஜி தன் பெருளைச் செலவிட்டு, காலத்தை ஒதுக்கி, தன் குடும்பம் உற்றார் உறவினர்களை ஒரு குறிப்பிட்ட காலம்வரை விட்டுப் பிரிந்து, இறையில்லம் ஏகுகிறார். நாற்பது நாட்கள் கடுமையான தவ வாழ்வை மேற்கொண்டு தன் ஹஜ் கடமைகளை நிறைவேற்றுகிறார். இவ்வாறு தன் சௌகரியங்கள் அனைத்தையும் தியாகம் செய்தவராகத் தன் ஹஜ் கடமைகளை நிறைவேற்றுகிறார்.

இவ்வாறு ஐம்பெரும் இஸ்லாமியக் கடமைகள் அனைத்துமே தியாக உணர்வை அடித்தளமாகக் கொண்டு அமைந்துள்ளன எனலாம்.

இறையச்ச உணர்வே இறைநெறியூட்டும் உந்துவிசை

இத்தகைய வணக்க முறைகளால் இறையச்ச உணர்வு வலுப்படுகிறது. வலுவான இறையச்ச உணர்வே இறை நம்பிக்கையை ஊட்டி வளர்க்கும் உந்து விசையாயமை கிறது. இதற்கு ஏற்ற சான்றாக, இன்றுவரை வரலாறு சுட்டிக் காட்டுவது ஃபிர்அவ்னைத்தான்.

ஃபிர்அவ்ன் இறை நம்பிக்கை அறவே இல்லாத மன்னன். தன்னையே கடவுளாகப் பிரகடனப்படுத்திக் கொண்டதோடு, தன்னை கடவுளாக மக்கள் வணங்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தியவன். வணங்க மறுத்தவர்களை சிறையிலிட்டும், சித்திரவதை செய்தும் கொடுமைப்படுத்தி வந்த கொடுங்கோலன்.

மூஸா (அலை) ஃபிர்அவ்னைக் கடவுளாக வணங்க மறுத்ததோடு, உருவமிலா ஒரே இறைவனையே வணங்கப் பணித்தவர். ஃபிர்அவ்னுக்கெதிராக 'ஓர் இறை'க் கொள் கையை உரமாக மக்களிடையே பரப்பி வந்த மூஸா (அலை) அவர்களை ஃபிர்அவ்ன் கடும் பகைவராகக் கருதி, அவரை அழிக்க, அவரது ஓரிறைப் பிரச்சாரத்தை ஒடுக்க கடுமை யான அடக்கு முறைகளைக் கையாண்டு துன்புறுத்தினான். அவனது கொடுங்கோன்மையை வெறுத்த மூசா (அலை) நாட்டை விட்டு வெளியேறி, தன் பிரச்சாரத்தைத் தொடர முற்பட்டார். ஓரிறைக் கொள்கையை ஏற்றுப் பின்பற்று பவர்களை அழைத்துக்கொண்டு செங்கடலைக் கடக்க, அதனை நோக்கி நடந்தார்.

இதையறிந்த ஃபிர்அவ்ன் தன் படைகளோடு விரைந்து சென்று, மூசா (அலை) கூட்டத்தை தடுத்து நிறுத்தித் தாக்க புறப்பட்டான். செங்கடலை நெருங்கிய நிலையில் ஃபிர் அவ்ன் தன் படையுடன் தொடர்ந்து வருவதையறிந்த மூசா (அலை) தங்களைக் காக்குமாறு இறைவனிடம் வேண்டி னார். இறைவன் செங்கடலைப் பிளக்கச் செய்தான். பிளவுண்ட செங்கடல் பாதை வழியே மூசா (அலை) மும் அவரைப் பின்பற்றி வந்தவர்களும் விரைவாக நடந்து சென்று மறு கரையை அடைந்தனர். அவர்களைப் பின்பற்றி வந்த ஃபிர்அவ்னும் அவன் படையினரும் நடுக் கடலை அடைந்தபோது, மூசா கூட்டத்தினர் அனைவரும் மறுகரையைச் சேர்ந்து விட்டனர். உடனே பிளவுண்ட கடல் ஒன்றிணைந்தது. இதனால் ஃபிர்அவ்னும் அவன்

படையினரும் செங்கடல் நீரில் தத்தளித்தனர். தனக்கு அழிவு நெருங்கி விட்டதை ஃபிர்அவ்ன் தெளிவாக உணர்ந்தான். தன்னைக் காக்க சர்வ சக்தியுள்ள இறைவனாலேயே இயலும் என்ற உணர்வு நெருப்புப் பொறியாக அவன் உள்ளத்தில் தோன்றி ஜுவாலையாகக் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. "இறைவன் ஒருவன் இருப்பதை ஒப்புக் கொள்கிறேன். அந்த இறைவன் என்னைக் காத்து இரட்சிக்க அவனருளை வேண்டுகிறேன்" எனக் கதறியபடி கூறினான். தன் அழிவின் விளிம்பை எட்டிய நிலையில் இறையச்சத்தோடு பூரண இறை நம்பிக்கையுடன் இறைவனை வேண்ட, இறைவனும் அவனுக்கு உதவ முன் வந்தான். 'தன் வாழ்வில் இறுதி நிமிடத்தில் இறையச்சமும் இறை நம்பிக்கையும் கொண்டு **இறையுதவியை** வேண்டிநின்றதால், ஃபிர்அவ்னின் **பூதவுடல் இ**வ்வுலகுள்ளளவும் அழியாமல் காக்கப்படும். **இறை நம்பிக்**கையாளர்கட்கு அவ்வுடல் ஒரு சான்றாக **இருக்கும்'** என இறைவன் கூறியதோடு அவன் உடல் இதுவரையிலும் அழியாமல் காத்து வரப்படுகிறது. அந்த உடல் இன்றுவரை 'மம்மி'யாக எகிப்து அருங்காட்சியகத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**இறையச்சம் இறைநம்பிக்கைக்கு ஊற்றுக்கண்**

ஒரு நிமிடநேரம் இறையச்சம் கொண்டு இறை நம்பிக்கையை வெளிப்படுத்தியதற்குப் பயனாக ஃபிர் அவ்னின் உடல் உலகுள்ளளவும் பாதுகாக்க அருள் செய்த இறைவன், நம் வாழ்நாள் முழுமையும் இறையச்சமும் அழுத்தமான இறை நம்பிக்கையும் கொண்டு, இறைநெறிப் படி வாழ்வோமேயானால், நமக்கு வல்ல அல்லாஹ் எத்தகைய பெரும் பேறுகளையெல்லாம் வழங்கி மகிழ் விப்பான் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இறையச்சத்தோடு கூடிய ஆழ்ந்த இறை நம்பிக்கை, நம் வாழ்க்கை செம்மையாக அமைய, எல்லா வகையிலும்

வழிகாட்டியாயமைகிறது. நம் வாழ்க்கைத் தேர் வெற்றி எனும் இலக்கை எளிதாக அடைய, மாபெரும் ராஜபாட்டை யாக அமைகிறதெனலாம். இஃது பல இனிய பண்புகள் உருவாக ஊற்றுக் கண்ணாக அமைகிறது என்பதில் ஐயமில்லை.

எளிமையே சுவர்க்கத் திறவுகோல்

இவ்வாறு நமக்குள் உருவாகி நிலைபெறும் பல இனிய பண்புகளில் ஒன்று எளிமை. இறை நம்பிக்கையும் இறை யச்ச உணர்வும் கொண்டவனிடம் ஆடம்பரம் தலை காட்டாது. அடக்கமும் எளிமையும் அவன் வாழ்க்கைத் தேரின் இருபெரும் சக்கரங்களாக அமையும். இத்தகைய எளிமை வேட்கையாளர்களே இறை உவப்புக்கு உரியவர் களாக முடியும் என்பதைப் பெருமானார் (சல்) வாழ்வில் நடைபெற்ற ஒரு சுவையான சம்பவம் இன்றும் நமக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக அமைந்து, நம்மை இறை வழியில் ஊக்கி வருகிறது. மக்கா வெற்றியைத் தொடர்ந்து அரபகம் முழுமையும் அண்ணலாரின் ஆட்சியின் கீழ் வந்தது. அண்ணலாரின் ஆட்சி முறையின் மாட்சி கண்டு அண்டை நாட்டு ஆட்சியாளர்களெல்லாம், மன்னர்களெல் லாம் வியந்து நின்றனர். நேசக் கரம் நீட்ட முனைந்து, நேரில் வந்து உரையாடி, அறிவுரை பெற்றுச் சென்றனர். வரும் மன்னர்களின் மற்றைய அரசுப் பிரதானிகளும் ஆடை அலங்காரங்களுடன் அண்ணலாரை வந்து காண்பர். ஆனால், அண்ணலாரோ ஆடம்பரம் ஏதுமின்றி மிகமிக எளிய உடையுடன், ஒரு பக்கீரைப் போன்று காட்சி அளிப்பார். வருகின்ற மன்னர்களும் மற்றவர்களும் அமர நல்ல இருக்கைகளைத் தந்துவிட்டு, தான் சாதாரணமாக அமரும் கயிற்றுக் கட்டிலேயே அமர்ந்து உரையாடுவார். இது உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தைப் பாதித்து வந்தது. மற்ற நேரங்களில் எப்போதும்போல் இருந்தாலும் அண்டை நாட்டு மன்னர், பிரதானிகள் வரும்போது, அவர்கள் அளவுக்கு இல்லையென்றாலும் அரசுத் தலைவர் என்பதற்

காகவாவது ஓரளவு ஆடம்பர உடையணிந்து பேட்டி தரக் கூடாதா? எனத் தனக்குத் தானே கேட்டுக் கொள்வார்.

ஒரு நாள் பெருமானார் தன் வீட்டில், வழக்கமான கட்டிலில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது, நீண்ட நாளாகத் தன் உள்ளத்தை அரித்து வரும் உணர்வை, எண்ணத்தை வினா வடிவில் வள்ளல் நபிகள் நாயகம் அவர்களிடம் கேட்கலானார்.

மற்ற சமயங்களில் எப்படியிருந்தாலும் பரவாயில்லை. மன்னர்களும் மற்றவர்களும் காண வரும்போதாவது ஓரளவு நல்ல உடைகளை அணிந்து, வருபவர்களுக்கு காட்சி தந்தால், காண்பதற்கு நன்றாக இருக்குமே. வரும், மன்னர்களுக்கும் உவப்பாக இருக்குமே என்ற முறையில் உமர் (ரலி) அவர்களின் பேச்சு அமைந்தது. உமர் (ரலி) அவர்களின் உட்கிடக்கையை உய்த்துணர்ந்து கொண்ட பெருமானார், புன்சிரிப்புப் பூத்தவராக உமர் (ரலி) அவர்களை உவப்புடன் நோக்கி 'உமர் அவர்களே! இறைவன் எப்போதும் எளிமையையே விரும்புகிறான். எளிமையாக வாழுபவர்களுக்கு எண்ணற்ற வெகுமதிகளை அளிக்கிறான். எளிமையாக வாழ்வோரே சுவர்க்கத்தில் எளிதாக நுழைய முடியும். அங்கு அவர்கட்கு விரும்புவன வெல்லாம் கிடைக்கும். அத்தகைய சுவர்க்கப் பரிசுகள் எனக்குக் கிடைப்பதை தாங்கள் விரும்ப வில்லையா, உமர் அவர்களே!' என்று எதிர்வினா எழுப்பிய போது, உமர் (ரலி) அவர்கட்குத் தெளிவாகப் புரிந்தது எளிமை வாழ்வு எத்தகைய வெகுமதிகளை தேடித்தர வல்லது என்பது. தன் ஆடம்பர உணர்வு எவ்வளவு தவறானது என்பதும் உமர் (ரலி) அவர்கட்கு தெளிவாகியது.

### எளிமை ஆட்சியர்க்கு அணிகலன்

எந்த அளவுக்கு எளிமையாக வாழ வேண்டும் என்பதையும் அரசுப் பொறுப்பில் இருப்பவர்கள் எந்த அளவுக்கு ஆடம்பர வாழ்வு நீங்கி, அரசுப் பணத்தை எந்த

அளவுக்குச் சிக்கனமாகப் பயன்படுத்தி வாழ வேண்டும் என்பதற்கும் பெருமானாரின் பெரு வாழ்வில் பல எடுத்துக் காட்டுகளைக் காண முடிகிறது. அவைகளில் ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்று ஆட்சி, அதிகாரம் என்றாலே எவ்வளவு சுருட்டலாம், எத்தகைய ஆடம்பர வாழ்வை அரசுச் செலவில் அனுபவிக்கலாம். எத்தனை தலை முறைக்குச் சொத்து சேர்க்கலாம் என்பதிலேயே இன்றைய ஆட்சியாளர் கட்குச் சிந்தனை சென்று கொண்டிருக்கிறது. ஆனால், ஆட்சிக் கட்டிலில் அமர்பவர்கள் எம் முறையில் எளிமையாக, சிக்கனமாக மற்றவர்கட்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டும் என்பதற்கு வள்ளல் நபி வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைச் சான்றாகச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

நாயகத் திருமேனி அவர்கள் மக்கா நகரை வெற்றி கொண்ட நேரத்தில் அதற்கு ஆளுநராக ஒருவரை நியமிக்க வேண்டிய அவசிய, அவசரமேற்பட்டது. அப்போது அவர்கள் மனதில் இப் பதவிக்கு எல்லா வகையிலும் ஏற்றவராகத் தோற்றமளித்தவர் அத்தா இப்னு ஆசீத் என்பவராவார். மக்கா வெற்றி நேரம்வரை அண்ணலாரின் எதிரியாக இருந்தவர். இருப்பினும் அத்தா இப்னு ஆசீத் அவர்களின் வீரத்திலும் நேர்மையிலும் பெருமானார் பெருமதிப்புக் கொண்டிருந்தார். மக்கா வெற்றிக்குப்பின் இஸ்லாத்தில் இணைந்த அவரை அழைத்த அண்ணலார் அவரை மக்கா ஆளுநராக நியமிக்கவிருக்கும் செய்தியை வெளிப்படுத்தாமலேயே அவரை நோக்கி 'அத்தா இப்னு ஆசீத் அவர்களே! உங்களுக்கு ஒரு நாள் வாழ்க்கைச் செலவுக்குக் குறைந்தபட்சம் எவ்வளவு தேவைப்படும்?' என்று வினவினார். எதற்காக இப்படியொரு கேள்வியைத் திடுமெனப் பெருமானார் கேட்கிறார் என்பது புரியாமலே, 'அண்ணலார் அவர்களே! என் ஒருநாள் வாழ்க்கைச்

செலவுக்கு ஒரு திரஹம் இருந்தால் போதும், சமாளித்துக் கொள்வேன்' எனக் கூறினார்.

இதைக்கேட்ட நாயகத் திருமேனி அவர்கள் 'உங்களை மக்கா நகரின் ஆளுநராக நியமிக்கிறேன். நீங்கள் உங்கள் வாழ்க்கைச் செலவுக்காக ஒரு நாளைக்கு ஒரு திரஹம் வீதம் அரசுக் கருவூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதுதான் உங்களுக்குரிய சம்பளம்' எனக் கூறி நியமித்ததாக வரலாறு கூறுகிறது.

இந்தப் பேருண்மையை அறிந்த, இஸ்லாமிய நெறி வழுவா பெரு வாழ்வு வாழ்ந்த அவ்ரங்கஸீப் ஆலம்கீர் இதனினும் மேம்பட்ட முறையில் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைச் சுவட்டை அவர் வாழ்விலே நாம் காண்கிறோம்.

தன் தனிப்பட்ட வாழ்க்கைக்காக அரசுக் கருவூலத்தில் அரைக்காசும் எடுத்துப் பயன்படுத்தாது, தொப்பி தைத்தும், திருக்குர்ஆனுக்குப் படியெடுத்தும் அவற்றை ஆள் மூலம் மக்களிடையே விற்கச் செய்து, அதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டே தன் தனிப்பட்ட வாழ்வின் தேவை களை நிறைவு செய்து கொண்டார். இதுதான் இஸ்லாமியக் கொள்கை. அண்ணலார் புகட்டிய வாழ்வியல் நெறி. அரசுச் சொத்தை, மக்கள் வரிப் பணத்தைத் தங்கள் சொத்தாகக் கருதி அவைகளைச் சுரண்டிக் கொழுக்கவே, மக்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியிருப்பதாகக் கருதிச் செயல் படும் ஊழல் அரசியல் வாதிகள் கட்டாயம் அறிந்துணர வேண்டிய செய்தி. அரசுப் பதவியிலுள்ளவர்கட்கு இயல் பாகவே ஆடம்பர மோகம் அதிகம். அதிலும் அரசியல் வாதிகள் ஆட்சிக் கட்டிலில் அதிகாரத்தோடு அமரும்போது, தங்கள் கடந்த கால வாழ்வை எண்ணிப் பார்க்காதவர்களாக, ஒரு மட்டத்திற்குமேல் உயர்வாக வாழக் கூடியவர்களாக, வாழ வேண்டியவர்களாக ஆக்கிக் கொள்கிறார்கள். இத்தகைய ஆடம்பர வாழ்விற்குத் தேவைப்படும் பணத்தைத் தங்கள் அதிகார துஷ்பிரயோகம் மூலம் பெற

வழிவகைகளைத் தேடி, தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ள முனைகிறார்கள். இதற்குரிய ராஜபாட்டையாக அமைவது லஞ்ச லாவண்யமாகும்.

**'கைக்கூலி' தரும் கடுந்தண்டனை**

அரசு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, சட்ட விதிமுறைகளைப் புறக்கணித்து, சலுகை முறையில் காரியங்களைச் சாதித்துக் கொள்ள சட்டவிரோதமாகப் பெறும் லஞ்சமாகிய கைக்கூலியைப் பெறுபவர்கள் சமூக விரோதச் செயல் செய்தவர்களாவர். இதனால் முறைப்படி பலன் அடைய வேண்டியவர்கள் பலன்பெற இயலாமல் போய்விடுகிறது.

இத்தகைய சமூக விரோதச் செயலான 'லஞ்சம்' எனும் கைக்கூலி பெறுபவர் நரகில் எத்தகைய இறை தண்டனையைப் பெறுகிறார்கள் என்பதை ஆலிப் புலவர் எழுதிய 'மிகுராஜ் மாலை' எனும் இஸ்லாமிய இலக்கியம் மிகச் சிறப்பாக ஒரு காட்சி மூலம் விளக்குகிறது. மிகுராஜ் இரவன்று ஜிப்ரீல் (அலை) அவர்களோடு விண்ணுலகு சென்ற நபிகள் நாயகம் (சல்) அவர்கள் சொர்க்க, நரகங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து வருகிறார்கள். நரகப் பகுதியைச் சுற்றிப் பார்த்து வரும்போது ஒரு மனிதன் தடிகொண்டு பலமாகத் தாக்கப்படுகிறான். அடுத்தடுத்து தலையில் விழும் அடிகளால் தலை வீங்குகிறது. வீங்கிய தலையை நெருப்புப் பிழம்புபோல் தோற்றமளிக்கும் அம்மியில் வைத்து, அரைக்கிறார்கள். இக் காட்சியைக் காணும் பெருமானார் உள்ளம் பதைக்கிறது. ஜிப்ரீல் (அலை) அவர்களை நோக்கி 'இம்மனிதரை ஏன் இப்படி வதைக்கிறார்கள். இப்படியொரு கொடிய தண்டனை அனுபவிக்க என்ன பாவம் செய்துள்ளார்' எனக் கேட்க, அதற்கு விடை கூறவந்த ஜிப்ரீல்(அலை) அவர்கள் 'இம் மனிதர் சாதாரண பாவம் செய்யவில்லை. கைக்கூலி வாங்கிய குற்றத்தைச் செய்தவன். அதற்குரிய

தண்டனையை இப்போது நரகத்தில் அனுபவித்துக் கொண்டுள்ளான்', என்று கூறினார்.

"பேசு நரகிற் சிலர் பெருந்தலையைத் தீ
ஆசமியில் வைத்து அரைக்குமது கண்டே
மாசினையடுத்த இம் மனிதத்தவரென்ன
தேசமில் கைக்கூலி பற்றித் தின்றவர்களென்றார்."

இங்குக் 'கைக்கூலி' என்ற சொல்லிற்கு இரு பொருள்கள் உண்டு. ஒன்று லஞ்சத்தைக் குறிப்பது. மற்றொரு பொருள் பெண்ணை மணம் முடிக்கும்போது அவனுக்கு இஸ்லாமிய முறைப்படி 'மஹர்' எனும் வாழ்க்கைப் பணத்தை அன்பளிப்பாக பெண்ணுக்கு வழங்கி மணம் முடிப்பதற்கு மாறுபாடாக பெண்வீட்டாரிடமிருந்து பெறும் வரதட்சிணையும், கைக்கூலி என்றே அழைக்கப் படுகிறது. இஸ்லாமிய நெறிக்கு முற்றிலும் மாறுபாடான இப்பாவச் செயலை - கைக்கூலியைப் பெறுகின்றவனுக்கு நரகில் இத்தகைய கொடுந்தண்டனைகளே காத்திருக் கின்றது என்பதை இச் சம்பவம் சுவைபடச் சுட்டிக்காட்டுகிறது.

அத்துடன், கைக்கூலி பெறுகின்றவனைப் பற்றிப் பேசும்போது, அநியாயமாகக் கைக்கூலி வாங்கி வாழ்பவனை 'கைக்கூலி பற்றி தின்றவன்' என மிகுராஜ் மாலை ஆசிரியர் ஆலிப் புலவர் குறிப்பிடுகிறார்.

சாதாரணமாக உண்டான், சாப்பிட்டான், பருகினான், அருந்தினான் என்றுதான் கண்ணியமாகக் குறிப்பிடுவது வழக்கம். ஆடு தின்றது, மாடு தின்றது என்று கூறுவது மரபு. ஆனால், கைக்கூலி வாங்கி உண்பவனை 'கைக்கூலி பற்றித் தின்றவர்கள்' என்று இழிவாகக் கூறுவதன் மூலம் கைக்கூலியின் இழிநிலையைப் புரிய வைக்கிறார். அத்துடன் அமையாது, 'கைக்கூலி பெற்றான்' எனக் குறிப்பிடாது 'கைக்கூலி பற்றித் தின்றவர்' எனக்

குறிப்பிடுவதன் மூலம் கைக்கூலி மனமுவந்து தரும் பொருள் அல்ல. ஒருவரது விருப்பத்துக்கு மாறாக, அவரிடமிருந்து வலியப் பிடுங்கும் - கட்டாயமாகப் பற்றிப் பெறும் ஒன்றே என்பதை வலியுறுத்தவே 'பற்றித் தின்றவர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார் என்பது கைக்கூலி யின் தீங்கை இன்னொரு வகையில் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாயுள்ளது.

**உலகளாவிய சமுதாய சீர்திருத்த இயக்கமே இஸ்லாம்**

இஸ்லாமிய மார்க்கம், அடிப்படையில் சமூகத் தீங்குகளை அகற்றி, சமூக விழிப்புக்கும் செழிப்புக்கும் இடையறாது பாடுபட்டு, இறைநெறியில் மக்களை வாழ வழிகாட்டும் இறை மார்க்கமாகும். சமூக ஒருங்கிணைவும் சமுதாய நல்லிணக்கமும் மக்களிடையே உருவாகி நிலைபெற, அன்புவழியை, இறைநெறியை நிலைபெறச் செய்ய இடையறாது பாடுபட்டு வரும் மார்க்கம் இஸ்லாம். இறைநெறியாகிய இஸ்லாத்தை, மக்களுள்ளம் ஏற்றுப் பின்பற்ற, அன்பு வழியைப் பேணப் பணிக்கிறது இஸ்லாம். இஸ்லாமியக் கருத்துகளை யாரிடத்தும் எக் காரணம் கொண்டும் எந்தச் சமயத்திலும் திணிப்பதையோ வலியுறுத்திப் பிரச்சாரம் செய்வதையோ இஸ்லாம் அறவே அனுமதிக்கவில்லை. இத்தகைய செயல்பாடுகள் இஸ்லா மியக் கோட்பாடுகட்கு நேர்மாறானவை எனக் கூறுகிறது.

"இஸ்லாத்தில் நிர்ப்பந்தமே இல்லை."

*(குர்ஆன் 2:256)*

மேலும் திருமறை கூறுகிறது:

"(நபியே!) நீர் கூறும்: (முற்றிலும் உண்மையான) இவ் வேதமானது உம் இறைவனால் அருளப் பெற்றது. விரும்பியவர் (இதை) விசுவாசிக்கலாம், விரும்பாதவர் (இதை) நிராகரித்து விடலாம்." *(குர்ஆன் 18:29)*

எனக் கூறுவதன் மூலம் இஸ்லாமிய நெறியை ஏற்பதும் நிராகரிப்பதும் மக்களுடைய விருப்பத்தைப் பொருத்ததே யன்றி கட்டாயத்தின்பாற்பட்டது அன்று. அண்ணலாரின் வாழ்வும் வாக்கும் இத்தகைய உணர்வையே ஊட்டி வருகிறது.

## இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டதா?

இஸ்லாத்துக்கு எதிரானவர்கள் கிளப்பிவிட்ட ஒன்றே "இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது" என்ற மிகத் தவறான குற்றச்சாட்டு. அதிலும் இந்திய வரலாற்றை எழுத முனைந்த ஸ்மித் போன்ற ஆங்கிலேயர்கள் இந்திய மக்களை பிரித்தாலும் சூழ்ச்சிக்காக வரலாற்றுப் போர்வையில் கட்டிவிட்ட கற்பனையே வாளால் இஸ்லாம் பரப்பப் பட்டது என்ற கற்பனை வாதம். இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒரே நாட்டினர் - இந்தியர் என்ற முறையில் ஒன்றிணைய விடாமல் அவர்களிடையே பிணக்கும் பிரிவும் என்றென்றைக்குமாக இருக்க வேண்டும் என்ற தீய உணர்வின் அடிப்படையில் உருவானதே இந்த வாதம்.

இந்திய வரலாற்றை நடுவு நிலையில் ஆராய்ந்து பார்த்தால் இது எவ்வளவு தீய - திட்டமிட்ட தவறான வாதம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளத் தெளியப் புலப்படும்.

இந்தியாவிற்குள் இஸ்லாமியர்கள் கால்வைத்த காலத்திலிருந்து இன்றுவரை அவர்களின் வரலாற்று ஏடுகளைப் புரட்டி பாருங்கள், எங்காவது ஒரு இடத்தில் ஆட்சி, அதிகாரத்தைப் பயன்படுத்தினார்கள் அல்லது வணிகர்களாக வந்த அவர்கள் தங்கள் செல்வம், செல் வாக்குகளைப் பயன்படுத்தி இஸ்லாத்திற்குள் இழுத்து வந்தார்கள் என்பதற்கு நேரடி அல்லது மறைமுகச் சான்றுகள் எதையாவது காட்ட முடியுமா?

நான் கல்லூரியில் வரலாற்றை - குறிப்பாக இந்திய வரலாற்றையும் இஸ்லாமிய வரலாற்றையும் பாடமாக எடுத்துப் படித்தவன். அதிலும் புகழ் பெற்ற இஸ்லாமிய வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் சலாம் ஃபக்கி அவர்களிடம் வரலாற்றுப் பாடம் கற்றவன். இங்கு மட்டுமல்ல, எங்குமே இஸ்லாம் வாளால் பரப்பப்பட வில்லை என்பதுதான் உண்மை.

## தற்காப்புப் போரே இஸ்லாமியப் போர்

தனிப்பட்ட ஒரு முஸ்லிமுக்கும் பிற சமயத்தவர்க்கும் இடையே நடக்கும் சண்டையாக இருந்தாலும் சரி அல்லது ஒரு இஸ்லாமிய அரசுத் தலைவருக்கும் பிற சமய அரசுத் தலைவருக்குமிடையே நடைபெறும் போராக இருந்தாலும் சரி. சண்டையோ போரோ முதலில் தொடங்க ஒரு முஸ்லிமுக்கு இஸ்லாம் அனுமதி அளிக்கவில்லை. முதலில் கையை ஓங்கவோ வாளைத் தூக்கவோ கூடாது எனக் கட்டளையிடுகிறது.

தனிப்பட்ட தாக்குதலாக இருந்தாலும் அல்லது போராகவே இருந்தாலும் மற்றவர்கள் தாக்க முனையும் போது தற்காப்புக்காக எதிர்த்துப் போராடவே இஸ்லாம் அனுமதிக்கிறது. அம் முறையிலேயே இஸ்லாமியப் போர் கள் நடைபெற்றதாக வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது.

## படைப்போர் இலக்கியம் புகட்டும் உண்மை

இஸ்லாமியப் போர்களைப் பற்றிய சுவையான தகவல்களின் கோவையாக இஸ்லாமியப் 'படைப்போர் இலக்கியங்கள்' பல தமிழில் உண்டு. அவற்றின் தலைப்புப் பெயர்களெல்லாம் முஸ்லிமல்லாதவர்களின் பெயர் களாகவே அமைந்துள்ளன. சாதாரணமாகப் போரைத் தொடங்கி வீராவேசமாகப் போரிட்டு வெற்றி பெற்ற வீரர்களே இலக்கியக் கதாநாயகர்களாகப் போற்றப்படுவர். அவர்களின் பெயர்களே இலக்கியத் தலைவர்களாக இடம்

பெறுவது இயல்பு. ஆனால், இஸ்லாமியப் படைப்போர் இலக்கியங்களில் வெற்றி பெற்ற வீரர்களின் பெயர் தலைப்பாக அமையாது, படையெடுத்து வந்து, போரிட்டு, தோல்வியடைந்த பிற சமய வீரர்களே, மன்னர்களே தலைப்புகளில் இடம் பெறுகின்றார்கள் என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

போரை முதலில் தொடங்கியவர், படையெடுத்து வந்தவர்களாகிய பிற சமயத்தவர் பெயரிலேயே படைப்போர் இலக்கியங்கள் அமைந்துள்ளன. முஸ்லிம்கள் தற்காப்புக்காக பிற சமயப் படையெடுப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டவர்கள் மட்டுமே. அவர்கள் இறுதியில் வெற்றி பெற்றாலும்கூட, படையெடுப்பு நடத்திய பிற சமய வீரர்களையே கதாநாயகர்களாக அமைத்து இலக்கியம் படைத்து, இஸ்லாமியக் கோட்பாட்டை நிலைநிறுத்தியவர்கள் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள்.

இனி, இந்தியாவில் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டதா என்பதை வரலாற்றுப் பூர்வமாக சமூகவியல் அடிப்படையில் பார்ப்போம்.

### இந்திய முதல் போரே தற்காப்புப் போர்

இந்தியாவில் முஸ்லிம்களுக்கும் மற்றவர்களுக்குமிடையே நடைபெற்ற முதல் போர் சிந்துப் பகுதியிலே நடைபெற்ற போர் என வரலாற்றிலே குறிக்கப்படுகிறது. இந்தப் போர் எதற்காக நடைபெற்றது?

இந்தியாவில் தொடக்கக் காலத்தில் அர்ாபிய வணிகர்கள் சிந்துப் பகுதியிலே வணிகம் செய்து வந்தார்கள். இவர்களின் சிறப்பான வணிகத்தைக் கண்டு பொறாமைப்பட்ட சிந்துப் பகுதியைச் சேர்ந்த பிற சமய வணிகர்கள் அளவுக்கதிகமான தொல்லைகளைக் கொடுத்து வந்தார்கள். இதற்கு அப்பகுதியை ஆண்டு வந்த இந்து மன்னனின் ஆதரவும் இருந்து வந்தது. இதனால் அரபகம்

திரும்பிய முஸ்லிம் வணிகர்கள் அன்றைய அரபக ஆட்சியாளர்களிடம் சிந்துப் பகுதியில் தங்கள் வணிகம் தொடர, பாதுகாப்புத் தருமாறு வேண்டினர். தங்கள் வணிகக் குடிகளின் கோரிக்கையை ஏற்ற அரபக ஆட்சியினர் காசிம் எனும் படைத் தளபதியின் தலைமையில் சிறு படையை சிந்துப் பகுதிக்குப் பாதுகாப்பளிக்க அனுப்பினர். வழக்கம்போல் சிந்துப் பகுதி வணிகர்கள், அப் பகுதிஆட்சியினரின் அரவணைப்போடு தாக்கப்பட்ட போது, அரபு வணிகர்கட்கு பாதுகாப்பளிக்கும் முறையில் தற்காப்புப் போரை நடத்தினர். இவ்வாறு முஸ்லிம்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள காசிம் என்பவரின் தலைமையில் நடத்தப்பட்டது தான் சிந்துப் போர்.

இனி, இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்கள் தங்கள் ஆட்சி, அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்குள்ள இஸ்லாமியர்களாக மதமாற்றம் செய்திருக்கிறார்களா என்றால், அப்படி ஏதும் நடந்ததாக வரலாற்றில் எந்த ஒரு சம்பவத்தையும் நம்மால் காண இயலவில்லை. ஆயினும், இந்தியாவில் முஸ்லிம் மன்னர்களால் - வாளால் இஸ்லாம் பரப்பப்பட்டது என்று அவ்வப்போது கூறப்பட்டே வருகிறது. இது எந்த அளவுக்கு உண்மை.

### அன்றிருந்த முஸ்லிம் விகிதாசாரமே இன்றும்

முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவை 600 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கிறார்கள். இவர்கள் கூறுவதுபோல் ஆட்சியதிகாரத்தைக் கொண்டு தங்கள் ஆட்சியின் கீழ் இருந்த பிற சமய மக்களை முஸ்லிம்களாக மதமாற்றம் செய்ய முற்பட்டிருந்தால் இந்தியாவிலுள்ள மக்கள் அத்தனை பேருமே முஸ்லிம்களாகியிருப்பார்கள். அவ்வாறு ஆகவில்லையே? பாபரும் அக்பரும் அவ்ரங்க ஸீப்பும் ஆண்டபோது எத்தனை சதவிகித மக்கள் முஸ்லிம் களாக இருந்தார்களோ. அதே அளவு சதவிகித மக்கள்தான் இன்றைக்கும் முஸ்லிம்களாக இந்தியாவில் உள்ளனர்.

## இறுதிக் கடமையை நிறைவேற்றாத இந்திய முஸ்லிம் மன்னர்கள்

*அது மட்டுமல்ல அறுநூறு ஆண்டுகாலம் இந்திய மண்ணை ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களில் பெரும் பாலோர் முழுமையான முஸ்லிம்களாக, இஸ்லாமியக் கடமைகளை முழுமையாக நிறைவேற்றியவர்களாக இருந்திருக்கவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை யாகும். அவ்ரங்கஸீப் ஆலம்கீர் உட்பட எந்த முஸ்லிம் மன்னரும் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையான ஹஜ் கடமையை ஒருபோதும் நிறைவேற்றிய தில்லை. இந்நிலையில் மக்களை இஸ்லாமிய நெறியின் பால் ஈர்க்க அல்லது ஆட்சியதிகாரத் துணையுடன் வாள் கொண்டு முஸ்லிம்களாக மத மாற்றம் செய்யப் பட்டனர் என்பது எப்படி பொருந்தும். இதுவொரு வரலாற்றுப் புரட்டு ஆகும்.*

*இன்னும் இவ்விஷயத்தை நடைமுறைச் சிந்தனை யோடு அணுகி ஆராய்ந்தால் மேலும் தெளிவேற்படும். நாடு விடுதலை பெறும்வரை காஷ்மீரை ஆண்டு வந்தவர் ஒரு ஹிந்து மன்னர். ஆனால், காஷ்மீர் மக்களில் மிகப் பெரும்பாலோர் முஸ்லிம் மக்கள்!*

*இன்றும்கூட கேரள மாநிலத்தில் கணிசமான பெருந் தொகையினராக வாழ்பவர்கள் முஸ்லிம் மக்கள். ஆனால், அங்கு எக்காலத்திலும் ஹிந்து மன்னர்கள் ஆட்சி மட்டுமே நடந்து வந்ததே தவிர, எந்த முஸ்லிம் மன்னரும் எந்தவொரு கேரளப் பகுதியையும் ஆண்டு வந்ததாக வரலாறே இல்லை. திப்பு சுல்தான்கூட கள்ளிக்கோட்டை வரை படையெடுத்துப் போனாரே தவிர, எந்த வெற்றியும் அடையாமல் திரும்பி விட்டார் என்பதுதான் வரலாறு.*

*இவ்வாறு முஸ்லிம்களின் ஆட்சியே இல்லாத காஷ்மீரிலும் கேரளத்திலும் யார் வாளால் இஸ்லாத்தைப்*

பரப்பினார்கள்? அப் பகுதி மக்களை முஸ்லிம்களாக யார் வாளால் கட்டாய மத மாற்றம் செய்தார்கள்.

எனவே, இந்தியாவில் இஸ்லாம் வாளால் பரப்பப் பட்டது என்பது ஆதாரமே இல்லாத, திட்டமிட்டுக் கட்டிப் பரப்பப்படும் மிகத் தவறான பிரச்சாரம்.

இன்னும் சொல்லப்போனால் பிற மதத்தவரை மதிப்பதில், மத நல்லிணக்கத்தோடு பழகுவதில் முஸ்லிம் களுக்கு ஈடு யாரும் இல்லையென்று சொல்லுவதற்கு வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உள்ளன.

ஏகத்துவக் கொள்கையின் பிறப்பிடம் இந்தியா

அது மட்டுமல்ல, இந்திய மண்ணின், குறிப்பாகத் தமிழ் மண்ணின் மூல இறைக் கொள்கை என்ன என்று தெரியுமா? 'ஒரே இறைவன்' என்பதைக் குறிக்கும் ஏகத்துவக் கொள்கைதான் அடிப்படை இறைக் கொள்கை யாக ஆரம்பத்தில் இருந்தது என்பதை நபிகள் நாயகம் (சல்) அவர்களே தெளிவாக விளக்கிக் கூறிச் சென்றுள்ளார்கள்.

பெருமானார் அவர்கள் இறையில்லமாகிய கஃபத் துல்லாவை வலம் வந்த பின்னர் 'ருக்னுல் ஹிந்த்' எனும் ஹிந்துஸ்தானத்தை நோக்கியிருக்கும் மூலைப் பகுதியில் ஹிந்துஸ்தானத்தை நோக்கி நிற்பார்கள். அப்போது தன் சட்டையின் மார்புப் பகுதியை விலக்கி வெறும் நெஞ்சை ஹிந்துஸ்தானத்தை நோக்கியவாறு காட்டிக் கொண்டு நிற்பது வழக்கம். அப்போத அவர்களின் முகம் மலர்ச்சி பெறும், புளகாங்கித உணர்வு பொங்க நிற்பார்கள்.

அண்ணலார் இவ்வாறு நிற்பதற்கும் பெரு மகிழ்வடை வதற்கும் என்ன காரணம் என்பது அங்குள்ள யாருக்கும் தெரியவில்லை. அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் சஹாபிகள் மத்தியில் அதிகரித்துக் கொண்டே வந்தது.

ஒரு நாள் பெருமானார் (சல்) அவர்கள் மார்புச் சட்டையைத் திறந்து வைத்தவாறு இன்ப உணர்வோடு மலர்ந்த முகத்துடன் ஹிந்துஸ்தானத்தை நோக்கி நின்றபோது, ஒரு சஹாபி "நாயகமே நீங்கள் மகிழ்ச்சிப் பெருக்கோடு இவ்வாறு நிற்பதற்கு சிறப்புக் காரணம் ஏதேனும் உண்டோ?" எனத் துணிந்து கேட்டு விட்டார். இதைக் கேட்ட பெருமானார் (சல்) அவர்கள் "ஹிந்துஸ் தானத்தை நோக்கி நான் இவ்வாறு நிற்கும்போது, ஏகத்துவக் கொள்கையின் விளைநிலமான ஹிந்துஸ்தானத்தி லிருந்து வீசும் தென்றல் காற்று, என் நெஞ்சில்படும்போது எனக்கு இதமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. அந்த இன்ப உணர்வை அனுபவிக்கத்தான் நான் இவ்வாறு இங்கு நின்று கொண்டிருக்கிறேன்" எனக் கூறினார்கள் என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து ஏகத்துவக் கொள்கையின் விளைநிலம் இந்துஸ்தானமாகிய இந்தியா என்பது தெளிவாகிறது.

## உருவ வழிபாட்டின் உறைவிடம் கிரேக்கம்

வேத காலத்தில்கூட இந்தியாவில் உருவ வழிபாடு இருந்ததாகத் தெரியவில்லை. வேதங்களில் இறைவனைப் போற்றியும் இறைவனின் பல்வேறு தன்மைகளைப் பற்றிய வர்ணனைகள் மட்டுமே இருந்ததாகக் கூறப்படுகிறது. எனவே, இறைவனின் தன்மைகளை அவரவர் கற்பனைக் கும் கண்ணோட்டத்திற்மேற்ப மனக் கண்ணால் கண்டு போற்றி வணங்கி வந்தார்கள்.

முதன்முதலாக சிலை வணக்கத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்தியவர்கள் பாமீர் பீடபூமியிலிருந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் புகுந்த ஆரியர்கள் அல்லர். அவர்கள் சிந்துப் பகுதியில் வந்து குடியேறியிருந்தபோது அப் பகுதிக்கு வணிக நிமித்தம் வந்த கிரேக்கர்களே விக்கிரக ஆராதனை செய்யும் சிலை வணக்கத்தை அறிமுகம் செய்தவர்கள். உலகிலேயே

புராணக் கதைகளைக் கற்பித்துக் கொண்டு அதன் அடிப்படையில் சிலை வணக்க முறைகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள் கிரேக்கர்கள் என்பது வரலாறு.

## பெரும் புராணம் முதல் தலபுராணம்வரை வளர்ந்த வரலாறு

வேதங்களில் கூறப்பட்டிருந்த இறைவனின் தன்மை களைப் போற்றிப் புகழ்ந்து வந்த ஆரியர்கள், புராண அடிப்படையில் சிலை வணக்க முறையை ஏற்படுத்திக் கொண்ட கிரேக்கர்களைப் பின்பற்றி, வேதத்தில் கூறப் பட்டிருந்த இறைவனின் தன்மைகள் விவரிக்கப்பட்டிருந்த தற்கொப்ப கடவுள் சிலைகளை உருவாக்கி வணங்கத் தலைப்பட்டார்கள். இதில் மனிதக் கற்பனைகள் வெகு வாக இடம் பெற்றன. அவரவர் கற்பனைக்கேற்ப இறைத் தன்மைகளை சிலை வடிவங்கள் மூலம் விவரிக்கும்போக்கு வளர்ந்து கொண்டே சென்றது. அதற்கேற்ப கிரேக்கர் களைப் போல் புராணக் கதைகளையும் உருவாக்கலானார் கள். இது தலபுராணம் என்ற பெயரில் குக்கிராமங்கள்வரை அவரவர் பக்திக்கும் மனப் போக்குக்கும் கற்பனைத் திறனுக்குமேற்ப கடவுள் தன்மைகளை விவரிக்கும் கடவுளர்கள் நடவடிக்கைகள் அமையலாயின.

## உலகெங்கும் இறைதூதர்கள்

ஏனெனில், மூல வேதங்கள், இஸ்லாமிய மரபுப்படி எல்லா நாட்டிலும், எல்லா இனத்திலும், எல்லா மொழியிலும் தோன்றிய இறை தூதர்கள் மூலம், இறைச் செய்தி இறைவனால் இறக்கியருளப்பட்டன.

*"அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வராத எந்த வகுப்பாரும் பூமியில் இருக்கவில்லை" (திருக்குர்ஆன் 35:24)*

*மற்றும்,*

*"(நபியே!) ஒவ்வொரு தூதரும் (தம் மக்களுக்கு) தெளிவாக விவரித்துக் கூறும் பொருட்டு, அவரவருடைய மக்களின் மொழியைக்கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பி வைத்தோம்." (திருக்குர்ஆன் 14:4)*

*எனக் கூறியிருப்பதிலிருந்து ரிக் வேதம், சாம வேதம், யஜுர் வேதம், அதர்வண வேதம் ஆகியவைகளின் மூல வேத வாசகம் இறைவனால் முனிவர்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கலாம். இக் கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் காஞ்சி காமகோடி பீடப் பெரியவர் ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் அவர்கள்,*

*"இந்த வேத மந்திரங்களைச் செய்த ரிஷிகளை இவற்றின் ஸ்தாபகர்கள் என்று சொல்லலாமா என்று பார்த்தால், அவர்களோ இந்த வேதங்களை தாங்கள் செய்ய (இயற்ற)வில்லை என்கிறார்கள். எங்கள் மூலம் தான் இந்த மந்திரங்கள் லோகத்துக்கு வந்தன என்பது வாஸ்தவம். அதனால்தான் எங்களை மந்திர ரிஷிகளாகச்சொல்லி யிருக்கிறது. எங்கள் மூலம் வந்ததேயொழிய, நாங்களே அவற்றைச் சொல்ல (இயற்ற)வில்லை. நாங்கள் அப்படியே மனமடங்கித் தியான நிஷ்டையில் இருக்கிறபோது இந்த மந்திரங்கள் ஆகாயத்தில் எங்கள் முன்னே தெரிந்தன. நாங்கள் அவற்றைக் கண்டறிந்தவர்கள் தான் (மந்த்ர த்ரஷ்டாக்கள்); செய்தவர்கள் அல்ல என்கிறார்கள்" என எடுத்துக் கூறுவதன் மூலம் வேதத்தின் மூல வாசகங்கள் இறைவனால் வழங்கப்பட்டவை என்பதும் அவை மனிதனால் இயற்றப்பட்டவை அல்ல என்பதும் தெளிவாகிறது.*

*இறைவனால் வழங்கப்பட்ட இறை வேதங்கள் மனிதர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மாற்ற திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டதனால் அவை மூல வடிவில் மீண்டும் மற்றொரு இறை தூதர் மூலம் வழங்கப்பட்டது என்பதுதான் வேத வரலாறு.*

கிரேக்கர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆரியர் களால் போற்றி வளர்க்கப்பட்ட விக்கிரக ஆராதனை முறை கொஞ்சங் கொஞ்சமாக வடக்கேயிருந்து தெற்கு நோக்கிப் பரவலாயிற்று.

## தமிழகம் வந்த உருவ வழிபாட்டு முறை

சங்க காலம் வரை சமயத் தாக்கங்களோ விக்கிரக ஆராதனை முறைகளோ தமிழகத்தில் அழுத்தக் கால் ஊன்றவில்லை. அதனால்தான் சங்க இலக்கியங்களில் கோயில்களைப் பற்றியோ பூசனை, சடங்கு சம்பிரதாயங் களைப் பற்றியோ ஏதும் பேசப்படவில்லை. இறைவனை அனைத்தையும் கடந்து நிற்கும் 'ஏகப் பரம்பொருள்' எனும் பொருளில் 'கடவுள்' என்றும், அனைத்துயிர்க்கும் தலைமை யாக இருப்பதால் 'இறைவன்' என்றும் போற்றப்பட்டது.

சங்க காலத்திலேயே இங்கு சமயத்தாக்கங்கள் ஏற்பட, தமிழர்கள் தாங்கள் வாழும் சூழலுக்கேற்ப, கடவுளர்களை உருவாக்கிக் கொள்ள முனைந்தார்கள். அப்படி உருவாக் கப்பட்ட கடவுளர்களே முருகன், மாயோன், சேயோன் எல்லாம். இதுதான் சிலை வணக்கமுறை உருவான வரலாறு.

## கிருஸ்தவத்தில் உருவ வழிபாடு புகுந்த வரலாறு

ஹிந்து சமயத்தில் மட்டுமல்ல, கிருஸ்தவ சமயத்திலும் விக்கிரக ஆராதனை முறையைப் புகுத்தியவர்கள் கிரேக்கர்கள்.

கிருஸ்தவ சமயம் கிரேக்க மண்ணில் கால் பதிக்கும் வரை அதில் விக்கிரக ஆராதனை முறை தலை தூக்க வில்லை. கிரேக்கர்கள் கிருஸ்தவர்களாக என்று மாறினார் களோ அன்றே, கிரேக்க மரபுப்படி உருவ வழிப்பாட்டு முறையில்தான் இறைவனைக் காண முடியும் என்று கருதி ஏசுவுக்கும் மரியன்னைக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்த

வர்களுக்கும் உருவம் கற்பித்து வழிபடத் தொடங்கினர். கிரேக்கத்துக்கு அப்பால் இருந்தவர்கள் இச் சிலை வழிபாட்டு முறையை ஏற்கவில்லை. இதனால் போரும் புகைச்சலும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகியது. அப்போதெல்லாம் இஸ்லாம் தனது சகிப்புணர்வையும் சமய நல்லிணக்கப் போக்குகளையும் முற்றாகக் கடைப் பிடித்து, நடுவு நிலை பேணி வந்துள்ளதை வரலாறு நெடுகக் காண முடிகிறது. இந்தச் சிலை வணக்கப் போராட்டம், பைஸாந்தியத்தை லியோ இஸ-ரியன் எனும் பேரரசன் ஆளும்போது உச்சகட்டத்தை அடைந்தது.

**விக்கிரக ஆராதனையை எதிர்த்த பைஸாந்திய கிருஸ்தவ ஆட்சி**

பைஸாந்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தன் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் கிருஸ்தவ தேவாலயங்களிலும் மடாலயங்களிலும் யாரும் விக்கிரக ஆராதனையாக சிலை வணக்கம் செய்யக்கூடாது. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தேவாலயங்களிலும் மடாலயங்களிலுமுள்ள அனைத்து விக்கிரகங்களும் அகற்றப்பட வேண்டும். மறுப்பவர் அரசு தண்டனைக்குள்ளாவார். இதை மீறும் தேவாலயங்களும் மடாலயங்களும் இடித்துத் தரைமட்டமாக்கப்படும். சிலையிலா வணக்க முறையே பைஸாந்திய கிருஸ்தவ ஆட்சியின் இறை வணக்க முறை என அறிவித்தது.

குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் சில தேவாலயங் களும் மடாலயங்களும் சிலைகளை அப்புறப்படுத்தி சிலை யிலா வணக்க முறைக்கு வழி வகுத்தன. கிரேக்கக் கிருஸ்த வர்களின் செல்வாக்கு மிக்க சில சர்ச்சுகள் சிலைகளை அப்புறப்படுத்த மறுத்தன. சில, கால தாமதம் செய்து வந்தன. இதனால் கோபமடைந்த மன்னன் லியோ இஸ-ரியன் தன் படைகளை அனுப்பி சிலை அகற்ற மறுக்கும் தேவாலயங்களையும் மடாலயங்களையும் இடிக்க உத்தரவிட்டான். அவ்வுத்தரவு அவன் படையின

ரால் நாடெங்கும் நிறைவேற்றப்பட்டு வந்தன. இறுதியாக அப்படையினர் மௌன்ட் சினாய் பகுதியை அணுகினர். பைஸாந்திய நாட்டின் எல்லையை ஒட்டினாற் போல் அமைந்திருந்த மௌன்ட் சினாய் பகுதியில் விக்கிரக ஆராதனையோடு கூடிய மாதா கோயிலும் ஒரு மடாலயமும் இயங்கி வந்தன.

ஆனால், அந்தக் குறிப்பிட்ட பகுதி உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்குட்பட்ட எல்லைப் பகுதியாக இருந்தது. லியோ இஸௌரியனின் படைகள் இவற்றை இடிக்க வருவதை அறிந்த உமர் (ரலி) அவர்களின் படை வீரர்களான முஸ்லிம்கள், லியோ இஸௌரியனின் படைவீரர்களோடு போரிட்டு, அவர்களை விரட்டி அடித்தனர். தேவாலயத்தையும் மடாலயத்தையும் முஸ்லிம் படைவீரர்கள் காப்பாற்றினர்.

லியோவைப் போன்றே முஸ்லிம்களும் சிலை வணக்க வழிபாட்டு முறைக்கு மாறுபட்டவர்கள்தான்; அவற்றை வெறுத்தொதுக்கும் இயல்பினர்தாம். ஆனால், அங்குள்ள கிருஸ்தவர்களின் சிலை வணக்க வழிபாட்டு முறையில் கொண்டிருந்த நம்பிக்கையைத் தங்கள் ஆட்சி, அதிகார, படை பலத்தைக் கொண்டு நசுக்கி அழிக்க அறவே விரும்பவில்லை. ஏனெனில், அது இஸ்லாமியக் கொள்கைக்கு நேர் மாறானதும் ஆகும். திருமறையாம் திருக்குர்ஆன்,

"அல்லாஹ்வை விடுத்து அவர்கள் எவற்றை வணங்குகிறார்களோ அவற்றைப் பற்றி நீங்கள் தீங்கு பேசாதீர்கள்." (திருக்குர்ஆன் 6:108)

எனக் கூறியிருப்பது பிற சமயத்தவர்களின், நம்பிக்கையை, வணக்கமுறைகளை, உணர்வுகளை மதிக்க வேண்டுமே தவிர மிதிக்கக்கூடாது. சிதைக்கவோ ஊனப்படுத்தவோ கூடாது என்பதை மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளதன் அடிப்படையில் முஸ்லிம் படைவீரர்கள் கிருஸ்தவ வணக்கத் தலங்களைக் காத்தார்கள். இதனால்,

பெரிதும் மகிழ்ந்துபோன கிருஸ்தவர்கள் முஸ்லிம்களின் உதவிக்கு நன்றி செலுத்தும் வகையில் தேவாலயங்களுக்கு அருகிலேயே இஸ்லாமிய முறைப்படி மசூதி ஒன்றைக் கட்டிக் கொள்வதற்கு நிலமளித்ததோடு கட்ட உதவியும் செய்தார்கள் என்பது வரலாறு தரும் செய்தி.

**மாதா கோவில் தூண் பரிசளித்த கலீபா!**

இந்தச் சமயத்தில் மற்றொரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. 1978ஆம் ஆண்டில் முதன் முறையாக இத்தாலி நாட்டின் தலைநகரான ரோமுக்குச் சென்றிருந்தேன். என்னை அழைத்துச் செல்ல வாட்டிகனைச் சேர்ந்த 'காலேஜியோ செயின்ட் பீட்ரோ' விலிருந்து திரு ஆன்டனி எனும் பாதிரியார் வந்திருந்தார். மிக இனிய சுபாவ முள்ளவர். நாங்கள் காரில் விமான தளத்திலிருந்து வந்து கொண்டிருந்தபோது வரும் வழியை ஒட்டியிருந்த பழங்கால மாதா கோயிலைக் காட்டி, அதையொட்டி, சிதிலமடைந்து கிடக்கும் மாபெரும் மண்டபத்தைக் காட்டி, "இதைக் கட்டியவர்கள் யார் தெரியுமா?" என்று கேட்டு, பதிலுக்கு என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

நான் சிரித்துக் கொண்டே வேடிக்கையாக "என் குடும்பத்திலிருந்து நிச்சயமாக யாரும் கட்டவில்லை. ஏனெனில், என் குடும்பத்திலிருந்து ரோம் மண்ணில் கால் வைக்கும் முதல் ஆள் நான்தான்" எனக் கூறிச் சிரித்தேன். ஆனால், அப் பாதிரியார் அடுத்து சொன்ன செய்தி எனக்கு வியப்பையும் திகைப்பையும் ஏற்படுத்துவதாயிருந்தது.

'உமர் அவர்களின் ஆட்சியின்போது இம் மாதா கோவில் கட்டப்பட்டு வந்தது. இதையறிந்த கலீஃபா உமர் அவர்கள் தன் நட்புணர்வையும் இஸ்லாத்தின் சமய நல்லிணக்க உணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் இம் மாதா கோயிலின் மண்டபத் தூண்கள் பன்னிரண்டையும் கட்டிக் கொடுத்ததாக ஒரு குறிப்பு வரலாற்றில்

காணப்படுகிறது' எனக் கூறி நன்றியுணர்வு பொங்க என் முகத்தைப் பார்த்தார். பிற சமயத்தவர் அன்பையும் நம்பிக்கையையும் பெற எந்த அளவுக்குச் சமய நல்லிணக்க உணர்வோடும் மனித நேயத்தோடும் முன்னோடிப் பணியை ஆற்றி வழிகாட்டிச் சென்றுள்ளார் உமர் (ரலி) போன்ற மாமனிதர்கள் என்பதை நினைக்கும்தோறும், நாமும் அவர்களின் வாழ்க்கை நெறி வழி ஒழுகி வாழ வேண்டும் என்ற வேட்கை நம்முள் பொங்கியெழவே செய்கிறது.

இதைச் சொல்லுகின்றபோது மற்றுமொரு வரலாற்றுச் சம்பவம் என் நினைவிற்கு வருகிறது.

உமர் (ரலி) காட்டிய உன்னதச் சமயப் பொறை

ஒரு முறை இரண்டாவது கலீஃபாவாக ஆட்சி செய்துவந்த மாமனிதர் உமர் (ரலி) அவர்கள் தன் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தார். அப்போது அவர் நின்று கொண்டிருந்த இடம் ஒரு மாதா கோவில். அப்போது அவர்கள் நண்பகல் தொழுகையான 'லுஹர்' தொழுகையை நிறைவேற்ற வேண்டியிருந்தது. எனவே, தனக்கு மாதா கோவிலைச் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்த பாதிரிமார்களிடம் தான் தொழுகை நடத்த வேண்டிய நேரம் வந்து விட்டது. ஆகையால் விரைந்து சென்று தொழுகை நடத்த வேண்டும் எனக் கூறி விழைந்தார்.

இதையறிந்த பாதிரிகள், 'உமர் (ரலி) அவர்கள் விரும்பினால் மாதா கோயில் பகுதியிலேயே தங்கள் தொழுகையை நடத்திக் கொள்ளலாம்' எனக் கூறி அவர் மறுமொழிக்காகப் பாதிரிமார்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

தேவாலயத்துள் தொழாமல் வெளியே சென்று தொழுகை நடத்த விரும்புவதாக உமர் (ரலி) கூறியதைக் கேட்ட தலைமைப் பாதிரியார்,

“அன்று மதீனாவில் அண்ணலாரைக் காண வந்த பாதிரிமார்களை, பிரார்த்தனை நேரம் நெருங்கியபோது அவர்களைப் பள்ளி வளாகத்திலேயே கிருஸ்தவ சமயச் சடங்கு முறைகளோடு பிரார்த்தனை செய்து கொள்ளப் பணித்தார். பெருமானார் அவர்கள். இரண்டு இறை வனில்லை, எங்கும் ஒரே இறைவன்தான் இருக்கிறான். அவனை இம் மசூதி வளாகத்திலிருந்தும் நீங்கள் வணங்க லாம்” எனக் கூறி ஊக்குவித்த பெருமானார் வழிவந்த உமர் அவர்கள் இங்கு தொழத் தயங்குவது ஏனோ? என வினாவெழுப்பினர். உடனே பாதிரியாருக்கு ஒரு சந்தேகம் வந்து விட்டது. ஒரு வேளை கலீஃபா உமர் அவர்கள் இதைவிடச் சிறந்த இடத்தைத் தேடுகிறாரோ என எண்ணிய மாத்திரத்தில் அருகில் இதை விட சிறந்ததொரு தேவாலயம் இருக்கிறது. அங்கு எல்லா வசதிகளும் இருக்கிறது என்று கூறினார். இதைக் கேட்டபடி உமர் (ரலி) அவர்கள் நன்றி கூறியபடி தேவாலயத்திற்கு முன்பிருந்த மைதானத்திற்குச் சென்று, தன் தொழுகையை முடித்துக் கொண்டு, மீண்டும் சர்ச்சுக்கே வந்தவுடன், தான் பாதிரிகளின் கோரிக்கையை ஏற்று ஏன் தேவாலயத்துள் தொழவில்லை என்பதற்கான காரணத்தை விளக்கினார்.

“நான் இங்கு தொழுவது மிகவும் சுலபம். உங்க ளோடு எனக்குள்ள நட்புணர்வைக் காட்டுவதற்கு நான் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், நாளை வருகின்றவர்கள், உமர் அவர்கள் இந்த இடத்திலே தொழுதார்கள். இந்த இடத்தில் அவர்கள் நினைவாக நாங்கள் ஒரு பள்ளி வாசல் எழுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தால் உங்களுடைய நிலைமை என்னாவது? இக்கட்டான அந்நிலையை ஒரு முஸ்லிம் ஏற்றுக் கொள்ள மாட்டான். உங்கள் இடம் உங்களுடைய தாகவே இருக்க வேண்டும். அதில் எந்த வித இடையூறும் வந்துவிடக் கூடாது. அதற்காகத்தான் நீங்கள் இவ்வளவு

தூரம் வற்புறுத்திக் கூறியும், பெருமானார் (சல்) அவர்கள் காட்டிய வழி முறையைச் சுட்டிக் காட்டிச் சொன்ன போதும்கூட, அவற்றையெல்லாம் மீறி, மைதானம் சென்று தொழுது விட்டு வந்ததற்குக் காரணம். நாளைக்கு உங்களுக்கு ஒரு பிரச்சினை வந்துவிடக் கூடாது என்பது தான் என் கவலை " எனக் கூறி சமாதானப்படுத்தினார் என்பது ஒரு வரலாற்றுச் சம்பவம். இவ்வாறு மனித நேய உணர்வோடு பிற சமயத்த வரை மதிக்க வேண்டும், அவர்கட்கும் அவர்தம் சமயத்திற்கும் அவர்தம் சொத்துக் களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும்; அது ஒரு முஸ்லிமின் இன்றியமையாக் கடமை என்பதையும் இச்சம்பவங்கள் இன்றும் எடுத்து இயம்பிக் கொண் டுள்ளன.

**உண்மைக்குப் புறம்பான பாப்ரி மஸ்ஜித் பிரச்சினை**

இத்தகைய வரலாறுகளை அறியாத காரணத்தால் - நாமும் அவர்களை அறியச் செய்யாத காரணத்தினால் அயோத்தியை இடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆஃப்கானிஸ்தான் பகுதியிலே அயோத்தி இருந்ததாக ஒரு ஆதாரச் செய்தி; தாய்லாந்தில் பேங்காக் நகருக்கருகில் ஒரு அயோத்தி இருந்ததாக மற்றொரு ஆதாரச் செய்தி. இந் நிலையில் பாப்ரி மசூதிக்குள் ஒரிஜினல் அயோத்தி ராமன் பிறந்த இடம் இருப்பதாக ஒரு மாய்மாலம். நாம் அந்தப் பிரச்சினைக்குள் செல்ல வேண்டியதில்லை. அது தேவை யற்ற பிரச்சினை. ஏதோ ஒரு கட்டிடத்தை இடித்ததினால் முஸ்லிம்களின் உள்ளத்தை வேண்டுமானால் புண்படுத்த லாம். அதனால் வேறு பெரும் பயன் ஏதும் ஏற்பட்டு விடப் போவதில்லை. இறைவன் பாப்ரி மசூதிக்குள் மட்டும் இருப்பவன் அல்ல. வல்ல அல்லாஹ் எங்கும் இருப்பவன். முஸ்லிம்களின் உணர்வுகளை ஊனப்படுத்த வேண்டும் என்பதற்காக இச் செயல்களை மேற்கொள்வதை நினைத்துத்தான் வேதனைப்படுகிறோம்.

### அண்ணலார் கூட்டிய முதல் சர்வ சமய மாநாடு

அன்று மதீனத்தில் வாழ முனைந்த அண்ணலார் (சல்) அவர்கள் அந்த நகரிலிருந்த அனைத்து மதத்தினையும் அழைத்து கூட்டம் நடத்தி வெவ்வேறு சமயச் சார்புள்ளவர் களாயினும் மதீனா நகர் குடிமக்கள் என்ற அளவில் எல்லோரும் ஒன்றுபட்டு, ஒற்றுமையாய் இருந்து, நமக்கு நாமே பாதுகாப்பு அரணாக விளங்குவோம் எனக் கூறினார்கள். அனைவரும் அதை ஏற்று ஒன்றுபட்டார்கள். அதுவரை ஒற்றுமையிலா அந் நகர் மக்களைப் பந்தாடி வந்த வெளி எதிரிகள், இதன் பின் இல்லாமலே போனார்கள்.

அன்று மதீனா நகரில் வாழ்ந்த அனைத்துச் சமயங்களை யும் சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து ஓரணியாக நின்றார்கள். உலகில் நடைபெற்ற முதல் சர்வ சமய மாநாடாக அதனை இன்றும் வரலாற்றாசிரியர்கள் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### அனைத்துச் சமயத்தாரால்
### தெரிவு செய்யப்பட்ட அண்ணலார்

தங்களை தலைமை தாங்கி வழிநடத்த எல்லா வகையிலும் தகுதி மிக்கவர் நாயகத் திருமேனி ஒருவரே என்பதை உணர்ந்த அனைத்துச் சமய மக்களும் மதீனாவின் தலைவராக அண்ணலாரைத் தேர்ந்தெடுத்து மகிழ்ந்தனர்.

மதீனா நகர மக்களின் அமைதியான சமூக வாழ்வுக்கும் சமுதாயப் பிளவோ பிணக்கோ ஏற்படாமல் தடுப்பதற்கும் நகரப் பாதுகாப்புக்குமான ஐம்பத்தி நான்கு ஷரத்துக்கள் கொண்ட சட்ட வடிவை உருவாக்கினார்கள். உலகிலேயே முறையான சட்ட வடிவு உருப்பெற்றது. இப்போது இதையே 'உலகின் முதல் முழுச் சட்டம்' என இன்றும் சட்ட உலகம் போற்றிப் புகழ்ந்து கொண்டுள்ளது.

அச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் இன்று நாம் அறிந்து பின்பற்றத் தக்கவைகள் மட்டுமல்ல, அவை என்றுமே

நமக்கு வழிகாட்டியுதவும் வலுப் பெற்றவைகளுமாகும். அவற்றுள் ஒரு ஷரத்து,

"யாரேனும் ஒருவர் தன் மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறிவிட்டால், அவரை யாரும் தடுக்கக் கூடாது. மதம் மாறியவரை அவர் போக்கிலேயே விட்டுவிட வேண்டும். அவரை வற்புறுத்தியோ அல்லது ஏதேனும் தீங்கு செய்தோ மத மாற்றத்திற்கு தடை எதுவும் விதிக்கக் கூடாது" என்பதாகும்.

இச் சட்டவிதியின் மூலம் மனிதனின் அடிப்படை உரிமை முழுமையாக நிலை நாட்டப்படுவதோடு முழுமை யாகப் பாதுகாக்கவும் படுகிறது. இதற்கான இனிய சூழலை நபிகள் நாயகம் (சல்) அவர்கள் அன்றே ஏற்படுத்தியிருப்பது எண்ணி வியக்கத்தக்கதாயுள்ளது.

### ஒரு சமய வணக்கத் தலத்தைக் காக்கும் பொறுப்பு மற்ற சமயத்தவர்க்கு உண்டு

அதுமட்டுமல்ல, அந்தந்த மதத்தவரின் வணக்கத் தலங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்களுக்குண்டு என்றாலும், அதில் மற்ற மதத்தவர் களுக்கும் பங்கு உண்டு என்று மற்றொரு ஷரத்துக் கூறுகிறது. ஒரு பள்ளி வாசலை யாரேனும் இடிக்க வந்தால் அதைக் காக்கும் பொறுப்பு முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, அதற்குப் பக்கத்திலிருக்கும் யூதருக்கும் கிருஸ்தவருக்கும், இன்னும் எந்தெந்த மதத்தவர்கள் உண்டோ அவர்கட் கெல்லாம் மசூதியைக் காக்கும் பொறுப்பு உண்டு. அதே போல் ஒரு சர்ச்சை யூதர் இடிக்க வந்தால் அதைக் காக்கும் பொறுப்பு கிருஸ்தவருக்கும் ஒரு முஸ்லிமுக்கும் மற்றுமுள்ள பிற சமயத்தவருக்கும் உண்டு. அவ்வாறே யூத வணக்கத் தலத்தை யாரேனும் இடிக்க நேரிட்டால் யூதரோடு முஸ்லிம், கிருஸ்தவர், மற்றுமுள்ள மதத்தவர் கட்கும் உண்டு என்பது எவ்வளவு பெரிய சமுதாய ஒற்றுமைக்கும் ஒருங்கிணைவுக்கும் சமய நல்லிணக்கத்

திற்கும் கட்டியம் கூறும் சட்ட முறைகளாக அமைந்துள்ளன என்பது எண்ணி இன்புறத் தக்கதாகும். உலக மக்களுக்கு என்றென்றும் நல்வழி காட்ட வல்ல அழகிய முன் மாதிரி யாக நபிகள் நாயகம் (சல்) அவர்கள் வகுத்தளித்துள்ளதை இந்தச் சட்டத்தில் காண முடிகிறது.

## ஆதாம் வழி வந்தோரே அனைவரும்

இஸ்லாத்தின் அடிப்படை உணர்வு மனித குலத்தை முழுமையாக சகோதர வாஞ்சையுடன் அணுகுவதாகும். இஸ்லாத்தைப் பொறுத்தவரை முதலில் நீ மனிதன். அதன் பிறகுதான் நீ எந்த மதம், மார்க்கம் என்பதெல்லாம் மனித குலத்துக்கு மதிப்பளிப்பது இஸ்லாம். எந்த நாட்டில் வேண்டுமானாலும் இரு; எந்த மொழியை வேண்டு மானாலும் பேசு; எந்த இனத்தைச் சேர்ந்தவனாகவும் இரு; எல்லோரும் ஆதாம் (அலை) வழி வந்த சகோதரர்கள் என்பதை மட்டும் மறந்து விடாதே. இதனை எண்பிக்கும் நிகழ்வு ஒன்று பெருமானார் (சல்) அவர்கள் வாழ்வில் நடை பெற்றது.

நாயகத் திருமேனி அவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவ்வழியே இறந்துபோன யூதர் ஒருவரின் சடலத்தை சுமந்தபடி சிலர் வந்து கொண்டிருந்தனர். இக் காட்சியைக் கண்டவுடன் பெருமானார் (சல்) அவர்கள் எழுந்து அமைதியாக நின்றதோடு தன் தோழர்களையும் எழுந்து நிற்கச் சொன்னார். அவர்களும் நின்றனர். அச் சடலம் அவர்கள் பார்வையிலிருந்து மறையும்வரை நின்று விட்டு, பின் அமர்ந்தனர்.

பெருமானார் செயல் அவர்தம் தோழர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. காரணம், இறந்து போன யூதர் அண்ணலாருக்கு அளவிலா தொல்லையும் துயரமும் கொடுத்து வந்த துஷ்டர். வாழ்நாளெல்லாம் கெடு மதியோடு வாழ்ந்த ஒரு தீயவருக்கு எழுந்து நின்று இறுதி

மரியாதை செய்ய வேண்டுமா? என நபித் தோழர்களில் ஒருவர் வினாத் தொடுத்ததற்கு இறந்தவர் எப்படிப்பட்டவராக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். அவரும் ஆதாம் வழி வந்த நம் சகோதரரே. ஒரு சகோதரர் மற்றொரு சகோதரருக்குச் செய்ய வேண்டிய மரியாதையைத்தான் நான் செய்தேன். உங்களையும் செய்யச் சொன்னேன்" என்றார்.

இதுதான் மனித நேயம். இந்த மனித நேய உணர்வு இருக்கின்றபோது ஒரு மனிதனுக்குள் இருக்கும் மனிதத்துவத்தைக் காண்பானேயல்லாது, மனிதனுக்குள் இருக்கும் வெறும் சாஸ்திர சம்பிரதாய மதவுணர்வுகளைப் பார்க்க மாட்டான்; அவையெல்லாம் மனித நேய உணர்வுக்கு அப்புறம்தான். இதுதான் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் நமக்குப்போதித்த, வாழ்ந்து வழி காட்டிச் சென்ற வாழ்வியல் முறை.

**இஸ்லாமிய நெறிமுறை வழுவா வாழ்வே இணையிலாப் பிரச்சாரமாகும்**

இந்த உன்னதமான வாழ்க்கை முறையைப் பெருமானாரின் பெரு வாழ்வை அறிந்தவனாக ஒவ்வொரு முஸ்லிமும் இருப்பதோடு, மற்றவர்களையும் அறிந்துணரச் செய்ய வேண்டும். இதற்காக பிற மதத்தினருக்கிடையே சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து புரிய வைக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாமிய நெறிமுறை வழுவாது வாழும் முறையைக் கண்ணுறும் ஒவ்வொரு சகோதரச் சமயத்தவரும் அவ்வாழ்க்கை முறையின் சிறப்பை - உயர்வை உணர வேண்டும். தாங்களும் அதைப் போன்ற வாழ்க்கைப் போக்கைப் பேண வேண்டும் என்ற வேட்கை கொள்வார்கள். இவ்வுணர்வே இஸ்லாத்தின்பால் அவர்களின் ஈர்ப்பையும் பின் அதுவே இணைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்தும்.

எனவே, இஸ்லாமியப் பிரச்சாரம் என்பது பேசி, எழுதி புரியவைப்பதைவிட, நம் வாழ்வில் முழு வீச்சில் இஸ்லாமிய நெறிமுறைகளைக் கடைப்பிடித்து, மற்றவர் களின் கண் முன்னே முன் மாதிரியாக வாழ்வதுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## இஸ்லாத்தின் பெயரால் அனாச்சாரம்

இஸ்லாமிய வாழ்வியல் நெறி முறைகளை பிசிறில்லாமல் கடைப்பிடித்து வெற்றி பெறுவதற்கு மாறாக, இன்று இஸ்லாத்தில் இல்லாதது மட்டுமல்ல, இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு மாறான, இன்னும் சொல்லப் போனால் அனாச்சாரமான தீய பழக்க வழக்கங்களை இன்று இஸ்லாத்தின் பெயரால் கடைப் பிடித்து, இஸ்லாமிய நெறிகளுக்குத் தீங்கிழைத்து வருகிறோம்.

அத்தகைய சமூகத் தீங்குகளில் இஸ்லாமிய சமுதாயம் கடைப்பிடித்து வரும் வரதட்சணை எனும் கைக்கூலியும் ஒன்றாகும். மணமகன் 'மஹர்' எனும் மண அன்பளிப்புத் தொகையை மணமகளுக்கு வழங்கிய பின்னரே மண வினை நிறைவேறும் என்ற இஸ்லாமிய முறைக்கு நேர் மாறாக மணமகள் வீட்டாரிடமிருந்து பணமாகவும் நகை யாகவும் வாகனமாகவும் சீதனமாகவும் பெரும் பொருளைக் கட்டாயமாக வாங்கும் நிலை இருந்து வருகிறது. இஃது நிறுத்தப்பட வேண்டியது மட்டுமல்ல வேரும் வேறடித் தூறுமாகக் களையப்பட வேண்டிய சமூகத் தீங்காகும்.

## அண்ணலார் இல்ல அழகிய முன் மாதிரி திருமணம்

மண்ணுலக மக்களுக்கு என்றென்றும் வாழும் சான்றாக, அழகிய முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய நாயகத் திருமேனியின் இல்லத் திருமணம் எவ்வகையில் நடந்தது? இதை அழகியதொரு எழிலோவியமாக உமறுப் புலவர் சீறாப் புராணப் பெருங்காப்பியத்தில் சொல்லோ வியமாக வரைந்து காட்டுகிறார்.

பெருமானாரின் அன்புத் திருமகள் பாத்திமா திருமண வயதடைந்தபோது, அன்பும் அழகும் இனிய பண்பு நலங்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற அந்நங்கை நல்லாளை மணமுடிக்க பலரும் விரும்பினர். செல்வ வளமிக்கோரும் சமுதாயத்தில் உயர்நிலை பெற்றோரும் போட்டி போடவே செய்தனர். ஆனால் அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் பணப் பொருத்தமோ அந்தஸ்துப் பொருத்தமோ பார்க்காமல் தம் அருமை மகள் பாத்திமா வின் அன்பு, அழகு,இனிய பண்பு, அறிவு, அடக்கம், எளிமை இவற்றிற்கேற்ற மணமகனைத் தேடினார். சுருங்கச் சொன்னால் மனப் பொருத்தம் பார்த்து மணம் முடிக்க விழைந்தார். தன் அருமை மகளுக்கு எல்லா வகையிலும் ஏற்ற மணமகனாக அருந்திறல் வீரர் அலி (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்.

வீரமும் விவேகமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற வறியரான அலி (ரலி) அவர்களிடம் மணமகளுக்கு மஹர் கொடுக்கப் பொருளில்லா வறிய நிலை. அலி (ரலி) தன் இரும்புக் கவச உடையையே மகராகத் தந்து மணமுடித்தார். உலகிலே' மிகமிக எளிமையாக நடைபெற்ற திருமணம் அண்ணலாரின் அன்பு மகளார் பாத்திமா நாச்சியார் திருமணமாகும்.

திருமணம் முடிந்த மறுநாள் லுஹர் தொழுகைக்கென அண்ணல் நபி (சல்) அவர்களும் அவர்தம் மருகர் அலி (ரலி) அவர்களும் பள்ளிக்குச் சென்றுள்ள நிலையில் மணமகள் பாத்திமா நாச்சியார் தொழுகை முடித்து அமர்ந்திருந்தார்.

அச் சமயம் முதிய வறியவர் ஒருவர் பிச்சை கேட்டுக் குரல் எழுப்பினர். விரைந்து சென்ற பாத்திமா வறியவர்க்கு உணவளிக்க, அதனை உண்டு மகிழ்ந்த முதிய வறியவர் நன்றி கூறி நடக்கத் தொடங்கினார். உடலில் போதிய ஆடையில்லாததால் அவர் உடல் குளிரால் நடுங்கியது. இதைக் கண்டு வருந்திய பாத்திமாவை நோக்கி, குளிர் தாள

முடியவில்லை, ஏதேனும் பழைய போர்வை இருந்தால் தரும்படி வேண்டினார்.

இதைக் கேட்ட பாத்திமா மகிழ்வோடு வீட்டிற்குள் சென்று புத்தம் புதிய சிறு போர்வையொன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். முதியவர் அதை வாங்கிப் போர்த்திக் கொண்டு அளவிலா மகிழ்வோடு சென்றார்.

பள்ளியிலிருந்து திரும்பிய அண்ணல் நபி (சல்) அவர்களும் மருகர் அலி (ரலி) அவர்களும் வீட்டிற்குள் நுழைந்தவுடன் இஸ்லாமிய மரபுப்படி மறுநாள் மணமகள் தன் பிறந்தகத்தைவிட்டு புகுந்தகம் செல்ல வேண்டும். இதற்காக பெண் வீட்டார் சீதனமாக பெருமானார் (சல்) அவர்கள் அளித்த ஒருசில பொருட்களை எடுத்துக் கொண்டு பாத்திமா நாச்சியார் புறப்படலானார்.

அப்போது தன் அன்பு மகளுக்குச் சிறப்புத் திருமண பரிசாக வாங்கிக் கொடுத்திருந்த அழகான சிறு மேலங்கியை அணிந்து செல்லுமாறு கூறினார். இதைக் கேட்ட பாத்திமா நாச்சியார் சற்றுமுன்புதான் குளிரால் வாடிய வறியவர் ஒருவர்க்கு அதைப் போர்த்திக் கொள்ளத் தந்ததாகக் கூறினார்.

இதைக் கேட்ட பெருமானார் உள்ளம் மகிழ்ந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாதவராக, மேலும் தம் மகளாரை நோக்கி கேள்வி எழுப்பலானார்.

"முதியவரின் குளிரைப் போக்க போர்வை தானம் செய்ய வேண்டுமென்றால் வேறு எதையேனும் பழைய வற்றைக் கொடுத்திருக்கக் கூடாதா? எந்த வசதியும் இல்லாத நான், உன் திருமணத்திற்குப் பெரும் பரிசு எதையும் வாங்கித் தர இயலவில்லை. என் வசதிக்குறைவிற்கேற்ப ஒரு குப்பாயமாகிய சிறு மேலங்கியை வாங்கித் தந்திருந்தேன். உன் கணவன் வீட்டிற்கு முதன் முதலாக மணப்பெண்ணாகப் புறப்பட்டுச் செல்லும் இத்தருணத்தில்

அதை அணிந்து சென்றால் அதைப் பார்க்க எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்?" என்ற முறையில் தன் மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

தன் அன்புத் தந்தையாரின் மன உணர்வை அறிந்த பாத்திமா நாச்சியார், "நாயகம் அவர்களே! நீங்கள் தானே போதித்தீர்கள், ஒருவருக்குத் தானம் தரவேண்டும் என்றால் நம்மிடமுள்ள பொருட்களில் உயர்ந்ததும் சிறந்ததும் எதுவோ அதை அளிக்க வேண்டும் என்பதாக. அவர் கேட்ட போது என்னிடம் மிக உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் நீங்கள் திருமணப் பரிசாக வாங்கித் தந்த குப்பாயப் போர்வைதான் இருந்தது. அதையே அந்த முதியவருக்குத் தானமாக தந்து மகிழ்ந்தேன். அது தவறா, தந்தையே?" எனக் கேட்டார்.

பாத்திமா நாச்சியாரின் பதில் பெருமானாரையே வியக்கவும் திகைக்கவும் வைப்பதாயிருந்தது. இதைக் கேட்ட மாத்திரத்தில் பெருமானார் கண்கள் பனித்து விட்டன.

"நான் போதித்தவைகளை என் மகளே பேணி நடக்கிறாளா என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் இப்படியொரு கேள்வியைக் கேட்டேன். இப்போது, உன்னைப் பெற்றபோது அடைந்த மகிழச்சியைவிட பெருமகிழ்வடைகிறேன்" என்று பூரித்தார் என ஒரு அழகிய எழுத்தோவியமாகவே உமறுப் புலவர் தன் சீறாப் புராணத்தில் ஒரு காட்சியை,

"அழகியதெவையும் அல்லாஹ்வுக்காக
விழைவுடன் கொடுத்திட வேண்டும்
என்ற பழமறை வாக்கால் பகர்ந்ததாலரோ
மழை தவழ் கொடையினீர், வழங்கினேன் என்றார்"

எனப் புனைந்துரைத்துள்ளார்.

தன் ஒரே மகள் திருமணத்திற்குத் திருமணப் பரிசாக ஒரு சிறு குப்பாயப் போர்வைதான் வாங்கித் தர இயன்றது

என்றால், எவ்வளவு எளிமையாக ஆடம்பரமேதுமின்றி நடைபெற்ற மணவிழாவாக அது இருந்திருக்க முடியும் என்பதை ஒருகணம் எண்ணிப் பாருங்கள்.

ஒரு இஸ்லாமியனின் திருமணம் ஆடம்பரமேதும் இன்றி எளிமையாக, முறையாக நடைபெற வேண்டும் என்பதை நாம் உணர்ந்து, தெளிந்து, கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவர்களாக உள்ளோம் என்பதை உணர வேண்டும். இடைக்காலத்தில் கைக்கூலி எனும் வரதட்சணை போன்ற சமூகத் தீங்குகளை அறவே விட்டொழிக்க வேண்டும்.

பெண்ணுக்கு மணமகன் கட்டாயம் வழங்க வேண்டிய 'மஹர்' தொகை, மணமகனின் வசதியைப் பொறுத்து அமைவதாகும்.

அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தன் மகள் பாத்திமா நாச்சியாருக்கு ஏற்ற மணமகனாக அலி (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுத்தபோது, பெண்ணுக்கு மஹராகக் கொடுப்பதற்கு அலியாரிடம் செல்வமேதும் இருக்க வில்லை என்றாலும் தன்னிடமிருந்த இரும்புக் கவசத்தை மஹராகக் கொடுத்து, மணமுடித்தார் அலி (ரலி). அவரவர் சக்திக்கேற்ப எதை வேண்டுமானாலும் மஹராகத் தந்து மண முடிக்கலாம். ஆனால், கட்டாயமாக மஹர் தந்தே மண முடிக்க வேண்டும் என்பது இஸ்லாம் வகுத்தளித்துள்ள நியதி.

இன்று என்ன நடக்கிறது. நிக்காஹ்வின்போது, மஹரை நிக்காஹ் புத்தகத்தில் குறிப்பிடுவதோடு சரி. மணப் பெண்ணைத் தொடுமுன், கையில் மஹர் தந்து, சலாம் கூறி, அப்பெண்ணின் கரத்தைப் பற்ற வேண்டும் என்பதை யெல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டு, நிக்காஹ் புத்தகத்தில் குறிக்கிறோமே தவிர கொடுப்பதில்லை. வாழ்நாள் கடன். சிலர், இறப்பின் எல்லையில் இருக்கும் போது, மஹருக்காக மனம் பொருந்திக் கொள்ளுமாரும்

மனைவியிடம் கூறி, கொடுக்காமலேயே இறைவனிடம் சென்று விடுவர்.

### மஹரே கொடுமையாகியுள்ள விந்தை

இன்னும் எகிப்து போன்ற நாடுகளில் 'மஹர்' தொகை வரதட்சிணையைவிட கொடுமையானதாக விசுவரூப மெடுத்து, மணமக்களை வாட்டி வதைத்து வருகிறது. அப்படியொரு சம்பவத்தை நானே எகிப்து தலைநகரான கெய்ரோவில் சந்திக்க நேர்ந்தது.

இஸ்லாத்தில் இல்லாத வரதட்சிணை நம்மை வாட்டி வருவது போல இஸ்லாமிய நாடுகளில் அனுமதிக்கப்பட்ட மஹர் விசுவரூபமெடுத்து ஆட்டிப் படைத்து வருகிறது. இங்கே பெண் பாதிக்கப் படுகிறாள். ஆங்கே ஆண் பாதிக்கப்படுகிறான். இருவேறு நிலைகளில் இரு பெரும் சமூகத் தீங்குகளாக உருமாற நாமே நேரடியாகவும் மறைமுகமாகவும் காரணமாக அமைகிறோம்.

இதிலிருந்து முற்றாக விடுபட இஸ்லாத்தின் கொள்கை கோட்பாடு எதுவோ, திருமறை மூலமும் பெருமானார் (சல்) அவர்களின் வாழ்க்கை நெறிமுறைகளின்படியும் வாழ நாம் ஒவ்வொருவரும் உறுதி கொள்ள வேண்டும். இஸ்லாத்தில் இல்லாத அனாச்சாரம் எதையும் இடம் பெற அனுமதிக்கக் கூடாது. இருக்கும் நியதிகளை கூடுதல் குறைச்சல் இல்லாதவாறு உள்ளது உள்ளபடி பின்பற்றி யொழுக முற்பட வேண்டும். அதில் நாம் மனத்திண்மை மிக்கவர்களாக இருக்க வேண்டும்.

### பற்று வேறு, வெறி வேறு

இதற்கு அடிப்படைப் பண்பாக அமைவது இஸ்லாத் தின்மீது நம்பிக்கையும் பற்றும் செயல்பாடுகளும் ஆகும். மார்க்கப் பற்றைச் சிலர் இனப்பற்றாகக் கொண்டு தடுமாறுகிறார்கள். மார்க்கப்பற்று என்பது இஸ்லாமிய

நெறிகளின்பால் கொள்ளும் பற்றாகும். இனப்பற்று என்பது வெறும் முஸ்லிம் என்பதற்காகக் கொள்ளும் பற்றாகும். இன்னும் முஸ்லிம் என்று சொல்லிக் கொள்பவர்களில் பலரும் ஒரு முஸ்லிமுக்கு மகனாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால் முஸ்லிமாக வாழ்பவர்களே ஆவர். அவர்கட்கு மார்க்க அறிவோ பற்றோ அதிகம் இருப்பதில்லை. இத்தகைய இனப்பற்று சில சமயம் இன வெறியாகவும் உருவெடுத்து விடுகிறது. பற்றைப் பாராட்டும் இஸ்லாம் வெறியை அறவே வெறுக்கிறது. எந்தவொரு விஷயத்திலும் ஒரு முஸ்லிம் கொள்ளும் வெறித்தனமான போக்கு நபி வழியும் இல்லை; இஸ்லாமிய நெறி முறையும் இல்லை.

இனப் பற்று என்ற பெயரில் வெறித்தனமான போக்கை மேற்கொள்ளும் நிலை அன்றைக்கும் ஆங்காங்கே தலை தூக்கியிருக்க வேண்டும். அதனால்தான் ஒரு நபித் தோழராகிய சஹாபி "நாயகத் திருமேனியை நோக்கி, நம் இனத்தின் மீது பற்றுக் கொள்வது, அதிலும் தீவிரமான பற்றுக் கொள்வது தவறா?" என வினாத் தொடுத்தார். இவ்வினாவுக்கு விடைக் கூற வந்த அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் "ஒருவர் தன் இனத்தின்மீது பற்றுக் கொள்வது இயற்கை. அது பற்றாக மட்டுமே வளர்ந்து வளமடைய வேண்டுமேயல்லாது, வெறியாக மாறிவிடக் கூடாது".

இப்பதிலில் திருப்தியடையாத சஹாபி மேலும் தெளிவு பெறும் பொருட்டு, தொடர்ந்து கேள்வி எழுப்புகிறார்.

"பற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறீர்கள். இனத்தின்மீது தீவிரமாகப் பற்றுக் கொண்டால் அதனை மற்றவர்கள் வெறியாகக் கருதுகிறார்கள். அந்தப் பற்றுக்கும் வெறிக்கும் என்ன வேறுபாடு?" என்று கேட்டார்.

இவ்வினாவுக்கு விடைகூற முனைந்த பெருமானார் "எந்த ஒரு குறிப்பிட்ட இன, மொழிகளைப் பற்றிக் கூறாமல், ஒரு இனத்தைச் சார்ந்தவன் மற்றொரு இனத்தைச் சார்ந்தவன் மீதோ அல்லது இனத்தின் மீதோ தீவிரமான, கெடுதலான, தீங்கு தரக்கூடிய, அந்த இனத்திற்கு மாபெரும் பாதகத்தை அளிக்கக்கூடிய ஒரு தீய காரியத்தை செய்யத் துணிந்து விட்டான் என்றால், நம் சமுதாயத்தைச் சார்ந்தவன் தானே, இதைத் தொடங்கியிருக்கிறான், அந்த இனத்தின் அடிப்படையில் அவனுக்குத் துணையிருப்பதுதானே முக்கியக் கடமை; நீ என்ன தீங்கு செய்தாலும் உனக்கு நான் துணையாக இருக்கிறேன் செய்! என்று அவனுக்குத் துணை போனால், அது அந்த இனத்தைச் சார்ந்தவன் மீது நீ கொண்டிருக்கும் பற்றல்ல; அது அந்த இனத்தின்மீது கொண்டிருக்கும் வெறி. அந்த வெறியோடு நீ செயல் பட்டால் நிச்சயமாக நீ அழிவாய். உன்னை நம்பி உன் துணையை எதிர்பார்த்து, அந்தச் செயலில் முனைப்பாக ஈடுபடக் கூடியவனும் அழிவான்"என்றார். இதனை, இவ்வாறு கூறும் அறிவுரைகளைச் செம்மையாகப் புரிந்து கொள்வார்களோ மாட்டார்களோ என்ற ஐயம் அண்ணலாருக்குத் தலை தூக்கவே மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ள உடனே ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கலானார். "கிணற்றுக்குள் விழுந்துவிட்ட ஒரு ஒட்டகத்தை, ஒரு தனி மனிதன், வாலைப்பிடித்து நான் மேட்டுக்கு இழுத்து விடுவேன், கிணற்றிலிருந்து தூக்கி விடுவேன், அதனைக் காப்பாற்றி விடுவேன் என்று முனைந்து நின்றால், ஒட்டகத்தை அவனால் தூக்க முடியாதது மட்டுமல்ல; வாலைப் பிடித்த இவனும் அந்தக் கிணற்றுக்குள் விழுந்து விடுவான். விழுந்த அந்த ஒட்டகத்தோடு இவனும் அழிவான்" என்று விளக்கினார்.

ஆகவே, இனப்பற்று இருக்கலாமே தவிர அது இன வெறியாக மாறாமல் நம்மைக் காத்துக் கொள்ள

வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் அடிப்படை குணமாக - அடித்தளப் பண்பாக ஒவ்வொரு முஸ்லிமும் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற அருமையான கருத்தை மிகச் சிறந்த முறையில் பெருமானார் அவர்கள் நமக்கு நெறியாகக் காட்டியிருக்கிறார்கள். அறிவுரையாகச் சொல்லியிருக் கிறார்கள். கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் போக்கைத் திறம்பட உணர்த்தியிருக்கிறார்கள். இந்த நல்ல உணர்வுகளையும் சிந்தனைகளையும் பெருமானார் பிறந்த நாள் விழா நடைபெறும் இந்த நல்ல நாளிலே நம் நெஞ்சத்தில் தேக்கிக் கொண்டு செயல்பட வேண்டும்.

அது மட்டுமல்ல, இஸ்லாமிய நெறிகளுக்குப் புறம்பான எந்த உணர்வுகள் இருந்தாலும், எத்தகைய பழக்க வழக்கங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் விட்டொழிக்க வேண்டும். இந்தப் பழக்க வழக்கங்களெல் லாம் காலங்காலமாக இருந்து வருவதுதானே என காலத்தின்மீது பழியைப் போட்டு, அத் தவறுகளையே நாமும் தொடர வேண்டும் என்ற நொண்டிச் சமாதானங் களுக்கு அறவே இடம் தரக்கூடாது. இது இஸ்லாமிய நெறி, இது இஸ்லாத்துக்குப் புறம்பான செயல்: தவறான செயல் முறைகள் எதுவாக இருப்பினும் 'சமுதாயப் பழக்கம்' என்ற பெயரால் யார் மேற்கொண்டாலும் நாங்கள் அதனை ஏற்க மாட்டோம் என்று ஒவ்வொருவரும் உள்ளத் தளவில் உறுதி எடுத்துச் செயல்பட வேண்டும். இன்று இஸ்லாமிய சமுதாயத்தை ஆட்டிப் படைத்துக் கொண் டிருக்கக் கூடிய தீய உணர்வுகள், பழக்க வழக்கங்கள், சிந்தனைகள் அனைத்தும் மறைய வேண்டும். இஸ்லாமிய நெறிக்குப் புறம்பான போக்குகள் அனைத்தும் மாறுவதற் கும் அழிவதற்கும் மறைவதற்கும், தூசி தட்டி தவறுகளைக் களைவதற்கு ஏற்புடையதாக நம் செயல்பாடுகள் அமைய வேண்டும். அதற்கான மன வலிமையை - அறிவாற்றலை - செயல் திறனை எல்லாம் வல்ல அல்லாஹ்,

பெருமானாரின் வாழ்வையும் வாக்கையும் நினைத்துப் பார்க்கின்ற இந்த நேரத்தில் நமக்கு அருள் மழையாகப் பொழிய பேரருள் செய்வானாக.

*(6.7.98 அன்று அபுதாபி ஐமான் சங்க மீலாது விழா உரைச் சுருக்கம்)*

# மனித நேயப் பண்பு வளர்த்த மாநபி

மீலாது விழாக்கள் எவ்வகையில் கொண்டாடப்பட வேண்டும் என நான் நீண்டநாளாக மனத்தளவில் எண்ணிவருகிறேனோ அம்முறையிலேயே இங்கு மீலாது விழா நடைபெற்று வருவது எனக்குப் பேருவகை அளிப்பதாயுள்ளது. அதற்காக இவ்விழா ஏற்பட்டளர்கட்கு என் இதயப்பூர்வமாக வாழ்த்தையும் இம் முயற்சி மேலும் மேலும் தொடர வேண்டும் என்ற என் வேட்கையையும் முதற்கண் புலப்படுத்திக் கொள்கிறேன்.

**பொருத்தமான முறையில் மீலாது விழா!**

நபிகள் நாயகம் (சல்) அவர்களின் பிறந்தநாள் பெரு விழாவான மீலாது விழா, முஸ்லிம்கள் மட்டுமே கொண்டாடும் விழா அன்று. மக்கள் அனைவராலும் கொண்டாடப்பட வேண்டிய ஒரு பொது விழாவாகும். சமயம், இன, மொழி, சாதியப்போக்குகள் அனைத்தையும் கடந்த நிலையில் நடைபெற வேண்டிய பொது விழா. இவ் விழாவின் முக்கியத்துவத்தைப் பொது விழாவாகக் கொண்டாடப்பட வேண்டிய இன்றிமையாத் தேவையை, கற்றறிந்த பெரியோர்கள் இன்று தெளிவாக உணர்வதோடு,

இவ்வுணர்வுகளை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தெளிவாக செயல்வழி வெளிப்படுத்தியும் வருகிறார்கள்.

சில ஆண்டுகட்கு முன்பு அனைத்துத் தரப்பு மக்களும் பங்கேற்கும் வகையில் சென்னை சௌகார்ப்பேட்டை மீலாது விழாக் குழுவினர் முச்சந்தில் மேடையமைத்து மீலாது விழா கொண்டாடினர்.

அவ்விழாவில் பங்கேற்கும்படி இஸ்லாமியப் பெரியோர்கள் சிலரை அணுகினார்கள். அவர்களில் உயர் நீதிபதியாயிருந்த முஸ்லிம் பெரியவரும் அடக்கம். ஆனால் பொதுக் கூட்டமாக முச்சந்தியில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்க மறுத்து விட்டார். விழாக் குழுவினர் என்னிடம் இதைக் கூறி வருந்தியதோடு தங்கள் நன் நோக்கம் நிறைவேற உதவுமாறு வேண்டினர்.

அவர்களின் உன்னத நோக்கம் எனக்குப் பிடித்திருந்தது மட்டுமல்ல, அவர்கட்கு உதவ வேண்டும் என்ற வேட்கையும் எனக்கு ஏற்பட்டது. காரணம், இம்முறையில் தான் மீலாது விழாக்கள் நடைபெற வேண்டும் என்பது இளமைக்காலக் கொள்கையாகவும் இருந்தது. அப்போது உயர்நீதி மன்ற நீதிபதியாயிருந்த ஜஸ்டிஸ் மோகன் அவர்களை அணுகினேன். நீதிபதி மோகன் அவர்கள் என் மீது மிகுந்த அன்பு கொண்டவர். எனக்குத் துணையாயிருப் பதில் பெருமகிழ்வடைபவர்.எங்கள் கோரிக்கையை உடன் ஏற்றதோடு விழாவில் மிக அருமையாகப் பெருமானார் வாழ்வையும் வாக்கையும் பற்றி பேசினார்.

### எம்பெருமானார் அல்ல-நம் பெருமானார்

அவருக்கு முன்னதாக அங்கே பேசிய மௌலவி ஒருவர் பெருமானாரைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் 'எம் பெருமானார்! எம்பெருமானார்! எம் பெருமானார்!' என்றே குறிப்பிட்டுப் பேசினார். இதைக் கடுமையாகக் கண்டித்த நீதிபதி "பெருமானார் உங்களுக்கு மட்டும் சொந்தமானவர்

இல்லை. எங்களுக்கும், ஏன் உலகம் முழுமைக்கும் சொந்தமானவர்". எனவே, இனி 'நம் பெருமானார்' என்றே பொதுவாகக் குறிப்பிட வேண்டும் என்று கூறியதோடு பெருமானாரின் பொதுமை உள்ளத்தைப் பெரிதும் போற்றிப் பேசினார். "பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கலாமா என விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஆயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன்பே பெண்களுக்கு பெருமானார் சொத்துரிமை வழங்க வழிகண்டார் என்றால் இஸ்லாமும் பெருமானார் பெருவாழ்வும் வருங்கால சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஒளி விளக்காயமைந்துள்ளதால் இதைப் புகழாமல் இருக்க முடியாது" என்றெல்லாம் பலபடப் புகழ்ந்து பேசினார். இவ்வாறு பெருமானார் பெருவாழ்வையும் இஸ்லாமிய நெறி முறைகளையும் நினைவுகூற அனைத்துப் பகுதி மக்களுக்கும் உரிமையும் கடமையும் உண்டு. அந்த உரிமையை - கடமையை நிறைவேற்றுகின்ற முறையில் அனைத்துச் சமய மக்களும் ஒருங்கிணைந்த நிலையில் துபாய் மண்ணில் மீலாது விழாவைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதில் நானும் பங்கேற்பதில் பெருமையும் பெருமகிழ்வும் பெருமிதமும் அடைகிறேன்.

### யார் என்பதல்ல-என்ன என்பதே முக்கியம்

இந்த மீலாது விழாவைத் தமிழ் பண்பாட்டுக் கழகம் கொண்டாடுவதில் மற்றுமொரு சிறப்பம்சம் உண்டு. தமிழ்ப் பண்பாட்டிற்கும் பல்வேறு சிறப்புக் கூறுகள் உண்டு. அவற்றுள் தலையாயதாகப் போற்றப்படுவது "யார் என்பதைவிட என்ன என்பதில் கருத்தூன்றுவது" தான் அச்சிறப்பு. அதை நடைமுறைப்படுத்தும் முறையிலும் இம் மீலாது விழா இங்கே நடைபெற்றுக் கொண்டுள்ளது.

தமிழ் நாட்டைச் சேர்ந்த பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்களாயினும் தமிழ் பேசும் தமிழர்கள் என்ற முறையில் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டுமுறைகளையும்

மறவாதிருக்க, அவற்றை அன்றாட வாழ்வில் கடைப் பிடித்து இழையோடச் செய்ய நீங்கள் மேற்கொள்ளும் பல்வேறு முயற்சிகளின் நிலைக்களனாக இத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் அமைந்துள்ளது என்பதை தலைவரின் தலைமையுரையிலிருந்தும் வரவேற்புரையாற்றிய சகோதரி திருமதி காந்திமதி துரைராஜ் அவர்களின் பேச்சிலிருந்தும் புரிந்து கொள்ள முடிந்தது. இக் கழகத்தின் சார்பில் பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதை அறிந்து மகிழ்கிறேன். ஏனெனில் மீலாது விழாவைப் போல் அனைத்துச் சமயத்தவர்களும் கொண்டாடத்தக்க பொது விழா பொங்கல்விழா.

**பொங்கல் விழா தமிழர் தேசியத் திருவிழா**

பொங்கல் விழா தமிழ் மண்ணுக்கே சொந்தமான தேசியத் திருவிழா. தை முதல் நாளன்று பூக்கும் பொங்கல் விழா, மதச் சார்பு அறவே இல்லாத அறுவடைத் திருநாள். மாட்டுக்கும் கலப்பைக்கும் நன்றி தெரிவிக்கும் நன்னாள். தமிழ் மண்ணுக்கே சொந்தமான பழம்பெரு விழா. புராணத் தொடர்போ சமயச் சடங்குகளோ அறவே இல்லாத தேசியத் திருவிழா. இன்னும் சொல்லப் போனால் கடல் கடந்து துபாய் போன்ற நாடுகளிலே வாழ நேர்ந்த பலதரப்பட்ட மக்களை ஒன்றிணைக்கும் ஒற்றுமைத் திருநாளாகவும் இப் பொங்கல் திருநாளை பல்வேறு நாடுகளில் சென்று வாழும் தமிழர்கள் கொண்டாடி மகிழ்ந்து வருகிறார்கள். இம்மாதிரி விழாக்கள் தமிழ் மொழியையும் மொழி அடிப்படையிலான தமிழ்ப் பண்பாட்டையும் மறக்காமலிருப்பதோடு போற்றி வளர்க்கவும் வளப்பமடையச் செய்யவும் வழியாயமை கிறது.

தமிழ் உணர்வுகளை ஊட்டி வளர்க்கும் இத்தகைய அமைப்புகள் உருவாக்கப்படாத காரணத்தாலேயே மொரீஷியஸ் போன்ற நாடுகளிலே வாழும் தமிழர்கள் தமிழை மறந்து, பேசவும் எழுதவும் இயலாதவர்களாக,

பெயரளவில் தமிழர்களாக வாழ நேர்ந்துள்ளதை இந்நேரத்தில் நினைக்காமல் இருக்க இயலவில்லை. தமிழர் கலையும் தமிழ்ப் பண்பாடும் அவர்களைப் பொருத்தவரை பழங்கதையாகப் போய்விட்டது. வந்த நாட்டில் தங்கள் சொந்த மொழி, கலை, பண்பாடுகளைப் பேணவும், பேணி வளர்க்கவுமான தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தில் பேச வாய்ப்புக் கிடைத்தது பெருமகிழ்வளிக்கிறது.

பொதுவில் 'பண்பாடு' என்பது மனித வாழ்வின் அடித்தளமான ஒன்று. எதுவுமே இல்லையென்றால் கூட பண்பட்ட மனதை ஒருவன் வளர்த்துக் கொண்டிருந்தால் போதும் வாழ்க்கையில் அவன் எப்படியும் முன்னேறி விடுவான். இனிய பண்பாளனை எவரும் விரும்புவர். இது மனித இயல்பு.

பண்பாடு என்றால் என்ன?

பண்படுத்துவது பண்பாடு. இதை ஆங்கிலத்தில் 'கல்ச்சர்' (Culture) என்று கூறுகிறோம். நிலத்தைப் பண்படுத்தி வேளாண்மை செய்வதை 'Agriculture' என்று சொல்கிறோம். முறையாக நிலத்தைப் பண்படுத்திவிட்டால் அதில் எதை வேண்டுமானாலும் விளைவிக்கலாம். பண்படுத்தப்படாத நிலத்தில் எதையுமே விளைவிக்க முடியாது. அதே போலத்தான் பண்பாடு என்பது உள்ளத்தைப் பண்படுத்துவது. சரியானபடி நம் உள்ளத்தைப் பண்படுத்திவிட்டால், அங்கே உருவாகும் உணர்வுகளின் அடிப்படையில் - சிந்தனைகளின் அடிப்படையில் செயல் பாடுகளை அமைத்துக் கொண்டுவிட்டால், உறுதியாக நாம் வாழ்க்கையில் எதையெல்லாம் சாதிக்க விழைகிறோமோ அதையெல்லாம் எளிதாகச் சாதிக்கவியலும். நம் வாழ்க்கை சரியான நேர்கோட்டில் வெற்றி நடைபோட அது அடிப்படையாகவும் அமைந்து விடும். சுருங்கச் சொன்னால் எவனொருவன் பண்பட்ட மனதை உடையவனாக

இருக்கின்றானோ அவன் வாழ்க்கையில் தன்னை மனிதப் புனிதனாக இருக்கத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டுவிட்டான் என்பதுதான் பொருள். யாராவது ஒருவன் நாம் ஏற்க முடியாத வகையில் தவறாக நடந்து கொண்டுவிட்டான் என்றால் அவனைப் 'பண்பாடில் லாதவன்' என்றுதான் உடனடியாக ஏச முற்படுகிறோம். ஏனெனில் நற் செயல்கள் அனைத்திற்கும் அடித்தளமாக அமைவது பண்பாடு ஆகும். இதையே வள்ளுவர் 'பண்புடையாளர் பட்டுண்டு உலகம்' என்று கூறினார்.

## பண்பாடும் வேறுபாடும்

'பண்பாடு' என்பது நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், மொழிக்கு மொழி, சமயத்துக்குச் சமயம் வேறுபடும் தன்மை கொண்டதாகும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால் அந்தந்த மண்ணுக்குரிய பழக்க வழக்கங்கள், உணர்வுகள், சிந்தனைகள், சூழ்நிலைகள் இவற்றையெல்லாம் அடித்தளமாகக் கொண்டு மரபு முறையிலே வரக் கூடிய ஒன்று பண்பாடு.

## சமயப் பண்பாடும் சமுதாயப் பண்பாடும்

பண்பாடு என்பது சமய, இன, மொழி அடிப்படையில் அமையினும் மனிதர்கள் அனைவருக்கும் பொதுவான 'சமுதாயப் பண்பாடு' எல்லோருக்கும் பொதுவான தாயமையும். சான்றாக, ஒரு தமிழ் முஸ்லிமை எடுத்துக் கொண்டால் அவன் பின்பற்றும் மார்க்க சம்பந்தமான சிந்தனைகள், உணர்வுகள், செயல்பாடுகள் அவர்கள் வாழும் இல்லத்துள்ளும் வணக்கத்தளமான மசூதிக்குள்ளும் இருக்கும். அம் முஸ்லிம் வீட்டை விட்டோ அல்லது மசூதியைவிட்டோ வெளிப்பட்டு சமுதாய வீதியில் கால் வைத்துவிட்டால் தமிழருக்கென்று இருக்கக் கூடிய பொதுப் பண்பாட்டின் அடிப்படையிலேதான் அவன் இயக்கம் முழுமையும் அமைந்திருக்கும். இதுதான் தேசியப்

பண்பாட்டின் சிறப்புத் தன்மை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

### தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவம்

தமிழ்ப் பண்பாடு என்பது மொழி அடிப்படையில் அமைவது. மொழி என்பது மொழியப்படுவது. மொழி வழி உருவாகும் உணர்வுகளுக்கு வடிவம் தந்து வெளிப்படுத்துவது. இவ்வகையில் பல்வேறு மொழிகளின் பண்பாடுகள் அமைகின்றன. தமிழ்ப் பண்பாடு என்பதும் அவ்வகையில் அமைந்துள்ளதேயாகும்.

அவ்வாறாயின் தமிழ்ப் பண்பாடு எப்போது தோன்றியது? எல்லாவற்றிற்கும் வரலாறு உண்டு. வரலாறு இல்லாதது எதுவுமே உலகில் இல்லை. இந்த உலகம் எப்போது தோன்றியது? அதற்கும் ஒரு வரலாறு உண்டு. அதேபோல் தமிழ்ப் பண்பாடு என்று குறிப்பது எப்போது தோன்றியது? யாரால் வளர்க்கப்பட்டது? யார் யாரெல் லாம் அதை வளர்க்கப் பாடுபட்டார்கள்? யார் யாரெல்லாம் அதை வளப்படுத்த உழைத்தார்கள்? என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போதுதான் அதற்கும் ஒரு வரலாறு இருப்பது தெரிய வருகிறது.

### அல்லாஹ் ஆதி மனிதர் ஆதாமோடு பேசிய மொழி தமிழ்

சென்னையில் முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம் என்ற பெரும் அமைப்பு உண்டு. அந்த அமைப்பிலே நானும் ஒரு உறுப்பினனாக இருந்தாலும், அதன் கூட்டங்களிலே நான் கலந்து கொள்வதைத் தவிர்த்து வந்தேன். காரணம், அச்சங்கத்தில் இருக்கும் அங்கத்தினர்களில் பெரும்பாலோர் தமிழ் பேசும் முஸ்லிம்களாக இருந்த போதிலும் அதன் நடவடிக்கைகள் அனைத்தும் ஆங்கிலத்திலும் உருது மொழியிலுமே நடைபெறுவது வழக்கம். இதனால் நானும் இன்னும் சில நண்பர்களும் கூட்டங்களில் கலந்து

கொள்வதில்லை. இது சங்க அங்கத்தவர்கள் பலருக்கும் தெரியும்.

ஒரு சமயம் ஹாஜி எஸ். எம். சுலைமான், ஐ. ஏ. எஸ். அவர்கள் சங்கத் தலைவரானார். அவர் என்னிடம் பேரன்பு கொண்டவர். நான் சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்ளாத காரணம் அறிந்தவரும் கூட.

ஒரு சமயம் அச்சங்கம் சென்னை இம்பீரியல் ஹோட்டலில் 'ஈது கெட் டுகெதர்' கூட்டத்தை நடத்தியது. சங்கத் தலைவர் ஹாஜி சுலைமான் விழா தொடங்குவதற்கு முன்பு விழா நடக்கும் இடத்திற்கு விரைந்து வர வேண்டும் என்றும் மிக முக்கியமான விஷயம் பற்றி பேச வேண்டும் என்றும் மிக அவசரம் என்றும் கூறி என்னை வரச் சொன்னார். நானும் ஏதோ அவசரம் போலும் என்று கருதி கூட்டம் நடைபெறும் ஹாலுக்குள் நுழையவும் கூட்டம் தொடங்கவும் சரியாக இருந்தது.

என்னை ஆவலோடு வரவேற்ற தலைவர் ஹாஜி சுலைமான் அன்போடு வரவேற்ற கையோடு மேடைக்கு அழைக்க, நான் மறுத்தும் விடாது 'அழைத்து' என்று சொல்வதைவிட 'இழுத்து'ச் சென்று மேடையில் அமர்த்தினார் என்றே கூற வேண்டும். நானும் கௌரவம் கருதி அமைதியாய் அவருடன் மேடையில் அமர்ந்தேன்.

வரவேற்புரை முடிந்த கையோடு தலைமயுரையாற்றிய ஹாஜி சுலைமான், இன்றையக் கூட்டத்தில் உரையாற்ற மணவை முஸ்தபா வந்திருக்கிறார் எனக் கூறி, என்னைப் பற்றி முகமனாக பல செய்திகளைச் சொல்லி என்னைப் பேச அழைத்தார். நான் பேச எழுந்தவுடன் மேடையில் அமர்ந் திருந்த முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதி பஷீர் அஹமது சையத் அவர்கள், என்னை ஓரளவு நன்கு அறிந்தவருங்கூட, என்னை நோக்கிச் சற்று உரத்த குரலில் "எந்த மொழியில் பேசப் போகிறீர்கள்?" என வினாவெழுப்பினார்.

அவர்கேட்ட விதம் எனக்கு மட்டுமல்லாது அங்கிருந்தவர் கட்கும் பிடிக்கவில்லை என்பதை அவர்கள் முகச் சுழிப்பு வெளிப்படுத்தி கொண்டிருந்தன. என்றாலும், எந்த உணர்வையும் வெளிக்காட்டிக் கொள்ளாது, அவரை நோக்கி நானும் சற்று உரத்த குரலில் "எந்த மொழியில் பேச வேண்டும்?" எனக் கேட்டேன்.

உடனே தலைவர் ஹாஜி சுலைமான் சாஹிப் எழுந்து "மணவை முஸ்தபா, தமிழில்தான் உரையாற்ற வேண்டும். அவரைத் தமிழில் பேசுவதற்காகத்தான், நம் கூட்டங்களுக்கு வராதவரை தந்திரமாக வரவழைத்துள்ளேன். அவர் தமிழில் உரையாற்றுவார்" எனக் கூறி பேசப் பணித்தார்.

நிலைமையை உணர்ந்த நான் "அல்லாஹ் பேசிய மொழியில் பேசுகிறேன்!" எனக் கூறி நிறுத்தினேன். நீதிபதி பஷீர் அஹமது உட்பட கூட்டத்தினர் அனைவரும் என்னையே நோக்கினர். சிறிது இடைவெளிக்குப் பிறகு 'மீண்டும் சொல்கிறேன். அல்லாஹ் பேசிய மொழியில் பேசுகிறேன்' எனக் கூறி நிறுத்தி, கூட்டத்தினரை நோட்ட மிட்டேன். எல்லோரும் நெற்றியை உயர்த்தி வியப்போடு என்னை நோக்கினர். 'அல்லாஹ் பேசிய மொழி என்றால் அரபி தானே. அரபியில்தானே இறைவன் பெருமானார் மூலம் திருமறையை வழங்கியுள்ளான். ஆனால், அல்லாஹ் பேசிய மொழியில் பேசுகிறேன் என்று கூறிவிட்டு, தமிழில் பேசிக் கொண்டிருக்கிறாரே, இது என்ன வேடிக்கை!' என்றெல்லாம் அவர்கள் எண்ணுவதுபோல் முகபாவம் இருந்தது. இனியும் 'சஸ்பென்ஸ்' வைத்தால் அது 'சப்' பென்ஸாகி விடும் எனக் கருதி, தொடர்ந்து விளக்க முனைந்தேன்.

முதல்வேத மொழி தமிழ்

இஸ்லாமிய மரபுப்படி மக்களுக்கு இறைநெறி புகட்டி, நேர்வழிகாட்ட இறைவனால் அனுப்பப்பட்ட இறை

தூதர்கள் ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரம் பேர் என்பது இஸ்லாமிய மரபு. அவர்களுள் முதல் நபி முதல் மனிதரான ஆதாம் (அலை). இறுதித் தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்களாவர். முதல் மனிதரும் முதல் இறை தூதரு மான ஆதாம் (அலை) அவர்கட்கு, அவரது சந்ததியினருக்கு இறைநெறி புகட்டி, நேர்வழி காட்ட இறைவன் முதன் முதலாக இறைமறையை வழங்குகிறான். எந்த மொழியில்?

## முதல்நபி பிறந்த குமரிக் கண்டம்

ஆதம் (அலை) எங்கே பிறந்தார். முதல் மனிதர் ஆதம் (அலை) வாழ்ந்த இடம் 'லெமூரியா கான்டினென்ட்' என்று நிலவியல் ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகின்ற 'குமரிக் கண்ட'மாகும். இப்பகுதி இன்றைய ஆஸ்திரேலியா தொடங்கி இந்தியா உள்ளடங்களாக உள்ள பகுதி. தொடக்கத்தில் இப்பெரும் நிலப்பகுதி பல நாடுகளாக இருந்து, பின் பிளவுபட்டு, கடலால் விழுங்கப்பட்டு நீர்ப் பகுதியானது என்பது பூகோளாய்வியல் வல்லுநர்கள் கருத்து.

அன்றைய குமரிக் கண்டத்தில் உள்ள மலையொன்றில் தான் முதல் மனிதர் ஆதாம் (அலை) இறைவனால் இறக்கப்பட்டிருந்தார். அங்கிருந்துதான் அவரது சந்ததியினர் பல்கிப் பெருகினர். இன்றும் முதல் மனிதர் மண்ணுலகில் இறக்கப்பட்ட மலை 'ஆதம் மலை' என அழைக்கப்படு கிறது. இது இன்றைய இலங்கைப் பகுதியில் அமைந் துள்ளது. ஆதம் (அலை) அவர்களின் மக்களின் சமாதி இன்று இராமேஸ்வரம் பகுதியில் அமைந்துள்ளது. இச் சந்ததியினர் பல்கிப் பெருகிய குமரிக் கண்டப் பகுதி 49 நாடுகளாகப் பிரிந்திருந்தது. அங்குள்ள மக்கள் அனைவரும் பேசிய மொழி தமிழ். அங்குதான் முதல் தமிழ்ச் சங்கமும் இரண்டாம் தமிழ்ச் சங்கமும் அமைந்திருந்தது. கடல் கோளால் இந்நிலப் பகுதி பிளவுப்பட்டு, கடலுள் மூழ்கிய பின்னர்தான் எஞ்சிய நிலப் பகுதியான இந்தியத்

தென்கோடி மதுரை நகரில் மூன்றாவது தமிழ்ச் சங்கம் அமைந்தது என்பது தொடர் வரலாறாகும்.

## ஆதம் (அலை) பேசிய மொழி தமிழே

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த குமரிகண்ட மக்கள் அனைவரும் பேசிய மொழி தமிழ் என்றால் அப் பகுதியில் இறைவனால் இறக்கப்பட்ட முதல் மனிதர் ஆதம்(அலை) பேசிய மொழியும் தமிழாகத் தானே இருக்க முடியும். ஆதம் (அலை) அவர்கட்குத் தெரிந்த மொழியில்தானே இறைவன் தன் வேதத்தை வழங்கியயிருக்க முடியும். எனவே, ஆதிமனிதர் ஆதம் (அலை) அவர்களோடு இறைவன் தமிழ் மொழில் தானே பேசியிருக்க முடியும். எனவே, இறைவன் பேசிய தமிழில் பேசுகிறேன் என்று கூறி, தமிழில் உரையாற்றி, அதுவரை முஸ்லிம் பட்டதாரி கள் சங்கதில் நிலவிய ஆங்கில, உருது மொழி ஆதிக்கத் திற்கு முடிவு கட்டப்பட்டது. அன்று முதல் இன்று வரை அச்சங்க நடவடிக்கைகள் தமிழிலும் நடைபெற்று வரு கின்றன.

## உலகின் மிக மூத்த பண்பாடு

'பண்பாடு' என்பது வேறொன்றுமில்லை, இதை சம்ஸ்கிருதத்தில் கலாச்சாரம் என்று சொல்வார்கள். கலை, ஆச்சாரம் என்ற இரு சொற்கள் இணைந்ததே கலாச்சாரம். ஆச்சாரம் என்பது மரபு வழிக் கைகொண்டு வரும் சடங்குகள். வழிவழியாக வரும் கலையையும் ஆச்சாரத் தையும் இணைத்துக் கலாச்சாரம் என வழங்குகிறோம். தமிழிலே இதைப் பண்பாடு எனக் குறிப்பிடுகிறோம். பண்பட்ட மனத்தை உருவாக்கி, அதனடிப்படையில் செயல்பாடுகளை அமைத்து இயங்குவதனால் அது பண் பட்டதாகிறது. ஆகவே, இந்தப் பண்பாட்டின் வேர் எங்கிருந்து வருகிறதென்றால் ஆதி மனிதரிலிருந்து வருகிறதெனலாம். ஆதி மனிதர் தன் பழக்க வழக்கங் களையெல்லாம் தன் வழியில் வந்த சந்ததியினர்க்குச்

சொல்லியிருப்பார், அவரது வழித் தோன்றல் தங்கள் காலத்தில் தங்களால் கடைப்பிடிக்கப்பட்டவைகளையும் இணைத்துத் தங்கள் சந்ததியினருக்கும் கற்றுக் கொடுத் திருப்பார். இவ்வாறு வழிவழியாக வந்த பண்பாடுகளில் உலகிலேயே மிக மூத்த பண்பாடு என்று எடுத்துக் கொண்டால் அது தமிழ்ப் பண்பாடாகவே இருக்கவியலும்.

நான் இவ்வாறு உறுதிபடக்கூறுவதால் வெறும் தமிழ்ப்பற்றால் கூறுவதாக யாரும் எண்ண வேண்டாம். நம்மைப்பற்றி நாமே இன்னும் சரியாகத் தெரியாமலும் புரியாமலும் இருக்கிறோம் என்பதுதான் உண்மை.

## பண்பாட்டின் நிலைக்களனான சங்க இலக்கியம்

பழந்தமிழ்ப் பண்பாடுகளின் நிலைக்களனாக இருப் பவை நம் சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியங் களிலே சமயச் செய்திகளையோ சமயச் சடங்கு முறை களையோ காண முடியவில்லை. குறிப்பிட்ட கடவுளர் களைப் பற்றிய குறிப்புகளைக் கூட காண முடியவில்லை. கடவுளை 'கந்தழி' என்ற சொல்லால் குறிக்கிறான். 'கட்டற்றது' என்பது அதன் பொருளாகும். 'கடவுள்' என்ற சொல்கூட 'அனைத்தையும் கடந்து நிற்பது' என்ற பொருளி லேயே கையாளப்பட்டு வருகிறது. பழந்தமிழனின் கடவுட் கொள்கை 'ஒருவனே தேவன்' என்பதாகும். அவனது சமுதாயக் கொள்கை 'ஒன்றே குலம்' என்பதாகவே இருந்தது என்பதை இன்றும் தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்பிக் கொண்டுள்ளன. எதார்த்தவானாக வாழ்ந்த அன்றையத் தமிழன் கடைப்பிடித்த பண்பாடுகளையே இன்றும் 'சங்கப் பண்பாடு' எனப் போற்றுகிறோம். அதன் அடித்தளங்கள் இன்றும் நம் வாழ்வில் இழையோடிக் கொண்டுள்ளன என்பது நாமே அறிந்துணராத உண்மைகள். இந்த உண்மை உரத்த குரலில் ஆதாரப்பூர்வமாக உலகத்துக்கு உணர்த்த வேண்டும் என்ற விழைவு 1978 ஆம் ஆண்டில் முழு வீச்சாக என்னுள் எழுந்தது.

*ஐக்கியநாடுகள் சபையின் பேரங்கமான யுனெஸ்கோ நிறுவனம் தமிழ் உட்பட முப்பது உலக மொழிகளில் 'யுனெஸ்கோ கூரியர்' என்ற இதழைக் கடந்த 45 ஆண்டுகட்கு மேலாக நடத்திக் கொண்டு வருகிறது. அரசியல் தவிர்த்து அனைத்து விஷயங்களையும் உலகளாவிய முறையில், அவ்வத்துறை உலகப் பெரும் வல்லுநர்கள் எழுதும் ஆய்வுக் கட்டுரைகளோடு வெளியிட்டு வருகிறோம். தமிழ்ப் பதிப்பின் ஆசிரியனாகக் கடந்த முப்பத்தியிரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறேன்.*

*அவ்வப்போது 30 மொழி ஆசிரியர்களும் தலைமையக மான பாரிசில் கூடி அடுத்துவரும் இதழ்களுக்கான கருப்பொருளை – தலைப்புகளை கலந்து பேசி முடிவு செய்வோம்.*

வாழும் தமிழர் பண்பாடு

*1978 ஆம் ஆண்டில் நடைபெற்ற அத்தகைய ஆசிரியர்கள். கூட்டத்தில் உலகத்தின் மிக மூத்த பண்பாடாகவும் - மூவாயிரம் ஆண்டுகட்கு மேலாக வாழும் பண்பாடாகவும் அமைந்துள்ள தமிழ்ப் பண்பாட்டைப் பற்றிச் சிறப்பிதழ் வெளியிட வேண்டும் எனக் கூறியபோது பிற ஆசிரியர்களெல்லாம் ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்தார்கள். மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்ப் பண்பாடு வாழ்ந்து கொண்டிருக்கிறதா? உலகப் பெரும் பண்பாடு களாகக் கருதப்பட்ட எகிப்திய, சுமேரிய, கிரேக்க, ரோம, கார்த்தேஜியப் பண்பாடுகளெல்லாம் இருக்குமிடம் தெரி யாமல் அழிந்து போய்விட்டன. அவற்றின் எஞ்சிய எச்சங்களை இடிபாடுகளிலும், மண்ணிற்குள்ளும் மறைந்து போய்விட்டன. பழைய இலக்கியங்களிலும் வரலாற்றிலும் மட்டுமே அவற்றை அறிய முடியும். இத்தகைய சூழலில் மூவாயிரம் ஆண்டுகளாக ஒரு பண்பாடு அழியாமல் இன்னும் மக்களுடைய அன்றாட வாழ்வில் ஊடாடி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறதென்றால் அது உலக அதிசயங்*

களில் எட்டாவது அதிசயமாகத்தான் இருக்க முடியும் என கேலியும் கிண்டலும் கலந்த தொனியில் கூறி வியந்தனர். நான் ஏதோ தமிழ்ப் பண்பாட்டின் மீது கொண்டுள்ள பற்றாலும் பாசத்தாலும் இவ்வாறு கூறுவதாக எண்ணிய அவர்கள் இவ்வுணர்வை வெளிப்படுத்தவும் தயங்க வில்லை.

வாழும் தமிழ்ப் பண்பாட்டை மறுத்துரைத்தவர்கட்கு பல்வேறு ஆதாரங்களைத் தந்து, இறுதியில் இனியும் உங்களுக்கு இதில் ஐயம் இருந்தால் உங்களில் யாரேனும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, உங்கள் சார்பில் தமிழ்நாடு அனுப்பி நேரிடையாக ஆய்வு செய்து, நான் கூறுவது அனைத்தும் உண்மை என ஆதார பூர்வமாகக் கண்டறிந்த பின் வாழும் 'தமிழ்ப் பண்பாடு' பற்றிய சிறப்பிதழை வெளியிடுமாறு சவால் விடும் போக்கில் வேண்டினேன். கூட்டம் என் சவாலை ஏற்று 'யுனெஸ்கோ கூரியர்' இதழின் துணைத் தலைமையாசிரியர் திருமதி ஓல்கா ரோடலை அனுப்ப முடிவு செய்தனர். அவரும் தமிழகம் வந்தார்.

'வாழும் தமிழ்ப் பண்பாடு' பற்றி ஆய்வு செய்ய பாரிசிலிருந்து சென்னை வந்த அவர்களை தமிழகமெங்கும் அழைத்துச் சென்றேன். கிராமப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையை நேரிற்காட்டி விளக்கினேன். சங்கப் பாடல்களில் விவரிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறையின் அடிப்படையிலேயே இன்றைய நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறையும் அமைந்திருப்பதை நேரில் காணச் செய்தேன். நிலத்தை உழுது பண்படுத்தும் பாங்கையும் உழைப்புத் தெரியாது ஏற்றப்பாட்டிலிருந்து, நாற்று நடவுப் பாட்டுவரை இசைக்கப்படுவதை சங்கப் பாடல்களோடு ஒப்பிட்டுக் காட்டினேன். விருந்தினர்களை வரவேற்கும் பாங்கையும் அதற்கேதுவாக கிராமப்புற குடிசைவாசி கூட, வெளியூர் விருந்தாளி இரவாயினும் பகலாயினும் தங்கிச் செல்ல வாய்ப்பாக இன்றும் வீட்டைச்

சுற்றி திண்ணை கட்டும் பாங்கையும் இன்னும் பற்பல பண்பாட்டும் கூறாகவும் சங்க இலக்கியம் கூறுகிறபடியே இன்றைய தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் படிந்திருக்கும் பண்பாட்டுக் கூறுகளை - தன்மைகளை அறிந்து மகிழ்ந்தார். இன்றும் நாட்டுப்புற மக்களின் நடையுடை பாவனைகளும் கைக் கொள்ளும் பழக்க வழக்கங்களும் அவை பழம் பெரும் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதை யெல்லாம் ஆய்வு செய்து, தமிழ்ப் பண்பாட்டின் உன்னதத்தை-உயர்வை நன்கு உணர்ந்தவராக பாரீஸ் தலைமையகம் திரும்பி, நான் தொடக்கத்தில் கொடுத்திருந்த தலைப்பான "தமிழரின் வாழும் பண்பாடு" (The Living Culture of Tamils) எனும் தலைப்பிலேயே எட்டு வண்ணப் பக்கங்களோடு சிறப்பிதழாக 30 உலக மொழிகளில் வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

இதில் குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பம்சம் உண்டு. "யுனெஸ்கோ கூரியர்" இதழ் தொடங்கப்பட்ட காலம் முதலே எந்த ஒரு குறிப்பிட்ட பண்பாட்டையும் அலசி ஆராயும் முறையில் வெளியிட்டதே இல்லை. கிரேக்க, ரோம, எகிப்திய, கார்த்தேஜியப் பண்பாடுகளைப்பற்றி பேச நேர்ந்தபோது கூட அப்பண்பாடுகளின் நிலைக் களனாக அமைந்துள்ள நினைவுச் சின்னங்களை பாது காப்பது எப்படி? என்பதைப் பற்றிய ஆய்விதழாக அமைந்தது.

ஆனால், உலகப் படத்தில் குண்டூசி முனையளவேயுள்ள தமிழ்நாட்டின் பண்பாட்டை உலகப் பண்பாட்டு வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு செய்து, அதன் பல்வேறு முகப்பட்ட பண்பாட்டு உயர்வுகளை உலகளாவிய முறையில் வெளிப்படுத்திய இதழ் இது ஒன்றேயாகும்.

இதில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் என்னவென்றால், தொடக்கக் கட்டத்தில் யாரெல்லாம் தமிழ்ப் பண்பாட்டைக்

குறைத்து மதிப்பிட்டுப் பேசினார்களோ அவர்களெல்லாம் சிறப்பிதழ் வெளி வந்தபின் பலவாறு தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புகளை அடுத்த கூட்டத்தில் பாராட்டிப் பேசியதுதான். அது மட்டுமல்ல ஜப்பானிய, கொரிய, போர்ச்சுக்கீசிய மொழிகளில் வெளிவரும் பல்வேறு இதழ்களும் கூரியர் சிறப்பிதழில் வெளிவந்த தமிழ்ப் பண்பாட்டு கட்டுரைகளை மறு வெளியீடு செய்து வந்ததாகும்.

இதழின் சிறப்பை உணர்ந்த சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகம், ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகமாக இருந்த போதிலும் 'வாழும் தமிழ்ப் பண்பாடு' சிறப்பிதழை சிறப்பான விழா நடத்தி, வெளியிட்டுப் பெருமைப் படுத்தியது.

**உலகத்தமிழ் மாநாடுகள் சாதிக்காத சாதனை**

இச்சிறப்பிதழ் வெளியீட்டினால் அச்சிறப்பிதழை வெளிவர பெரு முயற்சி மேற்கொண்ட எனக்கு, அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர் சட்டத்தையே மாற்றி, கலைஞர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுவந்த 'கலை மாமணி' விருதை கலைத்துறையைச் சாராத எனக்கு 'உலகெங்கும் தமிழ்க் கலை, பண்பாட்டுப் பரப்புநர்' என்ற தலைப்பின் கீழ் வழங்கிச் சிறப்பித்தார்.

நம் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வை இன்னும் நாமே சரிவர அறிந்து, உணர்ந்து தெளியவில்லை. ஆழமான வேரில் உருவான இடப் பண்பாட்டின் உயர்வை உலகறியச் செய்ய வேண்டும்; முடிந்தால் உலகெங்கும் உள்ள ஒவ்வொருவரின் வீட்டின் படிப்பறைக்கே சென்று, தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பை விளக்கிக் கூற வேண்டும் என்ற என் தனியாத ஆர்வமும் இதன்மூலம் முழுமை பெற்றதென்றே கூற வேண்டும். "பல உலகத் தமிழ் மாநாடுகளால் சாதிக்க முடியாத இமாலயச் சாதனையை மணவை முஸ்தபா சாதித்துக் காட்டிவிட்டார்" என்று சிலம்புச் செல்வர்

ம.பொ.சி சிறப்பிதழை வெளியிட்டுப் பேசியது என் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதி மகிழ்ந்தேன்.

### அறிவியல் தமிழ்

தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் மொழியையும் வானளாவப் புகழத் தெரிந்த அளவுக்கு அதன் ஆற்றலை உணரத் தவறிவிட்டோம். தமிழைப் பொருத்தவரை அன்றையக் காலப் போக்குக்கும் தேவைக்குமேற்ப இலக்கியத் தமிழாக, சமயத் தமிழாக, தத்துவத் தமிழாக வளர்ந்த போதிலும் அடிப்படையில் தமிழ் அறிவியல் மொழியாக - அறிவியலை விளக்குவதற்கேற்ற மொழியாக அமைந்துள்ளதைக் கடந்த நாற்பதாண்டுகளாக உணர்ந்து, தெளிந்து, அதற்கேற்ப அறிவியல் கலைச் சொற்களை உருவாக்கும் பெரும்பணியை ஆற்றி வருகிறேன்.

### அழியாததற்கு அடிப்படைக் காரணம்

எத்தனையோ பண்பாடுகள் தமிழ்ப் பண்பாட்டை அழிக்க முனைந்தும் தமிழ்ப் பண்பாடு தன் தனித்தன்மை சிறிதும் குன்றாமல் இன்றும் வாழும் பண்பாடாக மக்களின் வாழ்வில் ஊடாடி வாழ்ந்து வருகிறது. அதே போன்று எத்தனையோ மொழிகள் தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்ற போதிலும் தமிழ் அழியாமல், சிதையாமல் இன்று, வலுவோடும் வனப்போடும் இயங்கும் மொழியாக இருப்பதற்குக் காரணம் ஆழமான அடித்தளத்தில் அவை உருவாகி இருப்பதுதான் என்பதை இன்று உலகம் உணர்ந்து கொண்டு வருகிறது.

ஐந்து அறிவியல் கலைச்சொற்களஞ்சிய அகராதிகளை என்னால் வெளியிட முடிந்ததென்றால், ஐந்து லட்சத்திற்கு மேல் அறிவியல் கலைச் சொற்களை உருவாக்க முடிந்ததென்றால், அதற்கு என் திறமை மட்டும் காரணமல்ல; தமிழுக்கே இயல்பாயமைந்துள்ள ஆற்றலே அதற்குக் காரணம் என்பதை அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடித்தளம் பண்பாடு

*யார்? என்று பாராமல் என்ன? என்பதில் மட்டும் கருத்தைச் செலுத்துவது தமிழ்ப் பண்பாடு. இது முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதம் (அலை) காலந்தொட்டு வருகின்ற இஸ்லாத்தின் அடிப்படைப் பண்பாடுமாகும்.*

*இஸ்லாத்தினுடைய அடித்தளப் பண்பு மனிதத்து வத்துக்கு மதிப்புக் கொடுப்பதாகும். முதலில் மனிதன் மற்றதெல்லாம் பின்புதான். முதல் நபி ஆதாம் (அலை) தொடங்கி அண்ணல் நபி (சல்) ஈராக உள்ள அனைத்து நபிமார்களும் எல்லா நாட்டிலும் எல்லா இனத்திலும் எல்லா மொழியிலும் தோன்றியிருக்கிறார்கள் என்றால் எல்லா நாட்டிலும், எல்லா இனத்திலும், எல்லா மொழியிலும் இருப்பவர்களெல்லாம் உன்னைச் சார்ந்தவர்களே என்பதுதானே பொருள்.*

‘ஹஜ்’ உணர்த்தும் அரும்பண்பாடு

*இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையான ஹஜ் கடமை இதைத்தானே இன்று உலகுக்கு வெளிச்சப்படுத்திக் கொண்டுள்ளளது. நாடாளும் மன்னனாக இருந்தாலும் நாடோடியாக இருந்தாலும் கோடீஸ்வரனாக இருந்தாலும் ஏதுமற்ற ஓட்டாண்டியாக இருந்தாலும் ஹஜ்ஜின்போது ஏஹ்ராம் உடையான தைக்கப் படாத ஒரு துண்டை உடுத்தியும் மற்றொரு துண்டைப் போர்த்தியும் ஹஜ் கடமையாற்ற கஃபத்துல்லாவில் குழுமுகிறார்கள். பல்வேறு நாட்டவர், மொழியினர், நிறத்தவர், பண்பாட்டினர், நடையுடை பாவனையினர். அங்கு குழுமியுள்ள ஹாஜிகள், வேறுபாடுகள் அத்தனையை யும் புறந்தள்ளி நாம் அனைவரும் மனிதர்கள். ஆதம் (அலை) வழிவந்த சகோதரர்கள் என்பதை மட்டும் நினைவிற் கொள்கின்றனர். மற்றவைகளெல்லாம் இருக் கும் இடந்தெரியாமல் மறைந்து போய் விடுகின்றன. இம்*

மனிதத்துவ உணர்வு மட்டுமே ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்தில் எப்போதும் உயர்ந்து நிற்க வேண்டும் என்பது ஹஜ் கடமை உணர்த்தும் உண்மை. பொருள் வசதியும் உடல் வலுவும் உள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தன் வாழ்வில் ஒருமுறையேனும் ஹஜ் கடமையை நிறைவேற்றுகையில் நேரிடையாக இவ்வுண்மை உணர்ந்து தெளிய வேண்டும் என்பதுதான் இறைக் கட்டளை.

இராமலிங்க வள்ளலார் ஏற்ற இஹ்ராம் உடை

எளிமையின் முழுமையை வெளிப்படுத்தும் இதே எஹ்ராம் உடையைத்தான் கருணை வள்ளலாகப் போற்றப்படும் இராமலிங்க வள்ளலார் தம் வாழ்நாள் முழுமையும் அணிந்து காட்சித் தந்தார். அத்துடன் இறைவனை ஒளி வடிவாக (நூர்)க் கண்டு வணங்கி வந்தார். 'உலகின் ஒளியாக இறைவன் இருக்கிறான்' என்பது திருமறை தரும் அமுத மொழியாகும்.

ஏற்றமிகு எளிமைப் பண்பு

எல்லா வகையிலும் எளிமைக்கு ஏற்றம் தருவது இஸ்லாம். நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் எப்பக்கத்தைப் புரட்டினாலும் அங்கே நீக்கமற நிறைந்திருக்கும் பண்பு எளிமையாகும். எளிமை உணர்வு பொங்கும் உள்ளத்திலேதான் தன்னைப்போல் பிறரைக் காணும் மனித நேய உணர்வு பூத்துக் குலுங்க முடியும். மனித நேயத்தின் மறுஉருவாக வாழ்ந்தவர் பெருமானார் (சல்) அவர்கள்.

மனித நேயத்திற்கோர் மாநபி

கறுப்பர் இனத்தைச் சேர்ந்த பிலால் அடிமையாக வாழ்ந்தவர். கருத்த உடலும் தடித்த உதடுகளையும் கொண்டவர். தன் எசமானனால் ஒரு மிருகத்துக்கொப்பாக நடத்தப்பட்டவர். பெருமானாரின் ஓரிறைக் கொள்கைப் பிரச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு முஸ்லிமானவர். இதனால் தன்

எஜமானரால் மிகக் கொடுமையாக நடத்தப்பட்டவர். பின் முஸ்லிமானதால் பெருந்தொகை கொடுக்கப்பட்டு விடுதலையானவர். அண்ணலாரைப் பின்பற்றி மதினா மாநகர் சென்றவர்.

மதினாவில் முதன் முதலாகப் பள்ளிவாசல் கட்டி முடிக்கப்பட்டவுடன் தொழுகை அழைப்பான 'அதான்' எனும் பாங்கொலி எழுப்ப ஒருவரை நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பலரும் அப்பணியைச் செய்ய விரும் பினர். ஆனால் அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் அப்பணியை நிறைவேற்றும் முழுத் தகுதிப்பாடுடையவர் பிலால் (நலி) அவர்களே எனத் தேர்வு செய்து அப்பணியை அவரிடத்திலே ஒப்படைத்தார். இயல்பாகவே இனிய குரல் வளம் படைத்த பிலால் (ரலி) அவர்கள் அளவிலா மகிழ்வோடு அப்பணியை நிறைவேற்றி மகிழ்வித்தார். மற்ற மனிதர்களால் வெறுத்து ஒதுக்கப்படக் கூடிய கறுப்பராக-அடிமையாக இருந்த ஒருவருக்கு உன்னதமான தொழுகை அழைப்புப் பணியைத் தந்து பெருமைப் படுத்தியதோடு, பிலால் (ரலி) அவர்களை 'செய்யதினா' என்ற அடைமொழியோடு அழைத்துச் சிறப்பளித்தார் பெருமானார் (சல்) அவர்கள். 'செய்யதினா' என்பதற்கு 'என் தலைவரே' என்பது பொருள். அறுவறுப்பான தோற்ற முடைய, அடிமையாக இருந்த ஒருவரை இறைவனின் இறுதித் தூதராக, அவனிக்கோர் அருட் கொடையாக வந்துதித்த பெருமானார் (சல்) அவர்கள் 'என் தலைவரே' என அடை மொழியிட்டு மதிப்போடும் மரியாதையோடும் அழைத்துப் பெருமைப் படுத்தினார் என்றால் மனித நேயத்துக்கு இதைவிட சிறந்த எடுத்துக் காட்டை வரலாற்றில் காணமுடியுமா?

இச் செயலின் உன்னதத்தை, அதன் விளைவை அறிந்து ணரும் வாய்ப்பு நான் 1986ஆம் ஆண்டு இரண்டாவது, முறையாக அமெரிக்கா சென்றிருந்தபோது கிட்டியது.

## உய்திக்கு ஒரே வழி

டல்லாசிலிருந்து ஹூஸ்டனை நோக்கிச் சென்று கொண்டிருந்த 'கிரே ஹவுண்டு' பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தேன். என் அருகில் அமர்ந்திருந்தவர் என்னோடு ஏதேதோ பேசிக் கொண்டு வ்ந்தார். ஒரு பஸ் நிறுத்தத்தில் இறங்கிப் போய்விட்டார். தனியாக அமர்ந் திருந்த நான் 'யா அல்லாஹ்' என்று கூறியபடி நெட்டியு யிர்த்தேன். இச் சொல்லைக் கேட்டமாத்திரத்தில் அடுத்த வரிசையில் அமர்ந்திருந்த பெரியவர் என்னை நோக்கி 'சலாம் அலைக்கும்' என்று கூறி புன்முறுவல் பூத்தபடி என்னருகில் வந்து அமர்ந்தார். இச்செயல் எனக்கு வியப்பாகவும் மகிழ்வாகவும் இருந்தது.

பஸ்ஸில் ஏறியதிலிருந்தே அந்தப் பெரியவரைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அவரது தாடியும் கையில் உருண்டு கொண்டிருந்த தஸ்பீகை ஜெபமாலையாக நான் கருதியதால் அவரை ஒரு கிறிஸ்துவப் பெரியவராக நினைக்கத் தூண்டியது. 'சலாம்' கூறியதைக் கேட்டபின் அவர் ஒரு முஸ்லிமாகத்தான் இருக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டு நானும் அவருக்குப் பதில் சலாம் கூறி, அவர் அமர இடம் ஒதுக்கித் தந்து சற்று தள்ளி அமர்ந்தேன்.

'நீங்கள் முஸ்லிமாக....' நான் முடிக்கும் முன்பே அவர் ஆர்வத்தோடு பேசத் தொடங்கினார். கிருஸ்தவனாக இருந்த நான் இஸ்லாத்தில் இணைந்து ஐந்தாறு ஆண்டுகளாகி விட்டன. ராணுவத்தில் பணியாற்றும் என் அண்ணன் மகனைத் தவிர எங்கள் குடும்பம் முழுக்க இஸ்லாத்தில் இணைந்துவிட்டோம் என்று கூறும்போது அவர் முகம் பூரிப்பால் நிறைந்திருந்தது. "உங்கள் குடும்பத்தவர்கள் யாராவது அரபுநாடுகளில் வேலை செய்கிறார்களா? நீங்கள் இஸ்லாத்தின் இணையக் காரணம் எதுவாக இருந்தது?" என்று கேட்டவுடன் அம் முதியவர் வாஞ்சையாக என்

கைகளைப் பற்றியவராக "அடிமை வாணிகம் மூலம் அடிமை விலங்குகளாக இந்நாட்டில் என் மூதாதையர் விற்கப்பட்ட பின்னர் என் குடும்பத்தவர் எவருமே அமெரிக்காவை விட்டு வெளியே சென்றது கிடையாது.

பல ஆண்டுகட்கு முன்பு எங்கள் இனத்தைச் சேர்ந்த பாக்சர் கிளேசியஸ்கிளே இஸ்லாத்தில் இணைந்து 'முஹம்மது அலி' என்ற பெயரோடு இஸ்லாத்தைப் பற்றி சொற்பொழிவாற்றியதைப் பலமுறை கேட்டேன். அப்போ தெல்லாம் அவர் பிலால் (ரலி) பற்றி குறிப்பிடுவதுண்டு.

ஒருமுறை முஹம்மதலியின் இஸ்லாமிக் ஸ்டடி சென்டருக்குச் சென்றிருந்தேன். அங்கே பிலால் (ரலி) பற்றிய நூல் கிடைத்தது. அந்நூலைப் படித்தபோது, பல விதமான எண்ண அலைகள் என்னுள் எழுந்தன. கறுப்பு இன மக்களாகிய எங்களையெல்லாம் மிருகங்களை விடச் சற்று மேம்பட்டவர்களாகக் கருதி, ஆடு, மாடுகளைப் போல் விற்று, வாங்கிவந்த காலகட்டத்தில் எங்களை யெல்லாம் மனிதர்களாக மதிக்கக் கற்பித்த ஒரு மார்க்கம் இஸ்லாம். மதீனாவில் முதல் பள்ளிவாசல் கட்டி முடிக்கப்பட்டவுடன் அதான் எனும் பாங்கொலி எழுப்ப எங்களின் இனத்தைச் சார்ந்த பிலால் (ரலி) அவர்களை அண்ணலார் தேர்வு செய்ததன் மூலம் மனிதர்களில் மேம் பட்ட உன்னத நிலையை உருவாக்கியதை அறிந்தபோது மனம் நெகிழ்ந்து விட்டேன். சட்டபூர்வமாக 'சமநிலை' என்று சொன்ன போதிலும் வெள்ளையர்களால் தாரதம் மியத்தோடு நடத்தப்படும் கறுப்பு இனமக்கள் உய்ய இஸ்லாத்தைத் தவிர வேறு வழியே இல்லை என உணர்ந்து இறைநெறியாகிய இஸ்லாத்தைத் தழுவி, பெருமானார் (சல்) அவர்களின் முன்மாதிரி பெருவாழ்வை பேணி வருகிறேன். எங்கள் குடும்பத்தில் ராணுவத்தில் பணியாற் றும் ஒருவரைத் தவிர அனைவருமே முஸ்லிமாகி விட்டோம். இப்போது என்றுமே அனுபவித்திராத

சமத்துவத்தை - மதிப்பு மரியாதையை முஸ்லிம் என்ற முறையில் அனுபவித்து வருகிறேன்" என்று கூறும்போதே அவர் கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பொழிந்தன.

## பெருகிவரும் 'பிலால்' அலை

அண்மையில் நான் ஹஜ் பயணம் மேற்கொண்டிருந்த போது கஃபத்துல்லாவில் அஸர் தொழுகையை முடித்து 'மக்ரிப்' தொழுகைக்காகக் காத்திருந்தபோது அருகில் உரையாடிக் கொண்டிருந்த இந்தோனேசியப் பேராசிரியர் ஒருவரிடம் இச்சம்பவத்தை விவரித்துக் கொண்டிருந்த போது, அருகிலிருந்த தூணுக்குப் பின்னாலிருந்து அழுகுரல் கேட்டது. அழுகுரல் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. நான் பேசி முடித்தபோது, கண்கள் நீரைச் சொறிய கறுப்பின இளைஞர் ஒருவர் என் கைகளைப் பற்றியவராக நீங்கள் இதுவரை பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண் டிருந்தேன். நீங்கள் பேசியது அத்தனையும் சத்தியம். அமெரிக்க என்ஜினீயரிங் கல்லூரி ஒன்றில் இரண்டாம் ஆண்டு படிக்கும்போது முஹம்மதலியின் சொற் பொழிவைக் கேட்டேன். அதன்பிறகு பல இஸ்லாமிய நூல்களைப் படித்தேன். அந்தக் காலத்திலேயே கறுப்பரான பிலால் (ரலி) அவர்கட்கு இஸ்லாமும் பெருமானாரும் தந்த பெருமை மிகு சிறப்புகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டு இஸ்லாத்தில் இணைந்தேன். இஸ்லாத்தில் இணைவதற்கு முன்பு ஒரு கிறிஸ்தவப் பெண்ணைக் காதலித்தேன். நான் இஸ்லாத்தில் இணைந்தபின்னர் அவளையும் இஸ்லாத்தில் இணையுமாறு கூறினேன். இணையும்வரை காத்திருப்ப தாகவும் கூறினேன். அவளும் மனம் மாறி இஸ்லாத்தில் இணைந்தபின் எங்கள் நிக்காஹ் இஸ்லாமிய முறைப்படி நடைபெற்றது. இப்போது என் மனைவி கர்ப்பமாக இருக்கிறாள். இன்னும் இரண்டாண்டுகளில் குடும்பத் தோடு ஹஜ் செய்ய திட்டமிட்டுள்ளோம். நான் இஸ்லாத் தில் இணைவதற்கு முன் வெள்ளையர்கள் என்னை நடத்திய

தற்கும் நான் முஸ்லிமானபின் என்னை நடத்துவதற்கும் மாபெரும் இடைவெளியைக் காண்கிறேன். இன்று மதிப்பாகவும் மரியாதையாகவும் நடத்துகிறார்கள். 'கறுப்பர்' என்ற மன நிலைக்கு மாறாக ஒரு முஸ்லிம் என்ற கண்ணோட்டத்தோடு சரிநிகர் சமானமாக, பவ்வியமாகப் பழகுகிறார்கள் என்று உணர்ச்சி வசப்பட்டவராகக் கூறி முடித்தார்.

இந்த நிகழ்ச்சிகளை எதற்காகக் கூறுகின்றேன் என்றால் இஸ்லாம் மனித நேயத்தை மையமாகக் கொண்டே மனித குலத்தை அணுகுகிறது. அரவணைக்கிறது.

### மனவளர்ச்சி அளவுகோலே மனித நேயம்

ஒருவர் மன வளர்ச்சி பெற்றிருக்கிறார் என்றால் அதன் கன பரிமாணத்தை அறிந்து கொள்ளும் அளவுகோலே அவர் வெளிப்படுத்தும் மனித நேய உணர்வுதான். யாராவது ஒருவர் மற்றொருவரை விரும்பினால், நேசித்தால், அவருடைய நடத்தையில் அன்பும் அக்கறையும் கட்டத் தொடங்கிவிட்டால் அவர் மனவளர்ச்சி பெற்றுவிட்டார் என்பதற்கு அதை ஒரு அடையாளமாகக் கொள்ளலாம். பிறர் மாட்டு மனித நேயத்தை எப்படிப் பகிர்ந்து கொள்ளலாம் என்பதற்கு பெருமானார் பெருவாழ்வில் எத்தனையோ சம்பவங்களைக் கூறலாம் என்றாலும் ஒரு சம்பவத்தை இங்குக் கூறுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

### முரடனை மனிதப் புனிதனாக மாற்றிய மாநபி

நபிகள் நாயகம் (சல்) அவர்களை நேரில் கண்டு, மார்க்கம் பற்றி விவாதிக்க ஒரு குழுவினர் அண்ணலார் இருப்பிடம் வந்தனர். அக்குழுவில் முரட்டு சுபாவமுள்ள மூர்க்கன் ஒருவனும் இருந்தான். அக்குழுவினர் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்ததால் நன்றாக இருட்டி விட்டது. அதற்குமேல் அக்குழுவினர் தங்கள் ஊர் போய் சேருவது

கஷ்டம். எனவே, பெருமானார் அவர்கள், அக்குழுவில் இருந்தவர்களை அங்கிருந்த முஸ்லிம் குடும்பத்திற்கு ஒருவர் வீதம் அழைத்துச் சென்று விருந்தளித்து உபசரிக்க வேண்டும் என்று பணித்தார்கள். அவ்வாறே அழைத்துச் சென்றனர். ஆனால், அந்த முரட்டு மனிதனை யாரும் அழைத்துச் செல்ல விரும்பாததால், அவன் மட்டும் தனித்து விடப்பட்டான். நிலைமை உணர்ந்த பெருமானார் அம்முரடனைத் தன் விருந்தாளியாக அழைத்துச் சென்றார்கள். பெருமானார் (சல்) அவர்களின் வீடு நோக்கி நடக்கும்போதே அம்மூர்க்கன் தன் மனதுக்குள் 'இன்று பெருமானார் வீட்டிலுள்ள அத்தனை உணவுகளை யும் உண்டு, வீட்டிலுள்ள அனைவரையும் பட்டினி போட வேண்டும்' என எண்ணியவனாய் பெருமானார் இல்லத்துள் புகுந்தான். பெருமானார் குடும்பத்துக்கு என அன்று சமைத்து வைத்திருந்த உணவு வகைகளையெல்லாம் பெருமானார் அம்முரடனுக்கு அன்போடு உண்ணக் கொடுத்தார். அக்குடும்பத்தினரும் உண்ண வேண்டுமே என்ற எண்ணம் அறவே இல்லாதவனாக, அக்குடும்பத் தினர் அனைவரையயும் பட்டினி போட வேண்டும் என்ற வஞ்சக உணர்வோடு கொஞ்சமும் மீதம் வைக்காமல் தின்று தீர்த்தான். பெருமானாரும் குடும்பத்தவர்களும் கொஞ்சமும் முகம் சுளிக்காமல் விருந்தளித்தனர்.

வந்த விருந்தாளி உண்ட களைப்புத் தீர, உறங்க உயர்தர படுக்கை விரிப்புகளை விரித்து உறங்கச் செய்தனர். மகிழ்ச்சிப் பெருக்கோடு உறங்கச் சென்ற அத்துஷ்டன் அளவுக்கதிகமாக உண்டதால் செரியாமைக் கோளாறு ஏற்பட்டு அவதிப்பட்டான். நள்ளிரவில் வாந்தி, பேதியால் அவ்வறையை நாசப்படுத்தினான். விடிவதற்குள் வெளி யேறி ஓடி விட வேண்டும் என எண்ணி, விடியுமுன் வெளி யேறினான். அவன் நீண்டதூரம் வந்தபின்பே நன்றாக விடிந்தது. அப்போதுதான் தான் தங்கியிருந்த அறையில் தன்

போர்வாளை வைத்துவிட்டு, வெறுங்கையோடு ஓடிவந்தது நினைவுக்கு வந்தது. உடல் நலிவும் வெளியேற வேண்டும் என்ற சங்கட நிலையும் அவனுக்கு வாளைப்பற்றிய சிந்தனை இல்லாமல் செய்துவிட்டது. விலைமதிப்புள்ள அவ்வாளை இழக்க அவன் உள்ளம் சம்மதிக்கவில்லை. எவ்வாறாயினும் போர்வாளை மீண்டும் பெற்றே தீருவது என்ற எண்ணத்தில் தான் இரவு தங்கியிருந்த அண்ணலார் வீடு நோக்கி ஓடி வந்தான்.

பொழுது விடிந்ததும் விருந்தாளி தங்கியிருந்த அறையை வந்து பார்த்தார் அண்ணலார் (சல்) அவர்கள். அங்கு யாரும் இல்லாததோடு அறை, படுக்கை, விலையுயர்ந்த விரிப்பு, போர்வை எல்லாமே வாந்தி, பேதியால் மிகவும் அசுத்தமாகக் கிடந்தன. இரவு விருந்தாளிக்கேற்பட்ட சுகக் கேட்டை எண்ணி வருந்தியவராக அறையைச் சுத்தப் படுத்தி, அசுத்தமாகிவிட்ட போர்வையைத் துவைக்க எடுத்துச் சென்று சுத்தப்படுத்தலானார்.

இந்நிலையில் வாளை மீண்டும் எடுத்துச் செல்ல பெருமானார் இல்லத்தை முரடன் அணுகியபோது அங்கே அண்ணலார் முரடனால் அசுத்தப்படுத்தப்பட்ட விரிப்பு களையும் போர்வைகளையும் சுத்தப்படுத்திக் கொண்டிருப் பதைக் கண்டு திடுக்கிட்டான். அக்காட்சி அவனை மிகவும் வருத்திவிட்டது.

விருந்தாளி திரும்ப வந்திருப்பதைக்கண்ட அண்ணலார் (சல்) அவர்கள் விரைந்து சென்று விருந்தாளியை அணுகி, "நண்பரே! இரவு உடல் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது எப்படி இருக்கிறீர்கள். உங்கள் உடல் சீர்பட மருந்து வைத்திருக்கிறேன். உண்டு இளைப்பாறிச் செல்லலாம். நீங்கள் மறந்து வைத்துவிட்டுப் போனவாள் இதோ எடுத்து வருகிறேன்" என்று கூறிச் சென்று மருந்தையும் வாளையும் எடுத்து விரைந்து வந்தார்.

பெருமானார் (சல்) அவர்களின் பேச்சும் செயலும் அம் முரடனின் மனதை வெகுவாக நெகிழச் செய்துவிட்டது. தன் செயலுக்காக வெட்கமும் வேதனையும் அடைந்தான். மனித நேயத்தின் சிகரமாக இருக்கும் இம் மாமனிதரைத் தவறாக எண்ணியதற்காக மனதிற்குள் குமைந்தான். தன் செயலுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டான். இஸ்லாத்தில் இணைந்து தன்னையும் மனிதப் புனிதனாக மாற்றிக் கொண்டான். இச் செயல் மனித நேயத்திற்கோர் மகத்தான சான்றாக இன்று அண்ணலார் வாழ்வில் மின்னிக் கொண்டுள்ளது.

**ஆட்டுப்பால் கறந்த அண்ணலார்**

ஒருமுறை குடும்பத் தலைவர் ஒருவர் இஸ்லாமியக் காரியமாக மற்றவர்களுடன் வெளியூர் சென்றுவிட்டார். அந்த வீட்டின் வருமானத்துக்கு ஆதாரமாக பால்கறக்கும் சில ஆடுகள் இருந்தன. அக்குடும்பத் தலைவருக்குப் பால் கறக்கத் தெரியும். ஆனால், அவரது மனைவிக்குப் பால்கறக்கத் தெரியாது. இந்நிலையில் அக்குடும்பத் தலைவர் வெளியூர் சென்றுவிட்ட நிலையில் ஆடுகளிடம் பால்கறக்க வழி தெரியாது திகைத்த அவர் மனைவி, அண்ணலாரை அணுகி தாங்கள் ஆடுகளிடம் பால்கரந்து தந்து உதவ வேண்டும் என வேண்டினார். அவரும் அவ்வாறே பால்கரந்து உதவினார். தொடர்ந்து அப் பெண் தன் கணவர் வெளியூரிலிருந்து திரும்பும் வரை தொடர்ந்து பால் கரந்து தந்து உதவுமாறு வேண்ட, பெருமானார் (சல்) அவர்களும் அவ்வாறே பால் கரந்து உதவினார் என்பது வரலாறு. இந்நிகழ்ச்சிகளெல்லாம் மனித நேயத்தை ஒவ்வொருவரும் எவ்வாறு பேணி நடந்து, இறையு வப்புக்கு ஆளாக வேண்டும் என்பதற்கு வாழும் சான்றுகளாகும்.

**மனச்சுமை இறக்கிய மாநபி**

மற்றவர்களின் கஷ்ட நஷ்டங்களில் பங்கேற்பது மட்டு

மல்ல, அவர்களின் மனச் சுமையை இறக்கிவைக்க சிறிது நேர சுமைதாங்கியாக மாறுவதும் ஓர் உயர்ந்த மனித நேயப் பண்பாகும். இதனை விளக்கும் எத்தனையோ சம்பவங்கள் பெருமானார் பெருவாழ்வில் காணலாமாயினும் அவற்றில் ஒரு சிறு சம்பவத்தை உங்களுக்கு நினைவூட்ட விரும்பு கிறேன்.

வயது முதிர்ந்த மூதாட்டியொருவர் குடும்பக் கவலை களால் மிகவும் துவண்டு போய் நின்றார். தன் மனக் கவலைகளை யாரிடமாவது சிறிது நேரம் இறக்கிவைத்து இளைப்பாற விரும்பினார். இவரது மனக்கவலைகளைக் காது கொடுத்துக் கேட்க யாருமே தயாராக இல்லை. இதனால் மன பார அழுத்தத்தால் மிகவும் சோர்ந்து போயிருந்த நேரத்தில் அவ்வழியாகப் பெருமானார் (சல்) அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவரது நல்லியல்பு களை நன்குணர்ந்திருந்த மூதாட்டி, அவரையே தன் கவலைகளை-மன உளைச்சல்களை -இறக்கி வைக்க ஏற்றதொரு சுமைதாங்கியாகக் கருதி அவரிடம் தன் கவலைகளை விவரிக்கத் தொடங்கினார். வழி நெடுக அவைகளைப் பொறுமையாகக் கேட்டதோடு அப்பிரச் சினை, கவலைகளுக்குத் தீர்வும் சொல்லிக் கொண்டு வந்தார். நீண்ட நேரம் தன் மனச்சங்கடங்களைப் பொறுமையாகக் கேட்டு தீர்வு சொன்ன அண்ணலாரின் செயல் அம் மூதாட்டிக்குப் பெரும் ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருந்தது. மனச் சுமைகளை இறக்கி வைத்தவராக, லேசான மனதுடன் நன்றி கூறிச் சென்றார்.

இதைக் கண்ணுற்ற நபித் தோழர்கள் 'இம் மூதாட்டியின் புலம்பல்களுக்கு இவ்வளவு பொறுமையோடு பதில் கூற வேண்டுமா?' என்றபோது, "வயதான அம் மூதாட்டி தன் மனச்சுமைகளை இறக்கிவைக்கத் துடிக்கின்றபோது, அவள் சகோதரனாகிய நான் ஏன் இரு கரமேந்தி வாங்கிக் கொள்ளக் கூடாது? நம்மால் பிறருக்கு மகிழ்வும் மனச்சாந்தியும்

தரமுடியும் என்றால் நாம் ஏன் அதை அவர்கட்கு வழங்கக் கூடாது?" எனக் கூறி மனித நேயத்தின் மாண்பைச் சுட்டிக் காட்டி, பின்பற்றத் தூண்டினார்கள்.

பிறருக்குத் துணையாக, ஆதரவாக இருப்பது மட்டுமே மனித நேயமாகிவிடாது. முஸ்லிமாக இருந்தாலும் முஸ்லிமல்லாதவராக இருந்தாலும் எந்நிலையிலும் யாருடைய மனமும் புண்படாமல் நடந்து கொள்வதும் மனித நேயத்தின்பாற்பட்டதுதான் என்பது நபி வழியாகும்.

ஒரு சமயம் அலி (ரலி) அவர்கள் சாலைவழியே சென்று கொண்டிருந்தார். அவருக்குச் சற்று முன்னதாக ஒரு யூதர் சென்று கொண்டிருந்தார். இதைப் பார்த்த அலி (ரலி) அவர்கள் மனதில் ஒரு விபரீத எண்ணம் எழுந்தது. ஒரு யூதனுக்குப் பின்னால், அவனைப் பின் தொடர்வதுபோல் ஒரு முஸ்லிம் நடப்பதா? கூடாது. ஒரு முஸ்லிமைப் பின் தொடரும் முறையிலேதான் ஒரு யூதன் நடக்க வேண்டும் எனக் கருதியவராகத் தன் நடையின் வேகத்தைக் கூட்டினார். மிக வேகமாக வேர்க்க விறுவிறுக்க நடந்து, அந்த யூதனைக் கடந்தவராக மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்குபவராக பெருமானார் முன்னிலையில் சென்று நின்றார். அலி (ரலி) வந்து நின்ற கோலத்தைக் கண்ட அண்ணலார் என்ன அலியார் அவர்களே! ஏதேனும் அவசர காரியமா? மிகமுக்கிய அவசரச் செய்தி ஏதேனும் கொண்டு வந்திருக்கிறீர்களா? என வினவியபோது, அலியார் அவர்கள் யூதனை முந்தி வந்தக் காரணத்தைக் கூறியபோது, அண்ணலாரின் முகம் வாட்டமடைந்து விட்டது. "மாபெரும் தவறு செய்து விட்டீர்கள் அலியார் அவர்களே! நீங்கள் முந்தி நடக்க முனைந்த காரணத்தை அந்த யூதர் அறிய நேர்ந்திருந்தால் அவர் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும். ஒரு முஸ்லிம் யாருடைய மனமும் எந்தக் காரணத்திற்காக வும் வருந்தும்படி நடந்து கொள்ளவே கூடாது. ஆயினும், தெரிந்தோ தெரியாமலோ அந்த யூதன் மனம் வருந்தும்படி

நடந்திருக்கிறீர்கள். எனவே, நீங்கள் அந்த யூதனிடம் சென்று, தங்களை முந்திச் செல்ல வேண்டும் என்பதற்காக வேகமாக நடந்து சென்றதற்காக வருந்துகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கூறி மன்னிப்புப் பெற்றுவரப் பணித்தார்கள். அலி (ரலி) அவர்களும் அவ்வாறே மன்னிப்புப் பெற்று வந்தார் என்பது வரலாறு.

### மனித நேய உணர்வின் வளர்ப்புப் பண்ணை

மனித நேய உணர்வுகளின் வளர்ப்புப் பண்ணையாக அமைவது பண்பட்ட உள்ளமும் மனப்பக்குவமுமாகும். ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் இவைகளை உருவாக்கும் வழிமுறையின் செயல்பாடுகளே ஐம்பெருங் கடமைகள். ஆன்மிக அடிப்படையில் மட்டுமல்லாது உளவியல் அடிப்படையிலும் அறிவியல் அடிப்படை யிலும் ஆராய்வோர் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

'ஈமான்' எனும் இறை நம்பிக்கை இதயத்தில் முளை விடுகிறபோதே அவன் மனிதத்வத்தை உணர்ந்து தெளியக் கூடியவனாக உருமாறத் தொடங்குகிறான். இறைவன் ஒருவனே; அவன் உருவ மற்றவன்;அவன் ஆணும் இல்லை, பெண்ணுமில்லை, அலியுமில்லை; அவன் யாராலும் பெறப்படவுமில்லை; அவன் யாரையும் பெறவு மில்லை என்ற உறுதி ஒருவனுடைய உள்ளத்தில் அழுத்தம் பெற அவன் உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் அழுக்குகள் எல்லாம் அகலத் தொடங்குகின்றன. மன மாசுகள் அகல இங்கே வாய்மை குடிகொள்கின்றது. இருளடர்ந்த வீட்டில் விளக்கேற்றினால் இவ்விருள் இருக்குமிடம் தெரியாமல் அகல, அங்கே வெளிச்சம் கோலோச்சுவது போல் இறை நம்பிக்கையால் நிரம்பிய உள்ளத்தில் தீய உணர்வுகள், சிந்தனைகள் மறைந்தொழிகின்றன. இறை நம்பிக்கை ஒருவித வைராக்கியத்தை அவனுள் தோற்றுவிக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு நேரத் தொழுகையின் போதும் இறைவன் முன்னிலையில் தொழுவது போன்ற மனநிலையைத் தொழுகையாளி பெறுவதால் இறைநெறி நின்று வாழ வேண்டும். இறை நெறி பிறழ்ந்து வாழ நேர்ந்தால் இறைத் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது. இறைநெறி பேணி வாழ்ந்தால் சுவர்க்கப் பெருவாழ்வு எனும் இறை வெகுமதி நிச்சயமாகக் கிடைக்கும் என்ற உறுதி உள்ளத்தில் எழும்போதே ஒருவித நல்லுணர்வெழுச்சி நமக்கு ஏற்படவே செய்கிறது.

வைகறைக்கு முன்னதாக உண்பதையும் பருகுவதையும் நிறுத்தி விடும் நோன்பாளி மாலை மயங்கும்வரை பசி என்பது எத்தகையது. தாகத்தின் தகிப்பது எவ்வாறானது என்பதையெல்லாம் நேரிடையாக அனுபவித்து அறிந்து, உணர்ந்து, தெளிகிறான். இவ்வாறு முப்பது நாட்கள் நோன்பு நோற்பதால், யார் உண்ண, பருக வழியில்லாது தவிக்கிறாரோ அவருக்கு வலியச் சென்று உதவத் துடித்தெழுகிறான். மனக் கட்டுப்பாட்டுடன் பிறர்க்குதவும் பேராண்மையாளனாகவும் மாறுகிறான்.

'ஜகாத்' எனப்படும் 'ஏழையின் பங்கு'ம் அதே முறையில் அமைந்திருப்பதுதான். தான் தேடிய பொருளின் நிகர வருமானத் தொகையில் இரண்டரை விழுக்காட்டை ஏழை எளியவர்கள், உடல் ஊனமுற்றோர், முதியோர் போன்றவர்களைத் தேடி இடது கை கொடுப்பது வலது கைக்குத் தெரியாமல் தானம் வழங்கும் முறை ஈகைக் குணத்தைப் பேணி வளர்க்கிறது. நாம் தேடியவையாயினும் அதில் பிறருக்கும் பங்குண்டு என்ற எண்ணமும் அனைவருக்கும் உதவ வேண்டும்; எல்லோருக்கும் எல்லாம் என்ற தயாள உணர்வை உள்ளத்தை ஊட்டி வளர்ப்பதாயமைந்துள்ளது.

ஹஜ் எனும் புனிதப் பயணம் மக்கள் அனைவரும் சமமானவர்கள், அனைவரும் ஆதம் (அலை) வழிவந்த

சகோதரர்கள், எவ்வித வேறுபாடும் தாரதம்மியமும் இல்லாது எல்லோர்க்கும் துணையாகவும் உதவியாகவும் இருப்பது இன்றியமையாக் கடமை என்பதை மனித நேய உச்ச உணர்வை ஊட்டி வளர்க்கும் உந்து விசையாயமை வதைப் பார்க்கிறோம்.

இவ்வாறு இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் அனைத்துமே மனித நேயத்தை, சகோதரத்துவத்தை ஊட்டி வளர்த்து, மனித வாழ்வை வளப்படுத்துவனவாக அமைந் துள்ளன.

எப்படியும் என்பது பிற சமயம்
இப்படித்தான் என்பது இஸ்லாம்

இஸ்லாம் விதித்துள்ள ஐந்து கடமைகளை பிற சமயங்களும் வலியுறுத்தவே செய்கின்றன. இதை யாரும் மறுத்துரைக்க முடியாது. இஸ்லாம் விதித்துள்ள ஈமான் எனும் இறை நம்பிக்கையை எந்த மதம் வலியுறுத்த வில்லை? உலகிலுள்ள சிறிய, பெரிய மதங்கள் அனைத் துமே வலியுறுத்துகின்றன . ஆனால், இஸ்லாம் மட்டுமே ஒரே இறைவன்; உருவமற்றவன் என்பதை திட்டவட்ட மாக வலியுறுத்துகிறது. தொழுகை எனும் இறை வணக்கத்தை எல்லாச் சமயங்களும் வலியுறுத்திய போதிலும் இஸ்லாம் மட்டுமே ஒரு நாளைக்கு ஐந்து முறை என வரையறுத்திருப்பதோடு எப்போது தொழ வேண்டும் எப்படித் தொழ வேண்டும் என்பதற்கு செயல் முறைகளை யும் வகுத்தளித்துள்ளது. நோன்பு எனும் விரதத்தை வலியுறுத்தாத சமயம் எதுவுமே உலகில் இல்லை. ஆனால், வைகறையிலிருந்து அந்தி நேரம் வரை ஒரு சொட்டு நீரும் பருகாமல் எதையும் உண்ணாமல் புகைக் காமல் ஒரு மாதம் முழுமையும் நோன்பு நோற்பதை இஸ்லாம் மார்க்கம் மட்டுமே வரையறையோடு கடைப் பிடிக்கப் பணிக்கிறது. ஜகாத் எனும் தான தருமத்தை அனைத்துச் சமயங்களும் தம்மளவில் வலியுறுத்தவே

செய்கின்றன. ஆனால் இஸ்லாம் மட்டுமே ஜகாத், சதக்கா, ஃபித்ரா எனப் பிரித்து தானமளிக்கச் சொல் கின்றது. ஆனால், எந்தச் சமயமும் தானமளிப்பதைக் கட்டாயப் படுத்தவில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் தம் சொத்தில் நிகர வருமானம் உடையவர், அவ் வருமானத்தில் இரண்டரை சதவிகிதம் குறிப்பிட்ட ஏழை, எளியவர்கட்கு வழங்கக் கட்டாய மாக்கிக் கட்டளை யிடுகிறது. அதேபோல் ஹஜ் எனும் புனிதப் பயணத்தை அனைத்துச் சமயங்களும் வற்புறுத்திய போதிலும் இஸ்லாம் மட்டுமே உடல் வலுவும் பொருள் வசதியும் உள் ளவர்கள் தம் வாழ்நாளில் ஒரு முறையேனும் மக்கள் நகரிலுள்ள கஃபா எனும் இறையில்லம் சென்று மீள வேண்டும் எனப் பணிக்கிறது.

சுருங்கச் சொன்னால் இவ்வைந்து கடமைகளையும் மற்ற சமயங்கள் ஒருவர் எப்படி வேண்டுமானாலும் நிறைவேற்றலாம் எனக் கூறுகின்றன. ஆனால், இஸ்லாமிய மார்க்கம் இவ்வைம் பெரும் கடமைகளையும் இப்படித் தான் நிறைவேற்ற வேண்டும் என வரையறையோடு கூடிய செயல்பாடுகளை கட்டுப்பாட்டோடு கடைப்பிடிக்கக் கட்டளையிடுகிறது.

### இஸ்லாமிய கடமைகள் ஏற்படுத்தும் நம்பிக்கை

இக்கடமைகளை முறையாகக் கடைப்பிடித்து வாழும் ஒரு முஸ்லிம் மீது மற்றவர்களுக்கு ஏற்படும் மதிப்பும் மரியாதையும் தனி. இபாதத்துடன் வாழும் முஸ்லிம் மீது மற்றவர்கள் கொள்ளும் நம்பிக்கை அலாதியானது. அத்தகையவர்களை மனிதப் புனிதனாகவே கருதிப் போற்றுவது தவிர்க்கவியலா ஒன்றாகிறது.

### தனி மனிதனும் சமுதாய மனிதனும்

உயர் பண்பு நலனைப் பேணி வாழ, வெற்றி பெற வாழ் வியல் போக்கை நன்கு உணர்ந்து தெளிய வேண்டும்.

அப்போதுதான் வாழ்வின் வெற்றிக் கனிகளை எளிதில் எட்ட முடியும். எந்த மனிதனும் இருவகைகளில் செயல் படக் கூடியவனாக இருக்கிறான். ஒன்று தனிமனிதன்; மற்றொன்று 'சமுதாய மனிதன்'. மனித சுதந்திரமும் தனி மனித சுதந்திரம், சமுதாய மனித சுதந்திரம் என இருபெரும் பிரிவுகளுக்குள் அடங்குகிறது எனலாம். ஒரு மனிதன் தன் வீட்டிலிருக்கும்போது அவனுக்கு எல்லா விதமான சுதந்திரம் உண்டு. அதை அவனளவில் எப்படி வேண்டு மானாலும் அனுபவித்து மகிழலாம். எப்படி வேண்டு மானாலும் உடையணியலாம், இல்லாமலும்கூட இருக்க லாம். தனக்கு விருப்பமானவற்றை தனக்குப் பிடிக்கும் வகையில் உண்ணலாம். பருகலாம். புகைக்கலாம். தன் வழிபாட்டு முறை எதுவாயினும் அம்முறையிலேயே சடங்கு சம்பிரதாயங்களோடு செய்து கொள்ள முழுச் சுதந்திரம் உண்டு. வழிபாட்டுச் சுதந்திரம் என்ற முறையில் அவன் சுதந்திரம் கோயில், மசூதி, சர்ச், குருத்வாரா, ஜெபாலயம், பௌத்த மடம் என அவரவர் சமயச் சார்பான வழிபாட்டுத் தல வளாகங்கள்வரை மத அடிப்படை யிலான சுதந்திரத்தை அனுபவிக்க உரிமை படைத்தவர் களாக உள்ளனர். இப்பகுதிகளெல்லாம் அவரவர் சமயச் சார்பான வரையறைகளோடு கூடிய தனிப் பகுதிகளாகும். இங்கே அவரவர் சமயச் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க அந்தந்த மதத்தவர்கட்கு முழுச் சுதந்திரம் உண்டு.

ஆனால் அதே மனிதன் தன் வீட்டைவிட்டு, தன் சமய வளாகத்தை விட்டு அனைவரும் உலவும் சமுதாயப் பொதுச் சாலைக்கு வந்து விட்டானென்றால் அவன் பொது மனிதனாக-சமுதாய மனிதனாக மாறிவிடுகிறான்.

சமுதாயவீதி என்பது பலதரப்பட்ட மனிதர்கள் உலவும் இடம். அங்கே பல்வேறு சிந்தனைகள், சித்தாந்தக் கோட் பாடுகள், நடையுடை பாவனையுடையவர்கள் உலவும்

இடம். ஒவ்வொரு சமுதாய மனிதனும் தனிப்பட்ட தம் விருப்பு வெறுப்புகளையெல்லாம் கட்டுப்படுத்திக் கொண்டு, எல்லோருக்கும் பொதுவான பொதுக் பண்பு களைப் பேணி நடப்பவனாகத் தன்னை எல்லா வகை யிலும் கட்டுப்படுத்திக் கொண்டு நடமாடுகிறான். இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள ஒரு உதாரணத்தைச் சொல்லுவார்கள். சமுதாய வீதியில் கம்பைச் சுழற்றிச் செல்ல எல்லோருக்கும் உரிமை உண்டு என்றாலும் யாருடைய கண்ணிலும் படாதபடி சுழற்றிச் செல்ல மட்டுமே உரிமை உண்டு.

எனவே, சமுதாய வீதிக்கென்று உள்ள பொதுப் பண்பைக் கையாண்டு வாழ வேண்டும். ஏரிக்கு ஏரி கரை வேண்டும். வயலுக்கு வயல் வரப்புத் தேவை. அப்போது தான் அவையவை தத்தமது கட்டுக்குள் சிறப்பாகச் செயல்பட முடியும். இந்த உண்மையைத்தான் இஸ்லாம் வற்புறுத்துகிறது.

பெருமானார் (சல்) அவர்களின் பெருவாழ்வும் வெளிச் சம் போட்டுக் காட்டிக் கொண்டுள்ளது.

### வரையறையோடு கூடிய வாழ்வியல் முறையே இஸ்லாம்

மனிதன் எல்லாவகையிலும் வரையறைக்குட்பட்டு வாழ முனைய வேண்டும் என்ற உன்னத வாழ்வியல் முறையைத்தான் இஸ்லாம் உலகுக்கு உணர்த்திக் கொண்டுள்ளது. ‘எப்படியும் வாழலாம்’ என்பது இஸ்லாமிய முறையன்று. ‘இப்படித்தான் வாழ வேண்டும்’ என்பதுதான் அண்ணலார் உணர்த்தும் இறை நெறி வாழ்க்கை முறை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டால் இன்றையச் சமுதாயச் சீர்கேடுகள் பலவும் தலைதூக்க வழியில்லாது போய் விடும். எல்லாவற்றுக்கும் மேலாக நாடு, இன, மொழி, நிற வேறுபாடுகட்கு அப்பாற்பட்ட நிலையில், எல்லோரும் ஆதாம் பெற்ற

மக்களே எனும் உணர்வில் மனிதத்தைப் பேணும் வகையில் மனித நேயத்தைப் பேணி வளர்க்க இஸ்லாமும் பெருமானார் பெருவாழ்வும் நமக்கு வழி காட்டும் ஒளி விளக்காக விளங்கி வருகின்றன.

*(10.7.98 அன்று துபாய் தமிழ்ப் பண்பாட்டுக் கழகச் சார்பில் இந்தியன் ஸ்போர்ட்ஸ் கிளப் வளாகத்தில் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம்).*

# எங்கே போகிறோம்?

அபுதாபி முஸப்பா பகுதியில் அமைந்திருக்கக் கூடிய ஈ.டி.ஏ. மெல்கோ கேம்ப் வளாகத்தில் நடைபெறுகின்ற மீலாது விழாவிலே கலந்த கொள்ளப் பேராவலோடு வந்தேன். ஆனால், விழா தொடங்கும் நேரத்தில் மின்தடை ஏற்பட்டு எங்கும் இருள் கவிந்துவிட்டது. இருளிலே நாமெல்லாம் சிறிது நேரம் இருக்க நேரிட்டது. எனினும், சிறிது நேரத்தில் மின்தடை சரி செய்யப்பட்டு எங்கும் ஒளி பரவ இவ்விழா இனிது தொடங்கியது. இருள் கவிந் திருந்த நேரத்தில் உன் சிந்தனை, உணர்வு அனைத்தும் பெரு மானார் (சல்) பிறந்து வளர்ந்து வந்த அந்த நாட்களை நோக்கிச் சென்றது. ஆயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன்னர் அறியாமை இருள் கவிந்து, மூட நம்பிக்கையில் மூழ்கிக் கிடந்த மக்களை இஸ்லாம் எனும் இறைநெறி தீபம் ஏந்தி, அறிவு வெளிச்சத்துக்கு அரபு மக்களை அழைத்து வந்த அண்ணல் நபிகள் நாதர் (சல்) அவர்களின் பிறந்த நாள் விழாவை இன்று பெரு மகிழ்வோடு கொண்டாடிக் கொண்டுள்ளோம்.

**இருளகற்றிய ஏந்தல்**

அனல் பரக்கும் இந்தப் பாலைப் பகுதியில் மின் விசிறி ஏதுமில்லாமல் இருளில் இருந்த, இந்தக் கொஞ்ச நேரத்தில்

நாமெல்லாம் வெப்ப தகிப்பினால் துடித்துப் போய் விட்டோம். அந்தச் சிறிது நேரத்தில் என் சிந்தனை அண்ண லார் இஸ்லாமிய தீபத்தைக் கையிலேந்திய அந்த நாட்களுக் குச் சென்றது. சிறிது நேர வெக்கையை - அனல் தகிப்பைத் தாங்க முடியாது தவிக்கிறோமே இஸ்லாமியச் செய்தியை மக்களிடம் கொண்டு சேர்க்க, தகிக்கும் வெயிலைத் தாங்கிக் கொண்டு, ஏச்சுக்கும் பேச்சுக்குமிடையே பிரச்சாரம் செய்தபோது பெருமானார் பட்ட வேதனை என் கண் முன்னே படமாக விரிந்தது. பொன்னைவிட மேம்பட்ட பொருளாகத் தண்ணீரைக் கருதிய மண்ணில், அனலைத் தவிர வேறு எந்த வசதியும் இல்லாத பாலைப்பகுதியில், இந்த இறைநெறியை நிலைநிறுத்த அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள், பட்ட பாடுகள், அடைந்த வேதனைகள் இவற்றையெல்லாம் ஒரு கணம் என்னால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இந்த அரைமணி நேர அசௌகரியத்தையே நம்மால் தாங்க முடியவில்லையே, அண்ணலார் தம் வாழ்நாள் முழுமையும் எப்படியெல்லாம் துன்பத்தைத் தாங்கியிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே உள்ளம் நடுங்குகிறது.

## பூரிப்பூட்டும் பொது விழா

பெருமானார் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள இங்கே பேரார்வப் பெருக்கோடு வந்து குழுமியிருக்கும் நீங்களெல்லாம் கடும் உழைப்பாளிகள். நாள் முழுதும் உழைத்த களைப்புத் தீர ஓய்வெடுக்கச் செல்லாமல் அண்ணலாரின் வாழ்வையும் வாக்கையும் செவி மடுக்க இங்கே வந்து, இப் புழுக்கத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். உங்கள் அறிவு வேட்கையைப் பாராட்டுகிறேன். தீனைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உங்கள் ஆர்வத்தைப் போற்றுகிறேன்.

இந்த விழாவில் இன்னொரு சிறப்பையும் காண்கிறேன். கடும் உழைப்பாளிகள் நிரம்பிய இம் மீலாது

விழாவுக்கு முனைவர் துரை நடராசன் தலைமை தாங்கி நடத்துவதைக் காண பெருமையாகவும் பெருமிதமாகவும் இருக்கிறது. இந்தக் கூட்டத்தில் அனைத்துச் சகோதர சமயத்தவர்களும் குழுமியிருக்கிறீர்கள். நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மனித குலம் முழுமைக்காகவும் இறை வனால் அனுப்பப்பட்ட இறுதித் தூதர். அவரது வாழ்வும் வாக்கும் மனித குலம் முழுமைக்கும் சொந்தமானது. எனவே, மீலாது விழா எம் முறையில் - அனைத்துச் சமயத்தவர்களும் பங்கேற்கும் பொது விழாவாகக் கொண்டாடப்பட வேண்டுமென விரும்புகிறேனோ அம் முறையில் அமைந்த சர்வ சமயத்தவர்கள் கொண்டாடும் பெரு விழாவாக இம் மீலாது விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### உழைப்பைப் போற்றிய உத்தமர்

எல்லாவற்றையும்விட வேறொரு சிறப்பும் இம் மீலாது விழாவுக்கு உண்டு. பெருமானார் (சல்) அவர்கள் பெரிதும் மதித்த - விரும்பிய உழைப்பாளிகளால் கொண்டாடப்படும் விழா என்பதுதான் அது. பெருமானாரைப்போல் உழைப்பை மதித்தவர்களை, உழைப்பாளிகளைப் போற்றிய வர்களை உலக வரலாற்றிலேயே காண்பது அரிது.

சாதாரணமாக அண்ணலார் அவர்கள் பள்ளிவாசலிலே அமர்ந்திருக்கும்போது, பள்ளிக்கு வரும் தொழுகை யாளிகள் பெருமானார் (சல்) அவர்களின் கரத்தைப் பற்றி முத்தமிட்டுச் செல்வது வழக்கம். அண்ணலார் புன்முறுவ லோடு அம் முத்தங்களை ஏற்றுக் கொள்வார்களே தவிர யார் கரத்திலும் பதில் முத்தமிடுவது வழக்கமில்லை.

ஒரு சமயம் பள்ளிக்குத் தொழ வந்த நாட்டுப்புற அரபி ஒருவர் மற்றவர்களைப் போல் பெருமானாரின் கையை முத்தமிடக் குனிந்தார். பெருமானார் (சல்) அவர்களின் கையைப் பற்றி அவர் முத்தமிடுவதற்கு முன்னதாக அந்நாட்டுப்புற அரபியின் கையைப் பற்றியவராக மூன்று

*முறை முத்தமிட்டார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள். அந்நாட்டுப்புற அரபியும் அண்ணலார் கையில் முத்தமிட்ட வராக அங்கிருந்து அகன்றார். இதைக் கவனித்துக் கொண்டிருந்த நபித் தோழர்கட்கு அண்ணலார் நாட்டுப்புற அரபி கைக்கு முத்தமிட்ட செய்தி, புதியதாகவும் புதுமை யாகவும் இருந்தது.*

*"நாங்களெல்லாம் முத்தமிட எத்தனையோ முறை உங்கள் கரத்தை பற்றியிருக்கிறோம். அப்போதெல்லாம் நீங்கள் சும்மா இருந்து விடுவீர்கள் நாங்கள் தான் முத்தம் கொடுப்பது வழக்கம். ஆனால், இன்று அந்த நாட்டுப்புற அரபி உங்கள் கையைப் பற்றியவுடன் அவர் கையில் மூன்று முறை மாறி மாறி மகிழ்வு பொங்க முத்தமிட்டீர்களே அதற்கு ஏதேனும் சிறப்புக் காரணம் உண்டா?" என்று கேட்டார்கள்.*

*அப்போது அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் சொன்னார்கள் :*

*"நீங்களெல்லாம் என் கையைப் பற்றுவீர்கள். அப்போது உங்கள் உள்ளங்கை பஞ்சுபோல் மிருதுவாக இருக்கும். அதைக் கொண்டு நீங்களெல்லாம் உழைக்காத வர்கள் என்பதைப் புரிந்து கொள்வேன். ஆனால், அந்த நாட்டுப்புற அரபி என் கையைப் பற்றியபோது முரடாக இருந்தது. அவரது உள்ளங்கையைத் தடவிப் பார்த்தேன். கரடு முரடாக காய்த்து இருந்தது. எந்த அளவுக்கு அவர் உழைத்திருந்தால் அவருடைய கை இந்த அளவுக்குக் காப்புக் காய்த்து முரடாகப்போயிருக்க முடியும் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்தபோது, உழைத்த கரத்தை முத்தமிடுவது, இறைவனுக்கு நான் செலுத்துகின்ற நன்றியாக, இறை வனுடைய புகழைப் பாடுவதாக எண்ணி அவர் கையை நான் முத்தமிட்டேன்" என்று கூறினார்கள் என்றால் உழைப் புக்குப் பெருமானார் அவர்கள் எவ்வளவு மதிப்பும் மரியா தையும் தந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.*

அப்படிப்பட்டவருடைய பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும் உரிமையும் தகுதியும் மற்றவர்களைவிட உங்களுக்கே அதிகம் என்பதில் ஐயமில்லை.

### உழைப்பாளரின் 'சொர்க்க' முன்னுரிமை

இச் சந்தர்ப்பத்தில் பெருமானாருடைய பெருவாழ்வில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டுவது சாலப்பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

ஒருவர் பள்ளிவாசலில் உண்ணும் நேரம், உறங்கும் நேரம் போக மீதமுள்ள நேரமெல்லாம் தொழுது கொண்டேயிருப்பார். ஆனால், அவருடைய சகோதரர் வக்து நேரத்திற்கு - தொழுகை நேரத்திற்கு மட்டுமே பள்ளி வாசலுக்கு வருவார். பர்ளு தொழுகையை மட்டும் தொழுது விட்டு அவசர அவசரமாக வெளியேறி விடுவார். இது நீண்ட நாட்களாகப் பள்ளி வாசலில் நடந்துவரும் நிகழ்ச்சி. இதை ஒரு சஹாபி - நபித் தோழர் கவனித்துக் கொண்டே வந்தார்.

ஒரு நாள் அவர் அண்ணல் நபி (சல்) அவர்களிடத்தில் இதைப் பற்றிய ஐயத்தைக் கேள்வி வடிவில் கேட்டார்: "அல்லாஹ்வின் இறைத்தூதர் அவர்களே! ஒருவர் பள்ளி வந்து தொழுது கொண்டேயிருக்கிறார். உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் மட்டும் வெளியே செல்கிறார். மற்ற நேரமெல்லாம் இறை வணக்கம்தான். மற்றொருவர் அவருடைய சகோதரர். அவர் வக்து நேரத்திற்கு மட்டும் பள்ளிக்குத் தொழ வருகிறார். வேகவேகமாகத் தொழுகையை முடித்துக் கொண்டு வெளியே சென்று விடுகிறார். இந்த இருவரில் யார் சொர்க்கத்திற்கு முதலாவ தாகச் செல்பவர்?" என்று வினாவெழுப்புகிறார்.

அப்போது அண்ணலார் அவர்கள் சஹாபியை நோக்கி! "வக்து நேரத்திற்கு மட்டும் தொழுதுவிட்டு செல்கிறாரே அவர் என்ன செய்கிறார்?" என்று கேட்டார். "மரம்

வெட்டிப் பிழைக்கிறார். மரம் வெட்டும் வேலைக்கு இடையேதான் வக்து தொழுகையை நிறைவேற்றுகிறார். இவர் வருமானத்தில்தான் இவர் சகோதரர் வாழ்கிறார்" என்று பதிலளித்தார் சஹாபி. இதைக் கேட்ட அண்ணலார் அவர்கள் "அவசர அவசரமாக வந்து தொழுகையை அதிலும் பர்ளுத் தொழுகையை மட்டும் நிறைவேற்றிச் செல்கிறாரே அவர்தான் சொர்க்கத்திற்கு முதலில் செல் வார். எந்நேரமும் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருப்பவர் இவருக்குப் பின்னால்தான் சொர்க்கம் புகுவார்" எனப் பதிலளித்தார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள்.

இதைக் கேட்ட சஹாபி மேலும் குழப்பமடைந்த வராகப் பெருமானாரை நோக்கி "எப்போதும் தொழுது கொண்டிருப்பவரை விட வக்து தொழுகையை மட்டும் அவசர அவசரமாகத் தொழுதுவிட்டுச் செல்பவருக்குச் சொர்க்கத்தில் இவ்வளவு பெரிய சிறப்புக் கிடைக்க முடியுமா?" எனக் கேட்கிறார். கேள்வி கேட்டவரின் உட் கிடக்கையைப் புரிந்து கொண்ட நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மிகப் பொறுமையாகவும் அதே சமயத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடும் விளக்கிக் கூற முனைந்தார் :

"ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் விதித்த கடமை கள் உண்டு. அக் கடமைகளின் நிறைவேற்றத்திற்கிடையே தான் அவன் இறை வணக்கத்தையும் நிறைவேற்றக் கூடிய வனாக இருக்கின்றான். இறை வணக்கத்திற்காக மட்டும் நேரத்தைச் செலவு செய்து கடமையை மறந்து விட்டால், அவன் உலகியல் வாழ்வையும் குடும்ப வாழ்வில் இறை வன் விதித்த கடமைகளையும் நிறைவேற்றத் தவறிய வனாகி விடுகிறான். ஆகவே, இறைவன் தனக்கென விதித்த கடமைகளைச் செய்து கொண்டு, அதற்கிடையே தொழுகைக் கடமைகளை நிறைவேற்றி வருவதே சிறப்பு. மரம் வெட்டும் வேலைகளுக்கிடையே தொழுகைக் கடமையையும் நிறைவேற்றியவராக, மரம் வெட்டும்

வேலையால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தின் பசித் துன்பத்தைப் போக்கி, தன் இல்லறக் கடமைகளை இனிதே நிறைவேற்றும் அந்த மரம் வெட்டிக் குத்தான் சொர்க்கம் செல்லும் இருவரில் முதலாவதாக சுவர்க்கத்தில் புகும் பேறு கிட்டும்" என்று கூறியதன் மூலம் உழைப்பின் உன்னதத்தை உணர்த்துகிறார் வள்ளல் நபி (சல்) அவர்கள். அண்ணலார் உழைப்புக்குத் தரும் மரியாதை உழைக்கும் உழைப்பாளி மக்களுக்கு உத்வேக மூட்டக் கூடியதாக உள்ளது.

இந் நேரத்தில் ஒரு இலக்கியச் செய்தி என் நினைவுக்கு வருகிறது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பெருங் கடலுள் 'ஆயிரம் மசலா' என்றொரு சிறந்த இலக்கியம் உண்டு. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலே முதலாவது இலக்கியம் இது என்ற பெருமையும் அதற்கு உண்டு. வண்ணக் களஞ்சியப் புலவர் என்று அழைக்கப் படும் சையது இபுறாஹீம் புலவரால் இயற்றப்பட்டதாகும்.

**விந்தைக் கேள்வியும் விவேக பதிலும்**

நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இஸ்லாமியப் பிரச் சாரத்தில் முனைப்போடு ஈடுபட்டிருந்த கால கட்டத்தில், அக்காலத்தில் மிகச் சிறந்த அறிஞர்களில் ஒருவராகக் கருதப் பட்ட யூத சமயத்தைச் சார்ந்த இப்னு சலாம் என்பவர் பெருமானார் (சல்) அவர்களை அணுகி உங்களை இறுதி இறைத்தூதர் என்கிறீர்களே! உங்கள் மூலம் இறைச் செய்தி வந்திருப்பதாகக் கூறியிருக்கிறீர்களே! நான் கேட் கும் ஆயிரம் கேள்விகளுக்கு உரிய விடையளித்தால், தான் இஸ்லாமிய நெறியை ஏற்பதாகக் கூறுகிறார். இதற்குச் சம்மதித்த பெருமானாரை நோக்கி ஆயிரம் கேள்விகளைத் தொடுக்கிறார். அவற்றில் ஒரு கேள்வி,

'மண் தரைக்குள் ஏறாது
வானிலிருந்து ஓடாது

அந்தரத்தில் ஓராறுண்டது
எமக்குக் கூறுமென
சுந்தரத்தோள் இபுனு சலாம்
சுருதி வழியே கேட்க,'

என்று கேட்பதாக பாடல் வருகிறது.

மண்ணிலிருந்தும் ஓடவில்லை. விண்ணிலிருந்தும் விழவில்லை. ஆனால், அந்தரத்தில் ஒரு ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த ஆறு என்ன ஆறு? என்று கேள்விக் கணை தொடுக்கிறார். அதற்கு மறுமொழியாக, 'அந்தரத்தில் ஓடுகின்ற அந்த ஆறு, உழைக்கும் மக்களின் முதுகிலிருந்து சரம் சரமாகக் கொட்டிக் கொண்டிருக்கிறதே வியர்வை நீர், அது தான் அந்தரத்தில் ஓடிக் கொண்டிருக்கும் அந்த ஆறு' எனப் பதிலளித்ததன் மூலம் உழைப்பின் மீது தான் கொண்டிருக்கும் மதிப்பையும் மரியாதையையும் புலப்படுத்தினார் என்றால் இதற்கு மேல் உழைப்பின் பெருமையை நான் விளக்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதுகிறேன்.

### மீலாது விழாவும் சுய விமர்சனமும்

பெருமானாரின் பிறந்த நாள் விழாவிலே அவரை, அவரது பணிகளை வெறுமனே புகழ்ந்துரைத்து விட்டுப் போவதில் எந்தப் பயனுமில்லை என்பதை நாம் உணர வேண்டும். இத்தகைய மீலாது விழாக்கள் உண்மையிலேயே மிகு பயன் விளைவிப்பதாயமைய வேண்டுமெனில், வள்ளல் நபி (சல்) தம் வாழ்வில் வெளிப்படுத்திய உணர்வுகள், சிந்தனை வழிப்பட்ட கருத்துகள், அக் கருத்துகளினடிப்படையிலான செயல்கள், வாழ்ந்து காட்டிய வழிமுறைகட்கு ஏற்ப, இறை மறையாம் திருமறையிலே சொல்லப்பட்ட நெறிமுறைகளுக்கு ஒப்ப நாம் எந்த அளவு வாழ்ந்திருக்கிறோம்; அல்லது வாழ இயலாமல் போயிருக்கிறோம் அல்லது ஆங்காங்கே ஏற்பட்ட சறுக்கல்

கள், வழுக்கல்கள் எவை என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் ஆய்வு விழாவாகவும் மீலாது விழா அமைய வேண்டும் என்பதுதான் என் வேணவா. இத்தகைய அறிவுப் பூர்வமான சுய விமர்சனங்கள் நிச்சயம் நம் வளர்ச்சிக்கு வழியாயமையும் என்பதில் ஐயமில்லை.

அண்ணலார் அதிகமதிகம் கேட்ட துஆ

பெருமானாரின் வாழ்க்கை ஏடுகளைப் புரட்டிப்பார்க்கும்போது அவர்கள் தம் வாழ்நாளில் மிக அதிகமதிகமாகக் கேட்ட துஆ 'இறைவா என் அறிவைப் பெருக்குவாயாக!' என்பதுதான். இதைப் போலவே இபுறாஹீம் (அலை) அவர்களும் தம் வாழ்வில் அதிகமதிகம் கேட்ட துஆ 'இறைவா! என் அறிவைப் பெருக்குவாயாக!' என்பதுதான். திருமறையும் பெருமானார் (சல்) அவர்களும் அதை அழுத்தமாகவும் ஆழமாகவும் வலியுறுத்தியுள்ளார்களோ அதில் இன்னும் பின்னடைவும், மிகமிகப் பின்னடைவாக இருப்பதுதான் வேதனையிலும் வேதனை தருவதாக உள்ளது. அதுதான் கல்வி வளர்ச்சி.

அறிவைப் பெறுவதற்கு அடித்தளமாக அமைவது கல்வியாகும். கல்வியின் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும். ஏனோ அதை மட்டும் ஒதுக்கி வைத்து விட்டு மற்ற காரியங்களையெல்லாம் சிறப்பாகவே செய்து வருகிறோம்.

அறியாதவற்றை அறிய

நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இறைவனுடைய செய்தியை வஹீயாகப் பெறுகிறார்கள். அவர்கட்கு இறைவன் முதல் செய்தியாக அறிவித்தது எது என்று உங்களிலே பல பேருக்கு நன்றாகத் தெரியும். அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமான கல்வியைப்பெறத் துணைக் கருவியான எழுதுகோலைக் கொண்டு இறைவன் கல்வி கற்பித்த பாங்கை அறிவிப்பதே அந்த முதல் வஹீ. அறியாதவற்றை

யெல்லாம் அறியச் செய்வது கல்வி. திருமறையின் முதல் அத்தியாயத்தின் தலைப்பே 'அல் கலம்' (எழுதுகோல்) என்பதாகும்.

நான் இங்குக் குறிப்பிடுவது உலகியல் கல்வி மட்டு மல்ல. முறையாக மார்க்கக் கல்வி பெறுவதிலும்கூட நாம் பின் தங்கியே இருக்கிறோம் என்பதை என்னால் எடுத்துக் கூறாமல் இருக்க முடியவில்லை.

சமுதாய முன்னேற்ற அளவுகோல்

சமுதாய முன்னேற்றத்தின் அளவுகோலாகக் கருதப் படும் கல்வியறிவு பெறுவதில் நாம் தாழ்ந்திருப்பதால் நம் சமுதாய மக்களின் முன்னேற்றம் எல்லா வகையிலும் பாதிக் கப்பட்டிருக்கிறது என்பதை நினைவூட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். போதிய கல்வியறிவு பெறாததால் தேக்க நிலை அடைந்திருக்கிறோம்.

அண்மையில் நான் கெய்ரோவிலிருந்து துபாய் வரு கின்றபோது நான் வந்த விமானம் தோஹா விமான தளத் தில் இறங்கியது. நீண்ட நேரம் நின்ற விமானத்திலிருந்து தோஹா பயணிகள் இறங்க துபாய் பயணிகள் விமானத் திலேயே அமர்ந்திருந்தோம். அப்போது விமானத்தைச் சுத்தப்படுத்த சில இளைஞர்கள் உரிய சாதனங்களுடன் வந் தனர். அவர்கள் தமிழில் பேசிக் கொண்டதால் 'நீங்களெல் லாம் எந்த ஊர்?' என்று கேட்டேன். உடனே அந்த இளை ஞர்கள் ஏதோ நான் கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டு விட்டாற்போல, அரபியில் சில வார்த்தைகளையும், இந்தி யில் சில வார்த்தைகளையும் உச்சரித்தவர்களாக விரைந்து சென்று விட்டார்கள் என்று சொல்வதை விட ஓடிவிட்டார் கள். தேள் கொட்டியவர்களைப் போல் ஏன் இந்த இளை ஞர்கள் இப்படி ஓடுகிறார்கள்? தொடக்கத்தில் எனக்குப் புரியாவிட்டாலும் பிறகு இதற்கான காரணம் எனக்குத் தெளி வாகப் புரியவே செய்தது.

பாவம்! அந்த இளைஞர்கள் தங்கள் உறவினர்களிடம் ஊர்க்காரர்களிடம் ஏதேனும் பெரிய வேலையில் சேர்ந்து பணி செய்வதாகக் கூறி வந்திருப்பார்கள். அவர்கள் எந்த ஊர் என்பதை எனக்குக் கூறினால், அந்த ஊர்க்காரர்களை நான் சந்திக்கும்போது, உங்கள் ஊர்ப் பையன்கள் தோஹா வரும் விமானங்களில் 'தோட்டி' வேலை செய்து கொண் டிருக்கிறார்கள் என்று சொல்லிவிடுவேனோ என்ற அச்சம் தான் அவர்கள் ஓட்டத்துக்குக் காரணம்.

முன்பு இதே போல் இன்னொரு சம்பவம். நான் சில ஆண்டுகட்கு முன்பு ஹஜ் பயணம் மேற்கொண்டு மதீனா வில் இருந்தபோது, அங்குள்ள மருத்துவமனைகளின் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்காக, ஒரு பத்திரிகை யாளன் என்ற முறையில் அங்கிருந்த ஒரு மருத்துவ மனைக் குச் சென்றிருந்தேன். அப்போது அங்கே ஒருவர் கழிவறை சுத்தம் செய்யும் கருவிகளுடன் பணியாற்றிக்கொண்டிருந் தார். அருகில் சென்றபோது, தெரிந்த முகம் போல் தென் படவே, சற்று உற்று நோக்கினேன். எனக்கு 'திக்' என்றாகி விட்டது. என்னை ஏறிட்டுப் பார்த்த அந்த நபர் மயக்கம் போட்டு விழாத குறையாகப் பேயறைந்தவர்போல் நின்றிருந்தார். இருவருமே ஏதும் பேச இயலாதவர்களாக சில நிமிடங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றிருந்தோம் என்றுதான் சொல்ல வேண்டும். அவன் என் நெருங்கிய உறவுப் பையன்.

அவன் சவூதிக்கு வேலைக்குச் சென்றபோது எங் களிடம் கூறியது தான் ஒரு பெரிய பழ மண்டியில் மேலா ளராக இருப்பதாக. ஆனால், இங்கு உண்மையிலே பார்க் கும் வேலை கழிவறைகள் சுத்தம் செய்யும் தோட்டி வேலை. எந்தத் தொழிலையும் தாழ்த்திச் சொல்லவில்லை. எந்தத் தொழிலிலும் உயர்வு தாழ்வு பார்ப்பவன் இல்லை. எல்லாமே தொழில்தான். அவன் துப்புறவுப் பணி செய் கிறான். நான் பத்திரிகைத் துறையில் எழுத்துப் பணி செய் கிறேன். இருவர் செய்யும் பணிக்காக மாத ஊதியம்

பெறும் ஊழியர்கள்தான். இதில் எவ்வித வேற்றுமையும் இல்லை.

ஆனால், போதிய படிப்பறிவு பெற்றதால் ஏர் கண்டிஷன் வசதிகளோடு கூடிய சூழலில் பணியாற்றி பெருந்தொகையை ஊதியமாகப் பெற முடிகிறது. படிப்பறிவு இல்லாத காரணத்தினால் எவ்வித வசதியும் இல்லாத சூழலும் தரம் தாழ்ந்த நிலையில், மிகக் குறைந்த ஊதியம் பெறக் கடுமையாக உழைக்க நேரிடுகிறது. இதைக் கௌரவமாக வெளியே சொல்ல இயலாததால் தோஹா நண்பர்கள் ஓடவும், மதீனா நண்பர் திகைத்து நிற்கவும் நேரிடுகிறது.

பாலையாகும் இளமை வாழ்வு

நம் மக்களில் பெரும்பாலோர் திரை கடலோடியும் திரவியம் தேடு என்பதற்கு ஏற்ப நீண்ட தொலைவுக்குச் சென்று வேலை செய்து சம்பாதிக்கப் பெரிதும் விரும்புகிறார்கள். நம் அரை குறைப் படிப்பின்போதே அந்த ஆசை நம் குடும்பத்தவர்கட்கு வந்து விடுகிறது. எட்டாம் வகுப்பை எட்டிப் பிடிப்பதற்கு முன்பே நம் சம்பாத்தியத்தை நம் குடும்பங்கள் எதிர்பார்க்கவும் தொடங்கி விடுகின்றன. போதிய படிப்பறிவு இல்லாத காரணத்தால் கடின உழைப்பு வேலைகளே நமக்குக் கிடைக்கின்றன. அந்தக் கடின உழைப்பை வெளி நாட்டில் செய்தால் இன்னும் அதிக வருமானம் கிடைக்குமே என்று கருதி இங்கே வந்து விடுகிறோம். நம் ஊரைவிட வளைகுடா அதிக வருமானம் தருகின்ற காரணத்தால் இந்தக் கொடிய வெயிலையும் தகிப்பையும் பொறுத்துக் கொண்டு பணம் சம்பாதிப்ப திலேயே குறியாக இருந்து, நம் வாழ்வின் மையப் பகுதியை இப்பாலைப் பகுதியிலே தொலைத்துவிட நேரிடுகிறது. இளம் மனைவியோடு, பிஞ்சுக் குழந்தைகளோடு கொஞ்சி வாழும் இனிய வசந்த காலம் பல இளைஞர்களுக்கு வறண்ட காலமாகவே போய்விடுகிறது என்பது ஒரு நிதர்சன உண்மை.

இதற்கெல்லாம் எதை அடிப்படைக் காரணமாகக் கருதுகிறீர்கள்? பணம் சம்பாதித்தால் போதும் என்ற நினைப்புத்தான். பணம் மட்டுமே வாழ்க்கைப் பாதுகாப்பு என்ற எண்ணமே பலரிடமும் அழுத்தமாக இருந்து வருகிறது. நம் வாழ்க்கைக்குத் தேவையானவற்றுள் பணம் முக்கியமான ஒன்று என்பதில் ஐயமில்லை. ஆனால், பணமே வாழ்க்கை என்று எண்ணுவது அறிவீனம். நமது வாழ்க்கைக்குப் பாதுகாப்பு பணமல்ல; கல்வியே உண்மை யான பாதுகாப்புக் கவசம். இதை அலீ (ரலி) அவர்கள் அற்புதமாக விளக்கிக் கூறியுள்ளார்கள். "பணத்தை நீங்கள் பாதுகாக்க வேண்டும். ஆனால், கல்வி உங்களைப் பாதுகாக்கிறது" என்பது அவரது பொருள் மொழியாகும்.

எது பாதுகாப்பு?

இந்தப் பேருண்மையைச் சற்று ஆழ்ந்து பார்த்தால் அதன் முழுப் பொருளும் நமக்குத் தெளிவாகப் புரியும். நண்பர்களே! நீங்கள் ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். நாம் படாத பாடுபட்டுப் பணத்தைச் சம்பாதித்து, நீண்ட நாளைக்குப் பிறகு பதினைந்து நாள் விடுமுறையில் ஊர் திரும்புகிறோம். மற்றவர்கள் மத்தியில் நம் செல்வச் செழிப்பைக் காட்டுவதற்காக தடபுடலாகச் செலவு செய் கிறோம். பிள்ளைகளுக்குச் 'சுன்னத்' (கத்னா) செய்யும் நிகழ்வைக்கூட தெருவடைத்து பந்தல் போட்டு, பாட்டுக் கச்சேரியோடு நடத்துகிறோம். ஊர் விருந்து தந்துப் பாராட்டுப்பெற விரும்புகிறோம். சம்பாதித்துச் சென்ற பணத்தையெல்லாம் ஆடம்பர, டாம்பீகச் செலவுகளில் தொலைத்து விட்டுப் பழைய ஃபக்கீரைப் போல மீண்டும் பாலைவன நாடுகட்கு பழையபடி பாடுபட திரும்புகிறோம். சிலர் சம்பாதித்த பணத்தைக் கொண்டு ஊரிலே நிலமாகவும் வீடாகவும் தோப்புகளாகவும் வாங்கிப் போடுவதிலேயே கவனமாக இருக்கிறார்கள். இவைகளெல்லாம் ஊரிலே உள்ளக் குடும்பத்துக்கும் தனக்கும் தக்க பாதுகாப்பாக

இருக்கும் என்ற நினைவாலேயே இக் காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால், உண்மையிலே இவையெல்லாம் தக்க பாதுகாப்புத்தானா? இவைகளை நாம் பாதுகாக்கும் வரைதான், இவை நமக்குப் பயன்படும், பாதுகாப்பளிக்கும். இவை நமக்குப் பாதுகாப்புப் பொருள்கள்போல் தோற்றமளிப்பனவே தவிர நிரந்தரமான பாதுகாப்புக் கேடயங்கள் அல்ல. காலப் போக்கில் இவை கைமாறிக் கொண்டே இருக்கக் கூடியன வாகும்.

ஆனால், ஒரேயொரு பாதுகாப்பு மட்டும்தான் தேடிய காலத்திலிருந்து நாம் மண்ணறைக்குள் செல்லும்வரை அல்லும் பகலும் ஒரு விநாடியும் நம்மைவிட்டுப் பிரியாது, எலும்பும் சதையும்போல் நம்மோடு இரண்டறக் கலந்து இணைந்து நின்று பாதுகாப்பளிக்கும் 'கல்வி'தான் அந்தப் பாதுகாப்பு.

அந்தக் கல்வியை முறையாகத் தேடிப் பெற்றவர்கள், கற்றுத் தேர்ந்தவர்கள் உயர் வருமானம் தரக் கூடிய பணிகளில் எளிதாக அமர்கிறார்கள். குளிர் பதன அறைகளில் அமர்ந்தவர்களாக பெரும் வருவாயை ஈட்டுகிறார்கள். சுகவாசிகளாக மாறுகிறார்கள். போதிய கல்வியைப் பெறாதவர்கள் பாலை வெயிலில் வெந்து நோகிறார்கள்.

## நத்தை வேகம் புலிப் பாய்ச்சலாகும் விந்தை

உயர் கல்வி பெற பொருளாதார வசதியும் சூழலும் முக்கியம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், இவையிரண்டும் சரிவர வாய்க்கப் பெறாதவர்களும் தங்கள் தன் முனைப்பால், இடையறா முயற்சியால், கடும் உழைப்பால் உயர் கல்வி பெற்று, சாதனை புரிகிறார்கள். இதன் மூலம் நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்த தங்கள் குடும்பப் பொருளாதார இடர்பாட்டை முற்றாகப் போக்கி, விரைந்து முன்னேற்றங்காண வழி வகுக்கிறார்கள். அத்தகையவர்

களில் ஒருவனாகத்தான் நான் இன்று உங்கள் முன் ஒரு உதாரணமாகவே நின்று கொண்டிருக்கிறேன்.

## குடத்து விளக்கு துலக்கம் அடைய

பிறக்கும் ஒவ்வொருவரையும் இறைவன் அறிவுக் குறைபாடுடையவர்களாகப் படைப்பதில்லை. இறைவனின் ஆத்ம அம்சத்தைப் பெற்றவனாகப் பிறக்கும் ஒவ்வொருவரிடமும் அறிவாற்றலுக்கான கருவை உட்கொண்டே பிறக்கிறான். ஆனால், அவ்வறிவு குடத்துள் இட்ட விளக்குபோல் துலக்கமற்றதாக இருக்கிறது. வேறொரு முறையில் சொல்வதென்றால் கூர்மையிலா வாள் போல் அவன் மன உறையுள் பொதியப்பட்டுள்ளது. கல்விப் பயிற்சி எனும் சாணை அவ்வறிவாற்றலைக் கூர்மைப் படுத்துகிறது. இவ்வாறு கூர்மையடையும் அறிவு, சிந்தனையை வளர்க்கிறது. அறிவாற்றலும் சிந்தனைத் திறமும் பகுத்தறிவைக் கூர்மைப்படுத்துகிறது. இதன் மூலம் துலங்காததெல்லாம் துலக்கமாகிறது. புரியாததெல்லாம் புரிகிறது. இருட்டுக்குள் இருந்த உண்மைகளெல்லாம் வெளிச்சத்துக்கு வர, அவன் அகவாழ்வும் புறவாழ்வும் செப்பமடைகிறது; செழிப்படைகிறது.

## நீரின் அளவே நிராம்பல்

பிற உயிரினங்களிலிருந்து நம்மை வேறுபடுத்துவது இப் பகுத்தறிவுதான். மற்ற உயிரினங்களுக்கு ஐந்து வகையிலான அறிவுத் தன்மைகளை அளித்த வல்ல அல்லாஹ், மனிதனுக்கு மட்டும் சிறப்பறிவாக பகுத்தறிவு எனும் ஆறாவது அறிவைக் கொடுத்துள்ளான். எதையும் பகுத்துப் பார்த்து உண்மைத் தன்மையை உணர்ந்து தெளியும் இந்தப் பகுத்தறிவை மேலும் மேலும் கூர்மைப் படுத்துவதுதான் கல்விப் பயிற்சி. நீரின் அளவே நிராம்பல் இருப்பதுபோல் ஒருவன் கல்விப் பயிற்சிக்கேற்ப அவன் பகுத்தறிவு அவன் வாழ்வின் வழிகாட்டுதலுக்குரிய ஒளி விளக்காக அமைய முடியும்.

மற்ற உயிரினங்களிலிருந்து மேம்பட்டவனாக மனிதனைக் காட்டும் அளவுகோலே, அவனுக்கு இறைவன் அளித்த பகுத்தறிவுதான் என்று கூறினேன் அல்லவா? அதைப் பற்றிச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தால் அதன் தனித்துவம் நமக்கு நன்கு விளங்கும்.

மனிதன் உலக உயிரினங்களில் பலமிக்கவனா என்றால் இல்லை. அவனைவிட உலகிலே மிகப் பலம் வாய்ந்த உயிரினம் யானையாகும். அதற்குள்ள உருவ அளவும் உடல் வலுவும் வேறு எந்தஉயிரினத்துக்கும் இல்லை. ஆனால் நோஞ்சானான ஒரு யானைப் பாகன், யானையின் கழுத்திலே - அதன் மத்தகத்திலே ஒய்யாரமாக அமர்ந்து கொண்டு, தன் இஷ்டப்படியெல்லாம் யானையை ஆட்டுவிக்கிறான். தன் கையில் ஒரு சிறிய குச்சி வடிவி லான அங்குசத்தை வைத்துக் கொண்டு, தான் ஏவுகின்ற வேலையையெல்லாம் செய்யச் செய்கிறான். அவன் விருப்பப்படியெல்லாம் அம் மாபெரும் மிருகம் ஓடியாடி வேலை செய்கிறது என்றால் அதற்கு என்ன காரணம்? போதிய பலமில்லா மனிதனுக்கு பலமிகுந்த யானையை ஆட்டிப் படைக்கும் வல்லமையைத் தந்தது எது? அவன் பெற்றுள்ள புத்தி பலம் தான். யானையை ஆட்டிப் படைப் பதற்கான உத்தியைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு, அதன்படி அதைச் செயல்படுத்தி, யானையை அடக்கி, தன் விருப்பம்போல் ஆட்டிப் படைக்கிறான்.

சிங்கம், புலிகளைவிட வலிமை மிக்கவனா மனிதன் என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது. சிங்கமோ புலியோ ஓங்கி அறைந்ததென்றால் மனிதனின் பற்களெல்லாம் பொல பொலவென்று கொட்டி விடும். அவ்வளவு உடல் பலம் உள்ளவை. என்றாலும் அவை களை சர்க்கசில் ஒரு சாட்டையைக் கையில் வைத்துக் கொண்டு 'ரிங் மாஸ்டர்' பல சிங்கம், புலிகளை ஒரே நேரத்தில் தன் இஷ்டப்படியெல்லாம் ஆட்டிப் படைக்க

முடிகிறதென்றால் அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? கொடிய மிருகங்களான சிங்கம், புலிகளை எவ்வகையில் செயல்பட்டால் ஆட்டிப்படைக்கலாம் என்ற உத்தியைச் கையாளக் கற்றிருப்பதுதான். இதுதான் அவனுக்குள்ள மாபெரும் பலம். இத்தகைய வல்லமையை அவனுக்கு அளித்திருப்பது அவன் பெற்ற கல்வியறிவு. கல்வி என்று நான் இங்கே குறிப்பிடுவது வெறும் ஏட்டுக் கல்வியை மட்டுமல்ல; அனுபவப்பூர்வமாக கற்றுத் தேர்ச்சி பெறும் பட்டறிவும் ஒருவகைக் கல்விதான்.

**'உம்மி' நபி உணர்த்தும் உயர் கல்வி**

மண்ணுள் மறைந்து கிடக்கும் வைரக் கட்டிகளைப் பார்த்தால் அவை அந்த நிலையில் அதிகம் ஒளி பாய்ச்சுவ தில்லை. பழுப்பு நிறக் கற்கள் போன்று இருக்கும். அவை களை அளவான துண்டுகளாக வெட்டி, அவற்றை உரிய முறையில் உரிய வடிவில் இயந்திரம் மூலம் பட்டை தீட்டும் போதுதான் அவை ஒளியுமிழும் வைரக் கற்களாக வடிவம் பெறுகின்றன. எத்தனை பட்டைகளை, எந்த வாட்டத்தில் வடிவமைத்தால் அவை ஒளியை பீச்சியடிக்கும் என்ற நுட்ப முறைகளை நன்கு கற்றுணர்ந்த பட்டை தீட்டும் வல்லுநரால் அதை சாதிக்க முடிகிறதென்றால், வைரத்தின் தன்மைகளை யும் பட்டை தீட்டும் தொழில் நுட்ப முறைகளையும் நன்கு அறிந்திருப்பதுதான் காரணம்.

எழுத்து வாயிலாகக் கற்றறியும் கல்வியாக இருந் தாலும் தொழில்முறை மூலம் அறிந்துணர்ந்து தெளியும் பட்டறிவாக இருந்தாலும், ஒருவனது அறிவை வளர்த்து வளப்படுத்துவதாகவே அமைகிறது. இவ்விரு முறைகளும் கல்வி என்றே அழைக்கப்படுகிறது. இவற்றுள் படிப்பறிவு மூலம் பெறுகின்ற கல்வி, அனைத்துத் துறை அறிவையும் நூல்கள் மூலம் தொடர்ந்து எந்நிலையிலும் பெற இயல்வ தால் இஃது மிகவும் முக்கியத்துவமுடையதாகக் கருதப்படு கிறது. இதன் முக்கியத்துவத்தை மற்றவர்களைவிட

மிகவும் உணர்ந்ததோடு, அதனைச் செயல்படுத்திக் காட்டியவர் நபிகள் நாயகம் (சல்) அவர்களாவர். தான் எழுதப் படிக்கக் கற்காத 'உம்மியாக நபி' இருந்தபோதிலும் கல்வியின் பெரும் பயனை இவரளவுக்கு உணர்த்தியவரை வரலாற்றில் காண்பதரிது.

சிந்தனை ஊற்றுக்கண்

அது மட்டுமல்ல, இறைமறையாகிய திருமறை

"........ ஒரு சமுதாயம் (நல்லறிவாலும் நற்செய்கையாலும்) தன்னை மாற்றிக் கொள்ளாதவரை இறைவனும் அதனை நல்லருளால் மாற்றி விடுவதில்லை."(13:11)

என உறுதிப்படக் கூறுவதிலிருந்து மனித வாழ்வின் உயர்வுக்கு, நலம் பயக்கும் நற் சிந்தனைகளுக்கு, அதன் வழிப்பட்ட அருஞ்செயல்களுக்கு உர மூட்டும் உந்து சக்தியாக, பெருகி வரும் ஆற்றல்களுக்கு ஊற்றுக் கண்ணாக கல்வியே அமைய இயலும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெள்ளத் தெளிவாகிறது.

அன்றைய சமுதாயச் சூழலில் போரில் தோல்வியுற்று போர்க் கைதிகளாகப் பிடிபடுபவர்கள் விடுதலை பெற வேண்டுமெனில் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிணையத் தொகையாகத் தந்தால் விடுதலை பெற முடியும். இதுவே அக்காலத்திய நிலை. ஆனால், கல்வியின் முதன்மைத் தன்மையை நன்குணர்ந்த நாயகத் திருமேனி, போரில் சிறைப்படும் கைதிகளில் கற்றவர் யாரேனும் இருந்தால் அவர் பிணைத் தொகை தந்து விடுதலை பெறாமல், கல்வியறிவு பெறாத குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு ஒரு குறிப்பிட்ட காலம் கல்வி கற்பித்தால் போதும், அவர் பிணைத் தொகை கட்டாமலேயே விடுதலை பெற முடியும் என்ற புது முறையைப் புகுத்தினார்கள் என்றால், கல்வியறிவின் இன்றியமையாத் தேவை எத்தகையது என்பதை இச் செயல் மூலம் அற்புதமாகப் புலப்படுத்தினார்கள் பெருமானார்.

### மறுமைக்கும் தொடரும் கல்விப் பயன்

*படிப்பின் பயன் எதுவரை? ரொம்பப் பேர் நினைக்கிறார்கள், என்னதான் முயன்று படித்தாலும், அப்படிப்பு இந்த வாழ்வு முடியும் வரைதான். நம் வாழ்வு முடியும்போது நம் படிப்பும் முடிந்து விடுகிறது. எனவே, நாம் வாழும் காலத்தில் வளமோடு வாழ பொருள் தேடவும் புகழ் பெறவும் மட்டுமே இப் படிப்பு நமக்கு உதவுகிறது என எண்ணுகிறார்கள். இந்த எண்ணமே தவறானதாகும்.*

*அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இந்த உலகக் கல்வியால் விளையும் பயன்களைப் பற்றி மிகத்தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இந்த உலகில் நீங்கள் பெற்றுள்ள கல்வியை, நீங்கள் கூர்மைப்படுத்திக் கொண்ட நுண் ணறிவை உங்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்களுக்கும் பயன்படுத்தினால் அதன் பலன்களை இந்த உலக வாழ்வில் மட்டுமல்லாது அந்த உலகின் மறுமை வாழ்விலும் முழுமையாய் அனுபவிப்பீர்கள் என்பது நபிகள் நாயகத்தின் வாக்கமுதாகும். இதன் மூலம் போதிய கல்வியறிவு பெறும் இறைவனின் நல்லடியார் நன்மையின் உச்சத்திற்கே சென்று விடுகிறார் என்பதுதான் உண்மை.*

*நாம் பெறுகின்ற கல்வி, அதன் விளைவால் வளர்த்துக் கொள்ளும் அறிவு வெறும் பணம் சம்பாதிப்பதற்காக மட்டுமல்லாது, செல்வச் செழிப்பைப் பெருக்கிக் கொள்வதற்காக மட்டுமே பயன்படுத்தாது, இறைக் கடமை களையும் நாம் செவ்வனே நிறைவேற்றி மறுமைப் பேறுகளையும் இவ்வுலக வாழ்வின்போதே பெறுகின்ற முயற்சியிலேயும் முனைப்பாக ஈடுபட, அக் கல்வி பெரும் உந்து சக்தியாக அமைய வேண்டும். அழுத்தமான இறை நம்பிக்கையும் அதை வலுப்படுத்தும் ஐவேளைத் தொழுகை யும் நோன்பும் ஜகாத்தும், இறையில்லம் ஏகலும் மறுமைப் பெரு வாழ்வுக்கு நம்மை விரைந்து அழைத்துச் செல்லும் ராஜபாட்டைகளாகும். அப் பெருவழியில் நம்மை வெற்றி*

நடைபோட வழிகாட்டும் ஒளி விளக்கே நாம் பெறுகின்ற கல்வி.

இவ்வுலக வாழ்வில் உண்மையான, நிலையான சிறப்பையும் உயர்வையும் உருவாக்கித் தருவதே நாம் பெறுகின்ற கல்விதான். கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு என்பது பழம்பெரும் பழமொழி.

குறுகி வரும் உலகு

உலகில் உருவாகி நிலை பெறும் மாற்றங்களுக்கு - வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாயமைபவர்கள் படித்தவர்களே, அவர்தம் சிந்தனைத் திறமே என்பதை யாரும் மறுக்க முடியாது. மனித குல வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், எத்தனையெத்தனையோ மாற்றங்கள், மாற்றங்களின் தொடர் நிகழ்வால் ஏற்பட்ட வளர்ச்சி. இறைவன் தந்த அறிவை - கல்வியை மனிதன் பெருக்கிக் கொண்டதன் விளைவால் புதியனவற்றை எளிதாக புனைய முடிந்தது. அறிவியல் கண்டுபிடிப்புகளை உருவாக்க இயன்றது. புதிய புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் உலகின் உருவையே தலைகீழ் மாற்றமடையச் செய்ததோடு, பரந்து பட்ட உலகை குறுக்கியும் விட்டது. போக்குவரத்துச் சாதனங்களின் துரித வளர்ச்சி உலகின் தூரத்தை மைல்களாக - கிலோ மீட்டராகக் கணக்கிட்ட நிலையிலிருந்து மாறி மணிக் கணக்கில் கணக்கிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இங்கிருந்து இந்தியாவை எத்தனை மணியில் அடைய முடியும். இங்கிலாந்து செல்ல எவ்வளவு நேரம், அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் செல்ல ஆகும் நேரம் எவ்வளவு என்று கணக்கிடும் நிலை உருவாகியுள்ளது. இன்னும் சொல்லப்போனால் கம்யூட்டர் என்று சொல்லப்படும் கணினிக் கருவியும் அதனுள் செயற்படும் இன்டர்நெட் என்று அழைக்கப்படும் இணையமும் இன்று உலகையே உள்ளங்கையில் சுழலச் செய்யும் நிலை. விரல் நுனியில் சுழலச் செய்யும் வியக்கத்தக்க நிலை உருவாகியுள்ளது. பரந்து பட்ட உலகம்

ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். இன்றும் இந்தக் கசப்பான உண்மையை நம் சமுதாயம் முழுமையாக உணர்ந்து தெளியவில்லை. உணர்ந்தவர்கள் காரிலே சென்று, குளிப்பதன அறைகளிலே தம் வாழ்க்கையை நடத்துகிறார்கள். மற்றவர்கள், தகிக்கும் வெம்மையில் வெறும் உடல் உழைப்பை மட்டுமே நம்பி கைக்கும் வாய்க்கும் எட்டாதவர்களாக வாழ்கிறார்கள்.

ஐந்தாம் வகுப்பு முடிக்குமுன் அபுதாபி

எந்தக் கல்வி அவன் வளர்ச்சிக்கு வளமான வாழ்வுக்கு ஏணியாக அமைகிறதோ அந்த ஏணியில் ஓரிரு படிகள்கூட ஏற முற்படுவதில்லை. ஐந்தாம் வகுப்பைத் தாண்டாமலே அபுதாபிக்குப் பிழைப்புத் தேடி ஓட முற்பட்டு விடுகிறான். சிலர், பள்ளிக்கூடத்தின் படியைக்கூட மிதிக்க முற்படாமல் தன் உடல் வலுவை மட்டுமே நம்பி, துபாய்க்கும் அரபு நாடுகளுக்கும் பயணப்பட்டு விடுகிறார்கள். இங்கு கொளுத்தும் வெயிலிலும் தகிக்கும் தணலிலும் புழு வெனத் துடித்து பொருளீட்ட முற்படுகிறார்கள். அவன் மட்டுமல்ல, அக் குடும்பத்தில் உள்ள யாராவது ஒருவர் படித்து மேல்நிலை பெற எண்ணுவதுமில்லை.

ஊரிலே முன்னூறு ரூபாய் வருமானம் பெற முடியாத நிலையில், துபாயில் முன்னூறு திர்ஹம் அதாவது மூவாயிரம் ரூபாய் கிடைக்கிறதே என்று மட்டுமே எண்ண முடிகிறதே தவிர, ....... கல்வியறிவு பெற்றிருந்தால் மாதம் மூவாயிரம் திர்ஹம் அதாவது முப்பதினாயிரம் ரூபாய் வருமானம் பெறக் கூடிய நிலை பெற்றிருக்கலாமே என்று எண்ணுவதே இல்லை.

ஆண் மக்களின் நிலையே இதுவென்றால் நம் பெண் மக்களின் நிலையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். கல்வி ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது என இஸ்லாம் போதிக்கிறது. இன்னும் சொல்லப் போனால் கல்வியை இருவருக்கும் கட்டாயமாக்கியுள்ளது. நம்

இன்று சின்னஞ்சிறிய கிராமமாக உருமாறி விட்டது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், மனிதன் பெற்ற கல்வியறிவும் அதனை ஆதாரமாக் கொண்ட அறிவியல் கண்டுபிடிப்புகளுமேயாகும.

விரிந்து வரும் அறிவு

ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் அறிவை அளித்திருக்கிறான். ஆனால், அவ்வறிவு குடத்துள் வைக்கப்பட்ட குத்து விளக்காக உள்ளது. ஆனால், மனிதன் தன் முயற்சியால் - உழைப்பால் குடத்துள் வைக்கப்பட்ட அறிவை குன்றின் மேல் ஏற்றப்பட்ட பேரொளியாக வளர்த்து, வளப்படுத்திக் கொள்ள வேண்டும். அது மனிதன் கையிலேதான் உள்ளது. அறிவை வளர்க்கும் அற்புதச் சாணையாக சிந்தனா சக்தி அமைய வேண்டும். உலக உயிர்களிலே சிந்திக்கும் சக்தியை - பகுத்தறியும் பண்பை இறைவன் மனிதனுக்கு மட்டுமே வழங்கியுள்ளான். அப் பகுத்தறிவை வளர்த்து வளப்படுத்தும் வளர்ப்புப் பண்ணையே கல்விக் கூடங்கள். கல்வி பெறும் கடமையை ஆணுக்கு மட்டு மல்ல, பெண்ணுக்கும் கட்டாயக் கடமையாக்கியுள்ளான் வல்ல அல்லாஹ். ஆனால், நம்மில் ஒரு சிலர்தான் அக் கடமையை ஓரளவு நிறைவேற்றி வாழ்வில் நலமும் வளமும் பெறுகிறோம். இதனை சில சமுதாயங்கள் திறம்படச் செயல்படுத்தி தங்கள் நிலையை தொடர்ந்து மேம்படுத்தி மேட்டுக் குடியினராக ஆகிவிடுகின்றார்கள். ஆனால், இஸ்லாமிய சமுதாயத்தில் விரல் விட்டு எண்ணத் தக்க விழுக்காட்டினரே போதிய அளவு கல்வியறிவு பெற்று வாழ்வின் உயர் நிலையை அடைகிறார்கள். படித்தவர்களைப் பயன்படுத்தி பொருளாதாரத்தைப் பெருக்கிச் சமுதாயத்தில் உச்ச நிலை பெறுகிறார்கள். இவர்களின் எண்ணிக்கையும் விரல் விட்டு எண்ணத்தக்கதேயாகும்.

கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரை இன்றும் நம் இஸ்லாமிய சமுதாயத்தில் போதிய விழுப்புணர்ச்சி

சமுதாயத்தில் இன்னும் பெண் கல்வி பின் தங்கியதாகவே உள்ளது. ஒரு ஆணை விட, பெண் படித்தால் அக் குடும் பத்திலே விரும்பத்தக்க மாற்றங்கள் விரைந்து ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். ஒரு பெண் படித்தவளாக இருந்துவிட்டால், அவள் சந்ததி முழுவதும் கல்வி எனும் ராஜபாட்டையிலிருந்து ஒரு அங்குலம்கூட விலக இயலாது. குடும்பத்தின் அனைத்து அம்சங்களிலும் மாற்றங்களும் திருத்தங்களும் ஏற்படுவது எளிதாகி விடும். குடும்பத் தலைவன், தலைவியாகிய ஆணும் பெண்ணும் கல்வி கற்றவர்களாக அமைந்து விட்டால் அக்குடும்பத்தின் அகவாழ்விலும் புறவாழ்விலும் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட, வெற்றியின் உச்சத்தை நோக்கி அக்குடும்பம் செல்வதை யாரும் தடுக்கவியலாது.

### அக, புற மாற்றங்களுக்கு அடிப்படை

எனவே, மாற்றத்திற்கு அடிப்படை அம்சம் கல்வி யாகும். கல்வி வளர்ச்சியே அக, புற மாற்றங்களுக்கு அடிப்படை. இதை நாம் நன்கு உணர்ந்து தெளிய வேண்டும். இறைவன் மிகத் தெளிவாகத் தன் திருமறையில் 'நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்தினால் அதற்கு நான் துணை யிருப்பேன். உங்கள் நற் செயல்களால், நீங்கள் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்றால் நானும் உரிய மாற்றத்தை ஏற்படுத்த மாட்டேன்' எனக் கூறுவதிலிருந்து நம் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளின் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முதல் பங்களிப்பு நம்மிடமிருந்துதான் வர வேண்டும்.

இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமென்றால் வல்ல அல்லாஹ் அளித்துள்ள அறிவைக் கொண்டு நாம் நான்கு தப்படி எடுத்து வைத்தால் வல்ல அல்லாஹ் பதினாறு தப்படி எடுத்து வைப்பதற்கான உத்வேகத்தையும் ஆற்றலையும் அளிக்கிறான். மாறாக, நாம் எதுவுமே முன் முயற்சி எடுக்கவில்லையென்றால் இறைவன் நமக்காக

எதுவுமே செய்வதில்லை. நம் வாழ்க்கை சலனமற்று, ஆணி அடித்தாற் போன்ற தேக்க நிலையைப் பெற்று விடும் என்பதுதான் நூற்றுக்கு நூறு உண்மை.

எனவே, இயல்பாக இறைவன் நம்முள் பொதிந்து வைத்திருக்கும் அறிவை கல்வியின் மூலம் வளர்த்து, வளப்படுத்திக் கொண்டால் நாம் வளரவும் வாழவும் அற்புதமான வழியேற்படும். எனவேதான், அண்ணலார் வரை வந்த நபிமார்கள் அனைவருமே இறைவனிடம் அதிகமதிகம் கேட்ட துஆ 'இறைவனே என் அறிவைப் பெருகச் செய்' என்பதுதான். இறைவன் தந்த அறிவைப் பெருக்குவதன் மூலமாக நம் திறமையை வளர்த்துக் கொள்ள முனைய வேண்டும். அச் சாதனைகள் பொருளை மட்டும் கொண்டு வந்து சேர்ப்பதில்லை; புகழையும் கொண்டு வந்து சேர்க்கும்.

## அண்ணலார் தந்த அரும்பெரும் அறிவுரை

கல்வியின் பெருமையைப் பற்றி திருமறை மட்டுமல்ல, நபிகள் நாயகம் (சல்) அவர்களும் எடுத்துக் கூறி விளக்கி யிருக்கும் ஒவ்வொரு வாசகமும் எண்ணியெண்ணி வியக்கத்தக்கனவாக அமைந்துள்ளன. 'கல்வி எங்கிருந் தாலும் அதனை முயன்று தேடிப் பெறுபவன் தூய செயல் செய்தவனாவான்' என்பது அவரது பொன் மொழிகளுள் மிகப் பொருள் பொதிந்த வாசகமாகும். தொடர்ந்து மிக உயர்ந்த செயல்களையெல்லாம் யார் யார் தொடர்ந்து செய்ய முடியும் என்பதைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

"கல்வி எங்கிருந்தாலும் அதனை முயன்று தேடிப் பெறுபவன் தூய செயல் செய்தவனாவான்; கல்வியின் சிறப்பையும் பயனையும் எடுத்துக்கூறி விளக்குபவன், இறைவனின் புகழைப் பாடியவனாவான்; கல்வியை நாடிச் செல்பவன் இறை துதி செய்தவனாவான்; கல்வியைக் கற்பிப்பவன் அறம் செய்தவனாவான்; தகுதி மிக்க மக்களிடையே கல்வியை பரவச் செய்பவன் இறை

வணக்கம் செய்தவனாவான்" எனத் தெளிவுபடக் கூறியுள்ளார்.

இந்தப் பொன்மொழியைக் கூர்ந்து கவனித்தால் பல பேருண்மைகளை நம்மால் புரிந்து கொள்ள முடியும். மாதா, பிதாவுக்கு அடுத்த சிறப்புமிகு இடத்தைக் குருவுக்கு - கல்வி கற்பிக்கும் ஆசானுக்கு அளிப்பது தமிழ் மரபு. ஏனெனில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் அத்தகு சிறப்புக் குரியவராக விளங்குகிறார். 'கல்வி கற்பிப்பவன் அறம் செய்தவனாவான்' என்று கூறுவதன் மூலம் கல்வி கற்பிக்கும் ஆசான் அறிவு வழி ஒழுகுபவன்; உண்மையான அறத்தைச் செய்யும் அறிவாளி; கல்வி கற்பிக்கும் அறச் செயல் மூலம், கற்போரையெல்லம் மனிதப் புனிதர்களாக மாற்றும் தகைமையுடையவர்களாக அமைகிறார்கள் என்பது எண்ணி மகிழத் தக்கதாகும்.

'தகுதிமிக்க மக்களிடையே கல்வியைப் பரவச் செய்தவன் இறை வணக்கம் செய்தவனாவான்' எனும் கருத்தும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். உண்மையான இறைவணக்கம் என்றால், நீ பெற்ற அறிவை, பெற்ற அனுபவத்தை, பெற்றுள்ள திறமையை, வளர்த்துக் கொண்ட தகுதியை, சிந்தாமல் சிதறாமல் மற்றவர்கட்குக் கிடைக்க முயற்சி செய்ய வேண்டும். இல்லாதவர்கட்கு அவை கிடைக்குமாறு செய்ய வேண்டும். மற்றவர்கட்கு அவற்றை ஈவதன் மூலம் அவர்களும் வளர, வளமோடு வாழ வாய்ப்பேற்படுகிறது. இந்தச் செயலில் எவன் ஒருவன் முழு மனதோடு ஈடுபடுகிறானோ அவனே உண்மையான இறை வணக்கத்தில் ஈடுபட்டவனாவான் என்பது பெருமானாரின் உட்கிடக்கையாகும்.

### இறைவனே குருவான விந்தை

நான் நினைந்து நினைந்து வியந்து போகிறேன். பிறந்தது முதல் கல்வி கற்கும் வாய்ப்பே பெறாத ஒருவரால் இந்த அளவுக்குக் கல்வி கற்பிப்பதன் மேன்மையை

இவ்வளவு வலுவாக, தெளிவாகக் கூறிய மற்றொருவரை வரலாற்றில் காணவே இயலாது என்பது ஒப்ப முடிந்த உண்மையாகும்.

ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் ஒரு பேருண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஓரெழுத்தும் கற்க இயலா 'உம்மி' நபியாக நாயகத் திருமேனி இருக்க வேண்டும் என்பது இறை நாட்டமாகும். பள்ளி செல்லும் பருவத்தை எட்டுவதற்கு முன்பாகவே தன் பெற்றோரை இழந்து, அநாதையாகி விடுகிறார். தன் தாத்தா, சித்தப்பா போன்றோரின் அரவணைப்பில் வாழ வேண்டிய கட்டாயச் சூழ்நிலை. இத்தகு சூழலை இறைவனே அண்ணலாருக்கு உருவாக்கியுள்ளான். கற்க வேண்டுமென்றால் ஒரு 'உஸ்தாது' விடம் செல்ல வேண்டும் ஒரு ஆசிரியரி டத்திலேதான் கல்வி கற்க முடியும். அதைத்தான் நீங்களும் நானும் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் பெருமானா ரின் நிலை முற்றிலும் வேறு. அவருக்கு இறைச் செய்தி 'வஹீ' யாக வரவிருக்கிறது. அவர் ஒரு ஆசிரியரிடத்திலே, ஒரு மனிதரிடத்திலே அவர் கல்வி கற்றால் அம் மனிதர் அவருக்குக் 'குரு' ஆகிவிடுவார். ஆனால், அவருக்கு இறைவனே 'குரு'வாக அமைய வேண்டும் என்பது இறை நாட்டம். எனவேதான், இறைவன் நாயகத் திருமேனியை அவரது இறுதி வரையில் ஓரெழுத்தும் மனிதரிடம் கற்காத 'உம்மி' நபியாகவே இருக்கச் செய்திருக்கிறான் . இப்படிப் பட்ட 'உம்மி' நபிதான், உலகத்தில் எவருமே வலியுறுத் தாத அளவுக்குக் கல்வியின் மேன்மையை, சிறப்பை சிந்தை கொள் மொழியில் செப்பிச் சென்றுள்ளார் என்பது எண்ணி வியக்கத்தக்கதாகும்.

**ஆணினும் பெண்ணுக்கே**

இன்னொரு உணர்வையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன். கல்வி என்றாலே நாம் ஆண் மக்களைத்தான் நினைக்கிறோம். பெண் மக்களைப் பற்றி

அதிகம் நினைப்பதுமில்லை. அவற்றைப் பற்றி அதிகம் சிந்திப்பதும் இல்லை. கல்வி என்பது அதிலும் வாழ்வியல் படிப்பு என்பது ஆண் மகனுக்கு மட்டுமே உரியது என்ற எண்ணம். நம் எல்லோரிடமும் மேலோங்கியுள்ளது. பெண் மக்கள் மார்க்கக் கல்வி பெற்றாலே அதிகம் என்ற நினைவுதான் நம்மிடையே இன்றுவரை கோலோச்சிக் கொண்டுள்ளது. இஃது எவ்வளவு தவறான, இஸ்லாத்துக் குப் புறம்பான செயல் என்பதை யாரும் அதிகம் உணர்வ தாகத் தெரியவில்லை. ஏன் இந்த ஏற்றத் தாழ்வு?

இஸ்லாத்தைப் பொறுத்தவரை மகன் உயர்வு, மகள் தாழ்வு என்ற நிலை அறவே இல்லை. அப்படி எண்ணுவதே பெரும் தவறு. கையிலிருக்கும் ஐந்து விரல்களிலே கட்டை விரல் சற்று பருமனாக இருப்பதைப் போல், குடும்பத்தைக் காப்பவன் என்ற முறையில் கணவனுக்கு ஒருபடி மேலான நிலை உள்ளதே தவிர, மற்றபடி கையிலுள்ள விரல்கள் அனைத்தும் ஒரே நிலையுடையவைகளேயாகும்.

சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எத்தகைய நிலை என்பதை அண்ணலார் அளவுக்குத் தெளிவுபடக் கூறியவர் வேறு எவரும் இலர். நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவர்கள் ஆணும் பெண்ணும் என்பது பெருமானாரின் பொருள் மொழியாகும். உலகத்தில் எந்தச் சமயமும், எந்த மத ஆச்சாரியர்களும் இந்த அளவுக்கு ஆணையும் பெண்ணையும் சமநிலைப்படுத்திப் பேசியவர்கள் எவரும் இல்லை என்றே கூறலாம்.

### அன்றே பெண்ணுரிமை

இன்றைக்குப் பெண்ணுரிமை பற்றிப் பேசாதவர்களே இல்லை! "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என புரட்சிக் கீதம் எங்கும் இசைக்கப் படுகிறது. சரி நிகர் சமானமாக வாழும் இந்த நாட்டிலே பட்டங்கள் பெறவும் சட்டங்கள் செய்யவும் அவற்றை வலுவாகப் பாரில் செயல்படுத்த பெண்கள் உள்ளோம் எனப்

புரட்சி முழக்கங்கள் முழங்கப்படுகிறது. பெண்களைத் தட்டி எழுப்ப, பாரதி எப்படியெல்லாம் முயன்றுள்ளார் என்பதைக் கண்டு பேருவகையடைகிறோம்.

ஆனால், இஸ்லாத்தைப் பொறுத்தவரை 1400 ஆண்டுகட்கு முன்பே ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமான நிலையில் வாழும் வழி வகுக்கப்பட்டு விட்டது. ஆணும் பெண்ணும் ஒரே ஆன்மாவிலிருந்து உருவான வர்கள். பெண்ணுக்கு ஆன்மாவும் உண்டு. அறிவும் உண்டு; ஆற்றலும் உண்டு. சொல், செயல், வீரம், விவேகம் எதிலும் பெண் ஆணுக்குப் பின் தங்கியவளல்ல என்பதை உலகுக்கு உணர்த்திய மார்க்கம் இஸ்லாம்.

இந்தச் சமயத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டியது என் கடமை எனக் கருதுகிறேன். நாணயத்தின் இருபக்கமென ஆணையும் பெண்ணையும் உருவகித்து நாயகத் திருமேனி பேசிய காலகட்டத்தின் நிலை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெண்களை பிண்டப் பொருளாகக் கருதிய காலம். பெண்கள் கடுகளவு மரியாதையும் இல்லாமல் மிகக் கேவலமாக நடத்தப்பட்ட காலம். பெண் குழந்தை பிறந்துவிட்டதென்றால் அதை உடனே உயிரோடு புதைத்து மண்ணுக்கு இரையாக்கிவந்த காலம். வாலிபப் பெண்களைப் பந்தயப் பொருள்களாகக் கருதிச் சூதாட்டக் களத்தில் பரிமாறிக் கொள்ளப்பட்ட காலம். உலகிலேயே மிக இழிவான பிறவி பெண்கள் என்ற எண்ணம் எல்லோரிடமும் அரசோச்சி வந்த கால கட்டம்.

இத்தகைய காலச் சூழலிலேதான் ஏந்தல் நபி (சல்) விண் முட்ட பெண்ணின் பெருமையைப் பேசியதோடு, செயல் வடிவில் பெண்களின் பெருமையை, மதிப்பை, மரியாதையை நிலை நாட்டினார். 'சொர்க்கம் எங்கே இருக்கிறது?' என வினா தொடுத்தவருக்கு 'உன் தாயின் காலடியிலே சொர்க்கம் இருக்கிறது' என பதில் கூறி, பெண்ணின் பெருமைக்கு முரசு கொட்டியவர் பெருமானார் (சல்) அவர்கள்.

படித்த பெண்களைப் பார்ப்பதே குதிரைக் கொம்பாக இருந்த ஒரு பிற்போக்குச் சமூகத்தில் ஆண்களைப் போலவே அனைத்துப் பெண்களுக்கும் கல்வியைக் கட்டாயமாக்கியவர் அண்ணல்நபிகள் நாயகம் (சல்) அவர்கள்.

ஒரு ஆண் படித்தால் அவனளவில் வளர்ச்சிக்கு வழி ஏற்படும். ஆனால் ஒரு பெண் படித்தால் அந்த குடும்பமே வளர்ச்சியை நோக்கி வீறுநடை போட முடியும். ஒரு பெண் வீட்டில் படித்திருந்தால், அவள் படிப்பின் சிறப்பையும் மேன்மையையும் நிச்சயம் உணர்ந்தவளாயிருப்பாள். அக் குடும்பத்தில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளையும் திறம்பட வளர்த்து கல்வியறிவு மிக்கவர்களாக்குவாள். திட்ட மிட்டுக் குடும்பத்தை சீரும் சிறப்புமாக செம்மையுற நடத்தி, வெற்றிப் பாதையில் குடும்பத்தை வழிநடத்திச் செல்வாள். அதனால்தான் பாரதிதாசன் 'படித்த பெண்ணுள்ள குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' எனப் பாடி பெருமைப்படுத்தினார்.

பெண் கல்வி குடும்பத்தின் ஆணி வேராக அமைகிறது. ஆணி வேர் வளமாகவும் வலுவாகவும் இருந்தால் அம் மரத்திலிருந்து கிளைக்கும் கிளைகளும் வலுவோடும் வனப் போடும் அமைவது இயல்வு. பூக்கும் பூவும் காய்க்கும் கனியும் கண்களுக்கு மட்டுமல்ல வாழ்க்கைக்கே வனப் பூட்டுவனவாகும் என்பதில் ஐயமில்லை.

படித்தத் திறம்பட்ட பெண் தன் கணவனையே பிள்ளை யாகக் கொண்டு தன் கட்டுப்பாட்டில் இருக்கச் செய்யுமள வுக்கு ஆற்றல் பெற்றவளாகி விடுகிறாள். ஆண் செய்யும் அத்தனை காரியங்களுக்கும் தோன்றாத் துணையாக நின்று உதவுகிறாள். எனவேதான் 'ஒவ்வொரு ஆணின் வெற்றிக் குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்' என்ற புது மொழியே உலகில் எழுந்துள்ளது.

பெண் படிக்காதவளாக அமைந்து விட்டால் அவ்வீடு இருண்ட வீடாக ஆகிவிடுகிறது. பெற்ற பிள்ளைகளைத்

தாயைப் போல் பேணி வளர்க்கத் தந்தையால் இயலாது. அதிலும் படித்த பெண், தாயாக அமைந்து விட்டால், அக் குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகட்கு அத் தாயே முதல் ஆசிரியையாக அமைந்து விடுகிறாள். அவளது பிள்ளைகள் பள்ளியில் ஐம்பது விழுக்காடு கல்வியும், தாயிடம் ஐம்பது விழுக்காடு கல்வியும் பெறுவதன் மூலம் நூற்றுக்கு நூறு விழுக்காடு கல்வி பெற்ற, நல்ல ஒழுக்கங் கற்ற பிள்ளை களாக நம் பிள்ளைகள் அமைய அருமையான வாய்ப்பு உருவாகிறது. ஆண் பிள்ளைகளைவிடப் பெண் பிள்ளை கட்குக் கவனச் சிதறல் குறைவாக இருப்பதால், பள்ளி, கல்லூரிப் பாடங்களில் முழுக் கவனம் செலுத்தி, கல்வி கற்க, தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்பேற் படுகின்றது. இதனால்தான் இன்றும்கூட ஆண்டு இறுதி யில் வெளிவரும் படிப்பு முடிவுகளில் ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகளே அதிக விழுக் காட்டினராக வெற்றி பெறுகிறார்கள். ஏனெனில், பெண்கள் எப்போதுமே பொறுப்புணர்வு மிக்கவர்கள்.

**உண்மைச் சேமிப்பு**

இஸ்லாம் பெண்களுக்குப் பெருமையளித்தும் கட்டயாக் கல்வியைக் கடமையாக்கியிருந்தாலும் இன்னும் நம் சமுதாயம் பெண் கல்வியில் அதிக நாட்டமில்லா திருப்பது வேதனைக்குரியதாகும். ஆணின் கல்வியிலேகூட அதிக ஆர்வமில்லாத நிலைதான் எங்கும் நிலவுகிறது.

நம் சந்ததிகளுக்கு நாம் சேர்த்து வைக்கும் உண்மை யான சேமிப்பே அவர்கட்கு நாம் அளிக்கும் மார்க்க கல்வியு ம், சமுதாயக் கல்வியும், ஒழுக்கவியல் அடிப்படை யிலான உண்மையான செயல்பாடுகளும்தான் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். தாய் படித்தவளாக அமைந்து விட்டால் அக் குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகள் படிக்காமல் போக வாய்ப்பில்லை. கல்வியினால் வாழ்க்கைத் தரமும் வாழ்க்கைப் போக்குமே மாறி

விடுகிறது. வாழ்க்கையில் மேலும் உயர முடியுமே தவிர தாழ வழியில்லை.

இதையெல்லாம் கேட்கும்போது உங்களில் சிலர் நினைக்கலாம். ஏதோ ஒரு சூழலில் படிக்க இயலாமல் போய்விட்டது. இங்கு வந்து கஷ்டப்படவேண்டியதாகி விட்டது. இனிமேல் நாம் படித்து முன்னேறவா முடியும்? நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்ற தொய்வு மனப்பான்மையில் தங்களுக்குள் குமையலாம். அப்படிக் குமையவோ மனத் தளர்ச்சி கொள்ளவோ வேண்டிய தில்லை. படிப்புக்கு வயது வரம்பே கிடையாது. வாழ்நாள் முழுமையும் கல்வியறிவு பெற முடியும். வேண்டிய தெல்லாம் எழுச்சி, உணர்வு, முயற்சி, உழைப்பு.

**என்றும் கல்வி**

'வாழ்நாள் கல்வி' என்ற முழக்கம் எங்கும் எழுந் துள்ளது. குறிப்பாக இந்தியா போன்ற வளரும் நாடுகளிலும் வளரா நாடுகளிலும் இம் முழக்கம் உரத்த குரலில் ஒலிக்கப்படுகிறது. படிக்க இயலாமல் போனவர்களும் படிப்பை பாதியில் நிறுத்தியவர்களும் பள்ளி, கல்லூரிக்குச் செல்லாமல், தேர்வு எழுதி வெற்றியடைவதற்கு, பட்டம் பெறுவதற்கு பல்வேறு வாய்ப்புகளைப் பல்கலைக் கழகங்கள் இன்று உருவாக்கி உதவி வருகின்றன. அஞ்சல் வழிக் கல்வி என்பது பணியாற்றிக் கொண்டே, வாழ்க்கைக்கு வேண்டிய வருமானத்தைத் தேடிக் கொண்டே, மேன்மேலும் படிக்க, அதன் மூலம் உத்தியோகத்தில் உயர்ந்து கொண்டே செல்ல இனிய வாய்ப்பு இன்றைய தலைமுறைக்கு வாய்த்திருக்கிறது. இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி, அஞ்சல் வழிக் கல்வி மூலம் பட்டம் பெற்று, பணியில் உயர்ந்தவர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். தாய் நாட்டில் வாழ்பவர்களுக்குத்தான் இந்த வாய்ப்புண்டு, வேற்று நாட்டில் வாடும் நம் போன்றவர்கட்கு அவ் வாய்ப்புக்கு வழியில்லை என்று

உங்களில் யாரும் கருதிவிட வேண்டாம். இந்தியப் பல்கலைக் கழகங்கள் குறிப்பாக தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு, இந்தியர்களுக்கு அத்தகைய வாய்ப்பை நல்கும் வகையில் தங்கள் அஞ்சல் வழிக் கல்வியை விரிவுபடுத்திக் கொண்டு வருகின்றன. இதன் மூலம் இருந்த இடத்தில் இருந்தவாறே தேர்வு எழுதி வெற்றி பெற்று பட்டங்களையும் அதன் மூலம் உயர் பதவிகளையும் எளிதாகப் பெற முடியும்.

கல்வி மூலம்தான் வாழ்வில் கரையேற, உயர்நிலை பெற முடியும் என்பதில் உறுதி கொண்டு, ஊரில் உள்ள நம் வீடுகளில் உள்ள படிக்கும் வயதுள்ள தம்பி தங்கைகளை, அண்ணன், அக்காள்களை தவறாமல் படிக்க உங்கள் ஊதியத்தின் பெரும் பகுதியைச் செலவிடுங்கள். உங்கள் வருவாயின் முதல் செலவு கல்விச் செலவாக இருக்கட்டும். வெறும் பணச்சேமிப்பு உங்கள் குடும்பத்திற்குப் பாதுகாப் பாக அமைவதைவிட நீங்கள் அளிக்கும் கல்விதான் அவர் களுக்கு உண்மையான பாதுகாப்பாக அமைய முடியும். இதை உணர்ந்து செயல்படுபவர்கள் நம் குடும்பங்களிலே மிகமிகக் குறைவாகவே இருக்கிறார்கள். பாலைவனத் தணலிலே புழுங்கிச் சம்பாதித்து அனுப்பும் பணத்தைப் படாடோபமாகச் செலவிட்டு, தங்கள் வள வாழ்வைப் பிறருக்குப் பகட்டாகக் காட்டுவதில் செலுத்துகின்ற கவனத்தில் ஒரு சிறு பகுதியைக் கூட, இளம் சிட்டுகளின் கல்வி வளர்ச்சியிலே காட்டுவதில்லை. எட்டாம் வகுப்பை எட்டுவதற்கு முன்பே அரபு நாடுகளுக்கும் வளைகுடா நாடுகளுக்கும் வேலை தேடி அனுப்புவதிலே அதிகக் கவனம் செலுத்துகிறோம். போதிய கல்வி பெற்றால் அதிக வருமானம் தரவல்ல பணியில் அமரவும் அதிக உடல் உழைப்பு இல்லாமல் மன உழைப்பை மட்டும் செலவிட்டு, வளமாகவும் வசதியாகவும் வாழலாமே என்ற எண்ணம் நம்மிடத்திலே அழுத்தம் பெற வேண்டும். மனிதப் புனிதர் மாநபி (சல்) அவர்களின் வாழ்வையும் வாக்கையும் நினைவு

கூரும் இவ் விழாவிலே அதற்கான உறுதி மொழியை நீங்கள் எடுத்துக் கொண்டால், படித்த சந்ததிகள் உருவாக, எதிர் காலத்தில் வளமாக வாழ, வளர வாய்ப்பேற்படும்.

இங்கு வேலை தேடி வருபவர்கள் எல்லாம் எத்தனையோ இடர்ப்பாடுகளைத் தாண்டி வந்தவர்கள் என்பதை நான் அறிவேன். நிலபுலன்களை அடகு வைத்தும் கடன் வாங்கியும் இங்கு வந்துள்ளோம். அவற்றை யெல்லாம் அடைத்தபின், நம் சம்பாத்தியத்தின் ஒவ்வொரு காசும் நம் குடும்பத்தின் உயர்வுக்கும், வளரும் சந்ததிகளின் உயர்வுக்கு உதவுவதாக அமைய வேண்டுமே தவிர அவை பெரும் விழலுக்கு இறைத்த நீராக, வீண் ஆடம்பர டாம்பீக வாழ்க்கைக்கு பயன்படுவதாக அமைந்து விடக் கூடாது. நாம் சம்பாதிப்பதில் எவ்வளவு நியாயம் தேடுகிறோமோ அதே நியாய உணர்வு அப் பணத்தைச் செலவு செய்வதிலும் காட்ட வேண்டும்.

### மறுமைக்கு வழிகாட்டும் இம்மை எளிமை

எளிமையாக வாழ்ந்து வாழ்க்கையில் ஏற்றம் பெற வழிகாட்டியவர் ஏந்தல் நபி. வெளி நாட்டுக்குச் சென்றவரின் சம்பாத்தியம். நம் வீட்டிற்குள் நுழையும்போதே, ஆடம்பரத்தையும் டாம்பீகத்தையும் ஊதாரித்தனத்தையும் உடன் அழைத்துக் கொண்டு தான் உள்ளே நுழைகிறது. பிறர் மெச்ச பெருமையாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் படாடோபமாக வாழ முயல்கிறோம். இதனால் நியாயமான செலவுகள் 'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே வேரிற் பழுத்த பலா'வாக ஆகிவிடுகின்றன. ஆனால், எவ்வளவு செல்வச் செழிப்பு ஏற்படினும், எளிமையாக எப்படி வாழ வேண்டும் என்பதற்கு அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் வாழ்க்கை ஒரு வழிகாட்டி நெறியாக நமக்கு இன்றும் திகழ்கிறது.

அரபகம் முழுமையும் அண்ணலாரின் ஆட்சியின் கீழ் வந்தபோதிலும் அண்ணலார் ஆடம்பரம் தலைகாட்ட

வாழ்ந்தாரில்லை. அவரது தனி வாழ்வில் எளிமையே அரசோச்சியது. அண்டை நாட்டு மன்னர்களெல்லாம் அண்ணலாரைக் காணவும், உரையாடி நட்பை வளர்த்துக் கொள்ளவும் நாட்டங்கொண்டு பரிவாரங்களோடு வந்து தங்கள் தகைமையை அண்ணலார் முன் நிலைநாட்ட முனைந்தனர். வருகிற மன்னர்கள், மன்னர்களுக்கேயுரிய நடையுடை பாவனைகளோடு, பந்தாவாக வந்து செல்வதை வழக்கமாகக் கொண்டனர். ஆனால், மாமன்னர் நிலையி லிருந்த பெருமானாரிடம் எந்த மாற்றமும் இல்லை. மதினா வில் முதன் முதல் எத்தகைய ஆடையணிகளுடன் நுழைந்தார்களோ அதே எளிய உடையைத்தான் மன்னர் களைச் சந்திக்கும்போதும் அணிவதை வழக்கமாகக் கொண்டார். எளிய உடையுடன் ஈச்சம்பாய் விரித்த கட்டிலில் அமர்ந்திருப்பதோடு வரும் மன்னர்களையும் அவ்வாறே அமரச்செய்வது வழக்கம். இக் காட்சி உமறு (ரலி) வுக்கு மனச் சங்கடத்தை உண்டாக்கும். உடையலங் காரத்துக்கும் பெருமானார் எளிய உடைகளுக்குமிடையே ஒரு மாபெரும் இடைவெளி - வித்தியாசம் இருப்பதைப் பலப்போதும் உமர் (ரலி) கண்டு, வேற்று நாட்டு மன்னர் களைச் சந்திக்கும்போதாவது பெருமானார் உயர்ந்த ஆடைகளை அணிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். சந்திக்க வரும் மன்னர் பிரதானிகளும் மகிழ்வார்களே என எண்ணிக்கொள்வார். இதைப் பற்றி நாயகத் திருமேனி யுடன் பேச வேண்டுமென விழைந்தாலும் கேட்கத் துணிவில்லாமல் இருந்து விடுவார்.

ஒருநாள் அண்ணலாரோடு தனிமையில் உரையாடிக் கொண்டிருக்கும்போது, பேச்சு வாக்கில் இதைப் பற்றிப் பெருமானாரிடம் பேச விழைந்தார். ‘பெருமானார் அவர்களே! மாமன்னர் நிலையிலிருக்கும் தாங்கள் ஆடம்பர ஆடையணிகளை அறவே விரும்புவதில்லை. ஒரு ஃபக்கீரைப்போல் ஆடையுடுத்தி, ஈச்சம்பாய் விரித்த கட்டிலில் அமர்ந்தபடி வெளிநாட்டு மன்னர்களைச் சந்தித்து

உரையாடுகிறீர்கள். அவர்களும் உங்கள் விருப்பப்படி ஈச்சம்பாய் விரித்த கட்டிலில் அமர்ந்து பேசிச் செல்கின்றனர். ஆனால், மன்னர் என்ற முறையில் உங்கள் ஆடைக்கும் அவர்கள் ஆடையலங்காரங்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம். ஆடையலங்காரங்களைத் தாங்கள் விரும்பாவிட்டாலும் வரும் மன்னர்கள் அவற்றை விரும்பி எதிர்பார்க்கலாமல்லவா? அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவாவது, அவர்களைச் சந்திக்கும் சமயத்தில் டாம்பீகமான ஆடம்பர ஆடையணிகள் அணியா விட்டாலும் ஓரளவுக்கு சிறப்பான ஆடையணிந்து, வரும் மன்னர்களைச் சந்திக்காலாமே?' என்று கேட்டு விட்டார்.

இதைக் கேட்ட பெருமானார் (சல்) புன்னகையித்தவராக 'என்ன, உமர் அவர்களே! ஆடையலங்காரத்துக்கு இவ்வளவு முதன்மைதர முனைந்து விட்டீர்கள். எவ்வளவு எளிமையோடு வாழ்கிறோமோ அந்த அளவுக்கு சொர்க்கத்தில் நிறைந்த வெகுமதிகளை வல்ல அல்லாஹ் அளித்து மகிழ்விக்கிறான் என்பதை நீங்கள், அறியவில்லையா? எனக்குக் கிடைக்கவிருக்கும் அந்த வெகுமதிகள் எனக்குக் கிடைக்கக் கூடாது என்பது உங்கள் விருப்பமா? எளிமையாக வாழ்ந்து அந்தச் சொர்க்கப் பேரின்பங்களைப் பெறுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?' என அண்ணலார் எதிர் கேள்வி கேட்டபோதுதான் எளிமையில்தான் இறைவனுடைய அருள் பூரணமாகப் பொழியும். அத்தகையவர்களுக்கே அல்லாஹ் அனைத்து வெகுமதிகளையும் தந்து மகிழ்விக்கிறான் என்ற பேருண்மை புரிந்தது. தனது ஆடம்பர உணர்வு எவ்வளவு தவறானது என்பதும் தெளிவாகிறது.

அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் ஆடம்பர - டாம்பீக வாழ்வை அனாவசியச் செலவுகளைக் கடிந்தார்களே தவிர அவசியச் செலவு செய்ய வேண்டுமெனப் பணித்தார்கள். அத்தகைய அவசியச் செலவுகளிலே

சிறப்பிடத்தைப் பெறுவது கல்விக்காகச் செய்யும் செலவாகும். நம் குடும்பத்தில், படிக்கக்கூடிய அனைவரை யும் படிக்கச் செய்ய வேண்டும். அதற்காக நாம் எவ்வளவு முயற்சியை மேற்கொண்டாலும் - இன்னும் ஒரு படி மேலே போய் எந்தத் தியாகத்தைச் செய்தாலும் அஃது ஆயிரமாயிரம் மடங்கு பயனுள்ளதாகவே அமையும். அதுவே நம் புகழுக்கும் உண்மையான பெருமைக்கும் அடித்தளமாக அமையும் என்பதை மறக்க வேண்டாம்.

**கல்லில் எழுத்தாகும் கல்விப் பணி**

உலகிலேயே கல்விக்காகச் செலவு செய்தவர்களும் கற்றவர்களுக்காகச் செலவு செய்தவர்களும், கல்லில் எழுத்துப் போல நிலையான இடத்தைப் பெற்று விடுகிறார் கள் என்பதற்கு எத்தனையெத்தனையோ உதாரணங்கள் வாழ்விலும் வரலாற்றிலும் உண்டு.

அன்று கீழக்கரையில் வள்ளல் பெருந்தகை சீதக்காதி உமறுப் புலவருக்கு உதவி செய்தார். உமறுப் புலவர் அற்புதமான சீறாப்புராண பேரிலக்கியத்தை உருவாக் கினார். அதன் விளைவு? சீறாப் பாடல்களுக்கிடையே சீதக்காதியின் கொடைத் திறத்தைப் போற்றும் பாடல் வரிகள் இடம் பெற்றன. இதன் மூலம் தமிழ் இருக்கும்வரை - சீறா இருக்கும்வரை சீதக்காதியின் பெயரும் இருந்து கொண்டே யிருக்கும்.

அதைப் போல நீங்கள் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் கல்விக்காகச் செலவு செய்தால் உங்களுடைய பேரும் புகழும் அழியாச் சாசனமாக அக் குடும்பத்தில் அழுத்தமாக நிலைபெறும். என் தந்தை, என் அண்ணன், என் தம்பி அரபு நாடு சென்று அரும்பாடுபட்டு பணம் சம்பாதித்து என்னைப் படிக்க வைத்தார். நான் படித்து, ஒரு உத்தியோகத்திற்குச் சென்றபின்தான் எங்கள் குடும்ப தரித்திரம் விலகியது. வசதி பெருகிறது. மற்றவர்க்கு இணையாக, ஏன், ஒருபடி மேலாக வாழ

முடிந்தது. எங்கள் கல்விக்கு மூலாதாரமான அவரே எங்கள் குடும்ப விளக்கு என்று உங்கள் உதவியால் படித்தவர் களெல்லாம் போற்றுவார்கள்; புகழ்வார்கள். இத்தகைய புகழுக்குரியவர்களாக ஒவ்வொருவரும் வாழ வேண்டும் என்பதுதான் இறை நியதி; பெருமானார் பெருவழி. அத்தகைய புகழ்மிகு பெரு வாழ்வை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ மனிதப் புனிதர் மாநபி பிறந்த நாள் விழாவிலே உறுதி கொண்டு இறை வழியில் உய்தி பெறுவோமெனக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*(16-7-'98 அன்று அபுதாபி முஸப்பா பகுதியில் அமைந்திருக்கக்கூடிய ஈ.டி.ஏ. மெல்கோ கேம்ப் வளாகத்தில் நடைபெற்ற மீலாது விழாச் சொற்பொழிவுச் சுருக்கம்)*

# வேற்றுமையில் ஒற்றுமை

உலகில் கோடானுகோடி மக்கள் பிறக்கிறார்கள்; இறக்கிறார்கள். "நெருநல் ஒருவன் உளன், அவன் இன்று இல்லை எனும் பெருமையுடைத்து இவ்வுலகு" என்று கூறுகிறார் வள்ளுவர். "நேற்று ஒருவன் இருந்தான், அவன் இன்று இல்லை எனும் பெருமையை உடையது இவ்வுலகு" என்பது இக் குறளின் கருத்து. அவர்களுள் ஒரு சிலர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வரலாற்றில் அழியாத் தடம் பதித்தவர்களாக, வாழும் மக்களின் நினைவில் நிழலாடுபவர்களாக அமைகிறார்கள். அத்தகைய மா மனிதர்களில் ஒருவர் பெயர் மக்களால் நினைக்கப் படுவதற்கு மட்டுமல்லாது, உலக முழுக்க உரத்த குரலில் இருப்த்து நான்கு மணி நேரமும் ஒலிக்கப்படுகிறது. அதுவும் இடையறாது ஒலிக்கப்படுகிறது. உலகம் முழுமையும் ஒவ்வொரு விநாடியும் இடைவிடாமல் ஒலிக்கப்படுகிறதென்றால், அது நபிகள் நாயகம் (சல்) அவர்களின் திருப்பெயர்தான் அவ்வாறு ஒலிக்கப்படும் பேறு பெற்ற பெயராக அமைந்துள்ளது.

**நாள் ஒன்றுக்கு ஒரு கோடி முறை**

நாள் முழுமையும் ஐவேளைத் தொழுகைக்காக பள்ளி

வாசல்கள்தோறும் தொழுகை அழைப்பாக பாங்கு ஒலிக்கப்படுகிறது. 'அதான்' எனப்படும் ஒவ்வொரு பாங்கொலியிலும் இருமுறை பெருமானாரின் பெயர் உச்சரிக்கப்படுகிறது. உலகில் குறைந்த பட்சம் பத்து இலட்சம் பள்ளிகளுக்குக் குறையாமல் இருக்கின்றன. அவற்றில் நாளொன்றுக்கு பாங்குக்கு இருமுறையாக, ஐவேளை பாங்குக்கு ஒரு கோடி முறை அண்ணலார் பெயர் உலகில் ஒலிக்கப்படுகிறது. அதுவும் இடையறாமல். எப்படி? இருபத்தியேழு கிலோ மீட்டருக்கு ஒரு விநாடி வேறுபடுகிறது. எனவே, பெருமானாருடைய பெயர் இருபத்தியேழு கிலோமீட்டருக்கு ஒரு விநாடியாக ஒவ்வொரு பள்ளிவாசலிலும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருப்பதன் மூலம், பெருமானாரின் பெயரும் இருபத்தி நான்கு மணி நேரமும் இடையறாமல் உலகெங்கும் ஒலித்துக் கொண்டேயிருப்பது உலக மகா அதிசயமாகும். அந்த அளவுக்கு அண்ணலாரின் திருப் பெயர் மக்களின் நினைவில் இருந்து கொண்டே இருக்குமளவுக்கு அன்னாரின் புகழ் நிலை பெற்றுள்ளது.

### வழிகாட்டும் ஒளிவிளக்கு

பெருமானாருடைய பெயர் மட்டுமல்ல, அவரது வாழ்வும் வாக்கும் உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் ஒளி விளக்காகவே அமைந்துள்ளதெனலாம். அண்ணலாரின் வாழ்வும் வாக்கும் நேற்றும், இன்றும் ஏன் நாளைய மக்களின் வாழ்வின் முன்னேற்ற ஆதார சுருதியாக அமையும் பெற்றியைப் பெற்றுள்ளதாகும். இஃது நாம் மட்டுமல்ல, உலக முழுமையும் ஒப்புக் கொண்டுவிட்ட உண்மையாகும்.

### வரலாற்றை மாற்றும் வல்லமை

'தி ஹன்ரட்' என்ற ஆங்கில நூலைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அதனை எழுதிய ஆசிரியர் மைக்கேல் ஹெச். ஹார்ட் என்பவர் என் இனிய நண்பர். தங்களுடைய

தனித்த செல்வாக்கால் உலகத்தினுடைய வரலாற்றையே ஒட்டு மொத்தமாக மாற்றியமைத்தவர்களில் நூறு பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை வரிசைப்படுத்தும் அருமையான நூல் அது. அதிலே முதலாமவராக அண்ணலார் பெயரைப் பொறித்துள்ளார் என்பதும் நீங்களெல்லாம் அறிந்த செய்திதான். முதலாமவராகத் தெரிவு செய்ததற்கான காரணத்தை விளக்கும்போது, "நேற்றைய வரலாறும் அண்ணலாரால்தான் மாறியது; இன்றைய உலக வரலாறும் அவரது செல்வாக்கால்தான் மாறிக் கொண்டுள்ளது. நாளைய உலக வரலாற்றையும் அவரது வாழ்வும் வாக்குமே முற்றாக மாற்றியமைக்கும். அத்தகு வல்லமை மிக்கது அவரது வாழ்வும் வாக்கும்" என்பதை மிகத் தெளிவாகவும் திடமாகவும் கூறுகிறாரென்றால் அந்த அளவுக்கு இறைத்தூதரின் வாழ்வும் வாக்கும் மனித குல முழுமைக்கும் வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழத்தக்கதாக இறைவன் அமைத்துத் தந்துள்ளான் என்பதை நாம் உணர்ந்து தெளிய வேண்டும். உலக மாறுதலுக்கும் - மாற்றத்திற்கும் அண்ணலாரே அச்சாணி என்பதை இன்றைய அறிவுலகு புரிந்து கொண்டு வருகிறது.

**என்றும் மாறாது**

அண்மையில் அந்த நூல் திருத்தப் பதிப்பாக வெளி வந்தது. சிலருடைய பெயர் நீக்கப்பட்டது. கோர்பச்சோவ் போன்ற சிலருடைய பெயர் இணைக்கப்பட்டது. இதே போல் காலப் போக்கில் இப்போதுள்ள வரிசை முறை மாறிக் கொண்டே செல்லுமா? என்று கேட்டபோது "மற்றவர்களின் வரிசை முறை வேண்டுமானால் மாறலாமே தவிர, நபிகள் நாயகத்தின் முதன் நிலை எக்காரணம் கொண்டும் மாறாது" எனக் கூறினார் என்றால், பெருமானார் மீது ஹார்ட் கொண்டுள்ள நம்பிக்கை நம்மை வியக்க வைக்கிறது.

இங்கு இன்னொரு செய்தியையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். நம்மில் பலரும் மைக்கேல் ஹெச். ஹார்ட் ஒரு கிறிஸ்தவர் என்றே கருதிக் கொண்டுள் ளோம். அவர் கிறிஸ்தவர் அல்லர்; அவர் ஒரு யூதர். ஒரு யூதரின் உள்ளத்தின் அடித்தளத்தில் அண்ணலாரைப் பற்றி இப்படியொரு உயர்வான எண்ணம் அழுத்தம் பெற்றிருக் கிறது என்றால், அந்த உயர்வான உணர்வையும் ஆக்கப்பூர்வ மான சிந்தனையையும் எது கொடுத்திருக்கும்?

## ஆன்மீகம் மட்டுமே

அண்ணலாருக்கு முன்னதாக ஆதம் (அலை) முதல் ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார் உலகெங்கும் எல்லா நாட்டிலும், எல்லா இனத்திலும், எல்லா மொழியிலும் இறை தூதராகத் தோற்றம் பெற்று, வாழ்ந்து வழிகாட்டிச் சென்றுள்ளார்கள் என்பது வரலாறு. அவர்கட்கு முப்பத்தியாறு வேதங்களும் வல்ல அல்லாஹ்வால் அளிக்கப்பட்டுள்ளன என்பது வேத வரலாறாகும். ஆனால் அண்ணலார்வரை வந்த அத்தனை நபிமார்களும் வாழ்வின் ஒரு பகுதியாக அமைந்துள்ள ஆன்மீகத்தைப்பற்றி - அக வாழ்வின் அகமியங்களைப் பற்றி மட்டுமே போதித்துச் சென்றார்கள் என்பது நபிமார் வரலாறாகும்.

## ஆன்மீகமும் அறிவியலும் போதித்த அண்ணலார்

ஆனால், அண்ணலார் மட்டுமே இறைக்கட்டளைக் கிணங்க அக வாழ்வுக்கான ஆன்மீகத்தையும் புறவாழ்வுக் கான அறிவியலையும் ஒருசேர போதித்தார் என்பது வள்ளல் நபியின் வரலாறு. அகமும் புறமும் சேர்ந்த முழு வாழ்வுக்கு முழு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டி, மக்களை வழி நடத்த வேண்டும் என்பது இறையுள்ளம். இதன் மூலம் நபித்துவமும் முழுமையாகப் பரிணமிக்கலாயிற்று.

**அனைத்துத் துறைகளிலும்**

திருமறையில் 'தங்களில் அழகிய முன்மாதிரி அமைந் துள்ளது' என்று கூறியதற்கொப்ப அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் வாழ்வின் அனைத்து மட்டங்களிலும் வாழ்ந்து காட்டுபவராயினர். முந்தைய நபிமார்கள் வாழ்வை எண்ணிப் பாருங்கள். அவர்களில் சிலர் கணவராக, தந்தையாக வாழந்ததில்லை; சிலர் ஆட்சித் தலைவராக, இன்னும் சிலர் படை நடத்தும் படைத் தளபதியாக வாழும் வாய்ப்பைப் பெற்றவர்கள் இல்லை. ஆனால், அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மனித வாழ்வில் எத்தனை படித்தரங்கள் உண்டோ அத்தனை படித்தரங்களிலும் முழு வாழ்வு வாழ்ந்து முடித்த பெருமை பெருமானாருக்கு உண்டு.

**அன்றும் இன்றும் என்றும்**

பெருமானாரின் பெரு வாழ்விலும் அதற்கு ஆதார சுருதியாயமைந்த திருமறையிலும் கூறப்படாத செய்திகள் எதுவுமே உலகில் இல்லை எனலாம். உலகில் அன்று முதல் இன்று வரை ஏன் நாளை தலைதூக்கும் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு திருமறையிலும் பெருமானார் பெருவாழ்விலும் காணக் கிடக்கின்றது. இதைத்தான் வியந்து வியந்து பாடுகிறார் தக்கலையின் மிக்க புகழ் மெய்ஞ்ஞானி பீர் முஹம்மது அப்பா அவர்கள். "அறிவு வகை எத்தனை என்று அறிய வகை இல்லை; அத்தனையும் அவன் உரைத்த அருமறையுள் அடக்கம்" என்பது அவர்தம் வாக்கமுதாகும். பீர் முஹம்மது அப்பா மாபெரும் மெய்ஞ் ஞானி. நாமெல்லாம் எண்ணி யெண்ணிப் பெருமைப் படத்தக்க அளவுக்கு உயர்ந்த கருத்துகளை, சிந்தனைகளை, ஆழ்ந்த ஆன்மீக உணர்வுகளை நம்மிடையே பத்தாயிரம் பாடல்கள் மூலம் பரப்பிய மாபெரும் மேதை.

பீரப்பாவைக் காட்டிலும் நமக்கெல்லாம் மிக நன்றாக அறிமுகமானவர் குணங்குடி மஸ்தான்தான். திருமுறை

தரும் ஆன்மீகக் கருத்துகளையெல்லாம் அவர் கால வழக்குச் சொற்களைக் கொண்டே மதங்கடந்த முறையில், இனங்கடந்த நிலையில் எல்லோர் உள்ளமும் ஏற்கும் வண்ணம் எடுத்துக்கூறிய மாபெரும் ஆன்மீகச் செல்வராவார். குணங்குடி மஸ்தான் எனும் பெயரில் உள்ள குணங்குடி என்பது அவர் ஊரும் அல்ல; மஸ்தான் என்பது அவரது பெயருமல்ல. 'குணங்குடியார்' எனக்கூறுவது நற்குணங்களெல்லாம் ஒருங்கே குடிகொண்டிருக்கும் இறைவனைக் குறிக்கும் சொல்லாகும். இறைவனிடத் திலேதான் நற்குணங்கள் அனைத்தும் ஒட்டு மொத்தமாக அமைந்திருக்கும். குணத்தைப் பொறுத்தவரை நாமெல் லாம் குறையுடையவர்கள். அக்குறையை நீக்கிக் கொள் வதற்காகத்தான், இறைநெறியிலே பெருமானார் (சல்) வாழ்ந்து காட்டிய வழிமுறைகளையெல்லாம் தெரிந்து, அந்தக் குறைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் களைந்து, குறையறிந்தவர்களாக நாமெல்லாம் வாழ்வில் உயர முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

குணங்குடி என்பது போன்றே 'மஸ்தான்' என்பதும் அவரது பெயர் அல்ல. அவரது இயற்பெயர் சுல்தான் அப்துல் காதர் என்பதாகும். பிறகு ஏன் 'மஸ்தான்' என்று அழைக்கப்படுகிறார். 'மஸ்து' எனும் சொல்லினடியாக அமைந்துள்ளது 'மஸ்தான்' என்ற பெயர். மஸ்து என்பது பாரசீகச் சொல்லாகும். அதற்கு 'இறை மயக்கம்' என்பது பொருளாகும். சூஃபிகளாகிய மெய்ஞ்ஞானிகள் இரவு பகல் எந்நேரமும் இறையுணர்வில் - இறை மயக்கத் திலேயே இருப்பவர்கள். அவர்கள் உள்ளத்தில் எந்நேரமும் இறைச் சிந்தனையே ஒளிர்ந்து கொண்டிருக்கும். அந்த இறை உணர்விலே - இறை மயக்கத்திலே தான் ஆன்மீக ஞானம் பொங்கிப் பொழிய முடியும். ஆகவேதான், அத்தகைய மஸ்தையுடையவர்கள் மஸ்தானாக அழைக்கப் படுகிறார்கள்.

'மஸ்து' தந்த மயக்கம்

'மஸ்து' பெயரால் உருவாக்கப்பட்ட ஒரு மாபெரும் விபரீதத்தை உங்களிடம் கூறலாம் என எண்ணுகிறேன்.

குணங்குடி மஸ்தானைப் போன்ற ஒரு மாபெரும் பாரசீகச் சூஃபிக் கவிஞர் உமர்கையாம். அவர் உருவாக்கிய ஞான இலக்கியம் 'ரூபய்யாத்' பாரசீக மொழியின் மாபெரும் ஞானக் களஞ்சியமாகப் பாராட்டப்படும் படைப்பு. அதிலே 'மஸ்து' எனும் சொல்லைப் பல இடங்களில் உமர்கையாம் பயன்படுத்தியுள்ளார். இறைவனைப் பற்றி, இறையுணர்வைப் பற்றி பல அரிய கருத்துகளைத் திறம்படக் கூறியுள்ள அந்நூலை ஆங்கிலப் புலமைமிக்க, பாரசீக மொழியும் ஓரளவு அறிந்த ஃபிட்ஜெரால்டு என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். மொழி பெயர்ப்பின்போது மஸ்து என்பதற்கு இறை மயக்கம் என்று பொருள் கொள்வதற்கு மாறாக, வெறும் மயக்கம் எனப் பொருள் கொள்ளலானார். மஸ்து எனும் பெர்சியச் சொல்லுக்கு மரபு முறையிலான பொருள் விளங்காததால், வெறுமனே மயக்கம் எனப் பொருள் கொண்டதோடு, மயக்கம் ஒரு மனிதனுக்கு எதனால் வரும் என எண்ணிய மாத்திரத்தில் மதுவால், மங்கையால், கவிதையால் வரும் என அவரளவில் அனுமானித்தவராக மது, மாது, கவிதை என மொழி பெயர்த்து விட்டார். இம் மொழிபெயர்ப்பைப் படித்த தேசிய விநாயகம் பிள்ளை, கையிலே கம்பன் கவியுண்டு. மதுக் கலயமுண்டு. மங்கை மடியுண்டு என்று கருத்துப்பட பாடலானார். அதைப் படித்த கண்ணதாசன் கோப்பையிலே அவன் குடியிருப்பு என உமர்கையாமை மதுக் கோப்பைக்குள் தூக்கிப் போட்டுப் பாடினார். மொழி பெயர்ப்பில் எங்கோ ஏற்பட்ட ஒரு சிறு தவறு தொடர்ந்து பெருக்கமடைந்து நேர் மாறான போக்கையே உருவாக்கி விட்டது. மதுவைத் தொட்டறியாத, அன்னிய மங்கையரை ஏறெடுத்தும் பாராத, ஒரு மாபெரும் சூஃபிக் கவிஞரை,

மெய்ஞ்ஞானப்போதகரை மாபெரும் குடியராக, பெண் பித்தராகச் சித்தரிக்கும் இழிநிலை ஒரு சிறு மொழி பெயர்ப்புப் பிழையால் உருவாயிற்று.

## தவறான பெயர்ப்பு தந்த பேரழிவு

தவறான மொழிபெயர்ப்பால் கருத்துப் பிழை மட்டுமல்ல, ஒரு நாட்டின் புகழ் பெற்ற இரு நகரங்களே அழிந்த வரலாறும் உண்டு. இரண்டாம் உலகப்போரின் போது போர்ட்ஸ்டாம் மாநாட்டிற்குப் பின் அமெரிக்கா, ஜப்பானுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தது. அதற்குப் பதிலாக ஜப்பான் 'மோகு ஸட்ஸு' என ஜப்பானிய மொழியில் தந்தி மூலம் பதில் அளித்தது. இதற்குச் சரியான பொருள் "ஆராய்கிறோம், பொறுக்கவும்" என்பதாகும். ஆனால், தந்தி பதிலை வாஷிங்டனில் பெற்ற மொழி பெயர்ப்பாளர் தவறாக 'நிராகரிக்கிறோம்' என மொழி பெயர்த்து முடியரசுத் தலைவருக்கு அனுப்பி விட்டார். நிராகரிக்கிறோம் என்ற பதிலைப் பெற்ற குடியரசுத் தலைவர் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரு பெரும் நகரங்களின் மீது அணு குண்டுகளை வீசுமாறு ஆணையிட்டார். அவ்வாறே அணுகுண்டு வீசப்பட்டு, இரு நகரங்களும் அழிக்கப் பட்டது. மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட சிறு பிழை இரு நகரங்கள் அழியக் காரணமாயிற்று. ஒரு உன்னதமான சூஃபிக் கவிஞரை மிகக் கேவலமானவராகக் காட்டக் காரணமாயிற்று. இவை வரலாற்றில் படிந்த களங்கங் களாகும். இறை நெறியை - உன்னதமான ஆன்மீக உணர்வை உலகுக்குணர்த்திய உமர்கையாமிற்கு ஏற்பட்ட இழிவு மனதைப் புண்படுத்தும் ஒன்றாகும்.

## நெறி பரப்பிய ஞானியர்

'சூஃபியர்" என அழைக்கப்படும் இம் மெய்ஞ்ஞானி கள்தான் இஸ்லாத்தை - இறை நெறியை மக்களிடத்தே கொண்டு சென்ற பெரியார்கள். இன்னும் சொல்லப்

போனால் இந்தியாவில் இஸ்லாத்தைப் பரப்பியவர்கள், இறை நெறியை மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்று சேர்த்தவர்கள் இந்த சூஃபிமார்கள்தான். ஆனால், இந்திய வரலாறைச் சரிவர உணர்ந்து தெளியா ஆங்கில வரலாற்றாசிரியர்கள், தங்கள் 'பிரித்தாளும்' சூழ்ச்சி காரணமாக 'இந்தியாவில் இஸ்லாம் வாள் கொண்டு பரப்பப்பட்டது' எனத் தவறாகக் குறிப்பிட்டு, பழி பாவத்துக்கு ஆளாயினர்.

இந்தியாவை 600 ஆண்டுக்காலம் கட்டியாண்ட முஸ்லிம் மன்னர்கள் யாருமே இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைக் கூட முழுமையாய் நிறைவேற்றாதவர்கள் என்பது கசப்பான உண்மை. டெல்லியிலிருந்து ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களில் யாருமே ஐம்பெரும் இஸ்லாமியக் கடமைகளில் ஐந்தாவதான ஹஜ் கடமையை நிறைவேற்றியதாக வரலாறு இல்லை. இஸ்லாமியப் பெருங்கடமைகளையே நிறைவேற்ற முடியாத இவர்கள் எங்கே இஸ்லாத்தைப் பரப்பும் முயற்சியிலே ஈடுபட்டிருக்க முடியும்? இஸ்லாத்தின் மீதும் இஸ்லாமியர்கள் மீதும் பழிபோட வேண்டும், தூற்ற வேண்டும் என்பதற்காகக் கற்பனையாக இட்டிக்கட்டி கூறுகின்ற ஒன்றே இந்தியாவில் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற பழிச் சொல்.

அப்படியானால் இஸ்லாமிய நெறியை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தவர்கள் யார்? இக் கேள்விக்கு மிக எளிமையாக இஸ்லாமியச் சூஃபிமார்களாகிய மெய்ஞ் ஞானிகளும் இறையடியார்களாகிய வலிமார்களுமே அவர்கள் எனக் கூறிவிடலாம். பீரப்பா, குணங்குடி மஸ்தான் போன்ற மெய்ஞ்ஞான மேதைகளும் டெல்லியில் அடக்கமாகியுள்ள நிஜாமுதீன் அவுலியா, ஆஜ்மீரில் அடக்கமாகியுள்ள குவாஜா மொய்னுதீன், திருச்சியிலே அடக்கமாகியுள்ள நத்தர்ஷா, நாகூர் சாஹுல் ஹமீது ஆண்டகை போன்ற அவுலியாக்களும் சதக்கத்துல்லாஹ்

அப்பா போன்ற ஞான மேதைகளுமே இஸ்லாத்தை மக்களிடையே பரப்பிய மாபெரும் பணியை ஆற்றியவர்கள்.

இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் அனைவரும் வெளிநாட்டவரோ அல்லது வெளி நாடுகளிலிருந்து ஆட்சி செய்தவர்களோ இல்லை. பாபர் போன்றவர்கள் வெளி நாட்டிலிருந்து வந்திருக்கலாம். ஆனால் அவர்தம் சந்ததியினர் அனைவரும் இங்கேயே பிறந்து, வாழ்ந்து மடிந்தவர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. 600 ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் இந்தியர்களாகவே வாழ்ந்து மறைந்தவர்கள். இஸ்லாமிய மார்க்க நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்த போதிலும் இந்த மண்ணுக்கே சொந்த மான கலை, பண்பாடுகளைப் பேணியவர்கள்; போற்றி வளர்த்தவர்கள்; வளப்படுத்தியவர்கள்.

‘யார்?’ என்பதல்ல; ‘என்ன?’ என்பதே

இந்தியாவின் தனித்துவம் என்ன தெரியுமா? ‘யார்’ என்று பார்ப்பதில்லை. ‘என்ன’ என்பதில் கருத் தூன்றுவதே அத் தனிப்பெரும் பண்பாடு. வெளியிலிருந்து யார் வந்தாலும் அல்லது எந்தச் சமயம் வந்தாலும் அதிலுள்ள நல்லனவற்றையெல்லாம் ஏற்று தனதாக்கிக் கொள்வதே அத் தனித்துவம். ஜைன சமயமாகிய சமண சமயம் இந்து மதத்தை எதிர்த்து எழுந்த இந்தியச் சமயமாகும். காலப் போக்கில் சமண சமயத்தில் இந்துமதக் கருத்துகளை கொஞ்சங் கொஞ்சமாகப் புகுத்தி, சமண சமயத்தையே இந்து சமயத்தின் ஒரு கிளைச் சமயம் போல் ஆக்கி விட்டது. இந்து சமயத்தை எதிர்த்து கௌதம புத்தரால் உருவாக்கப்பட்ட சமயம் புத்த சமயமாகும். அதிலும் இந்து மதக் கருத்துகளைத் திறமையாகப் புகுத்தி புத்த சமயத்தினரின் தனித்துவமே குலைக்கப்பட்டது. சடங்கு, சம்பிரதாயங்களை எதிர்த்து எழுந்த புத்த சமயத்தில் இந்து சமயச் சடங்குகளையெல்லாம் புகுத்தி ஹீனயானம்,

மகாயானம் என்ற இரு பெரும் பிரிவுகளை ஏற்படுத்தி, பலவீனப்படுத்தி இந்து சமயச் சாயவோடு இயங்கச் செய்து சீர் குலைக்கப்பட்டது. இப்படி இந்தியாவில் உருவாக்கப் பட்ட அனைத்துச் சமயங்களிலும் இந்து சமயம் தன் கைவரிசையைக் காட்டிய போதிலும் இஸ்லாம் மார்க்கத்தை அதனால் நெருங்கவே முடியவில்லை. அதன் தனித்துவத்தில் எந்தச் சீர் குலைவையும் ஏற்படுத்த இயலவில்லை. காரணம், இஸ்லாத்தின் அடிப்படை அத்தகு வலிமை வாய்ந்ததாக அமைந்துள்ளது. இஸ்லாத் தில் கூறப்படும் இறைக் கொள்கை இறைவன் ஒருவனே; உருவமற்றவன்; ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை, அலியுமில்லை. அவன் யாரையும் பெறவுமில்லை. அவன் யாராலும் பெற்றெடுக்கப்படவுமில்லை. எடுத்து இணைப்பதென்றால் இதைத்தான் எடுத்து இந்து மதத்தில் சேர்க்க வேண்டும். அவ்வாறு இவ்விறைக் கொள்கையை எடுத்து இணைத்தால் அங்கே இருக்கும் இறை பற்றிய மற்ற இந்து மதக் கொள்கைகளெல்லாம் தகர்ந்து போகும்.

ஆனால், சீக்கிய மதத்தை உருவாக்க நினைத்தவர்கள் இந்து மதத்தின் சிறந்த கொள்கைகளில் சிலவற்றையும் இஸ்லாமியக் கொள்கைகளில் சிலவற்றையும் இணைத்து ஒரு புதுவகைச் சமயத்தை குருநானக் போன்றவர்கள் உருவாக்கலானார்கள். ஆனால், அதையும் இந்து மத வாதிகள் விட்டு வைக்கவில்லை. நாளடைவில் இந்து மதக் கருத்துகளையெல்லாம் அதோடு இணையச் செய்து, அதனையும் இந்துமதப் பிரிவாகவே ஆக்கிவிட்டார்கள். அதை எதிர்த்து இன்று பல சீக்கியர்கள் மூல வடிவில் சீக்கிய சமயத்தை மீண்டும் உருவாக்கிப் பின்பற்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஆனால், இந்து சமயத்தைப் பொறுத்தவரை வேறொரு காரியத்தைத் திறம்படச் செய்து வருகிறார்கள். இஸ்லாத் தில் இந்து மதக் கருத்துகளைப் புகுத்த அறவே இயலாததால், இஸ்லாமியக் கருத்துகளில் பலவற்றைத்

தேர்ந்தெடுத்து, இந்து மதத்தைப் புதுப்பிப்பதில், புத்துயிரூட்டி, புனரமைப்பதில் பலர் ஈடுபட்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதைத் தெளிவுபடுத்த வரலாற்றுப் போக்கில் ஓரிரு உதாரணங்களை உங்கள் முன் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பிற சமயச் சீர்திருத்தம்

எட்டாம் - ஒன்பதாம் நூற்றாண்டுகளில் இஸ்லாம் தமிழகத்தில் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. நந்தர்ஷா எனும் இறைநேசச் செல்வர், திருச்சி மாநகரின் மையப் பகுதியிலே அடக்கமாகி இருக்கின்ற அவர், அன்று சோழ நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று இறைப் பணி ஆற்றியவர். ஏழை எளிய மக்களிடம் அன்போடு கலந்துரையாடி, ஓர் இறைப் பிரச்சாரத்தைத் திறம்பட ஆற்றி வந்தவர். 'ஒரே இறைவன்; உருவமற்றவன்; அன்புரு வாகவும் அருள் வடிவாகவும் விளங்குபவன். இணை துணை இல்லாதவன். அவன் யாலும் பெறப்படவு மில்லை. யாரையும் பெற்றெடுக்கவுமில்லை. அவனை வணங்க எந்தத் தரகரும் தேவையில்லை. நேரடியாகவே வணங்கலாம். அவன் எந்தத் தேவையும் இல்லாதவனாத லால் எதையும் வைத்துப் படைக்க வேண்டாம். இறை வேதத்தை யார் வேண்டுமானாலும் படிக்கலாம். நீங்களே புரிந்து தெளிவு பெறலாம். ஒரு நாளைக்கு ஐந்து வேளை தொழுவதன் மூலம் இறைவனுக்கு நன்றி செலுத்து கிறோம்' என்றெல்லாம் மக்களிடம் எடுத்துச் சொன்ன போது அது அவர்களின் உள் மனதைத் தொட்டது. வேதத்தை நேரடியாகப் படித்தபோது 'வேதம் இவ்வளவு எளிமையாக இருக்கிறதே' என வியந்து போற்றியவர்களாக இஸ்லாத்தில் இணைந்தனர். இவர்களின் தொகை விரைந்து கூடிக் கொண்டே சென்றது.

அப்போது சோழ வளநாட்டை ஆண்டு வந்தவன் கூன் பாண்டியன் என்பவன். சோழ நாட்டின் மக்களின் பெருந்

தொகையினர் இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்து வருவதையறிந்து வியந்தான். இஸ்லாமிய நெறிகளின் சிறப்பை அறிந்தபோது பெரு மகிழ்வு கொண்டான். இஸ்லாத்தில் இணைந்த மக்கள் வழிபாட்டிற்காக பள்ளிவாசல் கட்ட முயன்றால் அதற்கு அரசு அதிகாரிகள் உதவி செய்ய வேண்டுமெனக் கட்டளையிட்டான். இதன் மூலம் முஸ்லிம்கள் மசூதி கட்ட அரசு நிலங்கள் எளிதாகக் கிடைத்தன. இதன் மூலம் எங்கும் பாங்கொலி எழ, இஸ்லாமியச் செல்வாக்கு அழுத்தமாகவும் ஆழமாகவும் படியத் தொடங்கியது.

சோழ மண்டலத்தில் இஸ்லாம் விரைவாகப் பரவிக் கொண்டிருப்பதை ஸ்ரீபெரும்புதூரில் இருந்த இராமானுஜர் கேள்விப்படுகிறார். வைதீக சமயவாதிகளில் இராமானுஜர் முற்போக்குச் சிந்தனை மிக்கவர். இறைவன் மனித குலத்துக்கு வழங்கிய வேதம் மக்களிடம் நேரிடையாகச் சென்றடையாமல் ஒரு சிலரிடம் மட்டும் முடங்குவதை விரும்பாதவர். இத்தகு சூழ்நிலையில் இஸ்லாமிய வேதத்தை யாரும் படிக்கலாம் என்ற முறை அவரை வெகுவாக ஈர்க்க, சோழ மண்டலம் சென்று உண்மை நிலைகளை அறிய ஆட்களை அனுப்புகிறார். அவர்கள் உண்மை நிலைமையை அறிந்து வந்து விளக்க, வேதம் அனைவருக்கும் சொந்தம், பொது என்பதை நிலைநிறுத்த முடிவெடுக்கிறார். வேதத்தைத் தாங்கள் மட்டுமே படிக்க வேண்டும்; மற்றவர்கள் படிக்கக் கூடாது என்பதில் உறுதி யாக இருந்த வேதியர்களின் எதிர்ப்பையும் பொருட் படுத்தாது, கோயில் மதிலேறி நின்று, அங்கு வாழ்ந்த சேரி வாழ் மக்களுக்கு வேதம் போதித்தார் என்பது உண்மை வரலாறு.

அன்றையச் சூழலில் இன்னொரு இஸ்லாமியக் கருத்தும் சிந்தனையும் அவரின்உள்ளத்தை ஈர்ப்பனவாயமைந்தன. ஒருவன் இஸ்லாத்தை ஏற்று இறைவன் ஒருவனே

என்பதில் முழு நம்பிக்கை கொண்டு விட்டால் அவன் சாதி, வகுப்பு, பிரிவுகள் ஏதுமில்லாதவனாகிவிடுகிறான். அனைத்து வேறுபாடுகட்கும் அப்பாற்பட்டு மனிதத்துவம் உள்ள மனிதனாக மட்டும் கருதப்படுகிறான். மனித குலம் முழுமையையும் ஆதித் தந்தை ஆதாம் வழி வந்த சகோதரர்களாகக் கருதி, உலக சகோதரத்துவம் நிலைபெற உறுதி ஏற்கிறான் என்ற உணர்வும் கருத்தும் அவர் உள்ளத்தை ஈர்க்க அக்காலத்தில் பஞ்சமர்களாக, தீண்டத்தகாதவர்களாக புழுப் பூச்சிகளைப்போல் கருதி நடத்தப்பட்ட சேரிவால் ஹரிஜனங்களை அழைத்து, அவர்கட்கு வேதத்தைப் புகட்டி, வேதியர்களாக்கியது அக்காலத்தில்அவர் நிகழ்த்திக் காட்டிய அதியற்புதப் புரட்சியாகும். ஹரிஜனங்களுக்கு வேதம் கற்பித்ததோடு அவர்கட்கு ஆகம விதிப்படி, இந்து சமய சம்பிராதாயப்படி பூணூல் அணிவித்து வேதியர்களாக ஆக்கி, அவர்கட்கு 'ஐயங்கார்' எனப் பெயரிட்டழைத்தார் என்றால் அவர் செய்த புரட்சி எத்தகையது என்பதை எண்ணிப் பாருங்கள். அதனால்தான் இன்றும் ஐயர் வெண்மையாகவும், ஐயங்கார் கறுப்பு நிறத்தவராகவும் இருப்பதைக் காண்கிறோம்.

இப்படி இந்து சமயத்திலே மாற்றங்களும் திருத்தங்களும் ஏற்பட, இஸ்லாம் காரணமாக இருந்துள்ளதை யாரும் மறுக்க இயலாது.

### சைவ சமயமும் இஸ்லாமும்

இது மட்டுமல்ல, தென்னாட்டிற்கே சொந்தமான சமயம் எனக் கொண்டாடப்படும் சைவ சமயத்திலேயும் மாற்ற திருத்தங்களோடு வீர சைவம் உருவாக ஒரு வகையில் இஸ்லாமும் இஸ்லாமியக் கருத்துகளும் சிந்தனைகளுமே காரணமாயமைந்துள்ளன என்பது வரலாறு.

தென்னகத்தின் மிகச் சிறந்த சமயமாக அன்றும் இன்றும் போற்றப்படுவது சைவ சமயமாகும். மாணிக்க வாசகர் போன்றவர்களால் உருவாக்கி, வளர்க்கப்பட்ட சமயம்.

தென்னகத்தில், குறிப்பாக கர்நாடகப் பகுதியில் மிக வலுவாக ஒரு கால கட்டத்தில் திகழ்ந்தது. அச்சமயத்தின் ஆச்சாரியராக பஸவேஸ்வரர் என்பவர் திகழ்ந்தார்.

அக் கால கட்டத்தில் இஸ்லாமிய சூஃபியாக்களில் பலர் கர்நாடகத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் இஸ்லாமியப் பிரச்சாரத்தை மக்கள் உள்ளம் ஏற்கும் வகையில் வலுவாக ஆற்றி வந்தார்கள். மக்கள் மத்தியில் இஸ்லாம் மிகுந்த செல்வாக்குப் பெறத் தொடங்கியது. ஆங்காங்கு வாழ்ந்த மக்கள் இஸ்லாமிய மார்க்கத்தின்பால், தங்களை இணைத்துக் கொள்ள முனைந்தார்கள்.

இச் செய்தி சைவ சமய ஆச்சாரியரான பஸவேஸ்வரரை எட்டியபோது ஒரு புறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் மனக்கிலேசத்தையும் அவருக்கு ஏற்படுத்தியது. இஸ்லாமியப் பிரச்சாரத்தின் சாரத்தை நேரடியாகவே அறிய விரும்பி, இஸ்லாமியச் சூஃபிமார்களை அணுகி அவர் களோடு விவாதிக்கத் தொடங்கினார். அவர்கள் இஸ்லாத் தின் அடிப்படை கொள்கை கோட்பாடுகளை எடுத்து விளக்கியபோது, இஸ்லாமியக் கொள்கைகள் அனைத்தும் மனித குலம் ஏற்றிப்போற்றத் தக்கவைகளாக இருக் கின்றனவே எனக் கருதினார். இறை வணக்கச் சடங்கேதும் இல்லாததும் இஸ்லாம் தந்துள்ள பெண்ணுரிமையும் குறிப்பாக விதவைகளுக்குத் தரப்பட்டுள்ள மறுமண உரிமையும் சமுதாய மதிப்பும் அவருக்குப் புதுமையாகப் பட்டது. மொத்தத்தில் மனிதனை இறைவன் படைத்தது வாழ்வாங்கு வாழ்வதற்கேயன்றி வருந்திச் சாவதற்கு அல்ல என்ற கோட்பாடு அவருக்கு உவகையளித்தது. ஜகாத் போன்ற பொருளாதாரக் கொள்கைகளும் அவரை வெகு வாக ஈர்த்தன. உன்னதக் கொள்கைகளின் உறைவிடமாக இருக்கக்கூடிய இஸ்லாமிய நெறியில் தன்னை இணைத்துக் கொள்வதை விட தன்னைப் பின்பற்றும் பல்லாயிரம் மக்கள் இக் கொள்கை வழி வாழ, அதுவும் அவர்கள் காலங்காலமாய் பின்பற்றும் சைவ சமய வழியிலேயே வாழ

வைக்க வேண்டும் என எண்ணினார். இவ்வெண்ணத்தை ஈடேற்றும் வகையில் சைவ சமயத்தில் பல்வேறு மாற்ற திருத்தங்களைச் செய்தார். இறைவனுக்கு அல்லாஹ் என்பதன் சாயலில் அல்லமா பிரபு என ஆக்கினார். இறைவனைப் பல்வேறு வடிவில் வணங்காது 'லிங்க வடிவில்' வணங்கப் பணித்தார். இவ்வழிபாட்டில் ஈடுபடுவோர் 'லிங்காயத்துகள்' என அழைக்கப் படலாயினர்.

பெண்களின் சம்மதத்தோடு திருமணம் நடக்கச் செய்தார். மண விலக்கு உரிமையளித்தார். மணப் பெண்ணுக்குத் தாலி எடுத்துக் கொடுக்குமளவுக்கு விதவைகளுக்கு மரியாதை ஏற்படுத்தினார். விதவை விவாகம் ஏற்புடையதாக்கினார். இறந்தோரை எரிப்பதற்கு மாறாகப் புதைக்கச் செய்தார். இவ்வாறு இஸ்லாத்தின் உயரிய கோட்பாடுகளில் பலவற்றை தான் பின்பற்றி வந்த சைவ சமயத்தில் இணைத்து, மக்களையும், அவற்றைப் பின்பற்றச் செய்தார். இக்கொள்கை வழி வாழ்வோர் 'வீர சைவர்' களாவர் என அறிவித்தார். இவ்வாறு சைவ சமய சீர்திருத்தத்துக்கு இஸ்லாம் ஒரு பெரும் காரணமாய் அமைந்ததை இன்றும் காண முடிகிறது.

இவ்வாறு இந்தியாவின் மிகப் பெரிய சமயங்களெல்லாம் இயன்றவரை இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களை தங்கள் தங்கள் சமயத்தினுள் ஈர்த்துக்கொள்ளத் தவறவில்லை. இதைப்பற்றி புகழ்பெற்ற சமூகவியல் ஆய்வறிஞர் டாக்டர் தாரா சந்த் அவர்கள் தமது புகழ் பெற்ற ஆராய்ச்சி நூலான 'தி இஸ்லாமிக் இன்ஃபுளுயன்ஸ் இன் இண்டியன் கல்ச்சர்' எனும் ஆய்வுப் படைப்பில் வரலாற்றுப் பூர்வமாக பல உண்மைகளைத் திறம்பட தொகுத்துரைத்துள்ளார்.

**தவிர்க்கவியலா நிலை**

ஒரு கால கட்டத்தில் இஸ்லாம் எடுத்தியம்பும் வாழ்க்கை

நெறிமுறைகளை தவிர்ப்பது இந்தியச் சமயங்களுக்கு இயலாததொன்றாகியது. அறிவுப்பூர்வமாக அவற்றை ஒதுக்க அல்லது தவறானவை எனக் காட்ட இந்தியச் சமயவாதிகளால் இயலவில்லை.

இஸ்லாத்தில் பிற சமயக் கருத்துகள் எதையும் புகுத்த இயலா விட்டாலும் இஸ்லாத்தின் கொள்கை, கோட்பாடு களைத் தேவையான அளவுக்குச் சுவீகரித்துக் கொள்ள ஹிந்து சமயமும் ஹிந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளும் தவறவில்லை.

இதனை வரலாற்றுப் பூர்வமாக "இண்டியன் ரிலிஜியன்ஸ்" எனும் ஆங்கில நூலில் டாக்டர் பர்த் எனும் ஆய்வறிஞர் சிறப்பாக அலசி ஆராய்ந்துள்ளார். இந்தியா வில் இருக்கக்கூடிய அத்தனை மதங்களைப் பற்றி, அவற் றுள் நடைபெற்ற கொடுக்கல் - வாங்கல் பற்றி, அவற்றில் காணும் சாயல்கள், ஒற்றுமை - வேற்றுமைகள் பற்றி மிகச் சிறப்பாக ஆய்ந்து எழுதியுள்ளார்.

### பக்தி இயக்கமும் இஸ்லாத்தின் பங்களிப்பும்

இதையெல்லாம்விட நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான செய்தி 'பக்தி இயக்க' முயற்சியாகும். இஸ்லாமியக் கருத்துகளின்பால் ஈர்க்கப்பட்ட பல இந்து சமயப் பெரியார்கள் இந்து சமய மறு மலர்ச்சி ஏற்பட உழைக்கலாயினர். இந்த இயக்கம் இந்தியா முழுமையும் தன் செல்வாக்கைப் பதிக்கத் தவறவில்லை. இந்த இயக்கம் ஏற்பட முழு முதற்காரணமாயமைந்தவர்கள் இந்தியா முழுமையும் பரவியிருந்த இஸ்லாமியச் சூஃபிகளும், வலிமார்களுமாவர்.

முஸ்லிம்களின் ஆட்சி வடக்கே நிலை பெற்றிருந்த கால கட்டத்தில், முஸ்லிம் மன்னர்களோ ஆட்சியினரோ இஸ்லாமிய நெறி பரப்ப எந்த முயற்சியும் எடுத்தவர்

களில்லை. அவர்களின் சிந்தனையும் செயலும் ஆட்சி செலுத்துவதோடு சரி. இஸ்லாத்தைப் பொருத்தவரை மன்னர்கள் முஸ்லிம்கள் என்பதைத் தவிர வேறு எந்தச் சிறப்பாம் இல்லை.

ஆனால் இஸ்லாத்தை இந்திய மக்களிடம் கொண்டு சேர்த்தவர்கள் இஸ்லாமிய சூஃபிகளும் இறைநேசச் செல்வர்களாகிய வலிமார்களுமேயாவர். அத்தகையவர் களில் குறிப்பிடத் தக்கவர்கள் குவாஜா மொய்னுதீன் (ஆஜ்மீர்), நிஜாமுத்தீன் (டெல்லி), நத்தர்ஷா (திருச்சி) ஷாஹுல் ஹமீது ஆண்டகை (நாகூர்), இபுறாஹீம் ஷஹீது ஒலியுல்லாஹ் (ஏர்வாடி) ஷேக் தாவூத் ஒலியுல்லாஹ் (முத்துப் பேட்டை) சதக்கத்துல்லா அப்பா போன்ற பெரியோர்களாவர்.

## இருபால் மெய்ஞ்ஞானியர் தொண்டு

அவ்வாறே சூஃபிமார்களும் சூஃபிக் கவிஞர்களும் அவ்வப் பகுதிகளில் வழங்கிய அவ்வம் மொழிகள் வாயிலாக இஸ்லாமியக் கருத்துகளையும் சிந்தனை களையும் சிந்தைகொள் மொழியில் எடுத்தியம்பினர். தமிழைப் பொருத்தவரை ஐம்பதுக்கு மேற்பட்ட இஸ்லாமிய மெய்ஞ்ஞானிகளாகிய சூஃபிக் கவிஞர்கள் நூற்றுக் கணக்கான இஸ்லாமிய ஞானப்படங்களை எழுதிக் குவித்துள்ளனர். இவர்களுள் தக்கலையின் மிக்க புகழ் பீர் முஹம்மது அப்பா அவர்கள் பத்தாயிரம் இஸ்லாமிய ஞானப் பாடல்களைப் பாடியுள்ளார். குணங்குடி மஸ்தான் நாடறிந்த மெய்ஞ்ஞானத் தமிழ்க் கவிஞராவார். இவர் களுள் சில பெண் சூஃபிக் கவிஞர்களும் வாழ்ந்து மறைந் திருக்கிறார்கள் என்பது வியப்பூட்டும் செய்தியாகும். தென் காசி ரசூல் பீவி, இளையான்குடி கச்சிப் பிள்ளையம்மாள், கீழ்க்கரை செய்யது ஆசியா உம்மா (மேல் வீட்டம்மா) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

### சித்தர்களும் சூஃபிகளும்

சூஃபிகள் எனப்படும் மெய்ஞ்ஞானியர்களைச் சித்தர்கள் என அழைப்பது வழக்கம். இவர்களில் பதினெட்டுப் பேர்களைச் சிறப்பாக பதினெண் தமிழ்ச் சித்தர்கள் என அழைப்பர். இப்பதினெட்டுச் சித்தர்களுள் மூவர் முஸ்லிம்கள். மச்சரேகைச் சித்தர் எனும் ஐதுரூஸ், குணங்குடி மஸ்தான் எனும் சுல்தான் அப்துல் காதர், தக்கலை பீர் முஹம்மது அப்பா ஆகியோர் ஆவர். இவர்கள் மற்ற சித்தர்களைப் போன்று இறைநெறியை, அதை அறிந்துணர்வதற்கான மெய்ஞ்ஞான உணர்வை மனித குலம் ஒன்று என்ற நோக்கில் வழங்கிய சிறப்புக் கருதி, இவர்கள் மத பேதம் ஏதுமின்றி பதினெண் சித்தர் பட்டியலில் இணைத்து அழைக்கப்படலாயினர்.

தென்னகத்தில் சித்தர்களும் சூஃபிகளும் மெய்ஞ்ஞானத்தைப் பரப்ப விழைந்தது போன்றே வட நாட்டில் மனிதகுல வாழ்வு மேன்மையுற, மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் அடிப்படை உண்மைகளை, இந்து சமயத்தின் சிறப்புச் சிந்தனைகளை, இஸ்லாத்தின் ஏற்புடைய உயர் கருத்துகளையும் தத்தம் மொழிகளில் குழைத்து தந்து மக்களை நல்வழிப் படுத்த முயன்றனர். யார் என்பதைவிட. என்ன என்பதில் மட்டுமே கருத்தைச் செலுத்தத் தூண்டும் இப் பெரியார்களின் முயற்சியே 'பக்தி இயக்க'மாக வட நாட்டில் நடைபெறலாயிற்று. இவ்வியக்கத்தை ஆற்றலுடன் நடத்திய பெருமை ராமானந்தர், கபீர்தாஸ், சாது தயாள், ராம தேவர், லால் தாஸ், பாபாலால் பிரான்தாஸ், ராம்சரண், ஜகஜீவன் தாஸ், புல்லா சாஹிப், சந்திர தாஸ், கேசவ தாஸ், கரீம் தாஸ் போன்றோர்களையே சாரும். இவர்கள் ஏற்புடையதெனக் கருதிய இந்து சமயச் சிந்தனைகளையும் இஸ்லாமியக் கருத்துகளையும் தங்கள் மொழிகளில் குழைத்துக் கொடுத்து, மக்களிடையே சமய சமரச உணர்வு மேலோங்க உழைத்தவர்கள். இவர்கள் தங்கள் பெயர்களிலேயே இரு சமயச் சாயலையும்

இணைத்துக் கொண்டவர்கள். இதன் மூலம் ஒருவித மறுமலர்ச்சிப் போக்கை ஹிந்து சமயத்தில் தோற்றுவிக்க முயன்று வெற்றி பெற்றவர்கள். இத்தகு முயற்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பெரும் காரணமாக அமைந்தது இஸ்லாம் எனில் அஃது மிகையன்று.

**சீர்மைச் சிந்தனை**

இந்த பக்தி இயக்கத்தைத் தொடங்கி வைத்த பெருமைக்குரியவர் ராமானந்தர் ஆவார். இறைவனுக்கு உருவமில்லை; உருவமில்லாத இறைவனை மனத் தளவிலேதான் எண்ணிப் பார்க்க முடியும். மனித குலம் முழுமையும் ஒன்றுதான். நீங்கள் எந்தப் பெயரிட்டு வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள். ராம் - ரஹீம் என்ற பெயர்களெல்லாம் ஒரே பரம்பொருளைக் குறிக்கும் வெவ்வேறு பெயர்களாகும். இத்தகைய கருத்துகள் மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றன. இதனால் அவருடைய பக்தி இயக்கத்திலே பெருந்திரளாக இந்து சமயப் பெருமக்கள் இணைந்தார்கள். அவருக்குப் பின் கபீர் தாஸ், ராம தேவர், ராம் சாஹிப், புல்லா சாஹிப், கரீம் தாஸ் எனப் பெயரிட்டுக் கொண்டதனால் அவர்களை ஹிந்துவா, முஸ்லிமா எனக் கண்டறிய இயலாவண்ணம் தங்கள் பெயர்களை வைத்துக் கொண்டு இரு பெரும் சமயங்களிடையே இணைப்புப் பாலமாகவும் மக்களிடையே சமயப் பொதுமை உணர்வை உருவாக்கும் சமய சமரசவாதிகளாகவும் அமைந்தனர். அவர்கள் பேச்சிலும் எழுத்திலும் நீக்கமற நிறைந்திருப்பது இறைவனை ராம் என்று கூறினாலும் ரஹீம் என்று கூறினாலும் இறைவன் ஒருவனே; நாம் எப் பெயரிட்டு அழைப்பினும் இறைவனுக்கு உருவமில்லை; உருவ வணக்கம் அறவே கூடாது. மனத்தளவிலே இறை நம்பிக்கையோடு வணங்குதல் வேண்டும். ஏனெனில் இறைவனை மனத்தளவிலேதான் உணர முடியும். இறை

வனுக்கு நன்றி செலுத்துவதுதான் மனிதப் பிறப்பின் தலையாய கடமை. ஏனெனில், மனிதனுக்குத் தேவைப் படும் அனைத்தையும் படைத்தளித்துள்ள இறைவன், அவற்றை உரிய முறையில் துய்க்க, பகுத்தறிவையும் கொடுத்துள்ளான். எனவே, அனைத்தையும் அளித்த இறைவனுக்கு உள்ளத்தாலும் உடலாலும் இறைவணக்கம் புரிந்து நன்றி கூறுவது இன்றியமையாக் கடமையாகும்.

இதையே தமிழ்நாட்டுச்சித்தர்களும் தமிழ் பாடல்கள் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். "நட்டக் கல்லைத் தெய்வம் என்று நாலு புஷ்பம் சாற்றியே சுற்றி வந்து மொண மொணத்துச் சொல்லும் மந்திரம் ஏதடா, நட்டக் கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில், சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?" என்று அழகாகப் பாடியுள்ளார் பத்திரகிரியார். மொத்தத்தில் சித்தர் பாடல்களை எடுத்துக் கொண்டால் உருவ வழிபாட்டிற்கு எதிரான கருத்து களையே கூறிச் சென்றுள்ளார்கள். ஒரே இறைவன் என்பதையும் உலக மக்களெல்லாம் ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள்; சகோதரர்கள் என்றும் அவர்களுள் வேறுபாடுகளேதும் காட்டுதல் கூடாது என்ற உணர்வை மக்கள் உள்ளத்தில் அழுந்தப் பதிக்க முயன்றவர்கள் சித்தர்கள். இவ்வுணர்வுகளெல்லாம் தமிழ் மண்ணிலே அழுந்தக் காலூன்றக் காரணமாயமைந்தவர்கள் வலிமார் களும் சூஃபிமார்களுமாவர்.

சூஃபிமார்கள் என்றழைக்கப்படும் இஸ்லாமிய மெய்ஞ்ஞானச் செல்வர்களும் வலிமார்கள் என்றழைக்கப் படும் இறைநேசச் செல்வர்களும் பக்தி இயக்கத் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்களிப்பைச் செய்துள்ளார்கள். இவ்வியக்கத்தை மதங் கடந்த நிலையில் மெய்ஞ்ஞானச்செல்வர்களாகப் பார்த்ததனால்தான் தமிழ்ச் சித்தர்களிலே மிகச் சிறந்த சிந்தனையாளர்களாகப் போற்றப்படும் பதினெண் சித்தர்களில் மூவர் முஸ்லிம் சூஃபிக்கவிஞர்களாக இணைக்கப்பட்டு போற்றப்பட்டனர்.

மூன்று முஸ்லிம் சித்தர்கள் கூறிய ஞானக் கருத்துகளை அடியொற்றியே மீதமுள்ள பதினைந்து சித்தர்களும் தம் ஆன்மீகக் கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். எனவே தான் அவர்களும் இவர்களுடன் ஒன்றாக இணைக்கப்பட்டு பதினெண் சித்தர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஒத்த கருத்தினையுடைய, ஒரே கூட்டத்தினராகக் கருதப்பட்டனர். இவர்களில் குணங்குடி மஸ்தானின் சீடர்களில் பெரும்பாலோர் முஸ்லிமல்லாதவர்கள், குறிப்பாக சமூகத்தில் மேற்குடி மக்களாகக் கருதப்பட்ட மேற்சாதியினராவர்.

### தமிழ் பெண் சூஃபிகள்

இதில் மற்றொரு சுவையான செய்தியும் உண்டு. சித்தர்களில் பெண் சித்தர்கள் யாரும் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. காரைக்கால் அம்மையார்கூட பக்தை என்ற வட்டத்துக்குள் வைத்துப் போற்றப் படுகிறாரே தவிர சித்தர் என்று யாரும் கருதுவதில்லை. ஆனால் இஸ்லாமியப் பெண் சூஃபிகள் ஐவர் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்களில் மூவரைப் பற்றிய முழுத் தகவல்கள் கிடைத்துள்ளன. தென்காசி ரசூல் பீவி, இளையான்குடி கச்சிப் பிள்ளை அம்மாள், கீழக்கரை செய்யது ஆசியா உம்மா ஆகியோரே அவர்கள். இவர்கள் எழுதிய பலப்பல மெய்ஞ்ஞான சூஃபிப் பாடல்களும் கிடைத்துள்ளன. இவர்களில் தென்காசி ரசூல் பீவி நாற்பது சீடர்களைப் பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்களில் ஒருவர் மட்டுமே முஸ்லிம். மற்றவர்களெல்லாம் பிற சமயத்தைச் சார்ந்தவர்கள். அந்த ஒரு முஸ்லிம் சீடரும் அவ்வம்மையாரின் கணவரே ஆவார் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

### தொட்டவர்கள் சித்தர்கள் - முடித்தவர்கள் சூஃபிகள்

நான் சுமார் இருபது ஆண்டுகட்கு முன்னர் சூஃபி லிட்டரேச்சர் இன் தமிழ்' (Sufi literature in Tamil) என்ற கருத்

தரங்கை மத வேறுபாடின்றி மற்ற சமயத்தவர்களும் பங்கேற்கும் வகையில் நடத்தினேன். அதில் பங்கேற்ற டாக்டர் இரா. மாணிக்கவாசகம் என்பவர் பெரும் பேராசிரியர்; சித்தர்களைப் பற்றி ஆய்வு செய்து 'டாக்டர்' பட்டம் பெற்றவர். அவர் "சித்தர்களும் சூஃபிகளும்" என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துகையில், தன் ஒப்பீட்டாய்வின் பிழிவை, சுருக்கமாக மெய்ஞ்ஞானச் சிந்தனையைத் தொட்டவர்கள் சித்தர்கள்; அதன் கொடுமுடியாக சென்று, மெய்ஞ்ஞானத் துறையை நிறைவு செய்தவர்கள் இஸ்லாமிய சூஃபிகள் எனக் கூறினார்.

அப்போது எனக்கு ஒரு ஆசை எழுந்தது. இஸ்லாமிய மெய்ஞ்ஞானத் துறையைத் தமிழில் ஞானப்பாடல்கள் மூலம் பரப்பியவர்கள் எத்தனை பேர் என்பதை அறிய முயன்றேன். நண்பர் தக்கலை எம்.எஸ். பஷீர் அவர்களின் துணையோடு பட்டியல் தயாரிக்க முனைந்தேன். அப்போது சுமார் எழுபதுக்கு மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ் மெய்ஞ்ஞானிகள் தமிழில் சூஃபிப் பாடல்களை எழுதியதோடு, அவற்றைத் தமிழிலும் வெளியிட்டுள்ளனர் அல்லது அவை பிறரால் வெளியிடப்பட்டுள்ளன என்ற விவரம் தெரிய வந்தது. அவ்விவரங்களை 'தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள்' என்ற நூலில் தொகுத்து வழங்கப் பட்டுள்ளது. இதிலிருந்து இஸ்லாமிய ஞானத்தை மெய்யறிவைத் திறம்பட தமிழ் மக்களிடத்தே சமய வேறுபாடின்றி எடுத்து விளக்க, தமிழ் இலக்கியப் போர்வையில் எவ்வகை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை உய்த்துணர முடிகிறது.

இந்நிகழ்வுகளெல்லாம் ஒரு பேருண்மையை நமக்குத் தெளிவாக்குகின்றன. அதுதான் 'இஸ்லாமிய நெறியைப் பரப்பியவர்கள், பெருமானாருடைய பெருமையை மக்களிடத்தே கொண்டு சென்று விளக்கியவர்கள், இறை நெறியை நிலை நாட்டியவர்கள் முஸ்லிம் மன்னர்களோ ஆட்சி அதிகாரமோ எதுவுமே இல்லை. இஸ்லாமிய

சூஃபிகளும் இறைநேசச் செல்வர்களான வலிமார்களுமே என்பது எல்லா வகையிலும் தெளிவாக்குகிறது.

### ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி

எனினும், ஆங்கிலேய வரலாற்றாசிரியர்கள் குறிப்பாக ஸ்மித் போன்றவர்கள் இந்தியர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியின் அடிப்படையில், இந்தியாவில் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என எழுதி வைத்துள்ளார்கள். இது ஒரு வரலாற்று மோசடியாகும். ஆனால், பின்னால் வந்த பி.என். பாண்டே போன்ற நேர்மையான இந்திய வரலாற்றாசிரியர்கள் இஸ்லாம் இந்தியாவில் எக்காலத்திலும் எக்காரணம் கொண்டும் வாளாலோ அல்லது ஆட்சி அதிகாரத்தாலோ இஸ்லாம் பரப்பப் படவில்லை என்பதைப் பல ஆதாரங்களைக் கொண்டு நிறுவி, தவறான எண்ணங்களைத் துடைத்தெறிந்துள்ளார்கள்.

### தவறான பொருளில் ஜிகாது

இஸ்லாத்தை இழிவுபடுத்த, முஸ்லிம்கள் மீது குற்றம் சுமத்த சில நல்ல சொற்களைத் தவறான பொருளில் கையாண்டு இஸ்லாத்தின் மீது மாசு கற்பிக்க முயல்கிறார்கள். அதற்கு அவர்கள் கையாளும் சொல் 'ஜிஹாது' எனும் சொல்லாகும். இப்போக்கு சிலுவைப் போர் காலம் முதலே இருந்து வரும் சொல் மோசடியாகும். பொருளாழம் மிக்க ஜிஹாது எனும் சொல்லைத் தவறான பொருளில் பயன்படுத்துவதை அறியும்போது மிகவும் வேதனையாக உள்ளது.

யாராவது ஒரு முஸ்லிம் ஏதாவது ஒரு சூழ்நிலையில் ஜிஹாது எனும் சொல்லைப் பயன்படுத்தினால் கலவரத் தீவிரவாதியாக அவனைக் காணும் சூழ்நிலையே இன்று எங்கும் உள்ளது. அரபி மொழிச் சொல்லான ஜிஹாது என்பதன் உண்மைப் பொருளையோ இஸ்லாத்தையோ சரிவர அறிந்துணரும் வாய்ப்பைப் பெறாத சில முஸ்லிம்

களும் கூட, இச் சொல்லைத் தவறான பொருள் தொனிப் பில் பயன்படுத்துவதன் விளைவாக இஸ்லாம் மாசுபடுத்தப் படுகிறது. அதன் உண்மைப் பொருள்தான் என்ன?

'ஜிஹாது' என்பதற்கு இறைவழியில் போராடுவது என்பது பொருளாகும். ஜிஹாது என்பது இருவகைப்படும். ஒன்று 'ஜிஹாதுல் அஸ்கர்' என்பது. மற்றொன்று 'ஜிஹாதுல் அக்பர்' என்பதாகும். இரண்டும் வெவ்வேறு நிலைகளில் அமைந்து செயல்படுவனவாகும்.

ஜிஹாதுல் அஸ்கர்

ஒரு முஸ்லிம் தனக்கோ அல்லது தன்னைச் சார்ந்தவர் களுக்கோ அல்லது தங்கள் உடைமைகளுக்கோ ஆபத்து ஏற்படும்போது அதைத் தடுக்க, எதிர்த்துப் போராட முயல்வது அவனது இன்றியமையாக் கடமையாகும். இத்தகைய தற்காப்பு முயற்சி அல்லது தற்காப்புப் போரே இஸ்லாத்தில் 'ஜிஹாதுல் அஸ்கர்' என அழைக்கப் படுகிறது. 'உன்னை எதிர்த்துப் போராடுபவர்களைத் தற்காப்பு நிமித்தம் எதிர்த்து அல்லாஹ்வுக்காகப் போரிடு. ஆனால், அவர்களை முதலில் தாக்கி விடாதே. ஏனெனில், ஆக்கிரமிப்பாளர்களை இறைவன் அறவே விரும்பு வதில்லை' என்பது இறைநெறியாகும். எவ்வளவு அற்புத மான கருத்து.

எக்காரணம் கொண்டும், நான் உங்களை அடித்து விடக் கூடாது. நீங்கள் என்னை அடிக்க வந்தால் உங்களை எதிர்த்து தாக்கத்தான் அனுமதி உண்டே தவிர, ஒரு முஸ்லிம் எடுத்த எடுப்பில் யாரையும் அடிப்பதற்கோ, எந்த ஒரு நாட்டையும் தாக்குவதற்கோ எந்த ஒரு இனத்தையும் பாதிப்புக்குள் ளாக்குவதற்கோ எந்த உரிமையும் இல்லை. அப்படிச் செய்யக் கூடியவர்களை இறைவன் விரும்புவதும் இல்லை. அவர்களை வெறுத்து ஒதுக்கி வைத்து விடுகிறான். இதுவே திருமறையின் வாக்கமுதாகும். மொத்தத்தில் தற்காப்புக் காகப் போராடப் பணிப்பதே ஜிஹாதுல் அஸ்கர் ஆகும்.

இதனை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களால் எழுதப்பட்ட ‘படைப் போர்’ இலக்கியங்கள் வாழும் சான்றாகக் காட்சியளித்து வருகின்றன. போரையும், போருக்கான அடிப்படை அமைப்பான படையையும் பற்றியது ‘படைப்போர்’ இலக்கியங்கள்.

பிற சமயத்தினர் முஸ்லிம்கள் மீது தொகுத்த போர் களைப் பற்றிய செய்திகளே அதில் இடம் பெற்றுள்ளன. பிற சமயத்தினர் தாக்கும்போது அத் தாக்குதலை எதிர்த்து முஸ்லிம்கள் நடத்திய தற்காப்புப் போர்களே இவ் விலக்கிய நூல்களின் கருப்பொருள். மொத்த 18 படைப் போர் இலக்கியங்கள் தமிழில் உண்டு. ஆனால், ஒன்றிற்குக் கூட முஸ்லிம்களின் பெயர் இல்லை. அனைத்து இலக்கியத் தலைப்புகளிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் முஸ்லிம் கள் மீது படையெடுத்த பிற சமயத்தைச் சார்ந்த கதாநாயகர்களே ஆவர். உச்சிப் படைப்போர், வடோச்சிப் படைப்போர், செய்யிதத்துப் படைப்போர் என இலக்கியத் துக்குக் கூட படை நடத்திய பகைவர்களின் பெயர்கள் உண்டே தவிர இஸ்லாமியப் பெயர் இல்லை. படைப்போர் இலக்கியத்தின் தலைப்பில் இடம் பெற்றவர்கள் அத்துனை பேரும் இஸ்லாத்தின் எதிரிகள். இஸ்லாத்தை அழிக்க வேண்டும், முஸ்லிம்களை ஒழிக்க வேண்டும் என்பதற் காகவே முஸ்லிம்கள் மீது படையெடுத்து வந்தவர்கள். எனவே, அவர்களின் பெயராலேயே இப்படைப்போர் இலக்கியங்கள் அழைக்கப்படலாயின. ஏனெனில், முஸ்லிம்கள் யாரையும் முதலில் தாக்குவதற்கு அறவே அனுமதி இஸ்லாத்தில் இல்லை.

### சிந்துப் போரும் ஜிஹாதே

இந்தியாவில் முஸ்லிம்களுக்கும் மற்றவர்கட்கும் முதன் முதலில் நடைபெற்ற போர் சிந்துவில் நடைபெற்ற போராகும். இதைப் பற்றி நான் நிறைய ஆய்வு

செய்திருக்கிறேன். இந்தியாவிற்கு சிந்து நதிப் பகுதியில் ஏராளமான அரபு நாட்டு வணிகர்கள் வியாபாரம் செய்து வந்தனர். அரபு வியாபாரிகளின் வாணிகம் அப்பகுதியில் மிகச் சிறப்பாக நடைபெறுவதைக் காணப் பொறாத இந்திய வியாபாரிகள் குறிப்பாக இந்து சமயத்தைச் சார்ந்த வணிகர்கள் அடிக்கடி தகராறு செய்யத் தொடங்கினர். சில சமயம் இந்து மன்னர்களின் ஆதரவோடும் இவ்வாறு நடைபெறுவது வழக்கமாயிற்று. இதனால் அரபு வியாபாரி கள் பெரும் நட்டமும் மனவேதனையும் அடையலாயினர். அரசின் ஆதரவோடு வணிகர்களின் தடைகளும் தாக்குதல்களும் அளவுக்கு மீறிச் செல்கையில் அரபக ஆட்சியாளர்களின் கவனத்திற்கு சிந்துப் பகுதி அரபி வணிகர்கள் இச் செய்தியைக் கொண்டு சென்றனர். இந்தியாவின் சிந்துப் பகுதியில் தாங்கள் பாதுகாப்பு இல்லா நிலையில் அனுபவித்து வரும் துயரங்களை எடுத்துக் கூறியபோது, அரபக ஆட்சியாளர் முஹம்மது பின் காசிம் என்பவர் தலைமையில் ஒரு படையைச் சிந்து பகுதிக்கு அனுப்பி, எதிரிகளை அடக்கி ஒடுக்கி, அரபு வணிகர்கள் சுமுகமாக வணிகம் செய்வதற்கேற்ற இனிய சூழலை உருவாக்கித் தருமாறு பணிக்க, முஹம்மது பின் காசிமும் ஒரு படையுடன் சிந்துப் பகுதிக்கு வந்து, அரபு வணிகர் கட்கும் பாதகமானவர்களோடு போரிட்டு வென்று, நல்ல சூழலை உருவாக்கி அரபகம் சென்றார் என்பது வரலாறு. பாதகமான சூழலிலிருந்த அரபக வணிகர்கட்குச் சாதக மான வணிகச் சூழலை சிந்துப் பகுதியில் உருவாக்கவே முஹம்மது பின் காசிம் சிந்துப் பகுதி மீது படையெடுத்தாரே தவிர, நாட்டைப் பிடிக்கவோ ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவோ இல்லை.

### மக்காப் படையெடுப்பும் ஜிஹாதே

அவ்வளவு ஏன்? பெருமானார் (சல்) அவர்கள் மக்கா மீது படையெடுத்தார்கள் என்றுதான் மொட்டையாகப் பல வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்படுகிறது. ஆனால்,

உண்மை நிலை என்ன? பெருமானார் அவர்கள் மக்காவைப் பிடித்து ஆட்சி செய்ய வேண்டும் என்ற நாடு பிடிக்கும் ஆசையில் மக்கா மீது படையெடுக்கவோ அல்லது படை நடத்தவோ இல்லை என்பதுதான் உண்மை வரலாறு.

ஹுதைபியாவில் ஒரு உடன்படிக்கை அண்ணலாருக்கும் மக்கா குறைஷிகளுக்குமிடையே ஏற்படுகிறது. அந்த உடன்படிக்கை மக்கா குறைஷிகளுக்கு சாதகமாகவும் பெருமானார் (சல்) அவர்கட்கு மிகப் பெரும் பாதகமாகவும் அமைந்த ஒருசார்பான உடன்படிக்கை. இருப்பினும் உலகில் சாந்தியையும் சமாதானத்தையும் நிலை நிறுத்தும் வகையில் அந்த உடன்படிக்கையை ஏற்கிறார் அண்ணலார். இம்மண்ணுலகில் இறை நெறியை நிலைநிறுத்தவும், மக்களிடையே சாந்தியையும் சமாதானத்தையும் நிலை நிறுத்தவும் முஸ்லிம்கள் எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயங்கக் கூடாது என்பதை உலகினர்க்கு உணர்த்தவுமே குறைஷிகள் விதித்த அத்தனை நிபந்தனைகளையும் ஏற்றார் ஏந்தல் நபி (சல்) அவர்கள்.

அப் பாலைப் பகுதியில் பல்வேறு இன மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் பனீகுளாஅ என்பது ஒரு சின்னஞ்சிறு இனம். அவர்களும் குறைஷிகளைப் போன்று உருவ வழிபாடு நடத்தும் வழக்கத்தினர். அவர்களும் முஸ்லிம்களுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் சம்பந்தப்படுகிறார்கள்.

குறைஷிகள் பனீகுளாஅ வகுப்பினர்க்கு பெருந் தொல்லையும் துயரமும் தருகிறார்கள். இரு சாராரும் விக்கிரக வழிபாடு செய்பவர்களாக இருந்தபோதிலும் மிகச் சிறுபான்மையினர் என்பதனாலும் முஸ்லிம்களுக்கு எல்லா வகையிலும் உதவி வருவதாலும் குறைஷிகள் பனீகுளாஅ வகுப்பினரைத் தொடர்ந்து தொல்லைகளுக்காளாக்கி வந்ததை பெருமானார் கண்டித்து குறைஷிகளுக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தை அலட்சியப்படுத்திய மக்கா குறைஷிகள் பனீகுளாஅ மக்களுக்குத் தொடர்ந்து துன்பம்

தரவே, அதைப் பொறுக்காது, சிறுபான்மையினரான பனீகுளாஅ மக்களைக் காக்கும் வகையிலேயே பெருங் கூட்டத்தினரைத் திரட்டி மக்காவுக்கருகில் இரவில் குழுமி யிருந்ததைக் கண்டு பயந்துபோன மக்கா குறைஷிகள், அதைப் படையெடுப்பாகக் கருதி, பயந்துபோய் சரணடைந்தனர் என்பது வரலாறு.

எனவே, பனீகுளாஅ மக்களைக் காப்பதற்காகத்தான் மக்காக் குறைஷிகளின் மீது பெருமானார் படையெடுப்புப் பாவனை செய்தார்களேயன்றி, மக்காவை கைப்பற்றி ஆள வேண்டும் என்ற ஆதிக்க உணர்வோடு படைதிரட்டி போர் தொடுக்கவில்லை.

இங்கும் கூட நாம் கவனிக்க வேண்டிய இன்றியமையாச் செய்தி, தங்களின் தற்காப்புக்காகக் கூட அவர்கள் முயற்சி மேற்கொள்ளாது, ஒரு சிறுபான்மை சமூகத்தவர்களின் பாதுகாப்புக் கருதியே பெருங் கூட்டத்தைத் திரட்டி மக்கா நகர் சென்றார்.இதுதான் ஜிஹாதின்பாற்பட்ட இராணுவ உத்தி அல்லது போர் உத்தி. இதுவே 'ஜிஹாதுல் அஸ்கர்' எனப்படுவதாகும்.

'ஜிஹாதுல் அக்பர்'

மற்றொன்று, 'ஜிஹாதுல் அக்பர்' என்பதாகும். 'இதற்கு மிக்ப் பெரிய போராட்டம்' என்பது பொருளாகும். ஜிஹாது அஸ்கரைவிட ஜிஹாதுல் அக்பர் என்பது சிறப்புமிகு ஒன்றாகும்.

இதற்கு வேறொரு வகையில் பொருள் கூறுவதென்றால் 'நம்மை நாமே எதிர்த்துப் போராடுவது; வெற்றி பெறுவது. நம்மை நாமே வெற்றி கொள்வது என்றால் என்ன?

நம் மனதை சென்றவிடமெல்லாம் செல்லவிடாமல், மனத்தை ஒருமுகப்படுத்தி, பக்குவப்படுத்தி அதனை நல்லுணர்வின்பால் திருப்புவதே நம்மை நாமே வெற்றி கொள்ள முயல்வதாகும். இதையே மெய்ஞ்ஞானியர்

'உன்னை உன்னளவில் இறந்துவிடும்படி செய்தல்' என்பர். உன்னளவில் இறக்கும் உன் உள்ளத்தை இறைவனிடம் வாழும்படி செய்தலாகும்.

நம் உள்ளத்தில் இறையுணர்வு பூரணமாய்ப் பொங்கிப் பொழியாமல் இருப்பதற்கு என்ன காரணம்? சில தீய உணர்வுகள், தீய சிந்தனைகள், தீய குணங்கள் நம்மிடம் நிறைந்திருப்பதோடு சில சமயம் நம்மை ஆட்சி செய்து ஆட்டிப் படைக்கவும் செய்கின்றன. இதனால் நம் மனம் களங்கமிக்கதாக ஆகிவிடுகின்றது. இத் தீயுணர்வு, கீழ்தடை களை மனத்தளவில் ஒழித்து, உள்ளத்தை அப் பழுக்கற்ற தாக தூய்மையானதாக ஆக்கிக் கொண்டதால் அங்கே இறையுணர்வு பூத்துக் குலுங்கும்.

மனிதனின் அறிவு விளக்கத்திற்கு அடிப்படை யாயமைவன ஐம்புலன்களாகும். இதனை சம்ஸ்கிருதத்தில் ஐந்திரியங்கள் என்று கூறுவர். மனிதனின் ஐம்பொறி களாகிய கண், காது, மூக்கு, வாய், மெய், எனப்படும் தொடுவுணர்வு ஆகிய ஐம்புலன்களும் செவ்வனே இயங்க, இவ்வைம்பொறிகளாகிய யானைகளை அறிவு என்னும் அங்குசத்தால் அடக்கி ஆள்வதே 'ஜிஹால் அக்பர்' எனும் மாபெரும் போராட்டம். இதன் அடிப்படையில் அமைவதுதான் சூஃபியிஸம் எனும் மெய்ஞ்ஞான வாழ்வு.

'மரணம் வருமுன் மரணித்துவிடு'

ஆன்மீக வாழ்வின் அடித்தளம் புலனடக்கமாகும். அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் "மரணம் வருமுன் மரணித்து விடு" என்று கூறினார்கள். இவ்வாசகம் பொருள் பொதிந்த அற்புதமான வாசகமாகும். "மரணம் வருமுன் மரணித்துவிடு" என்றால் என்ன பொருள். உன் உள்ளத்தை முழுமையாக இறைவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்றால், நீ இறப்பதற்குமுன் உன்னிடத்திலுள்ள தீய உணர்வுகள், தீய சிந்தனைகள் மேலும் உன் உள்ளத்தில் நல்லுணர்வுகள் உருவாவதற்குத் தடையாக உள்ள தடைக்

கற்களையெல்லாம் தூக்கியெறிந்து அவற்றையெல்லாம் அழித்துவிடு. அதுதான் உண்மையான மரணம். அதற்கப் புறம்தான் இறைவனிடம் நேராகப் போக வேண்டிய பாதையை நீ தேடிக் கொள்ள முடியும். இதுதான் சூஃபிமார் களாகிய இஸ்லாமிய மெய்ஞ்ஞானிகள் அனைவரும் கண்டறிந்து பாராட்டிய பாதை.

இதையேதான் வான்புகழ் வள்ளுவரும்,

"உரனெனும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்

வரனெனும் வைப்பிற்கோர் வித்து"

எனக் கூறி அறிவுறுத்துகிறார்.

'அறிவு என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை யாறொருவர் அடக்கி ஆள்கிறாரோ அவர் அறிவுக்கு வித்துப் போன்றோர் ஆவார்," என்பது அவர்தம் கருத்தாகும்.

புலனடக்கம் என்பது அவ்வளவு எளிதான காரியம் அன்று. எல்லோராலும் இயலக்கூடிய செயல் அல்ல. மனிதனின் ஐம்புலன்கள் மனிதனையே ஆட்டி வைப்பவை யாகும். அவற்றின் அட்டகாசப் போக்கால் மனிதன் எளிதாகத் தன் ஐம்புலன்களுக்கு அடிமையாகி விடுகிறான். அதன்பின் எல்லாவிதமான, தீயுணர்வுகள், தீச் சிந்தனை களும், தீக் குணங்களும் எளிதாக அவனுள்ளே புகுந்து அவன் மனத்தையே நஞ்சாக்கி விடுகின்றன. ஆனால், இவ்வைம்புலன்களையும் நம் வயப்படுத்திேனோமானால் நம் உள்ளத்துள் மாறுபாடான உணர்வோ சிந்தனையோ அறவே தலைதுக்க இயலாமல் போய்விடும். இன்னும் சொல்லப்போனால் அனைத்து மனக்கதவுகளும் அடை பட்டுப் போகும். அதன்பின் நம் உள்ளம் இறையுணர் வோடு ஒன்றி, நம்மை சரியான வழித்தடத்தில் பீடுநடை போட பெருந்துணையாயமையும்.

### 'திக்ர்' தரும் செய்தி

ஐம்புலன்களை அடக்கி, இதயமெல்லாம் இறை யுணர்வுப் பொங்கிப் பொழிய இஸ்லாம் பல வழிகளைக் காட்டுகின்றது. அவற்றுள் புகழ் பெற்ற பெருவழியாக இஸ்லாம் இனம் காட்டுவது 'திக்ர்' ஆகும். திருமறை பிறந்த அறபுச் சொற்களில் சிலவற்றை ஓசையோடும் வெளி ஓசையின்றி உள்ளொலியோடும் திரும்பத் திரும்பச் சொல்லி உச்சாடனம் செய்யப்படுகிறது. உள்ளும் புறமும் எழுப்பப்படும் இச்சொற்களின் ஓசை மூளைப் பகுதியின் ஒரு குறிப்பிட்ட பிரிவில் ஒருவித அதிர்வை உருவாக்கு கின்றன என்று ஜப்பானிய நரம்பியல் வல்லுநர் ஒருவர் கண்டறிந்துள்ளார். உச்சரிக்கப்படும் சொற்களின் ஓசைக் கேற்ப தொடர் லயமாக மூளைப் பகுதியில் ஏற்படும் அதிர்வுகள் அவனைப் பிற சிந்தனைகளிலிருந்து விடுபடச் செய்து ஆன்மீக உணர்வை தொடர்ந்து உருவாக்கிப் பலப்படுத்துகிறது. அது 'திக்ர்' செய்பவருக்கு ஒருவித இன்ப உணர்வை, பேரானந்தத்தை, இதற்குமுன் அனுபவித் திராத ஒரு புதுவித இறை அனுபவ உணர்வை அவருக்கு ஊட்டி மகிழ்விக்கிறது. இது ஒருவித இறை தியானமாக அமைந்து, அவனுள் இருக்கும், இறைவனிடமிருந்து பெற்ற ஆன்மாவைத் தட்டி எழுப்புகிறது. விழித்துக் கொண்ட ஆன்மா அவனை இறைவனை நோக்கிச் செல்லத் தூண்டுகிறது. இவ்விதம் தொடர் 'திக்ர்' பயிற்சியின் மூலம் ஆன்ம விழிப்பும் இறை நெருக்கமும் பெற ஏதுவாகிறது. இஃது அண்மைக் காலத்தில் அறிவியல் பூர்வமாக நிறுவப்பட்டு வருகிறது.

ஆன்மீக உணர்வு பெற நாம் மேற்கொள்ளும் திக்ர் பயிற்சியின்போது மூளைப் பகுதியில் ஏற்படும் அதிர்வு அதிகரிக்க அதிகரிக்க நாம் ஆன்மீக உணர்வின் அனுபவத்தின் உச்சத்தையே எட்ட முடிகிறது என்பதை இன்று அறிவியல் ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளது வியப்பாக இருக்கிறது.

## ஆன்மீகமும் அறிவியலும் வேறு அல்ல

ஆய்ந்து பார்த்தால் ஆன்மீகமும் அறிவியலும் இணைந்து, முழுமையான இஸ்லாமிய அறிவை-இறை நெறியை முழுமையாக அறிந்துகொள்ள ஏதுவாயமை கிறது. அறிவியல துறையையும் ஆன்மீகத் துறையும் முரண் பட்டனவாக கருதுவது உண்மைக்குப் புறம்பானதாகும். சுருங்கச் சொன்னால் மனிதரின் இரு கண்களும் முழுமை யான பார்வையைப் பெறத்துணை செய்வதைப் போன்று ஆன்மீகமும் அறிவியலும் இஸ்லாத்தின் இரு பெரும் கண்களாக அமைந்து இறைநெறியின் முழுத்தோற்றத்தை வழங்கி, மனிதனை அதன் வழி வாழத் தூண்டுகின்றன. இவ்விரு துறைகளின் உற்ற துணையோடு வாழ முனையும் ஒவ்வொரு முஸ்லிமும் மனிதர்களில் மேம்பட்டவர்களாக-மனிதப் புனிதர்களாக வாழும் பேற்றைப் பெறுகின்றார்கள்.

இந்த இருபெரும் துறைகளின் இணையும் துணையும் மனிதகுல வாழ்வை மாண்புடையதாக்கும் இருபெரும் சக்திகளாகும்.

## உடல் தோல் பேசும்

திருமறையில் கூறப்படும் ஆன்மீகச் செய்திகளுக்கு அறிவியல் ஒளி பாய்ச்சப்படும்போது, அவற்றின் அடிப் படை உண்மைகள் தெற்றென விளங்குகின்றன. சான்றாக ஒன்றைப் பார்ப்போம்.

இறுதித் தீர்ப்பு நாளின்போது இறைச் சன்னிதானத்தில் விசாரணைக்காக நிற்கும்போது, நிற்பவர்களின் வாய் பேசாது. அப்போது, "மறுமையில் மனிதனின் ஒவ்வொரு உறுப்பும், அவனுடைய உடல்தோலும் பேச ஆரம்பிக்கும். அவை இவ்வுலகில் மனிதன் செய்த ஒவ்வொரு செயலைப்பற்றியும் ஓர் அணுவும் விடாமல் அப்படியே ஒப்புவிக்கும். மனிதனுக்கு அவனுடைய உடல் உறுப்புகளே சாட்சி பகரும்" என்பது திருக்குர் ஆன்.

இவ்வுலக வாழ்வின்போது பலதையும் பேசிப் பழக்கப்பட்டுப் போன வாய், வழக்கம்போல் பொய் புரட்டுகளையும் இணைத்துப் பேச முனைந்துவிடும் என்பதற்காக, அதைத் தவிர்த்துள்ள பிற உடல் உறுப்பு களெல்லாம் உள்ளதை உள்ளபடி பேசும். குறிப்பாக 'உடல் தோல் பேசும்' என்பது இங்கு கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும்.

'தோல் பேசுமா?' என்ற கேள்விக்கு டாக்டர் ஆர்லன் கார்னீ எனும் அமெரிக்க விஞ்ஞானி தன் நீண்ட நாள் ஆய்வின் விளைவாக 'தோல் பேசும்' என்பதை ஆதார பூர்வமாக நிரூபித்துக் காட்டியுள்ளார். அவரது அறிவியல் ஆய்வுக்கு அவர் வைத்துள்ள பெயர் 'Skin Speech' என்பதாகும்.

"செவிப்பறை கிழிந்துவிட்டாலோ, நோய்வாய்ப் பட்டாலோ, பிறகு காதுகளால் ஒலிகளைக் கிரகிக்க முடியாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட சில எலெக்டிரானிக் இயந்திரப் பொறி களின் துணைகொண்டு உடல் தோலையே 'காதுகளாக'ப் பயன்படுத்தலாம்" என 30.5.84 அன்று வெளியான டைம்ஸ் ஆஃப் இண்டியா இதழில் அவரது விரிவான கட்டுரை வெளிவந்துள்ளது.

இதிலிருந்து திருக்குர்ஆனில் இறைவனால் கூறப் பட்டுள்ள ஆன்மீகக் கருத்துகள் ஒவ்வொன்றையும் அறிவியல் அடிப்படையில் ஆயும்போது, அவற்றின் உட் பொருளும் தெளிவான கருத்துகளும் நமக்குத் தெள்ளுதின் புலனாகின்றன.

'தோல் பேசும்' என்ற கோட்பாட்டை அறிவியல் பூர்வமாக விளக்கினால் உங்களுக்கு எளிதாகப் புரியுமென எண்ணுகிறேன்.

நம் காதிலே ஒலிகளைக் கேட்பதற்கென்று 'செவிப் பறை' என்ற மெல்லிய சவ்வு ஒன்று உண்டு. இது மென்மை

யானது மட்டுமல்ல வலுவற்றதுமாகும். மிகப் பெரும் வெடிச் சத்தத்தைக் கேட்க நேர்ந்தால் கிழிந்துவிடும் அல்லது வெடிப்போ கீறலோ விழுந்து விடும். அதன்பிறகு காது கேட்கும் சக்தி இல்லாமற் போய்விடும். இதன் செயல்பாட்டை இன்னும் தெளிவாகப் பார்ப்போம்.

காதின் உட்பகுதியில் செவிப்பறை அமைந்திருக்கும். நாம் பேசும்போது எழும் ஒலி செவிப் பறையைத் தாக்கும். அப்போது செவிப்பறை அதிர்வடையும். செவிப்பறை எந்த அளவிற்கு அதிர்கிறதோ அந்த அளவுக்கு அவ்வொலி அதிர்வலைகளாகச் செய்தி நரம்புகள் மூலம் மூளைக்கு அனுப்பப்படுகிறது. இது எப்படியென்றால் நான் இப்போது வானொலியில் பேசுவதாக வைத்துக் கொள்ளுங்கள், அப்பேச்சு உங்கள் காதுகளுக்கு நேரடியாக வருவதாக நீங்கள் கருதுகிறீர்கள். அதுதான் இல்லை. நான் வானொலி யில் பேசும் பேச்சின் சொற்கள் எல்லாம் ஒலி அலைகளாக மாற்றப்பட்டு விண்ணில் அனுப்பப் படுகிறது. வானில் மிதந்துவரும் ஒலி அலைகள் 'ஆன்டென்னா' எனும் அலைவாங்கி மூலம் ஈர்க்கப்பட்டு அவ்வலைகள் மீண்டும் ஒலிகளாக மாற்றப்பட்டு வானொலி மூலம் ஒலிபரப்பப் படுகின்றது. இதே முறையில் தான் செவிப்பறை மூலம் ஒலி மூளைக்கு அனுப்பப் படுகிறது. இதயம் உட்பட உடலில் மாற்றுறுப்புப் பொருத்தும் தொழில் நுட்பம் வளர்ந்திருந்த போதிலும் பழுதடைந்த செவிப்பறைக்கு மாற்றாக வேறொரு செவிப்பறை பொருத்த இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை.

செவிப்பறை முற்றாகக் கெட்டுவிட்டது என்றால் அவனால் என்றைக்கும் எதையும் கேட்கவே முடியாது. அவன் டமாரச் செவிடாவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், அவனையும் கேட்கச் செய்ய முடியும் என்கிறார் அமெரிக்க விஞ்ஞானி டாக்டர் ஆர்லன் கார்னீ. எப்படி?

இயற்கையாக நம் உடம்பிலுள்ள தோல்கள் கேட்கும் ஒலிகளையெல்லாம் பதிவு செய்யக் கூடியனவாக உள்ளன. அத் தோலின் மீது ஒரு எலெக்ட்ரானிக் டிவைசை வைத்து அதனுடைய இன்னொரு முனையை காதினடியில் செவிப் பறையிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்போடு இணைத்துவிட்டால் பேசுவதெல்லாம் மூளைக்குச் செல்ல, மற்றவர் பேசுதைப் புரிந்து கொள்ள முடியும். அதனால் இதனை 'தோல் பேச்சு' எனும் பொருளில் 'ஸ்கின் ஸ்பீச்' எனப் பெயரிட்டு அழைக்கிறார் டாக்டர் ஆர்லன் கார்னீ.

இவ்வாறு இன்று புதிதுபுதிதாக கண்டுபிடிக்கும் அறிவியல் உண்மைகள் அனைத்தின் அடித்தளமும் திருமறையில் இறைவனால் தெளிவாகச் சொல்லப் பட்டிருப்பதைக் கண்டு இன்றைய ஆய்வுலகம், குறிப்பாக விஞ்ஞான உலகம் வியந்து வாயடைத்துப் போய் நிற்கிறது. திருமறையை அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆயும் போக்கு உலகெங்கும் பெருகி வருகிறது. இதனால் அறிவியல் ஆய்வுலகம் ஒரு வகையில் செழுமையடைந்து வருகிறதென்றே கூறலாம்.

ஆனால், முஸ்லிம் மக்களாகிய நாம், இஸ்லாம் சாதாரணமாக விதித்துள்ள இஸ்லாமியக் கடமைகளைக் கூட நிறைவேற்ற இயலாதவர்களாக வெறும் முஸ்லிம் பெயர் தாங்கிகளாக வாழவே முற்படுகிறோம். இஸ்லாம் எதையெல்லாம் தவிர்க்கப் பணிக்கிறதோ அதையெல்லாம் நம் சுய நல வேட்கையில் இஸ்லாமிய நெறிகளுக்குப் புறம்பாக இருந்தால் கூட அதைக் கைவிடாமல் வாழவே விழைகிறோம் என்பதை வருத்தத்துடன் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இதில் மிக முக்கியமான ஒன்றை உங்கள் முன் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திவரும் ஈமான் அமைப்பின் தலைவர் அவர்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு ஒரு விஷயத்தைக் கூறினார். இஸ்லாத்தில்

நிலவி வரும் கைக்கூலி பற்றிய பிரச்சினைதான் அது. அவர்களைப் போன்ற சமுதாயப் பெருமக்கள் இத்தகைய பிரச்சினைகளைக் கையிலெடுத்துக் கொண்டிருப்பதற் காகப் பெருமைப்படுகிறேன்.

### இன்றைய உலகின் நோக்கும் போக்கும்

இன்றைய உலகு இஸ்லாமிய நெறியை, பெருமானாரின் போதனைகளை அறிவியல் பூர்வமாக அணுக முற்பட்டுள்ளது. காலத்தை விஞ்சி நிற்கும் ஏற்றமிகு கருத்துகளை, புரட்சிகரமான சிந்தனைகளைக் கண்டு வியந்து போற்றுகிறது. அவற்றைச் செயற்படுத்தி வெற்றி காண முற்படுகிறது.

அதே சமயத்தில் இஸ்லாமிய மார்க்கத்தை சேர்ந்த முஸ்லிம்களாகிய நாம் இஸ்லாமிய நெறிப்படி வாழ் கிறோமா–வாழ முற்படு கிறோமா என்றால் 'ஆம்' என்று கூற என் 'நா' எழவில்லை. இஸ்லாத்தின் சிறப்புமிகு கொள்கைகள் பலவற்றுக்கு நேர் மாறான போக்கைக் கையாள்பவர்களாகவே இருக்கிறோம் என்பது ஒரு கசப்பான உண்மை.

### சுய ஆய்வு

இந்நிலை மாற மீலாது விழாக்களிலாவது நாம் சுய ஆய்வு செய்ய முற்பட வேண்டும். அப்போதுதான் இஸ்லாமிய நெறிப்படி வாழ வேண்டிய நாம் எங்கே சறுக்கியிருக்கிறோம். எங்கெங்கே வழுக்கி யிருக்கிறோம் என்பதை அறிந்துணரவும், அத்தவறான போக்குகளி லிருந்து மீண்டு, சரியான இஸ்லாமிய ராஜபாட்டைக்குத் திரும்ப வழிவகை ஏற்பட இயலும்.

### மேல் மட்டம் விழித்தால் அடிமட்டமும் விழிக்கும்

இவ்விழாவுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கும் அல்ஹாஜ் எஸ்.எம். சம்ஸ்தீன் அவர்கள்

தம் தலைமையுரையில் இன்றைய சமுதாயப் போக்கைப் பற்றி விவரிக்கும்போது சற்று உணர்ச்சி வசப்பட்டவராக 'கைக்கூலி'யின் தீங்குகளைக் கடுமையாகச் சாடினார். அதைக் கேட்டு நான் பெருமகிழ்வடைந்தேன். சமுதாயத்தின் மேல் மட்டத்தில் வாழுபவர்களிடையே இத்தகைய சமூக உயர் சிந்தனைகள் பூக்கத் தொடங்கியது என்றால் அதன் நறுமணம், விளைவுகள் சமூகத்தின் அடிமட்டம் வரை விரைந்து பரவி நல்விளைவுகளை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

**கைக்கூலி பெருநோய்**

கைக்கூலி எனும் பெருநோய் இங்குள்ள பிற சமயச் சார்புள்ள சில சமூக மக்கள் மூலம் பரவிய மாபெரும் சமுதாய நோய். இதனால் இஸ்லாமியப் பெண்கள் அனுபவித்து வரும் தொல்லைகளும் துயரங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. தன்னைப் போல் இறையான்மா பெற்றவர்களே பெண்கள் என்பதற்கு மாறாக, மார்க்கெட்டில் வாங்கப்படும் பொருட்களைப்போல் பெண்கள் கருதப் படவும் நடத்தப்படவுமான இழிநிலையே இன்றுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை.

**நாணயத்தின் இருபுறமே ஆணும் பெண்ணும்**

இதற்கு அடிப்படையான காரணங்களில் முக்கியமான ஒன்று பெண்களைத் தாழ்மையாகக் கருதும் தவறான மனப்போக்காகும். உலகத்துச் சமயங்களிலேயே உன்னதமான இடத்தைப் பெண்களுக்கு வழங்கியிருக்கும் மார்க்கம் இஸ்லாம் என்பதை அறிவுலகம் நன்கு அறிந்து போற்றி வருகிறது.

ஏனெனில், மனிதன் பெற்றுள்ள இறை ஆன்மாவின் ஒரு பகுதியாக அமைந்திருப்பவளே பெண். ஆணுக்குள்ள அனைத்து உரிமைகளும் பெண்ணுக்கும் உண்டு. ஆனால், அவை செயல்படும் வழி முறைகளுள் வேறுபாடு உண்டு.

ஒட்டு மொத்த சமுதாய நலன் ஆண்-பெண் இருவரையும் சார்ந்தே உள்ளது. நாணயத்தின் இரு பக்கங்களாக அமைந் திருப்பவர்கள் இஸ்லாமிய ஆணும் பெண்ணும்.

**வால்ட் விட்மன் கவிதை**

அமெரிக்காவின் மாபெரும் புதுமைக் கவிஞனான வால்ட் விட்மன் தன் கவிதையில் ஆணையும் பெண்ணை யும் பற்றி பாடும்போது

"Female is love and beauty
Male is power and action
Both are secred"

என்று இரத்தினச் சுருக்கமாகப் பாடினான்.

பெண் அன்பும் அழகுமாக இருக்கிறாள்
ஆண் சக்தியும் செயலுமாக இருக்கிறான்
இரண்டும் புனிதத் தன்மை வாய்ந்தவைகளே"

என்பது இதன் பொருள். இருபாலரின் தனித் தன்மை களை இரத்தினச் சுருக்கமாக உணர்த்தியுள்ளார் கவிஞர் வால்ட் விட்மன். இஸ்லாத்தின் பிழிவாகவே இக்கருத்து அமைந்துள்ளது. அகவாழ்வின் செழிப்புக்கு அன்பும் அழகும் ஆதாரமாயமைகின்றன. புற வாழ்வின் வெற்றிக்குச் சக்தியும் செயலும் அடித்தளமாயமைகின்றன. இரண்டும் ஒன்றிணைந்ததே மனித வாழ்க்கை. இதில் ஒருவரை மிக உயர்ந்தவர்கள் என்றோ மற்றொரு பாலரை மிகத் தாழ்ந் தவர்கள் என்றோ கூற முடியாது. எனினும் மனிதனின்றும் பெண்ணை இறைவன் உருவாக்கிய காரணத்தால் கையில் கட்டை விரல் இருப்பது போன்ற நிலை சமூகத்தில் ஆண்மகனுக்கு உள்ளதே தவிர, வேறு எந்தத் தனிச் சிறப்பும் இறைவனால் வழங்கப்படவில்லை. எனவே, ஆணுக்கும் பெண்ணுக்கும் இஸ்லாம் சம நிலை தந்துள்ளது. மணம் முடிக்க விரும்பும் மணமகன் பெண்ணுக்கு மஹர் எனும்

அன்பளிப்புத் தொகையாக - வாழ்க்கைப் பணமாக முன்ன தாகத் தந்த பின்னரே மண முடிக்க வேண்டும் என விதி வகுத்தது. பெருமானார் (சல்) அவர்களும், "திருமணத்தின் போது மணமகனுக்கு அவனுடைய மஹர் தொகையை கண்ணியமான முறையில் கொடுத்து விடுங்கள்" என்று பணித்துள்ளார்.

அண்ணலார் வழிக்கு
மாறுபாடாக

நாயகத் திருமேனியின் வாக்கை மட்டுமல்ல, இஸ்லா மியக் கொள்கை, கோட்பாடுகளைக் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் பெண் வீட்டாரிடம் ஆயிரக்கணக்கில் பணமும் தங்கமும் வைரமும் வரதட்சிணையாகக் கேட்டுப் பிழிந்தெடுக்கிறார்கள். பெண்ணுக்கு மஹர் கொடுப்பதற்கு மாறாகக் கைக்கூலி கேட்டு கையேந்திட பெண் வீட்டாரிடம் நிற்கிறோமே என்ற வெட்கம் பெரும்பாலோருக்கு இருப்ப தில்லை. திருமணம் என்றால் மணப் பொருத்தம், குணப் பொருத்தம் பார்ப்பது இயல்பு. ஆனால், இன்று பணப் பொருத்தமும் நகைப் பொருத்தமுமே பார்க்கப்படுகிறது. அன்றாடங்காய்ச்சியாக கூலித் தொழில் செய்யும் முஸ்லிம் கூட பல ஆயிரங்களையும் நகை நட்டுகளையும் எதிர் பார்ப்பது - வாடிக்கையாகிவிட்டது. இதனால் வறுமை வாய்ப்பட்ட பல நூறு இளங் குமருகள் விடியலை நோக்கித் தங்கள் இளமையை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

அரபகத்தில் அவதி

நம் நிலைதான் இப்படி என்றால், அரபு நாடுகளில் வேறொரு கொடுமை தலைதூக்கி, ஆண்களை அவதிக் குள்ளாக்கிக் கொண்டுள்ளது. இதை விளங்கிக் கொள்ள அண்மையில் எகிப்தில் எனக்கேற்பட்ட கசப்பான அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வது பொருத்த மானது எனக் கருதுகிறேன்.

அண்மையில் எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவுக்குச் சென்றிருந்தேன். அரசு விருந்தாளி என்பதால் அங்குள்ள நட்சத்திர ஹோட்டலில் ஒரு வாரம் தங்க வைக்கப்பட்டிருந்தேன். என் தேவைகளைக் கவனித்துக் கொள்ள நியமிக்கப்பட்டிருந்த சேவகர் தேவைக்கு அதிகமாகவே என் மீது அன்பைப் பொழிந்தார். மூன்றாம் நாள் பேச்சு வாக்கில் சற்று தயங்கியவராக "என் திருமணத்திற்கு நீங்கள் உதவ வேண்டும்" என மிக பவ்வியமாகக் கேட்டுக் கொண்டார். எனக்குச் சரியாகப் புரியவில்லை. நம்மைப் பெண் பார்க்கச்சொல்கிறாரா அல்லது அவர் சார்பில் பெண் வீட்டாரிடம் பேசி முடிக்க அழைக்கிறாரா? என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, ஒரு புன் சிரிப்பை உதிர்த்தவாறு சென்று விட்டார். மறுநாள் காலை நான் வெளியே புறப்படுவதற்குச் சுற்று முன்னதாக ஒரு அழகான இளம் பெண்ணை அழைத்து வந்து அறிமுகப்படுத்தும் வகையில், "இவள் என் உறவுக்காரப் பெண். இவளை நான் நிக்காஹ் செய்து கொள்ள விரும்புகிறேன். ஆனால், பெண் வீட்டார், பெண்ணுக்கு முப்பதினாயிரம் எகிப்திய டாலர்களை மஹராகக் கொடுத்தால், அவளை நிக்கஹ் செய்து கொடுப்பதாகக் கூறிவிட்டனர். உங்களைப் போன்றவர்களின் உதவியோடு கடந்த ஓராண்டாக சுமார் இருபத்தியிரண்டாயிரம் எகிப்திய டாலர்களைச் சேர்த்து விட்டேன். இன்னும் எட்டாயிரம் டாலர்கள் சேர்த்து விட்டால் எங்கள் நிக்காஹ் இனிது நடந்து விடும்" என்று ஏக்கப்பெருமூச்சோடு கூறி நின்றார். அவர் கூறியதையெல்லாம் அப்படியே ஆமோதிப்பதுபோல் நாணத்தோடு தலையை மேலும் கீழும் லேசாக ஆட்டியபடி அந்நங்கை நின்று கொண்டிருந்தாள். ஒரு வித வெட்கத்தால் அவள் முகம் ஜிவ்வென சிவப்பேறியிருந்தது. அவர்கட்கு உதவி செய்ய விழைந்த நான் நூறு எகிப்திய டாலர் நோட்டை எடுத்து நீட்டியவாறு, "சக்திக்கேற்றவாறு தானே மஹர்த் தொகை வழங்க வேண்டும். உன் சக்திக்குமீறிய பெருந்தொகையைக் கேட்பது கொடுமையாக உள்ளதே?" எனக் கூறி, நான் சற்று

அங்கலாய்த்தபோது, அவன் கூறிய பதில் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. "இப் பெண்ணுக்கு ஐம்பதினாயிரம் மஹர் கொடுத்து மணம் முடிக்க பல பேர் காத்திருக் கிறார்கள். இப் பெண்ணும் நானும் ஒருவரையொருவர் உள்ளன்போடு நேசிப்பதால் எனக்கு சலுகை காட்டும் வகையில் முப்பதாயிரம் மஹர் நிர்ணயித்துள்ளார்கள் என்று கூறி, நன்றி சொல்லி நகர்ந்தார்கள்.

இங்கு இஸ்லாத்துக்குப் புறம்பான கைக்கூலி முறை கொடுமைப் படுத்துகிறது என்றால், அரபு நாடுகளில் அனுமதிக்கப்பட்ட மஹர் தொகை அதிகரிப்பு ஏழை, எளியவர்களை வருத்துவதாக அமைந்துள்ளது. கைக்கூலி எனும் வரதட்சணை முறை ஒழிக்கப்பட வேண்டும். சக்திக்கு மீறிய முறையில் மஹர் வசூலிக்கும் போக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் இரு சாராருமே இறை தண்டனைக்கு ஆளாவதினின்றும் தப்ப முடியாது.

எந்தப் பொருத்தம்

நிக்காஹ் செய்ய விரும்பும்போது ஆணுக்கும் பெண்ணுக்கும் மனப் பொருத்தமும் குணப்பொருத்தமும் முதன்மையாகப் பார்க்கப் பட வேண்டும். அப்போது அவ்வாழ்க்கை செம்மையானதாக அமையவியலும்.

எனவே, இஸ்லாத்தை அண்ணலாரின் வழியாக, திருமறையின் வழிகாட்டுதலோடு பேணி நடக்க ஒவ்வொரு முஸ்லிமும் வாழக் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறு வாழும் வாழக்கையே வெற்றிகரமானதாக அமையவியலும். அத்தகு உறுதியை பெருமானாரின் பிறந்த நாள் விழாவிலே ஏற்போமாக.

*(17-7-98 அன்று துபாய் ஈ.டி.ஏ. அஸ்கான் நிறுவனக் கூடத்தில் நடைபெற்ற மீலாது விழா உரைச் சுருக்கம்)*

# இஸ்லாம் தரும் ஆக்கச் சிந்தனை

பெருமானாரின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளும்போது அண்ணலார் வாழ்வையும் வாக்கையும் அலசி ஆராயும் அரிய வாய்ப்பைப் பெறுகிறோம். அப்போது நாம் அண்ணலார் பற்றி அறிந்திராத அல்லது அறிந்தும் மறந்துவிட்ட பல பயனுள்ள செய்திகளை, நினைவுகளை இத்தகைய விழாக்கள் மூலம் மீண்டும் பெற வாய்ப்பாயமைகின்றது. மீலாது விழாவை முஸ்லிம்கள் மட்டும் கூடும் கூட்டமாக அமைக்காமல் பல்வேறு சமயத்தினரும் பங்கேற்கும் கூட்டங்களாக அமைக்கப்பட வேண்டும் என்பதில் நான் பேரார்வம் கொண்டவன். ஏனெனில் நாயகத் திருமேனியும் அவர் வாயிலாக உலகுக்கு வழங்கப்பட்ட இறைவேதமான திருக்குர்ஆனும் முஸ்லிம்களுக்காக மட்டும் அனுப்பப்படவில்லை. உலக மக்கள் அனைவருக்காகவும் அனுப்பப்பட்ட இறுதி இறைத் தூதர், இறுதி வேதம் என்பதை நாம் உணரவேண்டும். இதை நம்மைவிட நம் சகோதர சமயத்தவர்கள் இன்று மிக நன்றாகவே உணர்ந்து வருகிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

### இஸ்லாத்தை அறியப் பேரார்வம்

என்றுமில்லாத அளவுக்கு பிறசமயச் சகோதரர்கள் இஸ்லாத்தை அறியவும் ஆராயவும் முற்பட்டுள்ளனரே ஏன்?

இன்று உலகெங்கும் வாழும் படித்தவர்கள், அறிவாளிகள், அறிவியல் வல்லுநர்கள் குறிப்பாக மேற்குலகைச் சார்ந்த சிந்தனையாளர்கள் இன்று சமுதாய உணர்வோடு அறிவியல் சிந்தனையுடன் விஞ்ஞான பூர்வமாக இஸ்லாத்தை காணவும் ஆராயவும் முற்பட்டுள்ளனர் என்பது தான் உண்மை.

இன்றையச் சூழலில் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு அண்ணலார் மூலமும், அவர் மூலம் இறைவன் வெளிப்படுத்திய திருமறையின் வாயிலாகவும் தீர்வுகாண முற்படுகின்றனர். இதை ஒருவகை விழிப்புணர்வு என்றே கூறலாம்.

இச் சந்தர்ப்பத்தில் நாம் பெறவேண்டிய, நம்முன் உள்ள பொறுப்புகள், கடமைகள் என்ன என்பதையும் இந்நேரத்தில் சிந்திக்கவும் செயல்படுத்தவும் கடமைப்பட்டுள்ளோம்

பெருமானார் பிறந்தநாள் விழாவிலே கலந்து கொள்ளும் நாம், இறுதி நபி -இறுதி வேதம் வழி வாழ்ந்து காட்டிய 'அழகிய முன்மாதிரி' யான வாழ்வியல் நெறி முறைகளை நினைந்து, அதன்படி வாழ உறுதி கொள்கிறோம். அதற்காக வல்ல அல்லாஹ்விடம் இரு கரம் ஏந்தி 'இறை நெறி பேணும் எங்களுக்கு வெற்றியைத் தர' வேண்டுகிறோம்.

### பிறர் கண்ணோட்டம் என்ன?

இதே சமயத்தில் மற்றொன்றைப் பற்றியும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். நம்மைச் சுற்றி வாழ்வோரில் ஒரு சிலர் நம்மைப்பற்றி, நாம் பேணி வாழும் இஸ்லாமிய நெறிமுறைகளைப் பற்றி என்ன கருதுகிறார்கள், அவர்கள் கண்ணோட்டம் என்ன என்பதைப் பற்றியும் நாம் கருதிப் பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

மாற்றார் நம்மைப்பற்றிக் கொண்டுள்ள கண்ணோட்டத்தினால் நம் வாழ்க்கைச் சூழலில் ஏற்பட்டுள்ள மேடு பள்ளங்களைப் பற்றி ஆராயக் கடமைப்பட்டுள்ளோம். மற்றவர்கள் உண்மை தெரியாமல் நம்மைப் பற்றி தவறான கண்ணோட்டம் செலுத்துவதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என சொல்லுவது சரியான போக்கு அன்று. அந்தத் தவறான உணர்வுகளைப் போக்குவதும் உண்மைகளை அறிந்துணரத் தூண்டுவதும் நம் கடமையாகும். ஏனெனில், பிற சமயத்தவர் பெரும்பான்மையாக உள்ள நாட்டில் சிறுபான்மையினராக வாழும் நிலை. மாற்றாரின் தவறான கண்ணோட்டங்களை அலட்சியப் படுத்திவிட முடியாது.

ஒருபுறம் அண்ணலார் வாழ்வையும் வாழ்க்கையையும் அதற்கு அடித்தளமான இறுதித் திருமறையையும் அறிவியல் அடிப்படையில் ஆய முனையும் அறிஞருலகம், மற்றொரு புறம் சமய மாச்சரியங்கட்கு ஆட்பட்டு, உண்மையறிய விழையாது இஸ்லாத்தின் மீது மாசு கற்பிக்க முனையும் கூட்டம். இதை நாம் முழுமையாக அலட்சியப்படுத்தாது, அவர்கள் வீசும் தூசிகளை அப்புறப்படுத்த உண்மையை உணர்த்துவது நம் கடமையாகும். ‘அல்லாஹ் பார்த்துக் கொள்வான்’ என்று வீணே இருப்பது தவறு. அவன்தான் அத்தகைய தூசிகளைத் துடைப்பதற்கான அறிவையும் ஆற்றலையும் தந்துள்ளான் என்பதை மறக்கக் கூடாது. நாம் நடந்து செல்லும் பாதையில் கல்லையும் முள்ளையும் போடுகிறார்கள் என்றால் போட்டுவிட்டுப் போகட்டுமே என்று வெறுமனே இருக்க முடியுமா? அவற்றை அப்புறப்படுத்தத்தானே அறிவும் சிந்தனையும் இறைவனால் அளிக்கப்பட்டுள்ளது.

### அடிப்படை வாதிகளா? பழமை வாதிகளா?

இஸ்லாத்தின் உண்மைத் தன்மைகளை, அடித்தளப் பண்புகளை, உயிரோட்டமான தத்துவ நுட்பக் கருத்துகளை

உணர்ந்து தெளிய இயலாத சிலர், இஸ்லாத்தைத் தவறான கண்ணோட்டத்தில் விமர்சிக்க முற்படுகின்றனர். அதற்கு அவர்கள், கையாலும் சொல் FUNDAMENTALIST எனும் சொல்லாகும். இதற்கு 'அடிப்படைவாதிகள்' என்பது சரியான பெயர்ப்புப் பொருளாகும். மற்ற சமயங்ளெல்லாம் காலப்போக்கில் செல்வாக்குப் படைத்த ஒரு சிலரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப, மாற்ற திருத்தங்களை ஏற்றுச் சில அடிப்படைக் கொள்கைகளை விட்டுக்கொடுத்து மனித விருப்பங்களுக்கேற்ப மாறி விடுகின்றன.

ஆனால் இஸ்லாத்தைப் பொருத்தவரை இறைநெறியாக இறைவனால் இறுதித் தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூலம் வகுத்தளிக்கப்பட்ட வாழ்வியல் நெறியாக அமைந்திருப்பதால் தனிப்பட்ட மனித விருப்புகளுக்கு இம் மார்க்கத்தில் அறவே இடமில்லாமல் போகிறது. இறைநெறியாதலால் மாற்ற திருத்தமில்லாத தூயநெறியாக விளங்குகிறது. முஸ்லிம்கள் இறைநெறியின் அடிப்படைகளைப் பேணிக்காப்பதை உயிரினும் மேலாகக் கருதுவதால் அவர்களை அடிப்படைகளை விட்டுக் கொடுக்காத 'அடிப்படைவாதிகள்' எனக் கூறுவதில் தவறில்லை.

என்றாலும் சிலர், முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் ஏசவும் பழிக்கவும் Fundamentalist என்பதை பழமைவாதிகள் என்ற மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தி கொச்சைப்படுத்தி வருகின்றனர். ஆன்மீகத்தோடு அறிவியல் போதித்த அண்ணலார் வழி வாழும் முஸ்லிம்களை, இன்றைய அறிவியல் அனைத்துக்கும் அடித்தளம் அமைத்த இஸ்லாமியர்களை, பத்தாம் பசலிகள் என்னும் பொருள்பட பழமைவாதிகள் எனக் குறிப்பிடுவது விந்தையிலும் விந்தையாக உள்ளது. அன்று எகிப்து, பாபிலோன் போன்ற பகுதிகளில் முகிழ்த்தெழுந்த கணிதம், வானியல், மருத்துவம் போன்ற துறைகள் முளைவிட அவற்றிற்கு

அரிட்ஸ்டாடில், பித்தகோரஸ் போன்ற கிரேக்கர்களும் யூக்ளிடு, தாலமி போன்ற எகிப்திய, அலெக்ஸாண்டிரிய அறிஞர்களும் கொள்கை வடிவம் தர, அவற்றையெல்லாம் அரபி மொழியில் பெயர்த்த முஸ்லிம்கள், அத்தனை அறிவியல் துறைகளுக்கும் செயல் வடிவம் தந்து இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு வழிகோலிய முஸ்லிம்களா பழமைவாதிகள்?

அரபுகள் கண்டறிந்த கண்டுபிடிப்புகளை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து, இன்றைய தொழிற்புரட்சிக்கு வழி கோலினர் மேலைநாட்டினர். இவ்வாறு இன்றைய நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு – தொழிற்புரட்சிக்கு ஆதார சுருதியா யமைந்த முஸ்லிம்கள் பழமைவாதிகளா?

**'எம்மதமும் சம்மதம்' - சரியா?**

இதேபோல அண்மைக் காலமாக முஸ்லிம்களை நோக்கி ஒரு முழக்கம் முன் வைக்கப்படுகிறது. 'எம்மதமும் சம்மதம்' என்பதே அந்த முழக்கம். இஸ்லாத்தை மட்டும் ஏற்று, பின்பற்றி வாழாது எல்லா சமய நெறி முறைகளையும் முஸ்லிம்கள் ஏற்று பின்பற்றி வாழ முற்பட வேண்டும் என்பதே இம்முழக்கத்தை முழங்குவோரின் உட்கிடக்கை. இதற்கு மாறுபாடான உணர்வை வெளிப்படுத்தினால், மதச் சகிப்புணர்வு இல்லாதவன், சமய நல்லிணக்கச் சிந்தனை யற்றவன் என நம் மீது அவதூறு கூறி புழுதி வாரித் தூற்றுவதுதான் அவர்கள் நோக்கம்.

'எம்மதமும் சம்மதம்' என்ற கோட்பாட்டை ஏற்றால் வேறுபாடுகட்கு அப்பாற்பட்ட நிலையில் சௌஜன்யமாக வாழ முடியும். வேற்றுமை உணர்வே இல்லாமல் எல்லோரும் ஒருங்கிணைந்து வாழ முடியும் என்றெல்லாம் கவர்ச்சியான விளக்கம் தரத் தவறுவதில்லை.

ஆனால், ஒருவர் ஆழ்ந்து சிந்தித்தால் இக்கோட்பாடு எவ்வளவு அபத்தமானது என்பது தெளிவாகும்.

ஒரு மார்க்கம் சொல்லுகிறது "இறைவன் ஒருவனே; அவன் இணை துணை இல்லாதவன்; பிறப்பும் இறப்பும் இல்லாதவன்; அவன் ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை, அலியும் இல்லை; அவன் யாரையும் பெறவுமில்லை; யாராலும் பெறப்படவுமில்லை; அவன் எந்தத் தேவையும் இல்லாதவன்; அவன் கொடுப்பவனே தவிர எதையும் பெறுபவன் இல்லை." என்று கூறுகிறது.

மற்றொரு மதம் "இறைவன் ஒருவரல்ல; பலர். இறைவனோடு இறைவியும் உண்டு. இறைவனுக்கு மனைவி, மக்கள் உண்டு. உற்றார் உறவினர் உண்டு" என்று சொல்லுகிறது. எதிர் எதிரான இவ்விரு இறைக் கோட்பாடுகளும் எப்படி ஒன்றாகும்.

இன்னும் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள், இஸ்லாம் மார்க்கம் மனிதனுக்கு இறப்புக்குப் பிறகு பிறவி இல்லை என்கிறது. உயிரோடு வாழும்போதே அவனுக்குப் பிறவி உண்டே தவிர இறப்புக்குப்பிறகு அவன் மறுபிறவி எடுப்பதே இல்லை. எண்ணிப் பாருங்கள், நாம் வாழும் காலத்திலேயே மனைவியின் உறுதுணையோடு மகனாகவும் மகளாகவும் பிறவி எடுக்க முடிகிறது. கணவனின் இந்திரியத் துளியிலிருந்து உருவாகி வெளிப்படும் ஓர் உயிரணு மனைவியின் யோனிக் குழாயில் உருவாகியுள்ள முட்டையோடு சேர்ந்து, கருப்பையினுள் புகுந்து சிசுவாக வளர்ந்து வெளிப்படுகிறது. இவ்வாறு கணவனும் மனைவியும் உயிர் வாழ்கிறபோதே தங்கள் சந்ததிகளை பிறவி எடுக்க வைக்கிறார்களே தவிர இருவரும் இறந்த பின் ஏதும் உருவாவதில்லை என்பது அறிவியல் சித்தாந்தம்.

இறப்புக்குப்பின் அவன் வாழ்ந்த காலத்தில் செய்த நன்மை தீமைகளுக்கேற்ப உயர் பிறவியாகவோ அல்லது பூச்சி, புழு போன்ற தாழ்ந்த பிறவியாகவோ பிறப்பார்கள்
8 என்பது பிற சமயங்கள் கூறும் அழுத்தமான கோட்பாடு.

இவ்விரண்டு கோட்பாடுகளும் எப்படி ஒன்றாக முடியும்?

சுருங்கச் சொன்னால் 'எம்மதமும் சம்மதம்' எனும் கோட்பாடு 'நீ தொப்பியும் வைத்துக்கொள்; நாமமும் தரித்துக் கொள்; பொட்டும் வைத்துக் கொள்; பட்டையும் தீட்டிக் கொள்' என்று சொன்னால் அத்தோற்றம் எவ்வளவு விகாரமாக இருக்குமோ அதைப் போன்றதுதான் இக் கோட்பாடு. இந்த நவீன காலத்தில் தங்கள் பரந்த மனப்பான்மையை, விரிந்த கண்ணோட்டத்தை வெளிப் படுத்த, சமய சகிப்புத்தன்மையோடு ஒருங்கிணைந்து வாழ முயற்சிப்பது போல, சமய நல்லிணக்கத்தைத் தூக்கி நிறுத்த முயல்வது போன்ற தோற்றத்தை உண்டு பண்ண, குறிப்பாக ஆழ்ந்த சிந்தனையோ அனுபவமோ அற்ற இளைஞர்களை ஈர்க்க இக்கோட்பாடு அடிக்கடி முழங்கப்படுகிறது.

அதைவிடச் சிறந்த கோட்பாட்டை இஸ்லாம் உலகுக்கு வழங்கிக் கொண்டுள்ளது. அதுதான் "உங்கள் மதம் உங்களுக்கு; எங்கள் மார்க்கம் எங்களுக்கு" என்ற முழக்கம்.

எல்லா மதத்தையும் நாம் மதிப்போம். மதிப்பது வேறு, ஏற்று நடப்பது வேறு.

எல்லா மதங்களும் இறைவனால் வழங்கப் பட்டவைகளே. அனைத்து வேதங்களும் இறைவனால் தரப்பட்டவைகளே. ஆனால், அனைத்து மதங்களும் வேதங்களும் மனித விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மாற்ற திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டன. இதனால் அவை தங்கள் தனித்துவத்தை இழந்து பாதை மாறி இருட்கிடங்குகளாக மாறிவிட்ட நிலையில் அவையும் ஒளிப்பிழம்பாயுள்ள மார்க்கமும் ஒன்றே என்பது ஏற்கத் தக்கதன்று. ஆனால், அனைத்து மதங்களும் வேதங்களும் இறைவனால் வழங்கப்பட்டவை என்ற உண்மையை ஏற்பதில் எந்தத் தயக்கமும் இல்லை. அதற்காக பிற மதங்களை வெறுக்க வேண்டுமென்பதில்லை. அப்படி

வெறுத்தால் அவன் முஸ்லிமே அல்ல. மதிக்க வேண்டும். இறைவன் தன் திருமறையில்,

"எம்மால் அனுப்பப்படாத இறை தூதர்கள் இல்லை" எல்லா நாட்டிலும் எல்லா இனத்திலும் எல்லா மொழியிலும் நாம் தூதர்களையும் அவர்களுக்கு வேதத்தையும் அருளியிருக்கிறோம்" என்று தெளிவாகக் கூறியுள்ளான்.

ஆனால், இறை தூதர்களின் மறைவுக்குப் பின்னர் மனிதர்கள் தங்கள் சொந்தச் சிந்தனைகளை,விருப்பு வெறுப்பு உணர்வுகளை வேதங்களில் ஏற்றி மாசுப் படுத்தியும் இறை தீர்க்கதரிசிகளின் மறைவுக்குப் பின்னர், இறந்த நபி மீது கொண்ட பற்றாலும் பாசத்தாலும் இறைத் தன்மைகளை அவர் மீது ஏற்றி இறைவனாக்கும் சூழ்நிலை ஏற்பட்ட போது, மீண்டுமொரு இறைதூதர், மீண்டும் மூல வடிவில் இறை வேதம் இறைவவனால் உலகுக்க வழங்கப் படலாயிற்று. அவ்வகையில் வந்த இறுதித் தூதரே நபிகள் நாயகம் (சல்) அவர்களும் அவர்கட்கு வல்ல அல்லாஹ் வினால் வழங்கப்பட்ட இறுதி வேதம் திருக்குர்ஆனும். அவ்விறுதி வேதத்தில் இடம் பெற்ற இறைவாக்கே,

"உங்களுக்கு உங்கள் மதம்; எங்களுக்கு எங்கள் மார்க்கம்" என்ற சமயக் கோட்பாடு.

அனைத்து மதங்களையும் மதிக்கிறோம். மதாச்சாரியர் களான மத தீர்க்கதரிசிகளையும் மதிக்கிறோம். அம்மதங் களைப் பின்பற்றுபவர்களையும் மதிக்கிறோம். இதில் எந்த மாறுபாடும் வேறுபாடும் இல்லை.

### மாற்று மதங்கள் அல்ல; சகோதர சமயங்கள்

மாற்றுமதம் என்பதே தவறான சொற்பிரயோகமாகும். அனைத்துச் சமயங்களும் இஸ்லாம் உட்பட இறைவனால் அருளப்பட்டமையால் 'சகோதர சமயங்கள்' என்பதே பொருத்தமான சொற்பிரயோகம் ஆகும். அனைத்துச்

சமயங்களயும் அனைத்து வேதங்களையும் மதிக்க வேண்டும் என்பது நபிகள் நாயகம் (சல்) அவர்கள் கற்றுத் தந்த பாடமும் கூட. இதைத் தெளிவாக விளக்கவல்ல நிகழ்ச்சியொன்று பெருமானாரின் பெருவாழ்வில் நடை பெற்றதாக வரலாறு பதிவு செய்துள்ளது.

அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தில் இணைந்ததைத் தொடர்ந்து அவரது அன்பு மகள் அஸ்மாவும் இஸ்லாத்தில் இணைந்தார். ஆனால், அஸ்மாவின் தாயார் இஸ்லாத்தில் இணையாமல் சிலை வணக்கச் சமயத்திலேயே இருந்தார். ஆகவே, அவரோடு இணைந்து ஒரே வீட்டில் வாழவிரும்பாமல் தந்தையும் மகளும் தனியே வாழ்ந்து வந்தனர்.

ஒரு சமயம் அஸ்மாவின் தாயார் தன் அன்பு மகளைப் பார்க்க பரிசுப் பொருளோடு வந்தார். அவர் வாசற்படியில் கால் வைக்கும் முன்பே தன் தாயாரைப் பார்க்க விரும்பாத மகள் அஸ்மா கதவை அடைத்துத் தாளிட்டு விடுகிறார். தன் அன்பு மகளைப் பார்த்து, பரிசுப் பொருள் தந்து மகிழ்வித்து உறவாட வந்தவருக்கு பெரும் மன வருத்தம் ஏற்பட்டாலும் மகள் மனம் மாறி தாயின் மீது அன்பு சுரக்கும் என்ற நம்பிக்கையில் வாயிலில் காத்திருந்தார்.

இச் செய்தி உடனடியாகப் பெருமானார் காதுகளுக்கு எட்டியது. மாற்று மதத்தைச் சார்ந்தவர் என்பதற்காகத் தன் தாயாரை வெறுப்பது பெரும் தவறு என்பதை அஸ்மாவை அழைத்து உணர்த்துகிறார். தாய் என்பதற்காக மட்டும் அல்ல, சகோதர சமயத்தைச் சார்ந்தவரை மதிப்பதும் ஒரு முஸ்லிமின் இன்றியமையாக் கடமை என்பதை அஸ்மாவுக்கு உணர்த்தி, சகோதர சமயத்தைச் சார்ந்த தாயாரை வரவேற்று கண்ணியப்படுத்தச் செய்தாரென்றால் ஒரு முஸ்லிம் பிறமதத்தவர்களை மதிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையாகவே அமைந்துள் ளது என்பதை உணர்ந்து தெளியலாம்.

அது மட்டுமல்ல, பிற சமய தீர்க்கதரிசிகளை, நபிமார்களை யாரும் குறைந்து மதிப்பிட்டுப் பேசுவதைப் பெருமானார் அவர்களால் பொறுத்துக் கொள்ளமுடிவதில் லை. முந்தைய நபிமார்கள் அத்தனை பேர்களையும் முஸ் லிம்கள் மதித்துக் கண்ணியப்படுத்த வேண்டும் என்பதில் மிக வும் கவனமாக இருந்தார்கள்.இதை விளக்கும் நிகழ் வொன்று அண்ணலார் வாழ்வில் நிகழ்வுற்றது.

அபூபக்ர் (ரலி) அவர்கள் அண்ணலாரின் வலதுகரமாகத் திகழ்ந்தவர். ஒரு சமயம் கடை வீதிக்குச் சென்று யூதர் கடை ஒன்றில் பொருளின் விலையைக் கேட்டார். பேரம் பேசிய போது ஒரு குறிப்பிட்ட தொகையை விலையாகக் கூறி யதுடன் இதற்குமேல் குறைக்க முடியாது எனக் கூறினார் . அதோடு நிற்காமல் அவ்விலையை அதற்கு மேல் குறைக் கவியலாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில், ‘மனிதர்களிலேயே மகோன்னதனமான மனிதராகிய, இறை வனால் பெருமளவு மதிக்கப்பட்ட, உயர்த்திச் சிறப்பிக்கப் பட்ட அந்த மூஸா அவர்களின் மீது ஆணையாகச் சொல்கி றேன், இதற்கு மேல் குறைத்துக் கொடுக்க இயலாது’ எனக் கூறினார்.

மூஸாவை வானளாவ புகழ்வதைக் கேட்ட அபூபக்ர் (ரலி) அவர்கட்கு கோபம் வந்துவிட்டது. நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இறுதிப் பெரு நபியாக, நபிகளுக்கெல்லாம் நாயகமாக இறைவனால் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இறுதி வேதமான திருக்குர்ஆன் அருளப்பட்டுள்ளது. இந்த நிலையில் மூஸா அவர்களை உலகத்திலிருக்கும் மனிதர் களிலேயே உயர்ந்தவராக எப்படிக் கூறலாம். இதன் மூலம் பெருமானாரை தாழ்த்தி மூஸாவை உயர்த்திக் கூறுவதா எனக் கருதி யூதரை ஓங்கி அறைந்து விட்டார். அந்த யூதர் நேரடியாகப் பெருமானாரிடம் சென்று நடந்ததைக் கூறினார். இதைக் கேட்டு மனம் வருந்திய பெருமானார் உடனே அபூபக்ரை அழைத்து, என்னைத் தாழ்த்தி மூஸா (அலை)

அவர்களை உயர்த்திப் பேசினார் என்பதற்காக அறைந்த தற்கு மிகவும் வருந்துகிறேன் என்று கூறி யூதரிடத்திலே அண்ணலார் வருத்தம் தெரிவித்தார். இதன் மூலம் பிற சமயங்களைப் பழிக்கக் கூடாது, பிற சமயங்களைச் சார்ந்த வர்களை மதிக்க வேண்டும். பிற சமயத்தவர்களின் உணர்வு களை மதிக்கப் பணிப்பது இஸ்லாத்தின் அடிப்படைப் பண்பு என்பதை நாம் உணர வேண்டும்.

பிற சமயத்தவர் நம்பிக்கைகளை, சமய உணர்வுகளை மதிப்பது ஒரு முஸ்லிம்களின் அடிப்படைப் பண்பு என்பதை அழுத்தமாக உணர்த்தும் ஒரு நிகழ்ச்சி அவுரங்கசீப் ஆலம் கீர் வாழ்க்கையில் நடந்ததாக வரலாறு சாட்சியம் கூறிக் கொண்டுள்ளது.

அவுரங்கஸீப் ஆலம்கீரும் சிவாஜியும் அரசியல் விரோதி களாவர். அவர்களுக்கிடையே மதத் தகராறு எதுவும் இல் லை. அவுரங்கசீப்பின் ஆதிக்கத்திற்குட்பட்ட மராட்டியப் பகுதியைக் கைப்பற்றி ஆட்சி அமைக்க முயன்றவர் சிவாஜி. போரின்போது கைதான சிவாஜி சிறை வைக்கப்பட்டார். அப்போது அவருக்குக் கடுமையான நோய் ஏற்பட்டது. அவர் பின்பற்றி வந்த இந்து மத நம்பிக்கையின் அடிப்படை யில் மதுராவில் இருக்கும் கிருஷ்ணன் கோவிலுக்குச் சில குதி ரைகளைத் தானமாகத் தந்தால் தனக்கேற்பட்டுள்ள நோய் போய்விடுமெனவும் அவ்வேண்டுகோளை ஏற்று, அவுரங்க ஸீப் மன்னர் நிறைவேற்றித் தர வேண்டுமெனவும் சிறையி லிருந்தவாறே சிவாஜி வேண்டினார். அவுரங்கசீப்புக்கு அத் தகைய நம்பிக்கை அறவே இல்லையென்றாலும் சிவா ஜியின் சமய நம்பிக்கையை மதித்து, மதுராவிலுள்ள கிருஷ் ணன் கோவிலுக்கு குதிரை வழங்கினார் அவுரங்கஸீப் என்பது வரலாறு. இதிலிருந்து பிற சமயத்தவர் நம்பிக்கை களுக்கும் சமய உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பது இஸ்லாமியனின் இன்றியமையாக் கடமை என்பது தெளிவு.

அது மட்டுமல்ல, சமயம் கடந்த நிலையிலே பிற மதத்

தவர்களோடு நட்புணர்வு பாராட்ட வேண்டும் என்பது இஸ்லாமியக் கோட்பாடு. உயிர் சிநேகமாக நாம் எந்தச் சமயத்தைச் சார்ந்தவரோடும் இருக்க முடியும். மதம் வேறு, நட்பு வேறு. இதற்கு வாழும் சான்றாக விளங்குவது தேசிங்கு ராஜன் - மஹ்மூத் கான் நட்புணர்வு. இவர்களின் நட்பு, நட்புக்கே இலக்கணமாகும். மஹ்மூத் கானின் திருமணம் நடந்து கொண்டிருக்கிறது. தாலி கட்டும் நேரம். படையெடுப்பு என்று செய்தி வருகிறது. தாலி கட்டியவுடன் மனைவி முகத்தைக்கூட காணாமல் நண்பன் தேசிங்கு ராஜனோடு போர்முனை புகுந்தான் என்பது வரலாறு.

### மனிதத்துவத்திற்கே மரியாதை

மதம், ஜாதி, இனம், மொழி பார்க்காமல் மனிதன் என்ற அளவில் பார்க்கச்சொல்வது இஸ்லாம். அம்மனிதனிடம் மனிதத்துவம் இருக்கிறதா? எனக் கவனிக்கச் சொல்வது இஸ் லாம். அப்படியிருந்தால் அவனிடத்தில் அன்பு, பாசம் காட்டப் பணிப்பது இஸ்லாம். இதற்கு மதுரை மன்னன் ஜாதவர்மன் சுந்தரபாண்டியனும் அவன் படைத்தளபதி சையத் தகியுத்தீன்கானும் வாழும் சான்றாக வரலாற்றில் மின்னிக்கொண்டுள்ளார்கள்.

பாண்டிய மண்டலத்தின் கடைசி மன்னனாக மதுரையி லிருந்து ஆட்சி செய்தவன் ஜாதவர்மன் சுந்தரபாண்டியன். அப்போது அவன் படைத்தளபதியாகப் பணியாற்றிக் கொண் டிருந்தவர் சையத் தகியுத்தீன் கான் எனும் முஸ்லிம். இஸ்லாத்தை உணர்ந்து தெளிந்தவர்; அதன் கொள்கை, கோட்பாடுகளை இம்மியும் பிசகாமல் கடைப்பிடித்து வாழும் பெற்றியினர். அப்போது பாண்டிய மன்னனின் தளபதியாக மட்டுமல்லாது முதன் மந்திரியாகவும், தலைமை ஆலோசகராகவும் பணியாற்றியவர். அவரை நம்பி நாட்டை யே அவரிடம் ஒப்படைத்திருந்தான் ஜாதவர்மன் சுந்தர பாண்டியன். அப்போது பாண்டிய நாட்டின் மீது படை யெடுக்க முனைகிறான் மாலிக்கபூர். படை புறப்படுமுன்

பாண்டிய நாட்டின் தலைமைத் தளபதியும் தலைமையமைச்சருமான தகியுத்தீனுக்கு ஒரு இரகசிய செய்தி அனுப்புகிறான். "நீயும் முஸ்லிம் நானும் முஸ்லிம். நான் படையெடுத்து வருகிறேன். அப்போது நீ என் படையை எதிர்த்து போரிடாது ஒதுங்கிக் கொள். பாண்டிய நாட்டைக் கைப்பற்றி உன்னிடத்தில் ஒப்படைத்துவிடுகிறேன்" என ஆசைக் காட்டி ஓலை அனுப்பினான்.

செய்தி பெற்ற தகியுத்தீன் கொதிப்படைகிறார். இஸ்லாமிய நெறிக்குப் புறம்பாக ஆதிக்க வெறிபிடித்த மாலிக் காபூரின் இழிசெயலைக் கண்டு, கடுஞ்சினத்துடன் பதில் மடல் வரைகிறார். "இது ஒரு முஸ்லிம் செய்யும் இழி செயல். நான் இந்தப் பாண்டிய நாட்டின் உப்பைத் தின்று கொண்டிருப்பவன். இங்கு வீசும் காற்றைச் சுவாசித்து வாழ்பவன். நான் இந்த மண்ணுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேனே தவிர, முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக உனக்குச் சாதகமாக நடந்து கொள்வேன் என்று கனவிலும் கருதாதே. நீ இப்படி எண்ணிய மறு விநாடியே 'முஸ்லிம்' என்ற உன்னத இடத்தை இழந்துவிட்டாய். அவ்வாறு இழக்க நான் விரும்பவில்லை. எனவே உன் படைகளைப் போர்க்களத்தில் சந்திப்பேனே தவிர நீ கருதுவது போன்று இஸ்லாத்துக்குப் புறம்பான, நன்றி கெட்ட இழி செயலில் ஈடுபடமாட்டேன். போர்க்களத்தில் உன்னை சந்திக்க விழைகிறேன்" என மடல் வரைந்து, இன்று வரை நட்புக்கும் நன்றியுணர்வுக்கும் வாழும் எடுத்துக்காட்டாக வரலாற்றில் திகழ்கிறார் சையத் தகியுத்தீன் கான்.

அன்று மட்டுமல்ல ; இன்றும்

அன்று பாண்டிய நாட்டின் பாதுகாப்புக் கேடயமாக தகியுத்தீன் விளங்கியது போன்று இன்று இந்தியாவின் முழுப் பாதுகாப்புக்கும் அறிவியல் பூர்வமான பாதுகாப்புக் கேடயமாக விளங்குகிறார் இந்திய ஏவுகணை பிதாமகர் பாரத

ரத்னா அபுல் கலாம் என்ற அற்புத விஞ்ஞானி. இது வளரும் வரலாறு.

இதற்கெல்லாம் அடித்தளக் காரணம் இஸ்லாம் போதிக்கும் உணர்வு, கொள்கை, கோட்பாடு. ஒரு முஸ்லிம் எந்த மண்ணில் வாழ்கிறாரோ அந்த மண்ணுக்கு நன்றியுள்ளவராக வாழவேண்டும். அந்த மண்ணில் வாழும் மக்களிடத்திலே உள்ளன்பு காட்ட வேண்டும். 'எந்த மண்ணின் ஆட்சியில் நீ வாழ்கிறாயோ அந்த மண்ணின் ஆட்சிக்கு நீ உண்மையாக இரு' என்பதுதான் இஸ்லாமிய போதனை; பெருமானார் வாழ்ந்துகாட்டிய வாழ்வியல் முறை.

ஒரு மனிதனிடம் நன்றியுணர்ச்சி இருக்கிறதென்றால் அவனுக்கு நிச்சயம் மனசாட்சி இருக்கும். அவ்வுள்ளத்தில் நீதி, நேர்மை பொங்கும். அத்தகைய உள்ளத்தின் மூலம்தான் இறைத் தொடர்பு ஏற்படுகிறது.

இஸ்லாத்தின் உயிரோட்டமான நீதி நேர்மை என்ற உணர்வுகள் மனச்சாட்சியைத் தூண்டும் ஊக்கிகளாகும். இதற்கு இலக்கணமாய் அமைந்த நிகழ்வு ஒன்றை இங்குக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்

**அலீ (ரலி) ஓர் அரிய சான்று**

அலீ (ரலி) அவர்கள் நான்காவது கலீஃபாவாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். அவரிடத்திலே ஒரு இரட்டை வாள் இருந்தது. அது அவரிடத்திலே இருந்தவரை அவரை யாராலும் வெல்லமுடிந்ததில்லை. அவ்விரட்டை வாள் எப்படியோ கை மாறி ஒரு யூதன் கைக்குப் போய்விட்டது. அவ்வாள் தன்னிடம் இருந்தால் தன் பரம்பரைக்கே பெருமையாக அமையும் எனக் கருதி, அவ்வாளை மறைத்து விட்டான். ஆனால், நாட்டின் ஆட்சியாளரான கலீஃபா அலீ (ரலி) அவர்கட்கு வாள் இருக்கும் ரகசியம் தெரிய வருகிறது. அவர் நினைத்திருந்தால் தன் ஆட்சி, அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு சில நிமிடங்களுக்குள் இரட்டைவாளைப் பெற்றிருக்க

முடியும். ஆனால் அவ்வாறு செய்ய அவர் அறவே விரும்ப வில்லை. பின் என்ன செய்தார்?

தன் வாளை முறைப்படி பெற நீதி மன்றத்தை அணுகு கிறார்.

“என் இரட்டை வாளை யூதர் ஒருவர் கைப்பற்றி தன் வசம் வைத்துள்ளார். அந்த வாளை, நீங்கள் விசாரித்து, வாங்கித் தர வேண்டும்”

என்று நாட்டையே ஆளும் கலீஃபா சாதாரண குடி மகனைப் போன்று நீதி மன்றத்தை அணுகி நீதி கேட்கிறார்.

அவ்வழக்கு மன்றத்தின் நீதிபதியாக ஹாரிஸ் என்பவர் இருக்கிறார். வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி வாதி, பிரதிவாதி இருவரை ஒருசேர வழக்கு மன்றம் அழைத்து விசாரணை நடத்துகிறார்.

யூதரிடம் இருப்பதாகக் கூறும் வாள் உங்களுடையது தான் என்பதற்கு ஆதாரம், சாட்சி கேட்கிறார் நீதிபதி ஹாரிஸ். உடனே அலீ (ரலி) என் மகனை அழைத்துக் கேளுங்கள் என்று கூறுகிறார். தந்தையின் வழக்கில் பிள்ளையின் சாட்சி யை ஏற்பதற்கில்லை எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய் கிறார். வேறு வழியின்றி நீதிபதியின் தீர்ப்பை ஏற்று கலீஃபா அலீ (ரலி) வழக்கு மன்றத்தை விட்டு வெளியேறுகிறார்

நாட்டை ஆளும் கலீஃபாவாக இருந்தும் சாதாரண குடி மகனைப் போல் கோர்ட்டில் வழக்குத் தொடுத்ததும், போதிய சாட்சியமில்லா நிலையில் நீதிபதி தந்த தீர்ப்பை ஏற்றுக் கொண்டதும் யூதரின் மனச் சாட்சியை உறுத்தத் தொடங்கியது. கலீஃபா நினைத்திருந்தால் என்னை அடித்தோ உதைத்தோ வாளை கைப்பற்றியிருக்க முடியும். ஆனால், சரியோ தவறோ நீதிக்கு மரியாதை கொடுத்த அலீ (ரலி) அவர்களின் செயல்பாட்டைக் கண்ணுற்ற யூதர், இவ் வளவு உயர்ந்த உத்தமரின் புகழ்மிக்க உடமையான இரட்டை

வாளை இனியும் தம் வசம் வைத்திருப்பது மிகக் கேடான செயலாகும். இதனால் நமக்கு நரகம்தான் கிடைக்கும் எனக் கருதி, மனச் சாட்சியின் உந்தல்படி, வாளை எடுத்து வந்து அலீ(ரலி) அவர்களிடம் ஒப்படைத்து மன்னிப்புக் கோரினார் யூதர். அலீ(ரலி) அவர்களின் செயல் யூதரின் மனச் சாட்சியைத் தூண்டுவதாக அமைந்தது.

நீதி, நேர்மை செம்மையாகச் செயல்பட அவரவர் மனச் சாட்சி தூண்டுதல் பெறுவதை அடித்தளமாகக் கொண்டு அமைந்துள்ளதே இஸ்லாமிய ஷரீயத் சட்டம்.

**நீதியும் நேர்மையும் இஸ்லாத்தின் இரு கண்கள்**

நீதியையும் நேர்மையையும் இரு கண்களாகக் கருதும் இஸ்லாம், அவரவர் பின்பற்றும் சமய அடிப்படையில் நீதி வழங்கப்பட வேண்டும் என இஸ்லாம் விதிக்கிறது. அவ் வகையில் இஸ்லாமிய நெறி அடிப்படையில் நீதி வழங்க உருவானவையே ஷரீயத் சட்டங்கள்.

ஜஹாங்கீர் மாமன்னரின் அன்பு மனைவி நூர்ஜஹான். மிகச் சிறந்த அழகி மட்டுமல்ல, அறிவாற்றலும் செயல்திற னும் நிர்வாகத் திறமையும் நிறைவாக வாய்க்கப்பெற்றவர். ஜஹாங்கீர் ஆட்சி செய்து வந்தார் என்ற போதிலும் உண்மை யாக ஆட்சியை நடத்தி வந்தவர் அவர் மனைவி நூர்ஜஹான் தான் என்று கூறினால் அஃது மிகையில்லை.

ஒரு நாள் அரண்மனைத் தோட்டத்தில் வில் வித்தை பயிற்சி செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் எய்த அம்பு வேகமாக மதில் சுவரைத் தாண்டி வெளிச் சென்றது. அப்போது அவ்வழியே சென்று கொண்டிந்த சலவைத் தொழிலாளி ஒருவர் உடலில் பாய, அவர் அங்கேயே பிண மாகச் சாய்ந்தார். இந்தக் கொலை வழக்கு சக்கரவர்த்தியின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டது. கொலைக் குற்ற வாளியாக அவர்முன் அவரது அன்பு மனைவி நூர்ஜஹான் நிறுத்தப்பட்டார்.

வழக்குமன்ற விசாரணைக்குப் பின் ஷரீயத் சட்ட அடிப் படையில் தன் மனைவியென்றும் பாராமல் மரண தண்டனை விதிக்கிறார் மாமன்னர் ஜஹாங்கீர். 'ஒருவரைக் கொன்றுவிட் டால்,கொன்றவர் மரண தண்டனைக்கு உட்பட வேண்டும்' என்பது ஷரீயத் சட்டம். ஆனால், அவரைச் சுற்றியிருந்த அரசு அதிகாரிகளுக்கு இத்தீர்ப்பு அதிர்ச்சியளித்தது. தன் அன்பு மனைவி, தன்னைவிட ஆற்றலுள்ள பெண்மணி, அரசுக்கு வழிகாட்டியாக விளங்கவல்ல திறனாலி மரண தண்டனைபெறுவதை விரும்பவில்லை. ஏதேனும் ஒரு வகையில் தண்டனையைக் குறைக்கச் செய்யுமாறு மாமன்னரை வேண்டுகின்றனர். இஸ்லாமிய நீதி காப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்த ஜஹாங்கீர் மாமன்னர் சட்ட அறிவு நிறைந்த முஸ்லிம்களையும் இஸ்லாமிய ஞானமிக்க வரையும் ஒருசேர அழைத்து ஷரீயத் சட்டப்படி ஏதேனும் விதி விலக்கு அளிக்க முடியுமா என ஆராயச் சொன்னார். விதி விலக்கு இல்லையெனில் மரண தண்டனையை நிறை வேற்றப்பட வேண்டும் எனக் கூறினார்.

ஷரீயத் சட்ட நுணுக்கங்களையெல்லாம் அலசி ஆராய்ந்த போது, 'யார் கொல்லப்பட்டாரோ, அவருடைய அடுத்த வாரிசு, கொன்றவர்க்கு மரண தண்டனை கொடுக்க வேண் டாம், அத்தண்டனைக்குப் பரிகாரமாக பிணையத் தொகை கொடுத்துவிட்டால், மரண தண்டனை பெற்ற தண்டனை யாளியை விடுதலை செய்து விடலாம்' என்ற விதி விலக்கை எடுத்துக் கூறினார்கள். உடனே மன்னர் ஒரு கட்ட ளையைப் பிறப்பிக்கிறார்.'ஆட்சியாளர்கள் யாரும் இறந்தவ ரின் வாரிசான அவர் மனைவியை அணுகி பிணையத் தொகையைப் பெற்றுக் கொண்டு அரசிக்கு விடுதலை வழங்குமாறு எக்காரணம் கொண்டும் கோரக் கூடாது. அந்தப் பெண்ணாக முன்வந்து யாருடைய வற்புறுத்தலும் இல்லாது, 'பிணையத் தொகையை வாங்கிக் கொண்டு கொலையாளியை விடுவிக்கிறேன்' எனக் கூறினால்

மட்டுமே கொலையாளிக்கு விடுதலைச் சலுகை வழங்க முடியும் ' எனக் கூறிவிட்டார்.

இக் கட்டளையின் விளைவாக அரசு காவலர்கள் யாருமே இவ்விவகாரத்தில் தலையிட விரும்பவில்லை. எனினும், பொது மக்களில் சிலர் சலவைத் தொழிலாளியின் மனைவியிடம் சென்று 'எதிர்பாரா நிலையில் உன் கணவன் இறக்க நேரிட்டது. அரசி வேண்டுமென்று இக்கொலையைச் செய்யவில்லை. மன்னரால் மரண தண்டனை விதிக்கப் பட்ட அரசியை மன்னித்து விட்டதாகவும் பிணையத் தொகை தந்தால் போதும் என்று நீ கூறினாலொழிய அரசி கொலைத் தண்டனையிலிருந்து மீள வழியேயில்லை ' எனக் கூறி வேண்டினர்.

மனமிரங்கிய இறந்த சலவைத் தொழிலாளியின் மனைவி மன்னரிடம் சென்று, 'பிணையத் தொகை போதும், அரசியை மன்னிக்கிறேன்' எனக் கூற, மன்னரும் அரசிக்குத் தண்டனை யில் இருந்து விலக்கு அளித்தார் என்பது வரலாறு. எனவே, நீதியை நிலைநாட்டுவதில் சாதாரண குடிமகனிலிருந்து மா மன்னர் வரை முஸ்லிம்கள் எவ்வளவு கண்ணுங்கருத்துமாக, கண்டிப்புடன் கடைப்பிடித்து வந்துள்ளார்கள் என்பதற்கு இவ்வரலாற்று நிகழ்ச்சி ஓர் உன்னதமான சான்றாகும். நீதி நேர்மையின் அடிப்படையிலேயே இஸ்லாமிய அரசியல், சமூக, பொருளாதாரக் கொள்கைகள் வரையறுக்கப்பட்டன. ஆனால், இவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள், தவறான கருத்துகளை, உணர்வுகளை வெளிப்படுத்தத் தவற வில்லை. ஜிஹாது என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டது போலவே 'ஜிஸ்யா' வரியைப் பற்றியும் தவறான கருத்தோட் டங்களைக் கூறி இஸ்லாத்தின் மீது களங்கம் கற்பிக்க சிலர் தயங்குவதே இல்லை.

### ஜகாத்துக்கு ஈடாக ஜிஸ்யா

'ஜிஸ்யா எனும் வரி முஸ்லிம் மன்னர்களால் முஸ்லிமல் லாத பிற சமயத்தவர்களிடம் கட்டாய வரியாக, கொடுமை

யான முறையில் வசூலிக்கப்பட்டது ' என நீண்ட காலமாக எழுதியும் பேசியும் வருகின்றனர். இது உண்மைக்கு முற்றிலும் புறம்பான செய்தியாகும்.

ஜிஸ்யா வரி எதற்காக வசூலிக்கப்பட்டது?

ஏழையின் பங்கு எனக் கூறப்படும் ஜகாத் தொகை, முஸ்லிம்களிடமிருந்து வசூலித்து,அரசே அத்தொகையை ஏழை எளியவர்களிடம் முறையாகச் சேர்த்து விடுகிறது. ஆனால்,முஸ்லிமல்லாத பிற சமய மக்கள் இதுபோன்ற சமுதாய நன்மைகளைப் பெற முடியாமல் போகிறது. எனவே அந்தக் குறையைப் போக்க உருவாக்கப்பட்டது தான் முஸ்லிமல்லாதார் வழங்கும் ஜிஸ்யா வரி. முஸ்லிம்கள் வழங்கும் ஜகாத் வரி நிகர வருமானத்தில் இரண்டரை சதவீதம். ஆனால், முஸ்லிமல்லாதவர்கள் வழங்கும் ஜிஸ்யா வரி அதை விடவும் மிகக் குறைவானதாகும்.

ஜிஸ்யா வரி முஸ்லிமல்லாதவர் என்பதற்காகப் போடப்பட்ட வரி அல்ல.

அரசாங்கம் ஒரு முறையை வைத்திருந்தது. ஜாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி நாட்டின் பாதுகாப்பு நலன் கருதி, எல்லோரும் போர்ப் படையில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதே அது. இது எல்லா அரசாங்கமும் கடைப்பிடிக்கும் சாதாரண நடைமுறையும் கூட.

எனினும் முஸ்லிம் அரசாங்கப் படையில் சேர்ந்து பணியாற்ற விருப்பமில்லையென்றால் அவர் சிறு தொகையை அரசுக்குச் செலுத்தி விதி விலக்குப் பெற முடியும். இவ்விதி விலக்கு வரியே 'ஜிஸ்யா' என்று அழைக்கப்பட்டது. அதிலும் கூட, பாதிரியார்களுக்கு, பார்ப்பன அர்ச்சகர்களுக்கு, வயோதிகர்களுக்கு, பெண்களுக்கு விதி விலக்கு உண்டு. சிறுவர்கட்கும் நோயாளிகட்கும் விதி விலக்கு உண்டு. மீதமிருப்பவர்களுக்கு மட்டுமே ஜிஸ்யா வரி விதிக்கப்பட்டது.

வசூலிக்கப்படும் ஜிஸ்யா வரியும் எக்காரணம் கொண்டும் அரசு நிர்வாகச் செலவுகட்குப் பயன்படுத்தப்பட மாட்டாது. இஸ்லாமிய மார்க்கப் பயன்பாட்டுக் காரியங் களுக்கு இத் தொகை அறவே பயன்படுத்தக் கூடாது; தொடவே கூடாது.

பின் இத் தொகை எதற்குத்தான் பயன்படுத்தப்பட்டது?

முஸ்லிம் அல்லாதவர்களுடைய கோயில்கள், வழிபாட் டிடங்கள், சமயத் தொடர்பான விடுதிகள், மடங்கள் இவற்றின் சீரமைப்புகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். அங்கே இருக்கக் கூடிய ஏழை எளியோர்க்கு, முதியோர், நோயாளிகட்கு இத்தொகை செலவிடப்படும். இத்தொகைக்கு நிகராக அரசும் தொகை வழங்கும். இவ்விரு தொகைகளும் ஒன்றிணைக்கப்பட்டு மேற்கூறிய காரியங் களுக்குப் பயன்படுத்தப்படும் என்பதுதான் உண்மை நிலை. அந்த உண்மையை அறிந்துணராதவர்கள், அறிந்தும் முஸ்லிம்கள் மீது மத வாதத்தை ஏற்படுத்த முனைபவர்கள் ஜிஸ்யா வரி குறித்த தவறான தகவல்களைத் தந்து வந்தார்கள்; தற்போதும் தந்து வருகிறார்கள். இப்பழிகள் இப்போது துடைக்கப்பட்டு வருகிறது

## புரட்சிகரப் பொருளாதாரத் திட்டம்

இஸ்லாமிய சமூக, பொருளாதாரக் கொள்கைகள் இன்றைய உலகை விழிப்படையச் செய்து கொண்டுள்ளன. அந்த அளவுக்குப் புரட்சிகரமான பொருளாதாரக் கொள்கைகளைத் தன்னுள் கொண்டதாக இஸ்லாம் விளங்குகிறது.

நிலச் சீர்திருத்தம் இன்று பெரிதும் பேசப்பட்டு வருகிறது. 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்பது இன்று எங்கும் கேட்கும் புரட்சிகர முழக்கமாகும். இந்த முழக்கத்தை ஆயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன்பு உலகுக்கு வழங்கியவர் உமர் (ரலி) என்றால் எல்லோருக்கும் வியப்பாக இருக்கும்.

உமர் (ரலி) அவர்கள் ஆட்சிக்காலத்தில் பல புதுமையான, மக்களுக்கு, குறிப்பாக உழைக்கும் வர்க்கத்துக்குப் பெரும் பயன் அளிக்கவல்ல பல திட்டங்களைக் கொண்டுவந்து சட்டமாக்கினார். அவற்றில் ஒன்று நிலச் சீர்திருத்தச் சட்டம்.

இரண்டு ஆண்டுகள் யாரவது தங்கள் நிலத்தைப் பயிரிடாமல் தரிசாகப் போட்டிருந்தால், அந்த நிலத்தினுடைய உரிமையை அவர் இழந்து விடுவார் என்பது சட்டம். அந்த நிலத்தை எவரொருவர் பயிரிட முன் வருகிறாரோ அவருக்கு அந்நிலத்தின் அனுபோக பாத்தியதை போய்விடும் என்பது விதி.

பிலால் (ரலி) அவர்கள் போர்களில் முனைப்புடன் போரிட்டதற்காக ஒரு நிலப்பகுதி அவருக்கு அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்களால் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், பிலால் (ரலி) அவர்கள் அந்நிலத்தில் பயிரேதும் செய்யாமல் இரண்டரை வருட காலம் தரிசாகப் போட்டிருந்தார். இதை ஒரு முஸ்லிம், உமர் (ரலி) அவர்களிடம் வந்து "உமர் அவர்களே, இரண்டாண்டுகள் தொடர்ந்து பயிரிடப்படாமல் நிலத்தைத் தரிசாகப் போட்டிருந்தால், அந்த நில உரிமை போய்விடும். பயிரிடக் கூடியவர் பயிரிடலாம் எனச் சட்டம் வைத்துள்ளீர்கள். ஒருவருடைய நிலம் இரண்டரை ஆண்டுகளாகப் பயிரிடப் படாமல் தரிசாகக் கிடக்கிறது. பலபேருக்கு உணவு தரக் கூடிய அந்தத் தரிசு நிலத்தை எனக்கு அளித்தால், மக்களுக்கு உணவு அளிக்க வாய்ப்பேற்படுமே" என்று கூறியதைக் கேட்ட உமர் (ரலி) அந்த நிலத்தை யார் நிலம் என்றுகூட பாராமல் பயிரிடக் கோரியவருக்கே கொடுத்தார். அவரும் பயிரிடலானார்.

பிலால் (ரலி) அவர்கள் வெளியூரிலிருந்து திரும்பிய போது, யாரோ தன் நிலத்தில் பயிரிட்டிருப்பது கண்டு பதைத்தார். உடனே உமர்((ரலி) அவர்களிடம் சென்று முறை

யிடுகிறார். 'எனக்குப் பெருமானார் (சல்) அவர்களால் அளிக்கப்பட்ட நிலம் அது. அதில் யாரோ ஒருவர் பயிர் செய்து கொண்டுள்ளார். அதனை மீட்டுத்தர வேண்டும் என்று கோரியபோது 'உழுபவருக்கே நிலம் சொந்தம்' என்ற சட்டம் அமுலிலிருந்தும் அதைத் தெரிந்து கொள்ளாமல், அமுல்படுத்தாமல் இருந்தால் நீங்கள் அந்தச் சட்டத்தை மதிக்கவில்லை என்பது தானே பொருள். இந்தச் சட்டத்தை நீங்கள் பின்பற்றாததால் பயிரிடக் கூடிய ஒருவருக்குச் சட்டப்படி அந்நிலம் உடமையாகி விட்டது' எனக் கூறி அனுப்பி விட்டார் என்பது வரலாற்றுக் குறிப்பு.

அது மட்டுமல்ல, மக்கா நகரத்திலும் மதினா நகரத்திலும் ஒருவருக்கு ஒரு வீடுதான் சொந்தமாக இருக்கலாம். இரண்டு வீடுகள் இருந்தால், மற்றொரு வீடு, வீடற்றவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பன போன்ற பல புரட்சித் திட்டங்களை, சமதர்மப் பொதுவுடைமைப் பொருளாதாரக் கொள்கைகளை செயல்படுத்தியவர் உமர் (ரலி) அவர்கள்.

அதனால், விடுதலைப் போராட்ட காலத்திலேயே, அண்ணல் காந்தியடிகள் 'நாடு விடுதலை பெற்றவுடன் உமர் அவர்களின் ஆட்சி முறை இந்தியாவில் அமைய வேண்டு மெனக் கனவு காண்கிறேன்' என்று கூறினாரென்றால் இஸ்லாமிய நெறிமுறைகள் எவ்வளவு உன்னதமானவை என்பதை நாம் உணர்ந்து தெளியலாம்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கொள்கைகளில் ஒன்றான ஜகாத் முறை இன்றையப் பொருளாதார பேரறிஞர்களை வியப்பிலாழ்த்தும் கோட்பாடாக இருந்து வருகிறது.

ஒவ்வொரு முஸ்லிமும் தன் வருமான நிகரத் தொகையிலிருந்து இரண்டரைச் சதவீதத்தை ஏழை எளியவர்களின் பங்காக, தானே கணக்கிட்டு, தன் கையா லேயே இடது கைசெய்வது வலது கைக்குக்கூட தெரியாது, விளம்பரம் ஏதுமின்றி அளிப்பது, அற்புதமான பொது

வுடைமைத் திட்டமாகும். எந்த வகையிலும் பொருள் குவிவதைத் தடுக்கும் அருமையான சமதர்மத் திட்டமாகும்.

இன்றையப் பொருளாதாரக் கொள்கைகளின் போக்கு என்ன?

அமெரிக்கா போன்ற மேலை நாடுகள் கடைப்பிடிக்க விழைவது முதலாளித்துவ பொருளாதார முறை. இக் கொள்கையில் மையமாக அமைவது மனிதனை முதலுக்கு அடிமையாக்கும் போக்காகும்.

சீனா போன்ற பொதுவுடைமைக் கொள்கை பேசும் நாடுகளில் இக் கொள்கையின் மையமாக அமைவது என்ன? மனிதரை உழைக்கும் வர்க்கம் என்ற போர்வையில் அரசுக்கு, அரசின் கொள்கை, கோட்பாடுகளுக்கு அடிமைப் படுத்துவதுதான். மனிதன் கடுமையான அரசுக் கட்டுப் பாட்டு விதிகளுக்குட்பட்டவனாக எந்திரத்தோடு எந்திரமாக மாறுவதற்கு மேல் அவனுக்கு எந்தத் தனிக் சுதந்திரமுமில்லா நிலை.

அதே சமயத்தில் இஸ்லாத்தின் சமூக, பொருளாதாரக் கொள்கைகள் மனிதப் புனிதமாக மாறி, அதன்விளைவாக இறைவனின் இனிய அடிமையாக மாறி, வாழ்வு பெற்றதின் முழுப் பயனை இம்மையிலும் மறுமையிலும் பெறக் கூடிய பேறு பெறுகிறான்

இறைவனால் படைக்கப்பட்ட மனிதன், இறைவனுக்கு நன்றி கூறி, வல்ல அல்லாஹ்வின் அடிமையாக வாழ்வதன் மூலம் இந்த உலக இன்பத்தை விட பல கோடி மடங்கு மறுமைப் பேரின்பத்தை நிலையாகப் பெறக் கூடியவனா கிறான். அதற்கான பயிற்சி பெறும் களமாக அமைந் திருப்பதே இவ்வுலக இஸ்லாமிய வாழ்கை முறை . அதற்கு வழிகாட்டும் ஒளி விளக்காக அமைந்திருப்பதே அண்ண லாரின் வாழ்வையும் வாழ்க்கையும் விரித்துரைக்கும்

ஹதீஸும் அதற்கு மூலாதாரமாக அமைந்த திருக்குர்ஆன் திருமறையும்

இறைவன் அளித்துள்ள அருட்கொடையான இந்த வாழ்வை இறைநெறியில், ஏந்தல் நபியின் இனிய வழிகாட்டுதலில் அனைத்துப் பயனும் பெற்றுய்ய முயலவேண்டும். இம் முயற்சிக்கு வேகமூட்டும் முறையில், ஆன்மீக அடிப்படையில் அறிவியல் விளக்கம் தந்து, இஸ்லாமிய நெறி முறையின் மேன்மையை ஆய்வுகள் மூலம் அறிவுலகம் வெளிப்படுத்த விழைந்து நிற்கிறது. அதனை அறிவின் துணை கொண்டு ஏற்று, இறைவழியில் உய்திபெறுவோமாக.

*(22.7.98 அன்று துபாய் கோட்டைப் பள்ளியில் அமீரக ஜமாத் சார்பில் நடைபெற்ற மீலாது விழாவில் ஆற்றிய உரைச் சுருக்கம்)*

# இஸ்லாமும் பிற சமயங்களும்

என்றுமில்லாத அளவுக்குப் பிற சமயச் சகோதரர்கள் இஸ்லாத்தை அறியவும் ஆராயவும் இன்று முற்பட்டுள் ளனர். இன்று உலகெங்கும் உள்ள அறிவாளிகள் குறிப்பாக மேற்குலகைச் சார்ந்த அறிவியலாளர்கள், அறிவியல் உணர்வோடு விஞ்ஞானப் பூர்வமாக இஸ்லாத்தை அணுகவும் ஆராயவும் முற்பட்டுள்ளனர் என்பதுதான் உண்மை.

நம் நாட்டைப் பொருத்தவரை, குறிப்பாகத் தமிழகத் தைப் பொருத்தவரை இஸ்லாமியப் பிரச்சாரம் நேரிடை யாக மக்களிடம் பெருமளவில் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இலக்கியத்தின் மூலமே பெரும்பாலும் இஸ்லாமிய நெறி விளக்கும்முறை நிலவி வந்தது என்பதை இஸ்லாமிய இலக்கிய வரலாறு உணர்த்திக் கொண் டுள்ளது. தமிழகத்தில் இஸ்லாம் பரவி நிலைபெற்றதற்குப் பெருங்காரணமாயமைந்தவர்கள் இஸ்லாமியத் தமிழ் புலவர்களும் இஸ்லாமிய மெய்ஞ்ஞானச் சூஃபிக் கவிஞர்களுமாவர் என்பது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு.

**இஸ்லாம் ஆனவன் - ஆக்கப்பட்டவனல்ல**

இஸ்லாம் வாள்கொண்டு, ஆட்சி, அதிகாரத் துணை

யோடு பரப்பப்பட்டது என்பது வடிகட்டின புனைந்துரை. இன்று தமிழகத்தில் வாழும் ஒரு முஸ்லிமைப் பார்த்து "நீங்கள் யார்?" எனக் கேட்டால், அவர் உடனடியாகக் கூறும் பதில் "நான் ஒரு இஸ்லாமானவன்" என்பதாகவே இருக்கும். இஸ்லாம் ஆனவனே தவிர, இஸ்லாம் ஆக்கப் பட்டவன் இல்லை. ஏனெனில், இஸ்லாத்தில் நிர்ப்பந்தம் என்பது அறவே இல்லை என்பது திருமறை தரும் இறை வாக்காகும்.

எனவே, இஸ்லாத்தை, இறை நெறியை அன்பு வழியில், இஸ்லாமல்லாதவர்களின் உள்ளம் ஏற்கும் வண்ணம் எடுத்துக் கூறி விளக்குவதில் தவறில்லை. ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ளவும், ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள தப்பான எண்ணங்களும் தவறான உணர்வு களும் மறையவும் சரியான தகவல்களும் கருத்துகளும் சென்று நிலை பெறவும் வாய்ப்பாக அமையும். எனவே, இஸ்லாத்தைப் பற்றி முஸ்லிம்களோடு மட்டுமே பேசுவ தோடமையாது. முஸ்லிமல்லாதவர்களிடமே அதிகம் விளக்கிக் கூற வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு.

### பெருமானாரும் இஸ்லாமியப் பிரச்சாரமும்

பெருமானார் (சல்) அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி விளக்கும் பணியை முஸ்லிம்களுக்கு மத்தியில் மட்டும் விளக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்திருந்தால், அது மக்காவுக்குள் முப்பது முஸ்லிம்களோடு முடங்கிப் போயிருந்திருக்கும். ஆனால், அவர் முஸ்லிம் அல்லாதவர் களிடையே இறை நெறியாகிய இஸ்லாமிய நெறியை எடுத்துச் சொல்லி விளக்கியதன் விளைவாகத்தான் விரைந்து பரவி வளர முடிந்தது.

அவர் வழியைச் சார்ந்த நாமோ இன்னும் ஒருபடி மேலே போய் இஸ்லாமிய நெறியை முஸ்லிமல்லாதவர் களிடையே, முஸ்லிமல்லாதவர்களைக் கொண்டே திருமறைக் கோட்பாட்டிற்கிணங்க அன்பு வழியில்

அமைதி வழியில் எடுத்துச் சொல்ல வேண்டிய இன்றியமை யாக் கடப்பாடுடையவர்களாக உள்ளோம்.

## முஸ்லிமல்லாதவர்களைக் கொண்டு முஸ்லிமல்லாதவர்களிடம்

இதை மனதில் அழுத்தமாகப் பதிய வைத்துக் கொண்ட வனாகக் கடந்த கால் நூற்றாண்டுக் காலமாக "இஸ்லாமியப் பிரச்சாரத்தை இலக்கியங்களின் துணையோடு முஸ்லி மல்லாதவர்களைக் கொண்டு முஸ்லிமல்லாதவர்கள் மத்தியில்" செய்வதை ஒரு 'மிஷனரி ஒர்க்காகவே' செய்து வருகிறேன்.

ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறு மற்றும் மூன்றாம் ஞாயிறுதோறும் சீறாப்புராணத் தொடர்ச் சொற்பொழிவுக் கூட்டத்தை லிங்கிச்செட்டி தெருவிலுள்ள கோயிலை யொட்டியுள்ள வடலூர் இராமலிங்க வள்ளலார் பெயரில் அமைந்துள்ள திருவருள் மண்டபத்துள் தொடர்ந்து நடத்தி வந்தேன். சீறாப்புராணத் தொடர்ச் சொற்பொழிவாளர் சிலம்பொலி சு. செல்லப்பனார் அவர்களாவார். ஒவ்வொரு கூட்டத்திற்கும் சமண, கிருஸ்தவ, சைவ, வைணவம் போன்ற பல்வேறு சமயங்களையும் சமயப் பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் தலைமை தாங்குவது வழக்கம். கூட்டத்திற்கு வருகை தருபவர்களில் அறுபது விழுக்காட்டிற்கு மேற்பட்டவர்கள் பிற சமயச் சகோதரர்களாவர். ஆனால், பேசப்படும் பொருள் பெருமானார் (சல்) அவர்களின் வாழ்க்கையையும் வாக்கையும் விரித்துக் கூறும் உமறுப் புலவர் தந்த 'சீறாப்புராணம்' இலக்கியமாகும். ஒரு ஆண் டிற்கு மேல் நடைபெற்ற இருபத்தியேழு தொடர்ச் சொற் பொழிவுகளையும் பதிவு செய்து, பின்னர் எழுத்து வடிவாக்கி, "நெஞ்சையள்ளும் சீறா" எனும் பெயரில் 1136 பக்கங்களில் நூலாக வெளிவந்தது. 1985இல் மிகச் சிறந்த இஸ்லாமிய ஆய்வு நூல் என்பதற்கான பரிசையும் பெற்றது. இதே முறையில் சுலைமான் நபியின் வாழ்க்கையை

விரித்துரைக்கும் வண்ணக் களஞ்சியப் புலவரின் இராஜ நாயகம் நூல் பற்றி 27 தொடர்ச் சொற்பொழிவுகளும், தமிழில் மெய்ஞ்ஞான இலக்கியங்கள்போன்ற தலைப்பு களில் எட்டு கருத்தரங்குகளையும் நடத்திய பட்டறிவு எனக்குண்டு.

இம் முயற்சிகள் இஸ்லாமியப் பிரச்சாரம் எனும் பெயர் பெறாமலே இஸ்லாமியக் கொள்கை, கோட்பாடுகளை பிற சமய மக்களிடம் இலக்கியம் வழியாக எளிதாகக் கொண்டு போக இயன்றது. நம்மவர்களும் தங்கள் இஸ்லாமிய அறிவை, உணர்வை புதுப்பித்துக் கொள்ளவும், மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் இம் முயற்சி வாய்ப்பேற்படுத்துகிறது.

எதிர் விளைவு

இதனை நாம் நீண்ட காலமாகச் செய்யாததால், செய்யத் தவறியதால் எதிர் விளைவுகள் பல விளைந்துள்ளன என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. நம்மைப் பற்றி மாற்றார் தவறான பிரச்சாரத்தை வலுவாகச்செய்ய இச் சூன்ய சூழ்நிலை வாய்ப்பேற்படுத்தி தந்து விடுகிறது. இதைத் தெளிவாக அறிந்துணர ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

சிலம்பொலி சு. செல்லப்பனார் அவர்களைக் கொண்டு சீறப்புராணத் தொடர்ச் சொற்பொழிவு ஒன்றுக்கு மீரா ஃபௌண்டேஷன் மூலம் ஏற்பாடு செய்திருந்தேன் என்று முன்பே குறிப்பிட்டேன் அல்லவா, அதன் தொடக்க விழா லிங்கிச் செட்டித் தெருவிலுள்ள கிருஷ்ணன் கோயில் அருகில் அமைந்திருந்த திருவருள் மண்டபத்தில் நடந் தேறியது. தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிறும் மூன்றாவது ஞாயிறும் நடத்தத் திட்டமிட்டிருந்தோம்.

முதல் தொடர்ச் சொற்பொழிவுக் கூட்டத்திற்குச் சென்ற போது, அக்கட்டிட உரிமையாளர் திரு இரா. முத்துக்

குமாரசாமி வாசற்படியில் நின்றிருந்தார். என்னைக் கண்ட வுடன் இன்று காலை ஒரு சுவையான சம்பவம் நடந்தது தெரி யுமா? என் றார், சொன்னால்தானே தெரியும் என்று நான் கூறி முடிப்பதற்குள் அந்நிகழ்ச்சியை விவரிக்கத் தொடங்கினார். இன்று பக்கத்துக் கோயில் அர்ச்சகரான தீட்சிதர் வேகமாக என்னிடம் வந்தார். வந்த வேகத்தில் 'சீறாத் தொடர்ச் சொற் பொழிவுக் கூட்டம் தொடர்ந்து இங்கு நடக்குமா?' என்று கேட்டு என் முகத்தை மிகவும் சீரியசாகப் பார்த்தார். அவர் கேள்வி கேட்ட தோரணையும் வேகமும் எனக்கு ஒரு வித அச்சத்தையே ஏற்படுத்திவிட்டது. 'அருட்பெருஞ்ஜோதி இராமலிங்க வள்ளலார் சைவ சமயப் பிரச்சாரம் செய்து வந்த திருவருள் மண்டபத்தில் இஸ்லாமியப் பிரச்சாரமா?' எனக் கேட்பது போலிருந்தது. தயக்கத்துடன் ஏன் கேட் கிறீர்கள் என்று எதிர் கேள்விபோட்டேன். அப்போது அவர் சிறிது புன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "எனக்கு இஸ்லாத்தைப் பற்றி எதுவுமே தெரியாது. முஸ்லிம்கள் ஐந்து முறை நமாஸ் பண்ணுவாங்க; ஒருமாதம் உபவாசம் இருப்பாங்க; அப்போது ஏழைகளுக்கு தானதருமம் செய் வாங்க. இதுக்குமேல் அவங்களைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. சீறாப்புராணத் தொடர்ச் சொற்பொழிவு நடந்த போது இராமலிங்க வள்ளலார் சைவ சமயப் பிரச்சாரம் செய்த திருவருள் மண்டபத்தில் ஏதோ புராணச் சொற் பொழிவு தொடங்கக் கூட்டம் நடப்பதாகக் கருதி விழாவில் கலந்து கொண்டேன். அதில் பேசிய சிலம்பொலி சு. செல் லப்பனார் உட்பட பலரும் இஸ்லாத்தைப் பற்றியும் நபிகள் நாயகத்தைப் பற்றியும் பேசினார்கள். அவர்கள் பேசியதெல் லாம் எனக்குப் புதுத் தகவல்களாக இருந்தன. இஸ்லாத்தில் எவ்வளவு நல்ல கருத்துகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கு. அவைகளையெல்லாம் தொடர்ந்து கேட்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு அதிகமாகி விட்டது. எனவேதான் தொடர்ந்து கூட்டம் நடந்தால் தொடர்ந்து கேட்கலாமே என்ற ஆசையில்தான், தொடர்ந்து நடக்குமா? என்று

தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என மூச்சுவிடாமல் சொல்லி முடித்தார். 'தொடர்ந்து நடக்கும்' என்று நான் கூறியதைக் கேட்டு மலர்ந்த முகத்துடன் சென்றார் என்று கூறிச் சிரித்தார்.

இதே போன்ற மற்றொரு சம்பவம் அமெரிக்காவில் ஏற் பட்டது எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. நான் டல் லாசிலிருந்து ஹூஸ்டனை நோக்கி 'கிரே ஹவுண்டு' பஸ்சில் பயணம் செய்து கொண்டிருந்தேன். என் அருகிலிருந்தவர் அடுத்து வந்த பஸ் நிறுத்தத்தில் இறங்கிச் சென்று விட்டார். நான் என்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் முறையில் 'யா அல்லாஹ்' எனச் சற்று உரத்துக் கூறி நெட்டுயிர்த்தேன். 'யா அல்லாஹ்' எனும் சத்தத்தைக் கேட்ட தாடிவைத்த கறுப்பர் ஒருவர் என்னருகில் காலியாக இருந்த இருக்கையில் விரைந்து வந்து அமர்ந்தபடி 'ஸலாம் அலைக்கும்' என முகமன் கூறியபடி உட்கார்ந்தார். அவரது கரிய முகத்தில் மகிழ்ச்சி, பாந்துவம் இரண்டும் கலந்த ஒரு மலர்ச்சி தெளி வாகத் தென்பட்டது. அவர் டல்லாசில் பஸ் ஏறும்போதே பார்த்தேன். ஜெபமணியை உருட்டியபடி காணப்பட்ட அவரை ஒரு கிறிஸ்தவராகவே எண்ணியிருந்தேன். நான் ஒரு முஸ்லிம் என்பதை அறிந்தவுடன் வாஞ்சையுடன் சலாம் கூறி, இடம் மாறி என்னருகில் உட்க்கார்ந்தவர் நான் ஏதேனும் பேச வேண்டும் என்பதை எதிர்பார்ப்பவர்போல் என் முகத்தை கூர்ந்து நோக்கினார். அவருக்குப் பதில் சலாம் கூறியப்படி, அவரைப் பற்றி அறிய விரும்பிக் கேட்டதற் கெல்லாம் பதில் கூறி வந்த அவரிடம் "நீங்கள் எப்போது முஸ்லிம் ஆனீர்கள்? அதற்கு என்ன காரணம்? உங்கள் குடும்பத்தவர் யாராவது அரபு நாடுகளில் வேலை செய்கின்றார்களா?" என்று கேட்ட உடனே அவர், "எங்கள் குடும்பத்தில் யாருமே அமெரிக் காவை விட்டு வெளியே போனதில்லை. ஒரு முறை பாக்ஸர் முஹம்மதலியின் பேச்சைக் கேட்டேன். அவர் இஸ்லாத்தைப் பற்றி அதன்

கொள்கை, கோட்பாடுகளைப் பற்றி கூறிய அனைத்தும் எனக்குப் புதியதாகவும் சிந்திக்கத் தூண்டுவதாகவும் இருந்தது. முஹம்மதலி தன் பேச்சினூடே அடிக்கடி பிலால் என்ற பெயரைக் கூறினார். நான் ஒரு முறை வாஷிங்டன் சென்று அங்குள்ள இஸ்லாமிக் ஸ்டடி சென்டரில் இருந்து பிலால் பற்றிய நூல் ஒன்றை வாங்கி வந்தேன். அதைப் படித்து முடித்தபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கும் வியப்புக்கும் அளவே இல்லை.

சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன்பு கறுப்பு இனத்தவரை மிருகங்களோடு மிருகமாகக் கருதி கூட்டங் கூட்டமாகப் பிடித்து விற்பனை செய்யப்பட்ட கால கட்டத்தில், அடிமைகளாக - வியாபாரப் பொருளாகக் கருதி ஏலம் போட்டு வி ்கப்பட்ட கறுப்பர் இனத்தைச் சேர்ந்த பிலால் எனும் கறுப்பரை விடுவித்து, முழு விடுதலை வழங்கியதோடு, இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாக தொழுகை அழைப்பான பாங்கு ஒலி எழுப்ப பிலால் அவர்களையே பெருமானார் அவர்கள் தேர்ந்தெடுத்தார். மற்றவர்க்குச் சமமாக மட்டுமல்ல சற்று மேலான அந்தஸ்தையே எங்களுக்கு வழங்கிய இந்த இஸ்லாமிய மார்க்கம் தான் மனிதர்களை, மனிதப் புனிதர்களாக்கும் மார்க்கமெனத் தெளிந்து அதில் இணைந்தேன். நான் முன்பு இருந்த மதத்தில் பெற முடியாத மதிப்பும் மரியதையும் இப்போது கிடைக்கிறது. சட்டத்தில் சமம் என்றிருந்தாலும் கறுப்பன் என்பதற்காக சமநிலையில் மதிக்கத் தயங்கிய வெள்ளை அமெரிக்கர்கள் · இப்போது சமமாகப் பழகுகிறார்கள்; மதிக்கிறார்கள். இப்போது என் உறவினர் குடும்பங்களும் இஸ்லாத்தில் இணைந்து முஸ்லிம்களாகி வருகின்றன. நம்மை முழுத் தகுதி படைத்த மனிதர்களாக மற்றவர்கள் கருதி, இஸ்லாமே வழி என்பதை அமெரிக்கக் கறுப்பர் இனமே இன்று உணரத் தலைப்பட்டுள்ளது" என ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார். அப்போது இனங்காணாத மகிழ்ச்சிப் பெருக்கு அவரிடம் கண்ணீர்த் தேக்கமாய்க்

காட்சியளித்தது. இஸ்லாமிய உணர்வைச் சுவைக்கச் செய்தால் அவர்கள் இஸ்லாத்தின்பால் ஈர்க்கப்படுவர் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.

நான் இரண்டாவது முறையாக அமெரிக்கா சென்றிருந்த போது வாஷிங்டனுக்கு அருகில் இருந்த மார்ட்டின்ஸ்பர்க் எனும் ஊரில் டாக்டர் ஜியாவுதீன் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்தேன். அன்று வெள்ளிக் கிழமை. "இங்கு ஜும்மா தொழுகை தொழ முடியுமா" என்று கேட்டேன். அப்போது அவர் "அமெரிக்காவில் மசூதிக்குப் பஞ்சமில்லை" என்று கூறி, முக்கிய சாலையில் அமைந்திருந்த ஒரு பெரிய கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றார். ஒரு ஜமாத்தை உருவாக்கி அதன் மூலம் ஒரு மாளிகையை வாங்கி, அதை மசூதியாக மாற்றியமைத்திருந்தார்கள். எல்லாம் முறைப்படி நிகழ்ந்தன. வந்திருந்தவர்களில் கருப்பர் இன முஸ்லிம்கள் 60 சதவிகிதம் இருக்கும். வெள்ளை அமெரிக்கர் பத்து சதவீதம் இருக்கும் மற்றவர்கள் வெளிநாட்டு முஸ்லிம்கள். இதுபோல் வாஷிங்டனைச் சுற்றி பல பள்ளிகள் இருக்கின்றன என்ற தகவலையும் தந்தார்.

ரமளான், பக்ரீத் போன்ற பெரு நாட்களுக்கு பெருங் கூட்டம் வருமே அதைச் சமாளிக்க என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, அருகில் ஒரு பெரிய ஸ்போர்ட்ஸ் கிளப் இன்டோர் ஆடிட்டோரியம் இருக்கிறது. ஒரு நாளைக்கு அதைப் பெற்று பெருங் கூட்டமாகக் கூட்டுத் தொழுகையை நிறைவேற்றுகிறோம் என்று கூறினார். இப்படியொரு பக்ரீத் தொழுகையை அல்பேனியில் தொழுத அனுபவம் எனக்கு உண்டு. இத்தொழுகைகளை ஆண்கள் ஒரு பகுதியாகவும் பெண்கள் ஒரு பகுதியாகவும் இருந்து தொழுகிறார்கள். ஒரு இஸ்லாமியக் குட்டி மாநாடு போலவே இப் பெருநாள் தொழுகைகள் அமைகின்றன.

மொத்தத்தில் அமெரிக்காவில் மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகளிலும் இஸ்லாம் விரைவாக மக்களை ஈர்த்துக்

கொண்டுள்ளது. நான் அடிக்கடி செல்லும் பாரிசில் ஒரு புதுமையைக் கண்டு வருகிறேன். 1980 - க்குப் பிறகு உருவாகும் அரசின் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கீழ் தளத்தில் பள்ளிவாசலுக்கு என ஒரு பகுதியை ஒதுக்கியே கட்டும் நிலை உருவாகியுள்ளது. அந்த அளவுக்கு இஸ்லாம் விரைந்து பரவி வருகிறது.

வெளிப்படும் உண்மை

இதிலிருந்து பல உண்மைகள் வெளிப்படுகின்றன. இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ள, தெளிவு பெற பல உள்ளங்கள் காத்திருக்கின்றன. ஆனால், அவர்கள் உள்ளம் ஏற்கும் வண்ணம் வழங்க நாம்தான் வகையில்லாமல் இருக்கிறோம். இதனால் மாற்றார் கொண்டுள்ள மாறான கருத்துகள் துடைத்தழிக்கப்படாததால் அவை தொடரவும் நேரிடுகிறது.

அமெரிக்காவில் கண்ட அதிசயம்

அண்மையில் ஒரு சுவையான சம்பவம் எனக்கு அமெரிக்காவில் ஏற்பட்டது. நான் வாஷிங்டனில் இருந்தபோது நாக்ஸ்வில் எனுமிடத்தில் 'எரிபொருள் ஆதாரங்கள்' பற்றிய பன்னாட்டுக் கண்காட்சி நடப்பதாகக் கேள்விப்பட்டு, அதைக் காண அங்கு சென்றிருந்தேன்.

அக் கண்காட்சியில் உலக நாடுகள் பலவும் பங்கேற் றிருந்தன இந்தியாவைத் தவிர. மற்ற நாடுகளின் அரங்கு களைவிட சவூதி அரேபியா நாட்டு அரங்குமுன் மிக நீண்ட 'கியூ' வெகு நேரமாக நின்றிருந்தது. அரங்கில் ஏதோ புதுமைகள் இருப்பதாகக் கருதி நானும் வரிசையில் இடம் பிடித்து நின்றேன். எனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த அமெரிக்கரிடம் பேச்சுக் கொடுத்தபோதுதான் எனக்கு ஒரு விஷயம் தெரிய வந்தது. 'சவூதி அரங்கினுள் 'கிராண்ட் மாஸ்க்' எனும் பெயரில் காஃபாவை தத்ரூபமாக அமைத்து, அதை மையமாக வைத்து, இஸ்லாமிய நெறியையும்

நாயகத் திருமேனியையும் அவர்தம் கருத்துரைகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் நறுக்குத் தெரித்தாற் போலச் சொல்லப்படுகிறது. அதன் மூலம் இஸ்லாத்தின் அடிப் படை பண்புகளைத் தெளிவாக அறிந்துணர முடிகிறது என்றும் கூறியதோடு, இதை நான்காவது முறையாகத் தன் குடும்பத்தாரோடு பார்க்க வந்திருப்பதாக விளக்கிக் கூறியதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்து போனேன். உள்ளே சென்று பார்த்தபோதுதான் அந்த அமெரிக்க அன்பர் கூறியது எவ்வளவு பெரிய உண்மை என்பது புலப்பட்டது.

இஸ்லாத்தைப் பற்றி அதிகம் தெரியாத அமெரிக்க மக்களுக்கு ஒலி - ஒளிக் காட்சியாக காஃபாவை அமைத்து, மக்கள் 'தவாப்' செய்வதுபோல் மனித உருப் பொம்மை களை நகரச் செய்து, கணீரென்ற, அதே சமயம் பவ்வியமான குரலில் 'ஓர் இறை' த் தத்துவத்தையும் அண்ணலாரின் போதனைகளையும் சிந்தைகொள் மொழியில் சொல்லு வதைக்கேட்கும்போது, இஸ்லாத்தின் மீது ஈர்ப்புக் கொள்வது இயல்பானதொன்றாக அமைந்துவிடுகிறது. சொல்ல வேண்டிய செய்தியை சொல்ல வேண்டிய முறையில் சொன்னால் எதுவுமே எடுபடும் என்பது எவ்வளவு பெரிய நிதர்சன உண்மை என்பது அப்போது புரிந்தது.

### வெற்றிக்கான உத்தி

சாதாரணமாக மஞ்சி விரட்டு என்று அழைக்கப்படும் மாடுபிடி விளையாட்டில் ஜல்லிக்கட்டில் மாடு பிடிப்போர் ஓர் உத்தியைக் கையாள்வர். எவ்வளவு முரட்டுக் காளை யானாலும் அதை அடக்க முயல்பவர் எடுத்த எடுப்பில் மாட்டின் கொம்பைப் பிடித்து நிறுத்த முயற்சிக்க மாட்டார். அவ்வாறு செய்தால் அவரை முட்டித் தூக்கி எறிந்து விடும் என்பது அவருக்கு மிக நன்றாகத் தெரியும். எனவே, அவர் ஜல்லிக்கட்டு மாட்டுடன் தொடர்ந்து சிறிது நேரம் ஓடுவார். பின் முதுகுத் திமிலின்மீது கை வைத்து வளைத்து இறுகப்

பிடிப்பார். அதன் பிறகும் மாட்டுக் கூடவே தொடர்ந்து ஓடியபடி, தன் காலை அதன் அடி வயிற்றில் உராயும்படி அடிக்கடி செய்வார். இது ஜல்லிக் கட்டு மாட்டுக்கு மிக இதமான உணர்வை ஊட்டும். இதனால் மாட்டின் வேகம் வெகுவாகக் குறையும். அச்சமயத்தில் அன்புணர்வு பொங்க மாட்டைத் தழுவியபடி நிற்கும் மாடுபிடியாளர் மாட்டுக் கொம்பில் கட்டப்பட்டிருக்கும் பந்தயப் பொருள்களைக் கைப்பற்றியவராய் வெற்றி பெறுவார். இதே முறையைத் தான் இஸ்லாத்தைக் கண்டு மிரண்டு நிற்பவர்களிடத்தில் இஸ்லாமிய உண்மைத் தத்துவங்களை உணர்த்தக் கையாள வேண்டும்.

### இறை தூதர்களும் இறை வேதங்களும்

எவ்வளவுதான் முஸ்லிம்கள்மீது கசப்புணர்வும் இஸ்லாத்தின் மீது வெறுப்புணர்வும் புகட்டப்பட்டிருந் தாலும், இந்த உள்ளங்களில் 'உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் சமய தீர்க்கதரிசிகளும் இறைவனால் அருளப் பட்டவர்களே; இறைதூதர்கள் பிறவாத நாடில்லை; இனமில்லை; மொழியில்லை; ஒரு சமய வேதத்தின் மூலக் கொள்கைகள் மனிதரால் மாற்றப்படும்போது, மீண்டும் மூல வடிவில் வேதமும் அதைப் போதிக்க இறைத் தூதரும் வருவதுதான் வேத வரலாறு. இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளான இறை நம்பிக்கையாகிய ஈமான், இறை வணக்கமாகிய தொழுகை, விரதமாகிய நோன்பு, ஏழையின் பங்காகிய ஜகாத், புனிதப் பயணமெனும் ஹஜ் ஆகிய ஐம்பெரும் கடமைகள் அனைத்துச் சமயங்களிலும் இடம் பெற்றிருப்பதே இதற்குச் சான்று' என்று விளக்கும்போது இடைவெளி குறுக, ஒருவரையொருவர் நெருங்கி வர, உள்ளங்கள் ஒன்றிணையத் தொடங்கும்.

### சூஃபிகளின் உத்தி

இந்த உத்தியைத்தான் முஸ்லிம் சித்தர்கள் எனும் இஸ்லாமியச் சூஃபிமார்கள் தமிழ் மக்களிடம்

கையாண்டார்கள். அதன் விளைவாகத்தான் குணங்குடி மஸ்தான் போன்ற தமிழ்ச் சூஃபிக் கவிஞர்களின் சீடர்களாக முஸ்லிம்களை விட முஸ்லிம் அல்லாதவர்களே அதிகமாக இருந்தனர் என்பது வரலாறு தரும் உண்மை.

முன் மாதிரி வாழ்க்கை

அது மட்டுமல்ல, முஸ்லிம்களின் சொல்லும் செயலும் மற்றவர்களை ஈர்ப்பது இயல்பு. இன்றைக்கும் இஸ்லாத்தை உணர்ந்து பின்பற்றும் பல முஸ்லிம்கள் மற்ற சமயத்தவர் பார்த்து வியக்குமளவுக்கு முன்மாதிரி முஸ்லிம்களாக இருக்கிறார்கள். வேறு சிலர் முஸ்லிமுக்கு மகனாகப் பிறந்த ஒரே காரணத்தால் பெயருக்கு முஸ்லிமாக வாழ முனையும் பெயர் தாங்கி முஸ்லிம்களால் அவ்வாறு வாழ இயலாமல் இருக்கலாம். அகத்திலும் புறத்திலும் ஒரு முஸ்லிம் எப்படி வாழ வேண்டும் என்பதை உய்த்துணர வேண்டும்.

அக - புற வாழ்வு

நம் மனித வாழ்க்கை அகம், புறம் என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டதாகும். இரு பிரிவு வாழ்க்கை முறைக்கும் அவற்றின் வெற்றிக்கும் இலக்கணமாகத் திகழ்ந்தவர் நபிகள் நாயகம் (சல்) அவர்கள். ஆன்மீக அடிப்படையிலான அக வாழ்வும் அறிவியல் போக்கிலான புற வாழ்வும் ஒன்றிணைந்ததே இஸ்லாமிய வாழ்க்கை முறை. இதிலே அக வாழ்க்கை முறைக்கு முக்கியத்துவம் தந்து வாழ முனைந்தவர்கள் மெய்ஞ்ஞானச் செல்வர்களான சூஃபியாக்கள். அவர்களது ஞான வாழ்வின் மையப் புள்ளி உருவிலா ஓர் இறைவனாவான்.

கரு ஒன்று - உரு வேறு

ஆய்ந்து நோக்கினால் அனைத்துச் சமயங்களின் அடித்தளமும் ஓர் இறைத் தத்துவத்தாலானதாகவே இருப்பதைக் கண்டு இன்புறலாம். வடமொழியிலுள்ள

இந்து சமய வேத நூல்களையெல்லாம் நுணுகி ஆராய்ந்த ஜெர்மன் ஆய்வியலறிஞர் மாக்ஸ்முல்லர் இந்து சமயத்தின் அசைக்க முடியா அடிப்படை 'ஓர் இறை' தத்துவமே என்பதைத் தெளிவாகக் கண்டறிந்து கூறியுள்ளார்.

## நினைந்து வணங்கினால் மோட்சம்

பழைய இந்து சமயத்தை மீண்டும் புதுப்பிக்க தென்கோடி கேரளா முதல் வடகோடி இமயம் வரை நடந்து சென்று இந்து சமயத்துக்கு புத்துயிரூட்டிய ஆதி சங்கரர் 'யாருக்கு மோட்சம் கிட்டும்' என்பதை விளக்கும்போது, "ஒரே இறைவன் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். கடவுளை நினைந்து வணங்கினால் மோட்சம் கிட்டும்" எனக் கூறியிருப்பதிலிருந்து ஒரே இறைவனை மனதால் மட்டுமே நினைந்து வணங்க முடியும் என்பதையும் அத்தகையவர்கட்கே மோட்சம் கிட்டும் என்பதையும் தெளிவாகக் கூறியுள்ளார்.

## ஓர் இறைக் கோட்பாடே 'பிரம்ம வித்தை'

இந்து தர்மத்தை உருவாக்கியவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் கௌதம மகரிஷி. இவர் பிரம்ம வித்தையைக் கற்றுத் தந்த 'பிதா மகர்' எனப் போற்றப்படுகிறார். ஆனால், இவர் 'பிரம்ம வித்தை' என எதைக் கூறுகிறார் என்பது நினைத்தின்புறத் தக்கதாகும்.

"பல பரம்பொருள் உண்டு என்று ஒரு மதம் கூறுமானால் அது மதமல்ல; ஒரே இறைவனை வணங்குவதே 'பிரம்ம வித்தை"

எனக் கூறியிருப்பதிலிருந்து இஸ்லாத்தின் அடித்தள இறைக் கோட்பாட்டையே கௌதம மகரிஷியும் கூறுவதிலிருந்து அனைத்துச் சமயங்களின் அடித்தள இறைக் கொள்கை ஒன்றாகவே இருப்பதையறிந்து வியப்படைகிறோம்.

**கர்த்தாவா? த்ரஷ்டாவா?**

மேலும் இந்து சமயத்தில் சிவனும் விஷ்ணுவும் பெருங் கடவுளர்களாகக் கருதி பிற்காலத்தில் வணங்கப்பட்டாலும் கூட, அவர்கள் தங்களுக்கு மூலமான ஓர் பரம்பொருளை வணங்குவதாக சிவபூசை போன்ற புராணச்செய்திகள் கூறுவதிலிருந்து, எல்லாவற்றிற்கும் மேலான ஓர் சக்தியை-பரம்பொருளையே எல்லோரும் வணங்கி வந்தனர் என்பது தெளிவாகிறது. இதிலிருந்து இவர்களெல்லாம் இறை தூதர்களாக வந்தவர்கள்; பின்னர் கடவுளர்களாக்கப் பட்டனர். இறைத் தூதர்களாக வந்தவர்கள் தொடக்கத்தில் ஒரே இறைவனை வணங்கப் பணித்தனர். அவர்கள் பெற்ற வேதமும் ஒரே இறைவணக்கத்தையே போதித்தது. இறை தூதர் மறைவுக்குப்பின் அவர் மீதுகொண்ட அபரிமிதமான அன்பாலும் மதிப்பாலும் அவர்மீது அதீதமான ஆற்றல் களையும் சக்தியையும் ஏற்றிப் புகழ்வர். இதற்கேற்ப அவரவர் திறமைக்கேற்ப புதிய புதிய அதிசய செய்திகளைப் புனைந்துரைகளாகப் புகுத்துவர். இறை தூதரையே இறைவன் நிலைக்கு உயர்த்தி, வணங்கத் தலைப்படுவர். இறைத் தூதர் எந்தக் கடவுளை வணங்கப் பணித்தாரோ அந்த இறைவனின் இடத்தைத் தூதர் பெறுவார். அத்தூதர் மூலம் இறைவன் அளித்த வேதம், தூதர் கடவுளாக்கப்பட்டபின், ‘வேத விளக்கம்’ என்ற பெயரில் அவ்வேதம் எல்லாவகை யான மாற்ற திருத்தங்களுக்கும் ஆட்பட அதன் அடிப்படை அம்சம் தலைகீழ் மாற்றத்திற்கு ஆளாகி விடும். இதுதான் இறை தூதர்களின் வரலாறாகவும் இறை வேதங்களின் போக்காகவும் இருந்து வருகிறது.

ஒவ்வொரு இறை தூதரும் வேதத்தைப் பெற்ற வரலாறு மிகவும் சுவையானது. வேத வரலாற்றை நுட்பமாக ஆய்ந்து பார்த்தால் வேத மந்திரங்கள் எவ்வாறு உருவாயின என்பது தெளிவாகும். வேத வரலாற்றை கூற வந்த சங்கராச்சாரியார் வேதங்களை ரிஷிகள் உருவாக்க(கர்த்தாக்கள்)வில்லை.

மந்திரங்களைக் கண்டவர்கள் (த்ரஸ்டாக்கள்) மட்டுமே அவர்கள் என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

அதாவது வேத ரிஷிகள் என்று கூறப்படுபவர்கள் யாருமே வேத வசனங்களைத் தங்கள் சிந்தனை வழி எழுதிய வேத கர்த்தாக்கள் இல்லை. கர்த்தாக்கள் என்றால் தாங்களாகவே உருவாக்கியவர்கள் அல்லது படைத்தவர்கள் அல்லது புனைந்தவர்கள் எனப் பொருள்படும். ஆனால், வேத ரிஷிகளைப் பொருத்தவரை வேதங்களைக் கண்ணெதிரே கண்டவர்களே தவிர, புதிதாக உருவாக்கியவர்கள் அல்ல.

## இறைவேதம் பெற்றது எப்படி?

கண்ணெதிரே கண்டவர்கள் என்றால் எப்படிக் கண்டவர்கள்?

ஞானிகளாகிய ரிஷிகள் தங்கள் ஐம்புலன்களைக் கடுமையான மனக் கட்டுப்பாட்டால் அடக்கியவர்களாக, மனப் பக்குவம் பெற்ற நிலையில் இறை தியானத்தில் (உள் நோக்கில்) ஈடுபட்டு, இறையுணர்வு பொங்க இறை நெருக்கம் பெறுவர். அந்நிலையில் அவர்தம் புறக் கண்கள் மூடப்பட்ட நிலையில் அகக் கண்கள் திறந்து கொள்கின்றன. அப்போது அவர்கட்கு ஒரு உணர்வு தட்டுப்படும். அப்போது அவர்கள் தங்கள் புறக் கண்களைத் திறந்து வானை நோக்கிப் பார்த்தால் இறை வசனங்கள் மந்திரங்களாக எழுதப்பட்டிருக்கும். அவற்றைப் பார்த்து மனதில் அழுத்தமாகப் பதியவைத்துக் கொள்வார்கள். பின்னர், அம்மந்திரங்களைத் தங்கள் சீடர்களிடம் கூறி, அவற்றை எழுத்தில் பதிந்து கொள்வார்கள். ஆகவே தான் இந்த வேத ரிஷிகள் 'த்ரஷ்டாக்கள்' என அழைக்கப்பட்டனர்.

## இறுதி இறை தூதருக்கு இறைவன் கட்டளை

இஸ்லாமிய நபிமார்களுக்குக் குறிப்பாக இறுதி நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு இறைச் செய்தி கிடைத்ததும்

ஜிபுரீல் (அலை)மூலம் கேட்டதும் இதே முறையில்தான். மூல வடிவிலான இறைச் செய்தி நாளடைவில் மனிதர் களால் மாற்ற திருத்தங்களுக்கு உட்படுவதால் மீண்டும் மூலவடிவிலேயே அவ்வேதம் இறைத்தூதர் ஒருவருக்கு இறைவனால் வழங்கப்படும் என்பது தான் வேத வரலாறு. எனவே, உலகுக்கு இறைவனால் வழங்கப்பட்ட அனைத்து வேதங்களின் அடிப்படை ஒன்று போலவே இருக்கின்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் இறைவன் தன் திருமறையாம் திருக்குர்ஆனில், நபிகள் நாயகம் (சல்) அவர்களிடம் கூறும் முறையில்,

"(நபியே!) உமக்கு முன் வந்த இறைதூதர்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையேயன்றி வேறொன்றும் உமக்குக் கூறப்படவில்லை"

(திருக்குர்ஆன் 41-43)

இதிலிருந்து இறை தூதர்களின் காலம் வெவ்வேறாக இருந்தாலும் தோன்றிய நாடும், மொழியும் இனமும் வெவ்வேறாக இருந்தாலும் அவர்கள் வாழ்ந்த சமுதாயச் சூழல் வெவ்வேறாக இருந்தாலும், அவர்களுக்கு இறை வனால் வழங்கப்பட்ட வேதங்களின் அடிப்படை மட்டும் ஒரே மாதிரியுள்ளன.

## இறை காக்கும் இறுதி வேதம்

அண்ணலாருக்கு முன்னர் வந்த இறை தூதர்களின் வாழ்வும் வாக்கும் அவர்கள் பெற்ற வேதங்களும் மனிதர் களால் மாற்ற திருத்தங்களுக்கு உட்பட்டு மாசுபட்ட போதிலும் இறுதி நபிக்கு வழங்கப்பட்ட இறுதி வேதமான திருக்குர்ஆன் எவ்வித மாற்றங்களுக்கும் உட்படா நிலை யில், ஒரு சொல்லும் எழுத்தும் கூட மாறாமல் இன்றும் மூலவடிவிலேயே இருப்பதற்கு அடிப்படைக் காரணம், முந்தைய வேதங்களைக் காக்கும் பொறுப்பை இறைவன் மனிதர்களிடம் ஒப்படைத்திருந்தான். மாற்றதிருத்தங்

களுக்கு உட்பட நேர்ந்தது. ஆனால், இறுதி நபிக்கு வழங்கப்பட்ட இறுதி வேதத்தைக் காக்கும் பொறுப்பை வல்ல அல்லாஹ்வே ஏற்றுக் கொண்டு விட்டதனால், அது மூல வடிவிலே இருக்கிறது. இனியும் இவ்வுலகுள்ளளவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

*(23.7.98 அன்று துபாய் தமிழ் உணவகத்தில் கூத்தா நல்லூர் ஜமாத்தின் சார்பில் நடைபெற்ற மீலாது விழாச் சொற்பொழிவுச் சுருக்கம்)*

# இஸ்லாமும் தாய்மொழியும்

உலக மக்களுக்கு இறைநெறிபுகட்ட வந்த இறை தூதர்களில் – நபிமார்களில் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமான கல்வி பற்றி நபிகள் நாயகம் (சல்) அவர்கள் அளவுக்கு வலியுறுத்திக் கூறியவர் வேறு எவரும் இலர்.

'உம்மி' நபியாக – ஓரெழுத்தும் கற்காதவராக இருந்தும் அறிவுலகின் தலைவாசலாக விளங்கவல்ல கல்வி குறித்த பெருமானாரின் கருத்துகளைக் கண்டு இன்றைய அறிவுலகம் எண்ணி எண்ணி வியந்து போற்றுகிறது.

நபிகள் நாயகம் (சல்) அவர்களை இறுதி நபியாக இறைவன் தேர்ந்தெடுத்தபோதே, அவருக்கு அறிவு புகட்ட, கல்வி கற்பிக்க ஒரு மனிதரை ஏற்பாடு செய்து விடக் கூடாது என்பது இறைநாட்டமாக இருந்தது ஏன்? இறுதி நபியாக நாளை உலா வரும்போது, இறைச் செய்தியை மக்களுக்குக் கூறும்போது, அண்ணலார் இவ்வளவு அரிய செய்திகளைச் சொல்லுவதற்கு யார் காரணம் தெரியுமா? அவருக்கு ஆசிரியராயிருந்தவர் கொடுத்த அறிவு, அவர் சொன்ன விஷயங்களைச் சிறிது மாற்றி, திருத்தி இறுதி வேதம் எனக் கூறுகிறார் என்ற நிலைவந்துவிடக் கூடாது. ஏனென்றால், அவர் மூலம் இறைவன் இறுதி வேதத்தை உலகுக்கு வழங்கவிருக்கிறான். அதில் எக்காரணம் கொண்டும் மனிதத்

தொடர்பு வந்து சேர்ந்து விடக்கூடாது என்பதற்காகவே இறைவன் அவரை உம்மி நபியாக, கல்வி கற்காதவராக இறுதிவரை வைத்திருந்தான்.

## இறைவனே குரு

இதில் உள்ள மற்றொரு சிறப்பையும் நாம் எண்ணி வியக்க வேண்டும். நாயகத் திருமேனிக்கு மனிதன் குருவாக அமையாவிட்டாலும் வானவர் தலைவர் ஜிபுறீல் (அலை) அவர்கள் மூலம் இறைவனே குருவாக அமைந்துள்ளார். இறைவன் வானவர் தலைவர் வாயிலாக இறுதித் திருமறையை, இறைக் கட்டளைகளை, அறிவுச் செல்வங் களை வாரி வழங்கினான். இவ்வாறு இறைவனையே குருவாகப் பெறுகின்ற பேறு அண்ணாலாருக்கு மட்டுமே வாய்த்தது.

அண்ணலார் படிக்காத 'உம்மி' நபியாக இருந்த போதிலும் அவருக்கு வஹீயாக இறங்கிய முதல் வாசகமே 'இக்ரஉ' அதாவது 'ஓதுவீராக', 'படிப்பீராக', 'கற்பீராக', 'தெரிந்து கொள்வீராக' என்பதாகத்தான் இருந்தது. அது மட்டுமல்ல, திருக்குர்ஆனின் முதல் அத்தியாயமே 'அல் கலம்' அதாவது எழுதுகோல் என்பதாகும். எழுது கோலைக் கொண்டு கற்பீராக எனத் திருமறை தொடங்குவதால் முதல் இறைச் செய்தியாக அறிவைப் பற்றி, அதைப் பெறுவதற் கான வழிவகைகளைப் பற்றியதாகவுமே அமைந்துள்ளது.

## மொழியின் தனித் தன்மை

கல்வி என்பது வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமல்ல, அனுபவ அறிவும் கல்வியின்பாற்பட்டதுதான். இந்த அனுபவப்பூர்வமான அறிவு, சிந்தனை, எழுத்து மொழி மூலம் பதிவு செய்து வைக்கப்படுகிறது. அதைப் பலநூறு ஏன்,. பல்லாயிரம் கல் தொலைவுக்கப்பால் உள்ளவர்களும், இன்னும் பலநூறு ஆண்டுகட்குப் பின்னால் வரக் கூடியவர்களும் அவற்றைப் படித்துணர்ந்து பலன் பெறுகிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரமாக அமைவது

மொழியாகும் இது தமிழ் மன்றக் கூட்டமாக இருப்பதால் தமிழைப் பற்றியும் பேசலாம் என எண்ணுகிறேன்.

### தமிழ் சோறு போடுமா?

இங்கே பேசியவர்கள் தமிழைப் பற்றி பல கருத்துகளைக் கூறினர். ஒருவர் சற்று காட்டமாகவே, 'தமிழ் படித்து என்ன ஆகப்போகிறது. ராஸல்கைமாவில் வந்து பணியாற்றும் நாங்கள், இங்கே தமிழ் பேசி என்ன சாதிக்கப் போகிறோம். ஆங்கில அறிவால் பல நன்மைகளைப் பெறுகிறோம்' என்றெல்லாம் தமிழால் பயனேதும் இல்லை, ஆங்கிலத்தால் அநேகப் பயன்கள் உண்டு என்ற தோரணையில் பேசினார்.

### மாயத் தோற்றத்தில் மயங்கும் தமிழர்

இப்படியோரு மாயத் தோற்றம் இந்த நண்பரிடம் மட்டுமல்ல பலபேரை ஆட்கொண்டுள்ளது. அப்படிப் பேசுவது முற்போக்குச் சிந்தனையின் அடையாளமாகக் கருதி, பலபேர் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள் எனில் அஃது மிகையன்று.

நான் இங்குள்ளவர்களை ஒரு கேள்வி கேட்க விரும்பு கிறேன். தமிழ் நாட்டில் வாழம் மக்கள் தொகையில் எத்தனை சதவீதம் பேர் வேலை தேடி உங்களைப் போல் வெளிநாடு சென்றிருக்கிறார்கள்? ஒன்று அல்லது இரண்டு சதவீதம் இருக்குமா? இந்த இரண்டு சதவீதத்தினருக்காக தமிழ் நாட்டிலேயே வாழப் போகும் 98 சதவீதத்தினரை உங்கள் தாய் மொழி தமிழில் கல்வி கற்காமல் ஆங்கிலத்தில் தான் கல்வி கற்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவது என்ன நியாயம்? ஆங்கிலம் கற்க வேண்டாம் எனக் கூறவில்லை. உலகெங்கும் தொடர்பு மொழியாகப் பயன் பட்டு வரும் ஆங்கிலத்தை ஒரு மொழியாகப் படிக்கலாமே தவிர, ஆங்கிலத்துக்கு நம்மையே அடமானம் வைக்க முயல்வது அறிவீனம் மட்டுமல்ல, அறியாமையும் ஆகும்.

### அறிவூட்டம் பெற ஆங்கிலமா – தமிழா?

நான் மூன்று முறை உலகை முழுமையாக வலம் வந்தவன். உலக மக்களின் நாடி நரம்புகளையெல்லாம் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் ஓரளவு பிடித்துப் பார்த்திருக்கிறேன். நீங்கள் நினைப்பது போன்ற நிலை எங்குமே இல்லை. அந்தந்த நாட்டுத் தாய்மொழி தான் அந்தந்த நாட்டு மக்களுக்கு அறிவூட்டி வளர்க்கும் ஊட்டச்சத்தாக அமைந்திருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் மட்டும்தான் அறிவூட்டம் ஆங்கில மொழியில் மட்டுமே இருப்பது போன்ற மனப்பிரமை. இதற்குக் காரணம் ஆங்கில மொழி மூலம் நமக்கு ஊட்டப்பட்ட அழுத்தமான அடிமை உணர்வும் அதன் விளைவாக உருவாக்கப்பட்டுள்ள தாழ்வு மனப்பான்மை. இது எந்த அளவு உச்சத்தை அடைந்திருக்கிற தென்றால் பெற்ற மகனே தன் தாயைப் பார்த்து, ‘நீ என்னைப் பெற்றிருந்தாலும் எனக்கு தாயாக இருக்க உனக்குத் தகுதி இல்லை. அதோ அங்கே கவுன் போட்ட வெள்ளை நிறத் தோளோடு ஒருத்தி நிற்கிறாளே அவள்தான் எனக்குத் தாயாக இருக்க முழுத் தகுதி படைத்தவள்’ எனக் கூறும் இழி நிலை இன்றையத் தமிழ்மகனுக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலை வேறு எங்குமே காண முடியாத ஒன்று.

### தமிழக விந்தைப் போக்கு

தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலாவது இந்த அளவுக்கு ஆங்கிலப் பற்றாளர்கள் இருக்கிறார்களா என்பதே பெரும் கேள்விக் குறி. நான் அடிக்கடி செல்லும் ஃபிரான்சு நாட்டிலோ ஜெர்மனியிலோ, ஜப்பானிலோ, சீனாவிலோ எங்கு காண முடியா நிலை தமிழகத்தில் மட்டுமே உண்டு. இந்நாடுகள் உட்பட உலகெங்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் மட்டுமே அமைந்துள்ளது. அதுவும் மக்கள் எல்லோரும் பேசும் மொழியாக அல்ல. இங்கேயெல்லாம் குறிப்பிட்ட சில இடங்களில், சான்றாக பன்னாட்டு விமான தளம், பன்னாட்டுப் பேருந்து நிலையம், தொடர் வண்டி

நிலையம், பேரங்காடி வளாகம், நட்சத்திர உணவு விடுதிகள் போன்ற பல்வேறு நாட்டவர் குழுமும் இடங்களில் மட்டுமே ஆங்கிலம் அதிகம் பேசப்படுகிறது. மற்றபடி பன்னாட்டு வணிகத்தில் ஆங்கிலம் தொடர்பு மொழியாகப பயன்பட்டு வருகிறது.

புகழத் தெரிந்த அளவு ஆற்றலை அறிந்தோமா?

இங்கே பேசிய பலரும் தமிழை அடுக்கு மொழியில் புகழ்ந்துரைத்தே தம் பேச்சைத் துவங்கினார்கள். தமிழைப் புகழ்ந்து புகழ்ந்து பேசியே 'சப்பாணி' ஆக்கிவிட்டோம். தமிழைப் புகழ்ந்து விட்டாலே தமிழுக்கு ஆற்ற வேண்டிய கடமையை, தொண்டைச்செய்து முடித்து விட்டோம், தமிழ் தானே வளர்ந்து விடும் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதோடு தமிழ் உலகையும் ஏமாற்றி வருகிறோம். தமிழைப் புகழத் தெரிந்த அளவுக்கு தமிழின் ஆற்றலை உணர்ந்து தெளிய முயன்றுள்ளோமா என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த நாற்பதாண்டு காலமாக தமிழின் ஆற்றலை அறிந்து, அந்த ஆற்றலை இன்றையக் காலச் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்பப் பயன்படுத்தி வெற்றி காணும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வெற்றி பெற்று வருகிறேன்.

இறவா மொழி

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தொல் காப்பியம் எனும் அற்புதமான இலக்கண நூலைப் பெற்ற தமிழ், தன் அடித்தளப் பண்பு சிறிதும் மாறா நிலையில் இன்று இருந்து வருகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்த பல மொழிகள் செத்தும், வழக்கொழிந்தும் தேய்ந்தும், சிதைந்தும் குற்றுயிரும் குலையுயிருமாக இருந்ததை, இருப்பதை இன்றைய மொழி வரலாறு எடுத்துக் கூறி வருகிறது.

1

இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேல் சீரிளமைத் திறம் குன்றாமலிருப்பதற்கு அடித்தளக் காரணம் என்ன? ஆழமும் அழுத்தமும் நிறைந்த வேர்ச் சொற்களையுடைய மொழியாகத் தமிழ் திகழ்வதே இதற்குக் காரணம். உலகிலேயே மிக அதிகமான வேர்ச் சொற்களை யுடைய மொழியாகத் தமிழ் திகழ்கிறது என்கிறார் மொழியியல் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் எமினோ அவர்கள். அவரது அறிவார்ந்த ஆய்வு எந்த அளவுக்கு உண்மை என்பதை கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக நான் மேற்கொண்டு வரும் சொல்லாக்கப் பணி மூலம் மிக நன்றாக உணர்ந்து வருகிறேன். பல்லாயிரம் கலைச் சொற்களை உருவாக்கி, சுமார் ஐந்து கலைச் சொல் களஞ்சிய அகராதி களை உருவாக்கியபின் எனக்குள் எழும் அழுத்தமான உணர்வு தமிழ் காலத்திற்கேற்ற மொழி, காலத் தேவையை முழுமையாக நிறைவு செய்யவல்ல மொழி என்பதேயாகும்.

அறிவியல் மொழி தமிழ்

ஒரு மொழி இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழும் பெற்றியினைப் பெற்றுள்ளதென்றால் அஃது மாறி வரும் காலப் போக்கில் எத்தகைய போக்குக்கும் தேவைக்கும் ஈடு கொடுக்க வல்ல மொழி என்பதையே காட்டுகிறது. சங்க காலத்திற்கு முன்பு சமயத் தாக்கமே இல்லாத மொழியாக, அறிவியல் சார்ந்த மொழியாக இருந்தது. சங்க காலத்தில் சமுதாய மொழியாக மாறியது, பின்பு வைதீக சமயம், சமண, பௌத்த சமயம், வெளி நாட்டிலிருந்து சொராஸ்டிரியம், கிருஸ்தவம், இஸ்லாம் போன்ற சமயங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வர, அவ்வச் சமய மொழியாக உருமாறி வளர்ந்தது. ஆங்கிலேயர்களின் வரவால் மேலை நாட்டுப் புதினம், சிறுகதை, திறனாய்வு போன்ற துறைகளாகப் பரிணமிக்க தமிழ் தவறவில்லை. இன்று அழுத்தமாக உருவாகி உறுதியாக நிலை பெற்றுள்ள அறிவியல் ஊழிக்கு உகந்த மொழியாகத் தமிழ் வளர வேண்டிய காலக் கட்டாயம்.

அறிவியலின் விரைவான வளர்ச்சிப் போக்குக்கு ஈடு கொடுக்கத் தமிழால் முடியுமா என்பதுதான் இன்றைய இளைய தலைமுறைக்கு முன் எழுந்துள்ள ஐயம். இதற்கு அடிப்படைக் காரணம் பெரும்பாலான குழந்தைகள் தமிழை ஒரு மொழிப் பாடமாகவும் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகவும் கொண்டு படிக்க நேர்ந்திருப்பதுதான். நாட்டு விடுதலைக்கு முன்பும் பின்பும் இருந்ததுபோல் ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாகவும் தமிழை பள்ளியிறுதி வரைப் பயிற்சி மொழியாகவும் கொண்டு படித்திருந்தால் இப்படிப்பட்ட சந்தேகங்கள் எழாமலே போயிருந்திருக்கும்.

தமிழ் இயல்பிலேயே ஒரு அறிவியல் மொழி. அறிவியலைச் சொல்லுவதற்கென்றே ஆரம்ப காலத்தில் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட மொழி. காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப பல்வேறு வடிவெடுத்த போதிலும் தன் அடித்தள அறிவியல் திறத்தினை அது இன்னும் இழக்கவில்லை என்பதுதான் உண்மை நிலை. இதை மொழியியல் வரலாற்று அடிப்படையில் மட்டுமல்ல, பல்லாயிரம் அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கி ஐந்து தொகுதிகளை வெளியிட்டபின் எனக்கு எழும் அழுத்தமான உணர்வு. இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலத்தைவிட சொற்செட்டோடும் பொருட்செறிவோடும் இலக்கிய மெருகோடும் தமிழில் அறிவியலைச் சொல்ல முடியும். அந்த அளவுக்குத் தமிழ் உயிர்ப்புள்ள அறிவியல் மொழி.

என்னைப் பொருத்தவரை தமிழை ஒரு மொழியாக மட்டுமே பார்க்கிறேன். உங்கள் கருத்தையும் உணர்வையும் என் கருத்தையும் உணர்வையும் ஒருவருக்கொருவர் பரிமாறக் கிடைத்த கருவியே மொழி. அதற்கு மேல் அதில் எதுவுமில்லை.

இன்று தமிழ் வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக இருப்பவர்கள் வெறும் பற்றாளர்களும் பூஜா மனப்பான்மை

கொண்ட துதிபாடிகளுமே ஆவர். வெறும் புகழ்ச்சியினால் எந்த விளைவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

ஆட்சி மொழி - பயிற்சி மொழியே வளர்ச்சிக்கு ஆதாரம்

ஒரு மொழி ஆட்சி மொழியாகவும் பயிற்சி மொழி யாகவும் அமைந்து விட்டதென்றால் அதன் வளர்ச்சியைத் தடுக்கும் ஆற்றல் எந்த சக்திக்கும் கிடையாது. இவ்விரு துறைகளுக்குப் பயன்படுத்தப்பட்டால் எந்த மொழியும் பிழைத்து கொள்ளும் என்பதற்கு ஹீப்ரு மொழி ஒரு வாழும் சான்றாக விளங்குகிறது.

செத்த மொழி பிழைத்த விந்தை

ஏறக்குறைய 'செத்த மொழி' என்று மகுடம் சூட்டி அழைக்கப்பட்ட ஹீப்ரு மொழியை இரண்டாவது உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்ட இஸ்ரேல் நாட்டின் ஆட்சிமொழி, கல்விக் கூடங்களில் பயிற்சி மொழி என அறிவித்தனர். விளைவு, இன்று ஆற்றல் மிக்க வாழும் மொழியாக உருமாற்றம் பெற்றுவிட்டது. இதிலிருந்து பயன்பாட்டைப் பொருத்தே ஒரு மொழியின் சிறப்பும் வாழ்வும் அமைகிறது.

தமிழைப் பொருத்தவரை பெயரளவுக்கு ஆட்சி மொழியாகவும் அரசுப் பள்ளிகளில் ஓரளவுக்குப் பயிற்சி மொழியர்கவும் சுருக்கப்பட்டு விட்டதனால் தமிழின் ஆற்றலைப் பற்றிய சந்தேகம் பலருக்கும் எழ வேண்டியதாகி விட்டது. இன்னொரு வருந்தத்தக்க நிலை என்னவென்றால் தொலைக் காட்சிகளில் நிகழ்ச்சியை நடத்தக்கூடிய பெரும்பான்மை பெண்கள் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படித்ததனால், அளவுக்கதிகமாக ஆங்கிலத்தைக் கலந்து தமிழ் பேசுகிறார்கள். இதைக் கேட்கும்போது ஆங்கிலத்தின் துணையில்லாமல் தமிழால் தனித்து இயங்க இயலாது என்ற மனவுணர்வே உண்டாகும். இந்நிலைமைகள் மாற வேண்டும். வெறும் வெளி அழகுத்

தோற்றங்களுக்காக மட்டும் தேர்வு செய்யாது, நல்ல தமிழ்ப் பயிற்சி பெற்றவர்களையே நிகழ்ச்சி நடத்துநர்களாக அமர்த்த வேண்டும்.

புனிதத்தை ஏற்றினால் இறப்பு நிச்சயம்

இச் சமயத்தில் மற்றொரு உண்மையையும் நாம் உணர்ந்து தெளிய வேண்டும். எந்த ஒரு மொழி மீதாவது புனிதத்தை ஏற்றி, அதைத் தெய்வ நிலைக்கு உயர்த்தினால் அம் மொழியை, அப் புனிதமே இறக்கச் செய்து விடும் என்பது மொழி வரலாறு உணர்த்தும் பேருண்மை.

விவிலிய வேதம் இருந்த காரணத்தால் லத்தீன் மொழி மீது புனிதத்தை ஏற்றினார்கள். காலப்போக்கில் அப் புனித உணர்வே மொழியைத் தனிமைப்படுத்த, இன்று இறந்த மொழிக்கோர் உதாரணமாகி விட்டது. அதே போன்று யூத வேத மொழியாக ஹீப்ரு இருந்ததனால், அதன் மீது புனிதத்தை ஏற்றிப் போற்றினார்கள். காலப்போக்கில் வேதத்துக்கு மட்டும் பயன்படும் மொழியாக உருமாறி அதுவும் வழக்கிழந்த மொழிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டது. நல்வினைப் பயனாக இரண்டாம் உலகப் போருக்குப்பின் உருவான இஸ்ரேல் நாட்டின் ஆட்சி மொழி, பயிற்சி மொழி என ஆக்கப்பட்டதால் ஆற்றல் மிகு உயிர்ப்பு மொழியாக இன்று பவனி வருகிறது. புனிதத்தை சமஸ்கிருத மொழி மீது ஏற்றியதன் விளைவு இன்று வரை இயங்கா மொழியாகத் தேக்கநிலை பெற்றுள்ளது. அதே போன்று தமிழின் மீது கொண்டுள்ள பற்றாலும் பாசத்தாலும் தெய்வ நிலைக்கு ஒரு சாரரால் உயர்த்தப்பட்டு, பூஜிக்கப் படும் நிலை உருவாகியுள்ளது. இதுவே தமிழின் வளர்ச்சிக் குத் தடைக் கல்லாக அமைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுவது இயல்பே.

தமிழைத் தெய்வமாக்காதீர்!

தெய்வ நிலைக்குத் தமிழை உயர்த்த விழையும்

போக்குத் தமிழுக்குக் காட்டும் மரியாதையாக இருக்கலாம். அது எப்படி தடையாக முடியும் என உங்களில் சிலர் நினைக்கலாம். ஒரு மொழி காலந்தோறும் உருவாகி நிலைபெறும் மாற்ற திருத்தங்கட்கு உட்பட்டு அவற்றை ஏற்று வளர வேண்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் ஒருவிதக் காலக்கட்டாயம் ஆகும். தெய்வத்தை மாற்ற முடியாது; திருத்த முடியாது; வணங்க மட்டுமே முடியும். அந்த நிலை தமிழுக்கு ஏற்படாமல் இருக்க வேண்டுமெனில் தமிழை ஒரு மொழியாக மட்டுமே கருதும் மனப்பான்மை வளர வேண்டும். நம்மை விடப் ஃபிரெஞ்சுக் காரர்கள் மொழிப் பற்று மிக்கவர்கள். ஆனால், அவர்கள் தங்கள் மொழியைத் தெய்வமாகக் கருதுவதில்லை. திறம்பட்ட மொழி என்ற அளவிலே அதைப் பாராட்டி மகிழ்கிறார்களே தவிர, துதித்துப் பூஜிப்பதில்லை.

## இஸ்லாமும் தாய்மொழியும்

இஸ்லாம் என்றும் தாய் மொழிக்கு முதன்மை தரும் மார்க்கமாகவே இருந்து வருகிறது. வல்ல அல்லாஹ் தன் தூதர்களுக்கு – நபிமார்களுக்கு வேதத்தை வழங்கும்போது, நபிமார்களின் தாய் மொழி மூலம் இறைவேதம் கொடுக்கப்பட்டதாகத் திருமறை தெளிவாகக் கூறுகிறது.

"*(நபியே!) ஒவ்வொரு தூதரும் (தம் மக்களுக்கு) தெளிவாக விவரித்துக்கூறும் பொருட்டு, அவரவருடைய மக்களின் மொழியைக் கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பி வைத்தோம்*". *(14:4)*

எனக் கூறுவதிலிருந்து அனைத்து வேதங்களும் அந்தந்த நபிமார்களின் தாய்மொழியிலேயே அனுப்பப் பட்டன என்பது தெளிவாகிறது. மூஸா (அலை)வுக்கு அவரது தாய்மொழியான ஹீப்ருவில் தவ்ராத் வேதமும் ஈஸா (அலை)வுக்கு அவரது தாய்மொழியில் இஞ்சீல் வேதமும் வழங்கப்பட்டது போல் அரபி மொழியைத் தாய்மொழி

யாகக் கொண்ட முஹம்மது நபி (சல்) அவர்கட்கு அவரது தாய்மொழியான அரபி மொழியில் புர்க்கான் வேதமும் இறைவனால் வழங்கப்பட்டது. இதிலிருந்து இறைவன் தாய்மொழிக்குத் தந்துள்ள தகுதிப்பாட்டை எண்ணி இன்புறலாம்.

நாயகத் திருமேனி அவர்கள் அரபகத்தையும் அடுத்துள்ள நிலப்பகுதியையும் ஆட்சி செய்ய நேர்ந்த பொழுது, அப் பகுதிக்கு ஆளுநர்களை அனுப்பும்போது, தங்கள் நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளில் பேசப்படும் மொழிகளைக் கற்று, அம்மொழி மூலமோ ஆட்சி செய்யப் பணித்தார்கள் என்றால் அண்ணலார் அவரவர் தாய் மொழிக்குத் தந்துள்ள மதிப்பையும் மரியாதையையும் எண்ணி மகிழ்கிறோம். ஏனெனில் ஒரு முஸ்லிம் தான் பிறந்த, வாழும் பகுதியில் தாய்மொழியாய் எந்த மொழி அமைகிறதோ அதன் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் தங்கள் பங்களிப்பைக் கட்டாயம் செலுத்த வேண்டுமென நேரிடை யாகவும் மறைமுகமாகவும் வற்புறுத்துகிறது இஸ்லாம்.

இந்த உணர்வின் அடிப்படையில் தான் இன்று என் போன்றவர்கள் தாய்மொழியாகிய தமிழின் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் இயன்ற வகைகளிலெல்லாம் உழைத்து வருகின்றோம். அதைத் தமிழ்ப் பணி என்று சொல்வதை விட ஒருவித இஸ்லாமியப் பணி என்று கூறுவதே சாலப் பொருத்தமாகும்.

*(24.7.98 அன்று ராஸல்கைமா தமிழ் மன்ற விழாச் சொற்பொழிவுச் சுருக்கம்)*

# புதிய சித்தாந்தக் குழப்பம்

கடந்த இருபது நாட்களாக பல்வேறு அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற மீலாது விழாக் கூட்டங்களில் கலந்து கொண்டு பார்வையாளர்களோடு சேர்ந்து வள்ளல் நபியவர் களின் வாழ்வையும் வாக்கையும் நினைவுகூரவும் திருமறை யின் அடிப்படையில் சிந்திக்கவும் அரிய வாய்ப்பைப் பெற்றேன். இங்கு வருவதற்கு முன்பு இன்றைய காலப் போக்குக்கேற்ப அறிவியல் அடிப்படையில் நாம் எடுத்து வைக்கும் கருத்துகளுக்கு எத்தகைய எதிரொலி இருக்குமோ என்ற அச்சத்தோடவேதான் வந்தேன். என்னைவிடவும் உரக்க சிந்திக்கத் தெரிந்தவர்கள் நாங்கள் என்பதை என் சிந்தனைகளை நீங்கள் ஆர்வத்தோடு ஏற்கும் பாங்கினைக் கொண்டே அறிந்து, புரிந்து கொண்டேன்.

### விரைவான சிந்தனைப் பரிமாற்றம்

இன்றைய கால கட்டம் செய்தித் தொடர்புச் சாதனங் களின் அபரிமிதமான வளர்ச்சியின் விளைவாக தகவல் பரிமாற்றம் வியக்குமளவுக்கு விரைந்து நடைபெற்று வருகிறது. அதைப் போன்றே சிந்தனைப் பரிமாற்றமும் அதனை வெளிப்படுத்தும் முறைகளும் கூட புதுமையான போக்கிலே அமைந்து வருவதைக் காண்கிறோம்.

காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப, பழைய முறையில் அல்லாது புதுப்போக்கில் நம் உணர்வுகளும் சிந்தனைகளும் பரிமளிக்க வேண்டுவது ஒருவகைக் காலக் கட்டாயம் என்று கூட கூறலாம்.

ஆன்மீக - அறிவியல் கூட்டிணைவு

பலரும் எண்ணுவதுபோல் இஸ்லாம் மற்றைய சமயங் களைப் போன்ற ஒன்றல்ல; ஆன்மீகத்தையும் அறிவிய லையும் இரு கண்களாகக் கொண்ட அற்புதமான சமுதாய சீர்திருத்த இயக்கம். இன்றைக்கு அதில் அமைந்துள்ள அறிவியல் கருத்துகளெல்லாம் மக்கள் மத்தியில் முனைப் புடன் பரப்பப்பட வேண்டியவை. இஸ்லாமியக் கருத்து களைப் பரப்புகின்ற பணியில் நாம் இன்னும் பழைய பாணியிலேயே போய்க் கொண்டிருக்கிறோம்.

ஆன்மீகம் என்பது மனிதனின் அடிப்படைத் தேவை களில் ஒன்று. அதே போன்று அறிவியலும் மிகப் பெரும் அடிப்படைத் தேவையாய் அமைந்துள்ளது. அகவாழ்வுக்கு ஆன்மீகமும் புறவாழ்வுக்கு அறிவியலும் இன்றியமையாத் தேவைகளாக அமைந்துள்ளன.

முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதாம் (அலை) தொடங்கிய இஸ்லாமிய நெறியை, நிறைவுசெய்த நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மூலம் இறைவனால் வழங்கப்பட்ட இறுதி வேதமாகிய திருக்குர்ஆனில் நேற்றைய நிலையும் இன்றைய போக்கும் நாளை மலரப் போகும் மனித குல வாழ்வு பற்றிய வருநாளியல் (Futurology) கருத்துகளும் பொதியப்பட்டுள்ளன. இச் செய்திகளெல்லாம் மக்கள் மத்தியில் எடுத்துக்கூற வேண்டியது காலத்தின் இன்றி யமையாத் தேவையாயுள்ளது. அப்போதுதான் நம்மைப் பற்றிய சரியான கணிப்பு மக்கள் மத்தியில் உருவாகி நிலை பெற முடியும்.

பிற சமய அலசல்

நான் முஸ்லிம்கள் மத்தியில் உரையாடுவதைவிட முஸ்லிமல்லாதவர்களிடையேதான் பேசுவதையே பெரிதும் விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால் பிற சமயத்தவர் மத்தியிலே பேசும்போது, அவர்கள் போக்கிலேயே போய் அவர்களின் சமயச் சித்தாந்தங்களின் அடிப்படைகள் என்ன? அவற்றின் இன்றைய மாறுபட்ட வடிவங்கள் யாது? இம்மாற்றம் ஏற்பட காலம் தூவிய தூசிகள் எத்தகையது? உண்மைகள் எவ்வாறு மூடி மறைக்கப்பட்டுள்ளன? இவற்றையெல்லாம் அகற்றி அசலான தத்துவ நுட்பங்கள் என்ன? அவற்றிற்கும் மனிதர் களின் விருப்பு வெறுப்பகளுக்கேற்ப அறவே மாற்றப் படாத இறைமறைகூறும் அடிப்படைகளும் ஒன்றுபோல் பொருந்தி வருவதைப் போதிய காரண காரியங்களோடு விளக்கும்போது உண்மை வெளிச்சமாகிறது. இரண்டும் ஒரே நேர்கோட்டில் உலா வருவதைக் கண்டு வியப்படை கிறார்கள். கண்மூடித்தனமான பக்தியின் பேரால் எங்கோ வழி தவறிவிட்டோம். எடுப்பார் கைப் பிள்ளையாக எங்கோ கொண்டு சென்று விட்டார்கள் என்பதை உணரு கிறார். வழி தவறிவிட்ட கன்றுக் குட்டி தாய்மாட்டைக் காணும்போது வாஞ்சையோடு ஓடி வருவது போல பலரும் குறிப்பாக அறிவுலகத்தைச் சார்ந்த சிந்தனையாளர்கள் இன்றும் இஸ்லாம் எனும் மூலத் தாயை நோக்கி வந்து கொண்டுள்ளார்கள்.

இறைவன் எல்லா நாடுகளிலும் எல்லா இனங்களிலும் எல்லா மொழியிலும் இறைவன் தன் செய்தியை வேத வடிவில் தந்துள்ளான். அச் செய்திகளை காலப்போக்கில் தம் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மாற்றி விட்டார்கள். அண்ணலார் பெற்ற இறுதி வேதத்திலே அந்த மூலக் கருத்துகளும் மூல உணர்வுகளும் அப்படியே உள்ளன என்ற உணர்வை அவர்களுக்கு நாம் ஏற்றி வைக்கின்றபோது, அவர்கள் இதுதான் நாம் பின்பற்ற வேண்டிய சரியான

பாதை, இதுவரை நாம் எங்கோ அழைத்துச் செல்லப் பட்டிருக்கிறோம் என்ற உணர்வோடு திரும்புகிறார்கள். இந்த மன மாற்றத்திற்கான ஒரு சிறு அசைவை உருவாக்குகிற செயலை நாம் செய்தாக வேண்டும் என்பது தான் என் வேணவா.

## புதிய சித்தாந்தக் குழப்பம்

ஆனால்,இன்றைய இந்தியத் திருநாட்டிலே ஒரு புதிய பண்பாட்டுத் தத்துவக் குழப்பம் அரசியல் பின்னணியோடு உலவ விடப்பட்டுள்ளது. அதுதான் 'இந்துத்துவா' எனும் புதிய அரசியல் முழக்கம். இப்புதிய கோட்பாட்டை இந்திய மக்கள் அனைவர் மீதும் திணிக்கும் போக்கும் தலைதூக்கி யுள்ளது. இன்றையக் குழப்பங்களுள் தலையாயதும் இதுதான். இது இந்தியச் சமய நல்லிணக்க உணர்வுக்கு இடையூறாக ஏன், முட்டுக்கட்டையாகவே அமைந்து விடுமோ என நல்லுள்ளங்கள் கவலைப்படவே செய் கின்றன.

## இந்துத்துவமா? இந்தியத்துவமா?

இந்துத்துவா என்பது வேறு; இந்தியத்துவம் என்பது வேறு. இந்துத்துவம் என்பது இந்து சமயச் சார்புடைய தாகும். இந்தியத்துவம் என்பது இந்திய நாட்டு தேசியச் சார் புடையதாகும். சொல் ஒற்றுமையை வைத்து இரண்டும் ஒன்று என்று கருதிவிடக் கூடாது. இரண்டும் வெவ்வேறு தன்மைகளையுடையதாகும்.

## விநோத விளக்கங்கள்

இந்துத்துவம் என்பதற்குச் சொல்லப்படும் விளக்கங்கள் விநோதமானவைகளாகும். 'இந்துத்துவம் என்றால் இந்தியா வில் வாழும் இந்திய மக்கள் தொடர்பான கொள்கையாகும். இந்தியாவில் பிறந்து வாழ்பவர்கள் அத்தனை பேரும் இந்தியர்களாவர். அவர்கள் இந்தியாவின் பண்பாட்டைத்

தான் பின்பற்றி வாழ வேண்டும். இந்தியாவின் கொள்கை கோட்பாடுகளைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தியாவின் கலை, பண்பாடு அனைத்தும் இந்து சமயச் சார்புடையனவாகும். எனவே, இந்து சமயச் சார்பான இறைக் கொள்கைகளையும் இந்து சமயக் கலை, பண்பாட்டுக் கூறுகளையும் இந்துத்துவக் கொள்கை, கோட்பாடுகளாகக் கொள்ள வேண்டும்' என கொஞ்சம் கொஞ்சமாக சுற்றி வளைத்து, இந்தியாவில் இருப்பவர்கள் அத்தனை பேரும், அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் எந்த இனத்தைச் சார்ந்தவர்களாக, எந்த மொழியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இந்தியர்கள், இந்துக்களாவர் என்ற மன நிலையை உருவாக்க முயல்கின்றனர். இந்தியாவில் வாழும் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்தியார்களே என்பதில் எள் முனை அளவும் வேறுபாடோ மாற்றுக் கருத்தோ இல்லை. ஆனால், இந்தியர்கள் அனைவரும் இந்துத்துவாக் கொள்கைகளை, கோட்பாடுகளை பின்பற்ற வேண்டு என்பதை இந்துக்களைத் தவிர வேறு யாரும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

## இந்தியத் தனித்துவம்

இந்தியாவுக்கென்று தனித்துவமான சில கொள்கை, கோட்பாடுகள் உண்டு. இந்தியா என்றுமே 'யார்?' என்று பார்ப்பதில்லை, 'என்ன?' என்பதில் மட்டுமே அக்கறை காட்டும். அதனால் கிருஸ்தவம், பார்சி, இஸ்லாம் போன்ற பல்வேறு சமயங்கள் இங்கே வந்து நிலைபெற்று பரவிட முடிந்தது. எனவே, இந்தியச் சமயங்களோ, இந்தியாவுக்கு வந்த சமயங்களோ இந்துத்துவா கொள்கையை எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஏனெனில் இந்துத்துவா என்பது இந்து சமயப் பண்பாடு, இந்தியத்துவம் இந்திய நாட்டின் சமுதாய, தேசியப் பண்பாடு ஆகும். சமயப் பண்பும் சமுதாயப் பண்பும் ஒன்றல்ல.

### அரசியல் ஆதாயம்

மேலும் இந்துத்துவாக் கொள்கையை அரசியல் அரவணைப்போடு வற்புறுத்துபவர்கள் இந்துச் சமயத்தைப் புரிந்து கொண்ட சமயவாதிகளோ அல்லது இந்து சமய அறிவோ நிறைந்தவர்கள் அல்லர். சமயச் சாயம் பூசிக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடித் திரிபவர்கள்.

சமயச் சாயம் பூசும் போக்குதான் இன்று இந்தியாவில் நடைமுறையாகி வருகிறது. கரீமும் கந்தசாமியும் சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்றால், இரண்டு தனிப்பட்ட நபர்கள், அவர்களுடைய சொந்தக் காரணங்களுக்காக சண்டை போட்டுக் கொண்டார்கள் என்பதுதானே நியதி. ஆனால், இன்றைய சூழலில் எப்படிக் கருதப்படுகிறார்கள்? கரீம் என்ற முஸ்லிமும் கந்தசாமி என்ற இந்துவும் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்று சமயத்தோடு இணைத்துக் கூறுவதன் மூலம் இஸ்லாமிய மார்க்கமும் இந்து சமயமும் சண்டை போட்டுக் கொண்டது போன்ற மனப்பிரமையை உருவாக்குகிறார்கள். இத்தகைய தவறான போக்குகளை மாற்றுவதற்கான விழிப்புணர்வு இப்போது உருவாகி வருவது மனதுக்கு ஆறுதலளிப்பதாக உள்ளது.

### சமயம் தனிமனிதச் சார்புடையது

இந்தியாவில் சமயப் பிரச்சினை தலையெடுக்காமல் இருக்க வேண்டுமெனில் அனைத்துச் சமயங்களும் அவரவர் வீட்டிற்குள்ளும் வழிபாட்டுத் தலங்களுக்குள்ளும் மட்டுமே இருக்க வேண்டுமே தவிர சமுதாய வீதிக்கு வர வேண்டிய அவசியமே இல்லை.

சமயம், தனி மனிதச்சார்புடையதா? சமுதாயச் சார்புடையதா என்றால் தனி மனிதச் சார்புடையது என்றுதான் சொல்வேன். அவரவர் கொள்ளும் இறை நம்பிக்கை, செயல்பாடு, நன்மை தீமை இவைகளுக்கேற்ப இறையருள் பெற முடிகிறதென்றால், அது முழுக்க முழுக்க தனி மனிதச் சார்புடையதாகவே அமைந்ததெனலாம்.

**சமய வாதிகளும் சமயப் பூசலும்**

*சமயம் தனி மனிதச் சார்புடையது என்பதை அந்தந்த சம யத்தைச் சார்ந்த சமய ஆச்சாரியர்கள் நன்குணர்ந்துள்ளனர். அதற்கேற்பவே அவர்தம் வாழ்வும் செயற்பாடுகளும் உள்ளன. அவர்களிடையே பிணக்கோ சச்சரவோ அறவே இல்லை. அவர்கள் ஒருவரையொருவர் மதித்து அவரவர் வழியில் செல்கின்றனர். எங்காவது பாதிரியாருக்கும் கோயில் அர்ச்சகருக்கும் தகராறு, சச்சரவு எனக் கேள்விப் பட்டிருக்கிறோமா? அல்லது இமாமுக்கும் பாதிரிக்கும் அல்லது இமாமுக்கும் அர்ச்சகருக்கும் சண்டை என எப்போ தாவது கேள்விப்பட்டிருக்கிறோமா? இல்லை. அவரவர் சமய ஆச்சாரப்படி அவரவர் வழியில் அமைதியோடும் பிற சமயங்களை மதிக்கும் நல்லிணக்க உணர்வோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சார்பாகப் பேச அவதாரம் எடுத்திருப்பதாக கருதிக் கொண்டிருப்பவர்கள், சமய அறிவோ, சமயச் சிந்தனையோ இல்லாத அரசியல் வாதிகள். அவர்களால்தான் அனைத்துப் பிரச்சினைகளும் உருவெடுக் கின்றன. இந்தப் பேருண்மையை உணர்ந்து, சமயத்தை அரசியலில் கலந்து, குட்டையைக் குழப்பி, ஆதாயம் காண முயலும் சமூக விரோத சக்திகளை இன்றையத் தலைமுறை அடையாளம் கண்டுவருவது ஆறுதல் தரும் செய்தியாகும். இத்தகைய சமூக விழிப்புணர்வை ஊட்டுவதில் இஸ்லாத்துக் குப் பெரும் பங்கு உண்டு. பிற சமயங்களை மதிக்கப் பணிக்கும் இஸ்லாம், சமய சகிப்புணர்வோடும் நல்லிணக்கச் சிந்தனையோடும் மனித்துவத்தைக் கண்டறிய வும் மதித்துப் பாராட்டவும் இஸ்லாம் வழிகாட்டும் ஒளி விளக்காக இன்று ஒளிர்ந்து கொண்டுள்ளது என்பதை அறிவுலகமே போற்றுகிறது.*

*(24.7.98 அன்று துபாய் ஊத்தா மஸ்ஜிதில் நடந்த நிறை வு நாள் நிகழ்ச்சிச் சொற்பொழிவுச் சுருக்கம்)*



துபாய் உட்பட வளைகுடா நாடுகளில் நடைபெற்ற மீலாது விழா சொற்பொழிவுச் சுருக்க,எழுத்து வடிவ நூல். அறிவியல் தமிழறிஞரான மணவை முஸ்தபா தமிழக அரசின் 'கலைமாமணி, திரு.வி.க.,' காஞ்சி காம கோடி பீட 'சேவா ரத்னா' விருது உட்பட 25-க்கு மேற்பட்ட விருதுகளைப் பெற்றவர். இதுவரை சுமார் நாற்பது நூல்களுக்கு மேல் எழுதிய இவர் 'யுனெஸ்கோ கூரியர்'(தமிழ்) சர்வதேச மாத இதழின் ஆசிரியர்.

சௌதா பப்ளிகேஷன், சென்னை-40.